விலை
ரூபா 30

பக்கங்கள்
56

# உதயன்

சுடர் 31 | கதிர் 136 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 28, ஞாயிற்றுக்கிழமை 10.04.2016

சிங்கனப் பொதிகள் சேவை
Per Kg
448/- 548/- 448/-
GTV Enterprises (Pvt)Ltd.
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224336 / 021 - 4925024

# தமிழ்–முஸ்லிம் மக்கள் ஒன்றிணைய வேண்டும்

## அதிகாரப் பகிர்வின் முழுமையை அடைய இதுவே வழி என்கிறார் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10
இனப் பிரச்சினைத் தீர்வுக்காகக் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட எல்லா நடவடிக்கைகளின்போதும், தமிழ் மக்களுக்காக மாத்திரம் எதையும் செய்யவில்லை. தமிழ் பேசும் மக்களுக்காகவே எல்லாம் மேற்கொள்ளப்பட்டன. எனவே தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக–ஓரணியில்நிற்கவேண்டும். இதன் போதுதான் அதிகாரப் பகிர்வின் பெறுமதியை முழுமையாகப் பெற பக். 53

“தீர்வு விரைவில் ஏற்பட வேண்டும் என்பது எங்களது எதிர்பார்ப்பு. விசேடமாக தமிழ் மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒற்றுமையாக நிற்கவேண்டியது அவசியம். எங்களுடைய பலம் ஒற்றுமையில் தான் தங்கியிருக்கின்றது.”





## இனவாதத்தை தூண்டுவதற்கு விக்கி முயற்சி

கொழும்பு, ஏப். 10
முப்பது வருடகாலப் போர் நிறைவடைந்து நாட்டை நல்லிணக்கத்தை நோக்கி நகர்த்திச் செல்லாமல் மீண்டும் இலங்கையில் இனவாதத்தைக் கட்டவிழ்த்து விடவே வடக்கில் க.வி. விக்னேஸ்வரன் தலைமையிலானவர்களும், தெற்கில் மகிந்த ராஜபக்ச தலைமையிலானவர்களும் முயற்சி செய்கின்றனர் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) பொதுச் பக். 53

## வடக்கு அமைச்சரவையை மாற்றக் கோருவதில் இழுபறி

### ஆளும் கட்சி உறுப்பினர்கள் 6 பேர் கையொப்பமிட மறுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10
வடக்கு அமைச்சரவை மாற்றத்தின்போது சகல கட்சிகளுக்கும் அமைச்சரவையில் இடம் வழங்கப்பட வேண்டும் ஏன்ற சொல்லை நீக்குமாறு தெரிவித்து, ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஆறு பேர் முதலமைச்சருக்கான கோரிக்கைக் கடிதத்தில் கையெழுத்திடவில்லை.
இதனால், இந்தக் கடிதம் இன்னமும் பக். 53

முச்சந்தி முரளி



அதுதானே கனபேருக்கு பிடியாது பாருங்கோ...

## பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் நிறுவ அரசு சம்மதம்

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10
வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைப்பதற்கு, கிராமிய பொருளாதார அமைச்சர் ஹரிசன் அனுமதி வழங்கியுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
வவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே முதலமைச்சர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.
பொருளாதார மத்திய நிலையத்தை வவுனியாவில் அமைப்பதற்கு பக். 53

## சமஷ்டித் தீர்வுக்கு ஜேர்மனி ஆதரவு

### கூட்டமைப்பிடம் உறுதியளித்தது அந்த நாட்டு நாடாளுமன்றக் குழு



யாழ்ப்பாணம், ஏப்.10
நீண்ட கால இனப்பிரச்சினைக்கு, சமஷ்டியைத் தீர்வாக முன்வைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைக்கு ஜேர்மனி அரசு உறுதுணையாக இருக்கும் என்று அந்த நாட்டு நாடாளுமன்றக் குழு தெரிவித்துள்ளது.
இலங்கைக்குப் பக். 53

பொருத்து வீடுகள் வேண்டாம் பொருத்தமான வீடுகளே தேவை
விரிவு. பக்.02

## மறவன்புலோ வெடிபொருள்; 35 பேரிடம் தீவிர விசாரணை

### இன்னும் பலரை விசாரிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.10
மறவன்புலோவில் தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருள்கள் மீட்கப்பட்டதோடு, சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 35 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது எனப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.
அத்துடன் இன்னும் பலரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். பக். 53

## சேந்தாங்குளம் தேவாலயக் காணியை நேற்று விடுவித்தனர் கடற்படையினர்

### காவலரணும் அங்கிருந்து அகற்றப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 10
கீரிமலை சேந்தாங்குளத்தில் கடற்படையினரின் தேவைக்காக சுவீகரிக்கப்படவிருந்த தேவாலயத்துக்குச் சொந்தமான காணி, பொதுமக்களின் தொடர் எதிர்ப்பைத் தொடர்ந்து நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது.
குறித்த 16 பரப்புக் காணியை நேற்றைய தினம் பொறுப்பேற்றுக் கொண்டதாகப் பங்குத்தந்தை தெரிவித்தார்.
கீரிமலை சேந்தாங்குளத்தில் உள்ள தேவாலயத்துக்குச் சொந்தமான பக். 53

நிலையான வைப்புகளுக்கு
உயர்ந்த வட்டி

ஐந்து வருட நிலையான வைப்பொன்றுக்கு
12.00%
உச்ச வருட வட்டி (முதிர்ச்சியில்)
வ.தே.வ. 9.86%

| | 3மாதம் | 6மாதம் | 1வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ.வ.வீ.) | 9.50% | 10.00% | 10.25% |
| வ.தே.வ. | 9.84% | 10.25% | 10.25% |

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூ.1 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கு அதி உயர் வட்டியும் உரித்தாகும்.

ஏனைய நிலையான வைப்புகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதம்
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சணச அபிவிருத்தி வங்கிக் கிளையை நாடுங்கள்

www.sdb.lk
011 5 411 411
SDBL
சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ
நோக்கில் முன்னோடி

# பொருத்து வீடுகள் வேண்டாம் பொருத்தமான வீடுகளே தேவை

## யாழ். நகரில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 10
வடக்கு, கிழக்கைப் பாதித்துள்ள மூன்று முக்கிய விடயங்களை முன்வைத்து, சமூக நீதிக்கான அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டம் யாழ்.நகரில் நேற்று நடைபெற்றது. 65 ஆயிரம் பொருத்து வீட்டுத் திட்டம், சுன்னாகம் கழிவு ஒயில் பிரச்சினை, சம்பூர் அனல் மின் நிலையம், இவற்றுக்கு மாற்றுத் தீர்வை முன்வைக்குமாறு கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. யாழ். மத்திய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்றுக் காலை 10.30 மணிக்கு ஆரம்பமான போராட்டம் சுமார் ஒரு மணி நேரம் நடத்தப்பட்டது.




வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கவுள்ள 65 ஆயிரம் பொருத்து வீட்டுத் திட்டத்தை மாற்றி கல் வீடுகளை வழங்குமாறு கோரியும், திருகோணமலை சம்பூர் மக்களின் இருப்பையும் எதிர்காலத்தையும் சீர்குலைக்கும் வகையில் அமையவுள்ள அனல் மின்நிலையத் திட்டத்தை நிறுத்தி மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய மாற்றுத் திட்டங்களைச் செயற்படுத்த வலியுறுத்தியும், சுன்னாகம் நிலத்தடி நீரில் கலந்துள்ள கழிவு ஒயிலால் ஏற்பட்டுள்ள பாதிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கோரியும் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

"மத்திய அரசே மாகாண சபையே பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பதில் கூறு", "சம்பூரைக் கண்டுகொள்ளாத சம்பந்தனே, சுன்னாகத்தைக் கண்டுகொள்ளாத மாவையே", "பாட்டன் பூட்டி கட்டிய கிணற்றில் கழிவு எப்படி வந்தது ? எப்போது போவது?", "அந்நிய கம்பனிகளுக்கு மக்களைத் தாரை வார்க்காதே", "அனல் மின் நிலையம் சம்பூர் மக்களின் வாழ்விற்கு நாசம்", "பொருத்து வீடுகள் அல்ல பொருத்தமான வீடுகளே வேண்டும்", "பாதிக்கப்பட்டவர்களுக்கா பல்தேசியக் கம்பனிகளுக்கா வீட்டுத் திட்டம்", "மாசடைந்த சுன்னாகம் நீருக்கு மத்திய அரசே தீர்வு என்ன ?", "கழிவு ஒயில் கலந்த நிலத்தடி நீருக்கு மாகாண சபையே பதிலென்ன?", "கிணற்று நீரில் கழிவு ஒயில் போத்தல் நீரில் வியாபாரம், கம்பனிக்குக் கொள்ளை இலாபம்", "எட்கா வரும் பின்னே அனல் மின் நிலையம் வரும் முன்னே" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டம் நடத்தியவர்கள் ஏந்தியிருந்தனர். அத்துடன் இவற்றைக் கோசங்களாகவும் எழுப்பினர்.

போராட்டத்தின் முடிவில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமார், வடக்கு - கிழக்கில் அமைக்கப்படவுள்ள 65 ஆயிரம் வீடுகள் எம்முடைய மக்களின் சூழலுக்கு ஏற்றதாக இல்லை. திருகோணமலை சம்பூர்ப் பகுதியில் அனல் மின்நிலையம் அமைப்பதற்கான அனுமதி இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடு என்பதிலும் இது போன்ற திட்டத்தை இந்தியாவிடம் வழங்குவதில் எமக்கு மாற்றுக் கருத்துக்கள் இல்லை. அதேவேளை சம்பூர்ப் பகுதி மற்றும் சம்பூரை அண்டிய பகுதிகளில் உள்ள மக்கள் நலனைக் கருத்தில் கொண்டே அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மக்களுக்காகவே அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அபிவிருத்தித் திட்டங்களுக்காக மக்கள் பாதிப்படைதல் கூடாது.

சுன்னாகம் நீர்ப் பிரச்சினை என்பது சாதாரணமானது இல்லை. யாழ்.மாவட்டத்தின் ஒட்டு மொத்த இன அழிப்புச் செயற்பாடாகவே உள்ளது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டும் நம்முடைய பிரச்சினை கண்டுகொள்ளப்படாத நிலையில் இந்தக் கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது - என்று குறிப்பிட்டார்.

இந்தப் போராட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தினர், சம்பூர் பசுமை அமைப்பினர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினர், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-5,101,ரி5)



அம்புலன்ஸ் ஒன்றின் குறுக்கே மோட்டார் சைக்கிள் சென்றதனால் விபத்தைத் தவிர்க்க முயன்ற சாரதி கடையை மோதித் தள்ளினார். இந்தச் சம்பவம் காங்கேசன்துறை வீதி இணுவிலில் நேற்று நடந்துள்ளது. விபத்தால் கடையும் அம்புலன்ஸும் சேதமடைந்தன. பின்னர் அம்புலன்ஸ் பாரந்தூக்கியின் உதவியுடன் மீட்கப்பட்டது. சுன்னாகம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (ற-4,101)

## புது வருடப் பிறப்புக்காக மதுக் கடைகள் பூட்டு

கொழும்பு, ஏப்.10
எதிர்வரும் 13 ஆம் மற்றும் 14 ஆம் திகதிகளில் நாடு முழுவதும் மதுபான சாலைகள் பூட்டப்படும் என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

13, 14 ஆம் திகதிகளில் நாடு முழுவதும் உள்ள மதுபான விற்பனைச் சாலைகள் அனைத்தும் மூடப்படும். அத்தோடு இதனை மீறி சட்ட விரோதமான முறையில் மதுபான விற்பனையில் ஈடுபடுவோரைக் கைது செய்வதற்காக விசேட சுற்றிவளைப்புப் பிரிவினர் செயற்படுவார்கள் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ற-ஐ-5)

## வட மாகாண சபையின் யோசனை பெரும் விரிசலைக் கொண்டுவரும்

### கெஹெலிய ரம்புக்வெல எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு,ஏப்.10
தனித் தமிழ்ப் பிராந்தியங்களும், தனிச் சிங்களப் பிராந்தியங்களும் நாட்டில் அமைக்கப்படுமாயின் நாட்டில் சிங்கள, தமிழ் உறவிலும் பெரும் விரிசல் நிலைமை ஏற்படும். அது மாத்திரம் இன்றி வடக்குப் பகுதிகளுக்குச் சிங்கள மக்கள் செல்லவோ அல்லது வடக்கில் சிங்கள மக்கள் வாழவோ முடியாத நிலைமை ஏற்படும். சிங்கள மக்களையும் வடக்கில் இருந்து வெளியேற்ற அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பார்கள். தவிர்க்கும் பட்சத்தில் சிங்களவர்களை விரட்டியடிக்கவும் தயங்கமாட்டார்கள் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சரவை முன்னாள் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுத் திட்ட வரைவு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடமாகாண சபையின் நகர்வுகளும், புலம்பெயர் அமைப்புகளின் செயற்பாடுகளும் இன்று வடக்கில் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளன. ஆகவே வடக்கில் மீண்டும் இராணுவப் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டிய காலம் வந்துள்ளது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் வடக்கு மாகாணம் நாட்டில் பிரிவினை வாதத்தின் பக்கமே தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றது. வடமாகாண முதலமைச்சரும், வடமாகாண சபையினரும் எப்போதுமே நாட்டைத் துண்டாடும் நிலைப்பாட்டில்தான் உள்ளனர். இப்போது வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கருத்துக்களும் வடமாகாண சபையின் தீர்வுத் திட்டங்களும் மீண்டும் நாட்டில் போராட்டத்தை உருவாக்கும் வகையிலேயே அமைந்துள்ளன.

தனித் தமிழ்ப் பிராந்தியங்களும், தனிச் சிங்களப் பிராந்தியங்களும் நாட்டில் அமைக்கப்படுமாயின் நாட்டில் சிங்கள, தமிழ் உறவிலும் பெரும் விரிசல் நிலைமை ஏற்படும். அது மாத்திரம் இன்றி வடக்குப் பகுதிகளுக்கு சிங்கள மக்கள் செல்லவோ அல்லது வடக்கில் சிங்கள மக்கள் வாழவோ முடியாத நிலைமை ஏற்படும். இப்போது இருக்கும் சிங்கள மக்களையும் வடக்கில் இருந்து வெளியேற்ற இவர்கள் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பார்கள். தவிர்க்கும் பட்சத்தில் சிங்களவர்களை விரட்டியடிக்கவும் தயங்கமாட்டார்கள். இவ்வாறன நிலைமையில் மீண்டும் நாட்டில் பெரும் குழப்பங்களும், போராட்டங்களும் ஏற்படும்.

வடமாகாண சபையின் இந்தச் செயற்பாடு குறித்தும் முதலமைச்சரின் கருத்துத் தொடர்பிலும் இப்போது அரசு என்ன செய்யப் போகின்றது. எவ்வாறான பதிலை முன்வைக்கப்போகின்றது என்பதே எமது கேள்வியாகும். எவ்வாறு இருப்பினும் இன்று நாடு மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றது.

எமது அரசு வென்றெடுத்த தேசிய ஐக்கியத்தையும், பாதுகாப்பையும் இந்த அரசு முழுமையாகச் சீரழித்து விட்டது. தேசிய பாதுகாப்பில் பெரும் சந்தேகம் எழுந்துள்ளது. வடக்கில் மீண்டும் புலிகளின் ஆதிக்கம் தலைதூக்கி வருகின்றது. கொழும்பிலும் புலிகளின் சீருடைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமையைப் பார்க்கும் போது மீண்டும் நாட்டின் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது - என்றார். (ற-ஐ-5)

# வாள் வெட்டில் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்.10

தொழிலில் ஏற்பட்ட பிரச்சினை, வாள் வெட்டில் முடிந்ததால் ஒருவர் படுகாய மடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த 3 ஆம் திகதி யாழ்ப்பாணம், கொட்டிடிப் பகுதியில் இடம்பெற்றது.

மேசன் வேலையொன்றைப் பெறுவது தொடர்பாக இரண்டு தரப்பினரிடையே ஏற்பட்ட பிணக்கே வாள்வெட்டில் முடிவடைந்தது. இந்தச் சம்பவத்தில் பாலசுப்பிரமணியம் மோகன் என்பவர் தோள்ப் பகுதியில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டார். இந்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக இருவர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸார் நேற்றுமுன்தினம் யாழ்.நீதிவான் நீதி மன்றில் முற்படுத்தினர். அவர்களை இந்த மாதம் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (த-103)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
தெய்வபகவான் மங்கையர்க்கரசி

கடந்த 09.04.2016 அன்று இறை வனடி சேர்ந்த தெய்வபகவான் மங்கையர்க்கரசி அவர்களின் பிரிவால் துயருற்றி ருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

16/02, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு (றாட் )நிறுவனம்,
விளையாட்டுக்கழகம்.

## நினைவு அஞ்சலி



தோற்றம் 06-12-1938
மறைவு 11-03-2016

தோற்றம் 25-04-1947
மறைவு 08-04-2015

31ம் நாள் நினைவு
அமரர். கணபதிப்பிள்ளை அருமைநாயகம்

1ம் ஆண்டு நினைவு
அமரர். அருமைநாயகம் யோகமணிதேவி

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

## 16 ஆம் நாள் நினைவு அழைப்பு



தோற்றம் 26 . 05 . 1945
மறைவு 26 . 03 . 2016

அமரர்
கந்தையா சிவகுருநாதன்

அமரர் கந்தையா சிவகுருநாதன் அவர்கள் 26.03.2016 அன்று இறைபதம் அடைந்த 16 ஆம் நாள் இன்று (10.04.2016) அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பிள்ளையார் கோயிலடி,
நாவற்குழி மேற்கு, கைதடி.

குடும்பத்தினர்.

## Available

Part Time Accountant /
Visiting Accountant

Contact Number- 076 685 6808

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி நகரில் A-9 பாதைக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு : 077 633 7307

## மரண அறிவித்தல்

செல்வி மங்கையர்க்கரசி கந்தையா



பிறப்பு 18 . 02 . 1929
இறப்பு 09 . 04 . 2016

நெல்லியான் சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் மூளாயை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மங்கையர்க் கரசி கந்தையா நேற்று (09.04.2016)சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இளையபிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற நெல்லியான் வேலுப்பிள்ளையின் (மீன் பிடி பரி சோ தகர்) சகோதரியும்காலஞ்சென்ற மகேஸ் வரியின் மைத்து னியும் வேல்விழி சூரியகுமார், மான்விழி தயாபரன், கயல் விழி சூரியகுமார், தண் விழி மணிமாறன் காலஞ்சென்ற மாயவிழி வேலுப்பிள்ளை மற்றும் தர்மவிழி நாகேந்திரன், சாந்தஸ்ரீ மாயினி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலை7.00 மணியளவில் மூளாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அஜந்தா இல்லம்
மூளாய், சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 843 9610, 021 2250339

## மணமகள் தேவை

யாழ். றோமன் கத்தோலிக்க கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த 84 இல் பிறந்த B.sc(Hon) Engineer சிங்கப் பூரில் Project Manager ஆகப் பணியாற்றும் மணமகனுக்கு C.I.M.A, Accountant, Doctor, B.Sc Eng. I.T, B.sc sortware Eng, தகைமையுடைய அழகான நன்கு படித்த மணமகள் தேவை.

தொடர்பு: 021 222 0869,
0777 973443

## தேவை

புடைவைக்கடைக்கு பெண் ஊழியர் தேவை.

தொ.பே.இல : 0779319684

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலைக்கு அண்மையிலும் மெமோறியல் ஆங்கிலப் பாட சாலைக்கு 50m தொலைவிலும் 10பரப்பு சுற்றுமதிலுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

076 612 7479, 077 846 6182

## IELTS

UK KU Education

MBA(London) Qualified Trainer Call: 0777302882

Visit: http://edu.kugroup.info/ielts

0777-302882 (A,G&L) IELTS Centre@KU

தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே முன்னணி நிறுவனம்.IELTS Life Skills-A1-B1

K.U Education,No 626 1/1,First Floor,K.K.S Rd,Jaffna.

## வேலையாள் தேவை

எமது நிறுவனத்தின் பொருள்களை வாகனத்தில் சென்று விநியோகிப்பதற்கு (Delivery boy) ஆள்கள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் நேரில் வரவும்.

மயூரா பார்மசி, திருநெல்வேலி.

தொடர்புகளுக்கு: 021 222 2946

## கவலையை விடுங்கள் கிக்விசன் கமராவை பொருத்துங்கள்

புத்தாண்டுக்கு விஷேட விலைக்கழிவுகளுண்டு!
கை.தொ.இ.
077 593 0335

எங்கள் புத்தாண்டு கூடாரத்துக்கு (வெலிங்டன் சந்தி) விஜயம் செய்து விஷேட சலுகைகளை பெற்றுக்கொள்ளுங்கள்
சன்சக்தி ரேடர்ஸ்

கிக்விசன்/HIKVISION World No.1
in 2012 and 2014
and by IMS USA in 2012

விலை உயர்ந்தவை ஆனால் தரத்தில் பன்மடங்கு உயர்ந்தவை!.



4 கமராக்கள்
DVR, Power Supply,
BNC, DC jack
42,000/=
இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

துல்லியமான கண்காணிப்பிற்கு - கிக்விசன்!
நீண்டகால உழைப்பிற்கு - கிக்விசன்!
இரவு கண்காணிப்பிற்கு - கிக்விசன்!
கடின உழைப்பிற்கு - கிக்விசன்!
உயர்ந்த தரத்திற்க்கு - கிக்விசன்!
CCTV கமரா என்றலே - கிக்விசன்!

நல்ல சேவைக்கும்
உங்கள் நம்பிக்கைக்கும்
நாம்-சன்சக்தி ரேடர்ஸ்/கிக்விசன்

SST- சன்சக்தி ரேடர்ஸ்

www.sunsakthy.com Email info@sunsakthy.com

இல 651, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்
தொ.இ: 021 221 7994 கை.தொ.இ.077 593 0335

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ திருவாதிரை நட்சத்திரம், கிரகபாவம் 4, 1986ஆம் ஆண்டு பிறந்த கொழும்பில் சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு:- 0776792275

## வீடுதேவை

யாழ் நகரை அண்மித்த பகுதியில் சிறிய வீடு/அனெக்ஸ் தேவை

தொடர்பு : 077 020 2023

## பதவி வெற்றிடம்

சமையலாளர்
சமையல் உதவியாளர்
வரவேற்பு மேலாளர் (Door Man)

வடக்கின் முன்னணி நட்சத்திர Hotel ஆன Tilko Jaffna City Hotel இல் மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் வேண்டப் படுகிறார்கள்.

Hotel துறையில் குறைந்தது ஒரு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

சிறந்த நம்பகத்தன்மையான வாய்ப்புடன் கூடிய கவர்ச்சிகரமான சம்பளமும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 330 6985

மின்னஞ்சல் அனுப்ப வேண்டிய முகவரி :
tilko.tilak@gmail.com

(C/22/334)

## நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்

- ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
- ஆங்கிலத்தினை முழுமையாகக் கற்பதற்கு விரும்புபவர்களுக்கும்
- ஆங்கில மொழிமூல கற்கை நெறிகளைப் பின்பற்ற உள்ளவர்களுக்கும்
- ஆங்கில அறிவினை மேலும் விருத்தி செய்ய விரும்பும் ஆங்கில ஆர்வலர்களுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் மோத கற்கைநெறி.

(Trainer Training (Teacher Training Diploma)

→ 500 மணித்தியாலங்களில் நீங்களும் மிகச்சிறந்த ஆங்கில ஆசிரியர்
→ அனைத்தும் அடிப்படையிலிருந்து.(The Stracture of Language and oral situation approaches)
→ நவீன அணுகுமுறைகள்
→ Psychology, Leadership, Personality development.
→ Teaching practice
→ How to use the Techniques and teaching aids effectively in English

New batches Start On : 9.am (16.04.2016) சனி (weekend batch)
9.am (18.04.2016) திங்கள் (Week day batch)

4th, 5th Batch இல் இணைய பதிவுகளுக்கு முந்துங்கள்

English Language Adventure School
Nothing is impossible
ELAS

ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040

# மரண அறிவித்தல்

## திருமதி முத்துரத்தினம் சிவப்பிரகாசம்



**மலர்வு**
**08.04.1936**

**உதிர்வு**
**06.04.2016**

வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துரத்தினம் சிவப்பிரகாசம் 06.04.2016 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செந்திவேற்பிள்ளை - இலட்சுமிப் பிள்ளை தம்பதியரின் கனிஷ்டபுத்திரியும் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மருமகளும் சிவப்பிரகாசத் தின் பாசமிகு மனைவியும் பவானி(ஆசிரியை), நகுலேஸ்வரன் (P.H.I), பிருந்தா, நிவேதா, சந்திரிகாதேவி, சுகந்தி, வசந்தி, வசந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவராஜா(மரண விசாரணை அதிகாரியும், J.Pயும்), சூரியமதி, காலஞ்சென்ற துரைச்சாமி மற்றும் சிவஞானசுந்தரம், சிவகுமார், கணேஸ்வரன், யோகநாதன், சர்மினி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பறுவதம், காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் விஸ்வலிங்கம், சிவப்பிரகாசம், காலஞ்சென்ற கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கோபிசங்கர், சிவசங்கர், லியேனியா, பிங்களன், சிந்துஜன், மதுஷன், தரணியன், சாருஜன், சுஜன், பிரகாஷ், நிருஷன், சஞ்ஜீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2016) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தலைவாசல்**
**வியாபாரி மூலை,**
**பருத்தித்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 226 4754**

# மரண அறிவித்தல்

## செல்லையா செல்வரத்தினம்

மண்கும்பான் கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஆறுகால்மடத்தில் வசித்தவரும் தற்போது சபாபதிவீதி, கொக்குவில் கிழக்கில் வசித்தவருமாகிய செல்லையா செல்வரத்தினம் 07.04.2016 வியாழக்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- நாகம்மா தம்பதியரின் அன்பு மக னும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவகாமி, விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், சின்னம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, சீதாலெட்சுமி, அன்னபூரணம், செல்வராசா மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சௌந்தரம், சின்னக்குஞ்சு, குமாரசாமி, சின்னத்துரை, பாலசிங்கம், மகேந்திரம், தர்மலிங்கம், காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம், கந்தசாமி மற்றும் இராசேந்திரம், பவளம், சற்குணம், வீரகத்திப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், இராசதுரை, சோம சுந்தரம், நாகராசா மற்றும் சங்கராம்பாள் ஆகியோரின் மைத்துனரும், கலைச்செல்வி (கலா), சசிகுமார் (பிரான்ஸ்), ஜங்கரரூபன் (பிரான்ஸ்), கோகுலரூபன் (பிரான்ஸ்), காந்தரூபன் (பிரான்ஸ்), தாரணி (ஜேர்மனி), செல்வரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரகுமார் (திருநெல்வேலி மார்க்கட்),குபேரினி (பிரான்ஸ்), மாலினி (பிரான்ஸ்), பிரசா (பிரான்ஸ்), தர்சா (பிரான்ஸ்), றமேஸ் (ஜேர்மனி), றம்மியா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், தர்சிகன் (பிரான்ஸ்),நிறோஜன் (பிரான்ஸ்),சதுர்சிகன் (பிரான்ஸ்), கௌசிகன், கஸ்தூரி, மதுசாயினி, சாருகா (பிரான்ஸ்), ஜெஸ்வின் (பிரான்ஸ்),விதுர்சிகா (பிரான்ஸ்), காவியா (பிரான்ஸ்), அகிலாஸ் (ஜேர்மனி), றகிலாஸ் (ஜேர்மனி), ருதீஸ் (ஜேர்மனி), அஸ்விக் (பிரான்ஸ்),அக்சயா (பிரான்ஸ்), அக்ஷிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மண் கும்பான் சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.47, சபாபதிவீதி,**
**கொக்குவில் கிழக்கு.**
**(பூநாறி மடம் செல்வமகால் முன்வீதி)**

**தகவல்:**
**வை.சந்திரகுமார் (மருமகன்)**
**077 248 9134**

**குமார் - 0033 7773 67202, ரூபன் - 0033 6165 32107, கோகுலன் - 0033 6517 53543,**
**காந்தன் - 0033 6035 81456, செல்வன் - 0033 7819 22989, றமேஸ் - 0049 17524 74108**

(6a/231)
(11,18,19)

"மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்"




- உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா என்பதில் சந்தேகமா?
- மேலதிக கல்சியம், மக்னீசியம், நைட்ரைட் ஒரு பிரச்சினையா?
- மலத்தொற்று கிருமிகள் போன்ற உயிர்க்கொல்லி நோய்க்கிருமிகள் உங்கள் கிணற்று நீரிலும் இருக்கலாம் என அச்சமா?
- போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான செலவு அதிகமா?
- மேற்குறிப்பிடப்பட்டவை போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் நம்பிக்கை உத்தரவாதத்துடனான தீர்வு எம்மிடம் மட்டுமே...
- **UV** உடனான **HI-PURE RO** நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் 100% தூய நீரை உங்கள் வீட்டிலேயே பெற்று பயன் பெறலாம்.
- அனைத்து நீர் சுத்திகரிப்பு தொடர்பான சிறந்த தீர்வுக்கு எங்களை நாடுங்கள்.

**EVER PURE HI-TEC (PVT) LTD**
**341,K.K.S ROAD ,JAFFNA.**
**TEL:- 0215677567,0773626230**

# தென்னிந்திய திருத்தல யாத்திரை

**நாள்கள் - 16 யாத்திரிகர் - 10**

**ஆரம்பம் - 20.05.2016**

**தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கு ஊடாக திருத்தல யாத்திரை தரிசிக்கும் ஆலயங்கள்.**

உச்சிப்பிள்ளையார், பிள்ளையார்பட்டி, மணக்குளவிநாயகர், காணிப்பாக்கவிநாயகர், திருப்பதி, சிதம்பரம், திருவெண்ணாமலை, காளகஸ்த்திரி, ஏகாம்பரேஸ்வரர், **திருவானைக்காவல்**, திருவாரூர், திருவிடைமருதூர், திருவையாறு, தஞ்சாவூர், இராமேஸ்வரம், **உத்திரகோசமங்கை, திருப்புலாணி**, நவபாஷாணம், குருவாயூர், **ஐயர்மலை, சிவன்மலை, பொற்கோயில்**, பத்மநாதசுவாமி, கொடுங்களூர் பகவதி அம்மன், சுசீந்திரம், கபாலிஸ்வரம், பஞ்சவடி, அனந்தமங்கலம், ஆஞ்சினேயர், மதுரைமீனாட்சி, கன்னியாகுமரி, மைசூர் சாமுண்டீஸ்வரி, நந்திகோயில், ஸ்ரீரெங்கம், ஸ்ரீரெங்கபட்டிணம், சமயபுரம், மேல்மருவத்தூர் பிரம்மா **கோயில், 9 நவக்கிரக ஆலயங்கள்** தனித்தனியாக, திருநள்ளாறு சனிபகவான் உட்பட ஆறுபடை வீடுகள் (திருச்செந்தூர், பழனி, பழமுதிர்சோலை, திருத்தணிகை, திருப்பரம்குன்றம், சுவாமிமலை) குன்றக்குடி, பைரவன்பட்டி பைரவர், காமாட்சி, வனத்திருப்பதி, திருக்கடையூர் அபிராமி உட்பட 60 இற்கு குறையாத ஆலயங்கள் தரிசிக்கலாம்.

முக்கியமாக கும்பகோணம் மகாமயை குளத்தில் கும்பமேளா நடந்த இடத்தில் 90 நாள்களுள் நீராடினால் தோஷங்களும் பாவங்களும் நீங்கும் என்பது ஐதீகம் புனித குளத்தில் நீராட விஷேஷ ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

**கட்டணங்கள் உட்பட மேலதிக விவரங்களை கேட்டு அறிந்து பதிவுசெய்யவும்**

**கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் (ராஜன் - மகன்)**
**59.3/6, செட்டியார்தெரு, கொழும்பு - 11**
**T.P: 0777 680 102, 0777 362 154**
**F.B.sridevisriranganathan.thuraiappa**

# ABI யின்

## புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி

**தமிழ் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாட குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும் ஆடைகள் ஒரே இடத்தில்..**



இன்பத்தின் தருணங்கள் எங்கெங்கு உண்டோ அபியின் ஆடை வகைகள் அங்கங்கு உண்டு.

உங்கள் தெரிவுகளுக்கு ஏற்ப
**20% முதல் 50%**
வரையான விசேட விலைக்கழிவுகள்

சில ஆடைகளுக்கு ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம்

இச் சலுகை இன்று முதல்

**05.04.2016 - 14.04.2016 வரை மட்டுமே**

"எதை எடுப்பது எதை விடுவது என்ற சந்தோசத்தில் நீங்கள் திணறப்போவது நிச்சயம்"

அபியின் வாடிக்கையாளர் அட்டைக்கு 3% விசேட விலைக்கழிவு
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

இந்தப் புத்தாண்டுக்கு முன்னதாகவே வந்து உங்கள் உள்ளத்தை கொள்ளை கொண்ட ஆடைகளை சிறப்புத் தள்ளுபடி விலையில் அள்ளிச் செல்லுங்கள்.

ABI Fashion World

**112, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**(சத்திரச்சந்திக்கு அருகில்) தொ.பே: 021 222 3738**

# சிறிகுமரன் ரெக்ஸ்

**தட்டாதெருச் சந்தியில் புது வருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவில் புத்தம் புதிய தெரிவுகள்**



**இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து ரக ஆடைகளையும் நம்ப முடியாத விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.**

**விசேடமாக Office Wear Sarees 690/= இலிருந்து**

- பட்டுச் சாறி
- பன்சி சாறி
- கொட்டன் சாறி
- சல்வார்
- சல்வார் துணி
- TOPவகைகள்
- ரவுசர்,சேட்

**என்பவற்றை மலிவாகப் பெற்றுக்கொள்ள**

**சிறிகுமரன் ரெக்ஸ்**
**770,K.K.S. றோட், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.**

# புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியில் வேலைவாய்ப்புக்களை பெறுவதற்கு**

| | |
|---|---|
| வங்கியியல் கற்கைநெறிகள் **IABF & DABF** | Medium : - Tamil & English<br>Minimum qualification :-<br>G.C.E. O/L 6 Passes including 5 Credits |
| பட்டயக்கணக்காளர் ஆவதற்கு **Chartered Accountancy** Executive Level , Business level | Medium :-Tamil & English<br>Minimum qualification:-<br>G.C.E. A/L 3 Passes |
| ஆங்கிலத்தில் நிபுணத்துவம் பெறுவதற்கு *CERTIFICATE COURSE IN ENGLISH* | Minimum qualification :-<br>G.C.E. O/L 3 Passes<br>Total Hours :- 130 Hours |

**A/L** வர்த்தகப்பிரிவுகளும் இடம்பெறுகின்றன **2016 & 2017 & 2018**

Further Details : -

**Jaffna College**
Undergraduate Dept.

464, Hospital Road, Jaffna.
Contact NO :-
021 222 3382, 021 2229149

(C/29944)(10.17.18)

# மாபெரும் மலிவு விற்பனை

**சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு**

எதிர்வரும் 14.04.2016 வரை

***ராசி கலக்ஷன்ஸ் (ராசி சில்க்ஸ்)***

**இந்தியாவில் இருந்து விசேடமாக தருவிக்கப்பட்ட நவீன டிசைன்களினாலான ஆடைத் தினுசுகள்**

| | | |
|---|---|---|
| சாறிகள்(சீக்குயின்ஸ்) | ~~4000/=~~ | 1500/= |
| மொடல் சாறி | ~~5500/=~~ | 2000/= |
| கொட்டன் சாறி | ~~1000/=~~ | 500/= |
| நெற் சல்வார் | ~~6000/=~~ | 4000/= |
| கொட்டன் சல்வார் | ~~5000/=~~ | 2500/= |
| TOP | ~~1600/=~~ | 800/= |
| T சேட் | ~~1800/=~~ | 800/= |
| மொடல்சேட் | ~~1800/=~~ | 900/= |



இது மட்டுமன்றி அனைத்து ஆடைவகைகளும் மாபெரும் மலிவு விற்பனை. இன்றே விரையுங்கள். உங்களுக்குப் பிடித்தமானதை அள்ளிச் செல்லுங்கள்.

***ராசி கலக்ஷன்ஸ்***
***(ராசி சில்க்ஸ்)***
Rasi Collections

**இல.199, மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தொடர்பு: 021 222 5571**

## புத்தாண்டு கால குதூகலத்தில் சொப்ட்லொஜிக் உடன் இணைந்திடுங்கள்

softlogic max

**250 மில்லியனுக்கு மேல் பெறுமதியான தள்ளுபடிகள் மற்றும் பரிசுகள்**

Panasonic 32" LED



3 வருட உத்தரவாதம்
6,999/- மாத்திரம் செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

SAMSUNG 32" LED JOY PLUS



மீதி வட்டியில்லாத 15 மாத தவணைக் கொடுப்பனவு முறையில்

3 வருட உத்தரவாதம்
6,999/- மாத்திரம் செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்
இலவச DVD

DEL Laptop 3543 i3

DELL



FREE Printer

ரூ. 85,999/- மாதம் ரூ. 5,200/- 15 இலவசம்

6 வது Generation இல் புதிய மடிக்கணினியை
14,999/- செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

Panasonic 32" LED 32sv7



ஆரம்ப கட்டணம் 9,999/-
மற்றும் இலவச Home theater (XH166)

இந்தச் சலுகைகள் எமது கிளையில் மட்டுமே

தொடர்புகளுக்கு:
softlogic MAX
maximum experience
பிரதான கிளை
இல.420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (KFC கட்டடம்)
0777 397734 / 021 567 8989 / 077 982 4213

## MIHINLANKA

மிஹின் லங்கா
இவ்வானம் உங்கள் வசம்

உங்களின் வசதிக்காக பிரயாணச்சீட்டுக்களை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
யாழ்ப்பாணத்தில் உள்ள எமது அலுவலகத்தை நாடுங்கள்.

முதல் இரண்டு மாதங்களிலும் எமது மிஹின் லங்கா நிறுவனத்தின் விமானங்கள்
பறப்பு செய்யும் நாடுகளுக்கு அமைந்த பாதையில் உள்ள எந்த
நாட்டுக்குமான பற்றுச்சீட்டை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில்
குலுக்கல் முறையில் அதிர்ஷ்ட சாலிகளை தெரிவுசெய்யப்படும் வாய்ப்பு.

தெரிவுசெய்யப்படும் இரண்டு அதிர்ஷ்ட சாலிகளுக்கு! சென்னை சென்றுவர விமான
டிக்கட்டும் 2 நாள்கள் TURYA CHENNAI ஹோட்டலில் தங்கும் வசதியும் இலவசமாக
வழங்கப்படும். (நிபந்தனைகளுக்குட்பட்டது)
VISA ஒழுங்கு செய்து தரப்படும்

071 873 60 64
www.mihinlanka.com
மேலதிக விவரங்களுக்கு:
இல.80/21, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கல்லீரல் நோயிலிருந்து விடுபடுங்கள்

ஈரலில் கொழுப்புப்படிவு, எப்படைட்டிஸ், மஞ்சட்காமாலை சிரோஸிஸ், கல்லீரல் புற்றுநோய்

ஆகிய பாதிப்புகள் கல்லீரலில் ஏற்படுவதற்கு மதுபாவனை மட்டும் அல்லாது வைரஸ் தொற்றுநோய், அழற்சி என்பவையும் காரணிகளாக அமைகின்றன.

அறிகுறிகள் - கல்லீரலில் வலி, களைப்பு, பசியின்மை, குமட்டல், மஞ்சட்கண், எடைகுறைவு, எசைட்டிஸ், சொறி

எமது உன்னதமான ஆயுர்வேத மருத்துவம் கல்லீரலின் நுண்மையான சுரப்பிகளை சீர்படுத்தி இயங்கச் செய்வது நிரூபிக்கப்பட்டுள்ளது.




FAIR PHARMA (PVT) LTD

Ceylinco House, 10th Floor, East Wing,
No : 69, Janadhipathi Mawatha, Colombo 01.
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

Hotline: 0777 555 600 / 0777 708 310 / 0777 708 330
Office 011 4 388 200/ 4 388 100 / 4 388 101/4 388 102
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI &

## பருத்தித்துறைக் கடலில் கைதானோருக்கு பிணை

யாழ்ப்பாணம், ஏப்.10
பருத்தித்துறைக் கடலில் பயணித்துக் கொண்டிருந்த வேளையில் கைது செய்யப்பட்ட புத்தளத்தைச் சேர்ந்த 11 பேரையும் தலா ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதி வழங்கிய பருத்தித்துறை நீதிமன்று, வழக்கை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

பருத்தித்துறைக் கடலில் பயணித்துக் கொண்டிருந்த 40 அடி நீளப் படகு ஒன்றை நேற்று முன்தினம் வழிமறித்த கடற்படையினர், அவர்களின் தொழில் அனுமதி மற்றும் ஆவணங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தி அவை தொடர்பில் இருந்த சட்டவிரோதச் செயல்கள் தொடர்பில் சந்தேகம் கொண்டு கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களத்தினரிடம் அவர்களை ஒப்படைத்தனர். அவர்களிடம் அளவுக்கதிகமான சிலிண்டர்கள், அளவுக்கதிகமான ஆள்கள் இருந்துள்ளனர்.

இவ்வாறு கையளிக்கப்பட்டவர்கள் பயணம் செய்த பிரதான படகுக்கு மீன்பிடி அனுமதிப் பத்திரம் இருக்கவில்லை என்பதுடன் அதனுடன் எடுத்துச் சென்ற இரு சிறு படகுகளுக்கும் உரிய மீன்பிடி அனுமதிகளும் 2016ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்படவில்லை போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இதன்பிரகாரம் குறித்த வழக்கை ஆராய்ந்த பருத்தித்துறை பதில் நீதிவான் சுப்பிரமணியம், வழக்கை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். கைப்பற்றப்பட்ட படகு கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-4,10)

### இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

வீட்டில் இருந்தவாறே பொழுதுபோக்கு நேரத்தில் மேலதிக வருமானம் உழைக்க இதோ ஓர் அரிய வாய்ப்பு. அழையுங்கள்.

077 748 1592

### வேலைவாய்ப்பு

வவுனியா நகரில் தர்மலிங்கம் வீதி, இல.48இல் அமைந்திருக்கும் கல்லஸ் கோல்ட் கவரிங் ஸ்தாபனத்துக்கு வேலை செய்வதற்கு இமிடேசன் நகை செய்யும் வேலை தெரிந்த பத்தர்மார்கள் தேவைப்படுகின்றார்கள். விருப்பம் உள்ளவர்கள் நேரில் வரவும்.

024 222 1001, 024 222 7861

### மீளப் பெற்றுக் கொள்ளவும்

எமது நிறுவனத்தில் பழுது பார்ப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட மின் இலத்திரனியல் சாதனங்களை இன்றிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் (10.05.2016 இற்கு முன்) உரிய ஆதாரத்துடன் மீளப் பெற்றுக் கொள்ளவும். இதற்குப் பின்னர் மீளப் பெறப்படாத பொருள்களுக்கு நாங்கள் பொறுப்பானவர்கள் அல்லர் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தொடர்பு: சாம்பவி இலத்திரனியல் கூடம்
வட்டுத் தெற்கு , வட்டுக் கோட்டை 077 977 3749


### நாகபூஷணி திருமணசேவை

டாக்டர், என்ஜினியர், எக்கௌண்டன், வங்கி உத்தியோகத்தர், சட்டத்தரணிகள், ஆசிரியர், அரச உத்தியோகத்தர், தனியார் துறையினர் மற்றும் வெளிநாட்டு வரன்கள் ஜாதகங்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளன. நீங்கள் விரும்பும் மணமகனையோ மணமகளையோ உடன் மிகப்பொருத்தமாகத் தெரிவு செய்துதரப்படும்.
383/14பி, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(கோயில் வடக்குப் பக்கம்)

021 222 9306, 077 138 7596, 075 554 6000
Email: nakapoosanywedding@gmail.com

## Study in Cyprus

ஐரோப்பிய நாடான சைப்ரசில்
குறைந்த செலவில் படிக்க ,உழைக்க



* Business Management
* Hotel & Tourism Management
* Computer Science
* Engineering
* MBA

Next Intake Sept 2016. Apply Now

- No IELTS
- No Interview
- Very low Course fee
- 100% Visa Success

Study & Work in
Latvia, Lithuania, Poland
Swiss, Germany , France , Italy

iCS Study Overseas
Admission Help line
076 7013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி,
யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road,Colombo - 06



அகில இலங்கை யாழ். ஆனைக்கோட்டை நாரவராக்காடு
### கருணைமிகு புக்கை தின்னி பிள்ளையார் திருக்கோயில்
### புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா

கர்மாரம்பம்:
மன்மத வருஷம் பங்குனி மாதம் 26 ஆம் நாள் (08.04.2016) வெள்ளிக்கிழமை அதிகாலை 5.40 மணிக்கு கர்மாரம்பம்

எண்ணெய்க்காப்பு:
மன்மத வருஷம் பங்குனி மாதம் 28 ஆம் நாள் இன்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலை8.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை.

மஹா கும்பாபிஷேகம்:
மன்மத வருஷம் பங்குனி மாதம் 29 ஆம் நாள் 11.04.2016 திங்கட்கிழமை காலை 9.20 மணி முதல் 10.00 மணிக்குள்.

பிரதிஷ்டா பிரதம குரு:
பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சாரியார்
(உரும்பிராய் ஐயப்பன் ஆலய ஆதீனகர்த்தா)

"வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"
சுபமஸ்து

ஆனைக்கோட்டை,
நாரவராக்காடு.
ஆலயத் தொண்டில் பரிபாலன சபை.

விளம்பர அனுசரணை:
பிறேம் நகைமாடம், பிறேம்பிளாஷா, 171,யாழ்வீதி, மானிப்பாய்.
உரிமையாளர் - R. பிறேமகுமார் (பரிபாலனசபைத் தலைவர்)

### சதுர்த்திப் பூசை

யாழ். வண். வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சதுர்த்திப் பூசை நடைபெறவுள்ளது என்று ஆலய பிரதமகுரு தெரிவித்துள்ளார். அபிசேகம், மூல மூர்த்திப்பூசை, வசந்த மண்டபப் பூசையுடன் விநாயகப்பெருமான்வீதி உலாவரும் நிகழ்வும் இடம் பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
(ற-ஐ-றி

# சந்தைகளில் கழிவு அறவிடுவதற்குத் தடை

## அறவிடப்பட்டால் விவசாயிகள் முறையிடலாம் என்கிறார் சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர்

யாழ்ப்பாணம்,ஏப்.10
சந்தைகளில் அறவிடப்படும் கழிவு நடவடிக்கைகளால் விவசாயிகள் பலரும் கூடுதல் நட்டம் அடைவதால் பத்து வீதக் கழிவு வழங்குமாறு விவசாயிகளைக் கட்டாயப்படுத்தக் கூடாது. - இவ்வாறு சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் அ.வினோராஜ் தெரிவித்துள்ளார்.

கொடிகாமம் மத்திய சந்தையில் விற்பனைக்குக் கொண்டுவரப்படும் உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை வியாபாரிகளால் 10 வீதக் கழிவு அறவிடப்படுவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் சாவகச்சேரி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**“சந்தைகளில் விவசாயிகளிடம் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது 10க்கு ஒன்று என்ற வீதத்தில் கழிவு பெறப்படுதல் கூடாது. விவசாயிகளைக் கட்டாயப்படுத்திக் கழிவைப் பெற்றுக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும் எனச் சந்தை வியாபாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.”**

சந்தைகளில் விவசாயிகளிடம் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது 10க்கு ஒன்று என்ற வீதத்தில் கழிவு பெறப்படுதல் கூடாது. விவசாயிகளைக் கட்டாயப்படுத்திக் கழிவைப் பெற்றுக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என சந்தை வியாபாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங் கப்பட்டுள்ளன.

அத்துடன் சந்தைப் பகுதியில் துண்டுப் பிரசுரங்களும் , சுவரொட்டிகளும் விவசாயிகளை அறிவூட்டும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதனைத் தடுக்க தொடர்ச்சியாக முயற்சி எடுக்கப்படுகின்றது. கூடுதலானோர் எனக்கு முறையிடும் பட்சத்தில் நான் கடுமையான நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் பிரதேச சபைச் செய லாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் குறித்த வியாபாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படவுள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறுமானால் எமக்கு உடனுக்குடன் விவசாயிகள் அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

பிரதேசத்தில் தற்சமயம் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறுதானியப் பயிர்ச் செய்கையில் கட்டாக்காலி மாடுகளால் பயிர் அழிவு ஏற்படுகின்றது என்றும் அவைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் விவசாயிகள் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் சாவகச்சேரி கமநல சேவை நிலைய உத்தியோகத்தரும், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு விளக்கங்களை வழங்கினர்.

(ற-ஐ-ரி5,122)

### எஸ்.டி.எஸ்ஸின் துணைவியார் காலமானார்



கொழும்பு, ஏப்.10
தமிழ்ப் பத்திரிகை உலகின் ஜாம்பவானும் ‘தினபதி’, ‘சிந்தாமணி’, ‘சூடாமணி’, பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியருமான எஸ்.டி.சிவநாயகத்தின் துணைவியார் மங்களாவதி சிவநாயகம் தனது 88 ஆவது வயதில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளன.

எல்லோராலும் ‘மங்களம் அக்கா’ என்று அழைக்கப்பட்ட அவர் 35 வருட ஆசிரிய சேவைக்குப் பின்னர் கடைசியாக கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்றார். மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் நீண்ட காலம் திருகோணமலையிலும், கொழும்பிலும் வாழ்ந்தவராவார். (ஐ-5)

# இறைச்சிக் கடை உரிமையாளர்கள் பொலிஸ் நிலையம் முன் போராட்டம்

## தொழிலுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் என



யாழ்ப்பாணம், ஏப். 10
பண்ணைப் பகுதியில் இறைச்சிக் கடைகளை நடத்துபவர்கள், தமது தொழிலுக்கு இடையூறுகள் விளைவிக்கக் கூடாது என்று தெரிவித்து, யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தின் முன்பாக ஒன்று கூடி அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன் காரணமாக பண்ணைப் பகுதியிலுள்ள இறைச்சிக் கடைகளில் பெரும்பான்மையானவை நேற்று மூடப்பட்டன.

ஐந்து சந்திப் பகுதியின் ஊடாக இரண்டு ஆடுகளைத் தனது மோட்டார் சைக்கிளில் ஒருவர் கொண்டு வந்துள்ளார். இதன் போது பொலிஸார் அவரை மறித்து, அவரது ஆடுகளைப் பறிமுதல் செய்ததுடன், அவரையும் கைது செய்துள்ளனர் என்று எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு பொலிஸார் தொடர்ச்சியாக, தமது தொழிலுக்கு இடையூறு விளைவிக்கின்றனர் என்று அவர்கள் குற்றம் சுமத்தினர். எதிர்காலத்தில் பொலிஸார் இவ்வாறு இடையூறு விளைவிக்கக் கூடாது என்பதற்காகவே, பொலிஸ் நிலையம் முன்பாக நாம் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வீரசிங்கவிடம் கேட்ட போது-
ஆடுகளை மிகச் சிறிய பெட்டியில் அடைத்துக் கட்டிச் சென்றவரை பொலிஸார் வழிமறித்துச் சோதனை செய்தனர்.

இதன் போது ஆட்டைக் கொள்வனவு செய்த கடிதம், பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கடிதம் உள்ளிட்ட ஆவணங்கள் அவரிடம் இருக்கவில்லை. அதனால் அவரைப் பொலிஸார் கைது செய்தனர். நீதிவானின் முன்னிலையில் அவரை முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்று அவர் தெரிவித்தார்.

(ற-ஐ-5-10)



# வவுனியா மாவட்டத்துக்கு 12 ஆயிரம் வீடுகள் தேவை

## ஆளுநரிடம் அரச அதிபர் சுட்டிக்காட்டு

வவுனியா, ஏப்.10

வவுனியா மாவட்டத்தில் இன்னமும் 12 ஆயிரம் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது என்று வடக்கு மாகாண ஆளுநர் றெயினோல்ட் கூரயிடம் வவுனியா மாவட்ட அரச அதிபர் றோகண புஸ்பகுமார சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநருக்கும், மாவட்ட அரச அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின்போதே, வவுனியா மாவட்ட அரச அதிபரால் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் பல வீதிகள் திருத்தப்படாதுள்ளன. போரால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்கள் பல உள்ளன. அவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டும். வவுனியா மாவட்டத்தில் 12 ஆயிரம் நிரந்தர வீடுகள் தேவைப்படுகின்றன- என்று இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது.

வவுனியா மாவட்டத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும், அதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். விவசாயத்துறையை மேம்படுத்த வேண்டும், விவசாயிகள் நலன் கருதி நெல்லைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்தும் வசதியைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும், வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் கல்வித் தரத்தையும், பாடசாலையின் பௌதிக வளத்தையும் மேம்படுத்த வேண்டும் என்பவை போன்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.

வவுனியா மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் வவுனியா மாவட்ட திணைக்களத் தலைவர்களைச் சந்தித்த ஆளுநர், அவர்களிடமும் வவுனியா மாவட்டத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்தார்.

இதேவேளை- ஆளுநர் வவுனியாவில் பின்தங்கிய நிலையில் உள்ள பிரதேசங்களைப் பார்வையிடவோ, போரால் பாதிக்கப்பட்டவர்களைச் சந்திக்கவோ இல்லையென பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

(ற-ஐ-402)

# குடாநாட்டு மீன் உற்பத்தி 2015ஆம் ஆண்டில் வீழ்ச்சி

## கடற்றொழில் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.10

குடாநாட்டின் மீன் உற்பத்தி 2014 ஆம் ஆண்டைவிட 2015 இல் வீழ்ச்சி கண்டுள்ளது என்று மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். குடாநாட்டின் மொத்த மீன் உற்பத்தி 2014 ஆம் ஆண்டை விடவும், 2015இல் வீழ்ச்சி கண்டுள்ளது. அதாவது 2014 ஆம் ஆண்டில் 31ஆயிரத்து 767 மெற்றிக்தொன்னாக இருந்த கடலுணவு உற்பத்தி, 2015 இல் 31 ஆயிரத்து 447 மெற்றிக்தொன்னாக வீழ்ச்சி கண்டுள்ளது.

இதன் பிரகாரம் கடந்த ஆண்டு 2014ஆம் ஆண்டு உற்பத்தியை விடவும் 320 மெற்றிக் தொன் வீழ்ச்சி கண்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை- போருக்கு முன்பு 1983ஆம் ஆண்டில் யாழ்.குடாநாட்டின் கடல் உற்பத்தி 48 ஆயிரத்து 677 மெற்றிக்தொன்னாகக் காணப்பட்டது.

2015 இல் உற்பத்திசெய்யப்பட்ட 31 ஆயிரத்து 447 மெற்றிக் தொன் கடலுணவு உற்பத்திகளில் ஜனவரி மாதம் 2 ஆயிரத்து 548 மெற்றிக்தொன்னும் , பெப்ரவரி மாதம் 3 ஆயிரத்து 98 மெற்றிக்தொன்னும் , மார்ச் மாதம் 3 ஆயிரத்து 90 மெற்றிக் தொன்னும், ஏப்ரல் மாதம் 3 ஆயிரத்து 180 மெற்றிக்தொன்னும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

அதே நேரம் மே மாதம் 2 ஆயிரத்து 529 மெற்றிக்தொன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதோடு, ஜூன் மாதம் 2 ஆயிரத்து 567 மெற்றிக்தொன்னும், ஜூலை மாதம் 2 ஆயிரத்து 603 மெற்றிக்தொன்னும் , ஓகஸ்ட் மாதம் 2ஆயிரத்து 545 மெற்றிக்தொன்னும் உற்பத்தியாகப் பெறப்பட்டுள்ளது.

அத்துடன் செப்ரெம்பர் மாதம் 2 ஆயிரத்து 546 மெற்றிக்தொன்னும், ஒக்ரோபர் 2 ஆயிரத்து 528 மெற்றிக்தொன்னும், நவம்பர் மாதம் 2 ஆயிரத்து 110 மெற்றிக்தொன்னும், டிசெம்பர் மாதம் 2 ஆயிரத்து 105 மெற்றிக்தொன்னுமாக, மொத்தமாக 31 ஆயிரத்து 447 மெற்றிக் தொன் உற்பத்தி பெறப்பட்டுள்ளது என்று குறித்த புள்ளிவிவரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஐ-101)

# புத்தாண்டு பாரம்பரிய விளையாட்டுக்கள்

சாவகச்சேரி, ஏப்.10

வடமாகாண சபையின் சித்திரைப் புத்தாண்டு பாரம்பரிய விளையாட்டுக்கள் மற்றும் பண்பாட்டு கலை நிகழ்வுகள், இந்தமுறை தென்மராட்சி பிரதேசத்தில் எதிர்வரும் 17 மற்றும் 19 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளன.

மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும், கலை நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 17 ஆம் திகதி சரசாலை மாட்டு வண்டில் சவாரித் திடலில் மாட்டு வண்டில் சவாரி நிகழ்வும், 19 ஆம் திகதி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில், காலையில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும், மாலையில் பாரம்பரிய பண்பாட்டுக் கலை நிகழ்வுகளும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-9)

# மாதாந்த ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஏப்.10

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு முதியோர் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளன என்று சங்கத்தின் செயலாளர் ந.கனகலிங்கம் தெரிவித்துள்ளார்.

(ஐ-ரி)



# இனப் பிரச்சினை தீர்க்கப்படாவிடில் நாட்டில் கிளர்ச்சி மீளத் தலைதூக்கும்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.10
இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடில், எதிர்காலத்தில் நாட்டைப் பிரிக்க, தனி ஈழம் கேட்க ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிகள் தலைதூக்கும். எனவே, இனப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியது அவசியம்.- இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் மக்கள் புரட்சி சுதந்திர வெற்றியின் 60 ஆவது ஆண்டு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

> பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இடம் பெற்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் மக்கள் புரட்சி சுதந்திர வெற்றியின் 60 ஆவது ஆண்டு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தம் ஆகியவற்றின் மூலம் அன்று இனப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்கப்பட்டது. ஆனால் எதிர்ப்புகள் காரணமாக தமது உடன்படிக்கையை தீ வைத்து எரிக்கும் நிலைமை பண்டாரநாயக்கவுக்கு ஏற்பட்டது. உண்மையில் இதனை எதிர்த்தவர்கள் உடன்படிக்கையின் சாதகம், பாதகம் தொடர்பாகப் பேச்சு நடத்தியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாது அது கிழித்து எறியப்பட்டதால், இன்றும் இனப் பிரச்சினை தீராமல் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. – என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

அதேபோன்று ஜே.ஆர்.ஜெயவர்தன அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தார். இந்திய - இலங்கை உடன்படிக்கையைச் செய்து கொண்டார். சந்திரிகா பண்டாரநாயக்க தீர்வுப் பொதியைக் கொண்டு வந்தார். அதுவும் தீ வைத்து எரிக்கப்பட்டது. எனவே 1956 இல் உருவான பிரச்சினை இன்னமும் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

இந்த யுகத்தில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் நாட்டைப் பிரிக்க, தனி ஈழம் கேட்க ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிகள் தலை தூக்கும். அதற்கு இடமளிக்கக் கூடாது. அனைவரும் இணைந்து இதற்குத் தீர்வு காண வேண்டும்.

1950ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் கூட்டாட்சி இடம்பெறுகின்றது. அது ஒன்றும் புதிதானதல்ல. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டாட்சி நடத்துவதற்கு 2007 ஆம் ஆண்டு அலரி மாளிகையில் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டவர் மகிந்த ராஜபக்சவே ஆவார்.

அந்த உடன் படிக்கையில் அன்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த நானும், ஐக் கிய தேசியக் கட்சியின் சார்பில் மலிக்சமரவிக்ரமவும் கைச் சாத்திட்டோம். ஆனால் மகிந்த ராஜபக்ச ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து 17 பேரை பிரித்தெடுத்து ஆட்சியை முன்னெடுத்தார். இவ்வாறான செயற்பாடுகள் முரண்பாடானதாகும். எனக்கு அதில் உடன்பாடு இருக்கவில்லை. நான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக பிரதமராக பதவியேற்ற பின்னர் அமைச்சரவையிலும் முரண்பாடுகள் எழுந்தன. அன்று அரசுக்கு எதிராக பல அமைச்சர்கள் செயற்பட்டார்கள். வேலை நிறுத்தங்களை ஒழுங்கு செய்து நடத்தினர். இவ்வாறான பல நெருக்கடிகளை பண்டாரநாயகவுக்கு கொடுத்தனர். அதே போன்று முது கெலும்பு இல்லாதவன், பலவீனமானவன் என்றெல்லாம் அரசில் இருந்த அமைச்சர்கள் விமர்சித்தனர். இன்று என்னையும் இப்படித்தான் பலர் விமர்சிக்கின்றனர். ஆனால் நாடும், மக்களும் எனக்கு முக்கியம். எனது கடமையை நிறைவேற்றுவேன்.

பண்டாரநாயகாவை பயங்கவாதிகளோ, ஐக்கிய தேசியக் கட்சிக் காரகளோ கொலை செய்யவில்லை. மாறாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்களே கொலை செய்தனர் – என்றார். (ற-ஜ-5)

## இலவசப் பண்ணிசை பயிற்சி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஏப்.10
அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர், மாணவர் களுக்கான இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புக்கள் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து ஒவ்வொரு சனி, ஞாயிறு கிழமைகளிலும் பிற்பகல் 3 மணி முதல் 4.15 மணி வரை வகுப்புகள் நடைபெறவுள்ளன.

இந்தப்பயிற்சி வகுப்பில் பங்குபற்றி பயன்பெற விரும்புகின்றவர்கள் வகுப்பு நடைபெறும் நேரத்தில் வருகை தந்து தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (கு-ஜ)

## வியாபார விளம்பர சேவையொன்றை பண்டத்தரிப்பில் ஆரம்பிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.10
வலி.தென்மேற்கு பிரதேசத்தில் வியாபாரிகளின் நலன் கருதி விளம்பர சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதியை வழங்குவது குறித்து ஆராய்ந்து வரும் பிரதேச சபைச் செயலாளர், அதற்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உதவியை நாடியுள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் என நான்கு உப அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் நிர்வாகத்தின் கீழ் பிர தேசசபை இயங்கி வந்த காலப்பகுதியில், கடந்த இரு வருடங்களுக்கு முன்னர், மானிப்பாய் பட்டினம், பண்டத்தரிப்பு பட்டினம் ஆகிய இடங்களில் விளம்பர சேவையை நடத்த முன் வந்த சிலர், இதற்கான அனுமதியைப் பிரதேச சபையிடம் கோரியிருந்தனர். இதற்கான அனுமதியை வழங்குவது பற்றி மாதாந்தக் கூட்டத்தில் ஆராய்ந்த உறுப்பினர்கள், பிரபல பாடசாலைகள், ஆலயங்கள் இருப்பதால் விளம்பர சேவையை நடத்துவதற்கு அனுமதி வழங்கக் கூடாது என்று தீர்மானித்தனர்.

இந்த நிலையில் தற்பொழுது செயலாளரின் நிர்வாகத்தின் கீழ் பிரதேச சபை இயங்குவதால், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பண்டத்தரிப்புப் பட்டினத்தில் விளம்பர சேவையை நடத்த முன் வந்துள்ள ஒருவர், இதற்கான அனுமதியைச் செயலாளரிடம் கோரியுள்ளார்.

இதனால் மக்களுக்கு ஏற்படும் நன்மை, தீமை பற்றி ஆராய்ந்துவரும் செயலாளர், அதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உதவியை நாடியுள்ளார். (கு-ஜ-115)



## சீன முதலீடுகளை விரைவுபடுத்த உயர் மட்டக் குழு

கொழும்பு,ஏப்.10

சீனாவின் முதலீடுகளையும், திட்டங்களையும் விரைவுபடுத்துவதற்காக உயர்மட்ட மூவர் அணியொன்றை நியமித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. இந்த மூவர் அணியில், மூலோபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, சிறப்புத் திட்டங்கள் தொடர்பான அமைச்சர் சரத் அமுனுகம, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் ஆலோசகர் பாஸ்கரலிங்கம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ற-ஐ-5)




# செய்தியாளர் நவம்

## மக்கள் மனதை வென்ற பன்முக புலமையாளர்

### அரச சேவையோடு பல பணிகளை ஒரே நேரத்தில் முன்னெடுத்த செயல் வீரன்

கிராமசேவையாளராக, ஊடகவியலாளராக, பயிற்றுவிப்பாளராக, உளவளத்துணையாளராக, குடும்பத்தலைவராக எனப் பல வடிவங்களில் பலரை வழிப்படுத்திய பெருந்தகை அமரர் நவம் அண்ணை. கொக்குவில், தாளையடியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட பத்திரிகையாளர் நவமண்ணை இறந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு கலங்காதவர்கள் எவருமில்லை.

அந்த அளவுக்கு வடபால் மக்களை தன்பால் ஈர்த்திருந்த பெருந்தகையாளன்.

நவமண்ணையின் மக்கள் சேவையை நான் சுனாமிப் பேரலையின் போது பேரிடரால் தாக்குண்ட மக்களுக்கு அவர் நிவாரணமளிப்பவராக, ஊடகவியலாளராக, பேரிடரில் சிக்குண்டவர்களுக்கு உதவும் நண்பனாக தானும் சேவை செய்து, தன்னுடன் நிற்பவர்களையும் ஒன்றிணைத்து (Integreted) பணியாற்றிய நாள்களை மறந்துவிடலாகாது.

நவம் என்ற மூன்று எழுத்து ஊடகப்பணியாளன் மறைந்து ஒரு மாதம் (31 நாள்) பூர்த்தியாகின்றது.

அவர் மறைந்து சில நாள்களின் பின்னர் இடம்பெற்ற இறுதிச் சடங்கின் பின்னரான அஞ்சலி உரையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், ஊடகங்களின் பிரதம ஆசிரியர்கள்,ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், கிராம அதிகாரிகள், விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பிரதேச சபைகளின் தலைவர்கள் உறுப்பினர்கள், நண்பர்கள் எனப் பலர் கலந்துகொண்டு இரங்கல் உரை நிகழ்த்தினர்.

இது அமரர் நவம் அண்ணை இந்த மாவட்ட மக்களோடு, தான் நேசித்த மண்ணோடு எவ்வளவு ஐக்கியமாக இருந்துள்ளார் என்பதனை புடமிட்டுக் காட்டுகின்றது.

ஊடகவியலாளர் நவம் அண்ணை அரச சேவையில் இருக்கும்போது (Administrative Grama Niladhari Head Quarters) சாந்திகம் உளவள நிறுவனத்தில் 5 ஆவது பிரிவில் உளவளத்துணையாளர் என்ற பட்டத்தைப் பெற்றவர்.

ஆனால் அவர் உளவள ஆற்றுப்படுத்தும் உளவளத் துணையாளர் என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கும். உண்மையில் அவரது மெய்யான ஆற்றுப்படுத்தும் பணியை, அரசினர் வைத்தியசாலைகளிலும் தனிப்பட்ட சேவை தேவைப்படும் இடங்களில் பலருக்கு வழங்கி அவர்கள் ஒவ்வொருவரது வாழ்விலும் ஒளியேற்றிய தெய்வமாகக் காணப்பட்டார்.

அவர் மூலம் உளவள ஆற்றுப்படுத்தல், பெற்ற பலர் அவரது மரணச் சடங்கில் கலந்து கொண்டதை நான் கண்டேன்.

இதனை விட நவம் அண்ணை உதைபந்து, கிரிக்கெட் மற்றும் போட்டிகளை மிகவும் உன்னிப்பாக ரசிப்பதுடன் வடக்கில் இடம்பெறும் போட்டிகளில் ஏதோவொரு பாத்திரத்தில் கடமையாற்றும் கர்ம வீரனாகவும் காணப்படுவார்.

மேலும் நலிவுற்ற கிராமங்களில் விளையாட்டை ஊக்குவிப்பதற்கும், விளையாட்டு வசதியில்லாத இளைஞர்களுக்கும் விளையாட ஆர்வம் உள்ளவர்களுக்கும் உதவுவதில் பெரு உள்ளம் படைத்தவராக திகழ்ந்தவர் நவம் அண்ணை என்றால் மிகையாகாது.

சக ஊடகப் பணியாளர்களை ஊக்குவித்து செயல் ஊக்கம் கொடுக்கும் செயல் வீரன் நவம், தான் நேசித்த தமிழ் மண்ணுக்கு விடிவு கிடைத்திட வேண்டும் என துடியாய்த் துடித்த மாமனிதன் இன்று இல்லாதது பெரு வெற்றிடமாக உள்ளது.

சுவாரசியமாகப் பேசி விடயங்களை இலகுவாகக் கையாளும் திறன்கொண்ட நவமண்ணை, தான் அரவணைத்த பிள்ளைகளையும் அன்பு மனைவி, சுற்றத்தாரையும் நன்னிலைக்கு உயர்த்திய ஓர் சிறந்த தந்தையாகவும் தலைவனாகவும் செயற்பட்டவர்.

விபத்தில் சிக்குண்டு சிகிச்சை பெற்று வந்த வேளையிலும் செய்திகளை ஏதோ விதத்தில் தேடிப்பிடித்து ஊடகப்பணி, எழுத்துப்பணி, விளையாட்டு எனப் பல சமூகப் பணி களை முன்னெடுத்த பன்முக புலமையாளனை நாம் இழந்துள்ளோம்.

இவரின் இடத்தை நிரப்புவதற்கு இந்த மண்ணில் இன்று எவருமில்லையென்பது பலரது அங்கலாய்ப்பு ஆகும்.

எந்த விடயத்தை எடுத்தாலும் முன்னுதாரணமாக நவம் என்ற அண்ணையின் பெயரை முன் மொழிந்து செயற்படும் பலர் அவரது இழப்பினால் தவிக்கின்றனர்.

இவ்வாறாக சிறந்த பன் முகப் பணியாளனை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நவம் அண்ணையின் ஆத்மா சாந்தி பெற வேண்டி அமைகின்றேன். சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**செ.ரமேஷ், உள்ளூராட்சி உதவியாளர், பிரதேச சபை,சுழிபுரம்**



# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### காணி விற்பனைக்கு
மிருசுவில் (A9) வீதியில் காணி விற்பனைக்குண்டு. 10.04.2016 இருந்து 15.04.2016 வரை நேரில் சந்திக்கலாம்.
**077 607 9340**

### விற்பனைக்குண்டு
சணல் ஆட்டுக்கிடாய்கள் - 05, ஜேர்மன் செப்பேட் ஆண் நாய் என்பன விற்பனைக்குண்டு.
**077 101 6407**

### காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கு, முதலிகோயில் ஒழுங்கையில் அழகான நல்ல சூழலில் அமைந்த இரண்டு பரப்பு பிரிக்கப்பட்ட உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு. (86533)(2.18.18)
**072 812 3335, 071 588 2214**

### காணி விற்பனைக்கு
வசாவிளான் குட்டியப்புலத்தில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (86533)(2.18.20)
**075 280 6593**

### காணிவிற்பனைக்கு
நெல்லியடிச் சந்தியிலிருந்து முருகமூர்த்தி வீதி ஊடாக 250 m தூரத்தில் நில பர. 14குளி. 07.9/16 காணி விற்பனைக்குண்டு.
**077 730 0480**

### ஒத்துமாறல்
வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தின் ஆட்பதிவுக் கிளையில் கடமையாற்றும் தரம் III பதவியில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் அதே பதவியிலுள்ள யாழ்ப்பாணத்தில் கடமை புரியும் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.
**077 143 0659**

### காணிவிற்பனைக்கு
மண்டைதீவு கிழக்கு, முதலாம் வட்டாரம் (கடற்கரையிலிருந்து) சென்பீற்றர் தேவாலயம் நோக்கிச் செல்லும் வீதிக்கு அருகில் 400M தூரத்தில் அமைந்த 2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
**077 433 0520, 021 226 2158**

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
10 Sri - xxx 185 ஜப்பான் மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.
**077 500 0226**

### விற்பனைக்கு
பாவித்த நல்ல நிலையில் உள்ள வீட்டுத்தளபாடங்கள் யாழ் கோயில் வீதியில் விற்பனைக்குண்டு.
**071 814 8150**

### விற்பனைக்கு
புத்தம் புதிய Wheel Chair (2மாதம் பாவித்தது) விற்பனைக்குண்டு. விலை 9000/=
**075 743 2461**

### TV கள் மலிவு விற்பனை
தொடர்பு: **077 044 0570**
Sony Wega Flat Tv கள் 14"- 6500/= முதல் 21" - 10,000/= முதல் சோனிரேட் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
**இல.56,K.K.S வீதி, சுன்னாகம்.** (86578)(2.18.19)

### மானிப்பாய் கட்டுடையில் காணி விற்பனைக்கு
மானிப்பாய், காரைநகர் பிரதான வீதியில் 3¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் இன்றி நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
**077 299 9949**

### விற்பனைக்குண்டு
பழைய சீற் விற்பனைக்குண்டு
**077 899 5431, 077 356 0429**

### யப்பான் சைக்கிள் விற்பனைக்கு
யாழ்.மண்ணில் மீண்டும் உதயம்
Original Japan Ladies & Gents சைக்கிள் Fram & Fork உத்தரவாதத்துடன் மலிவு விற்பனையில்
**றாசிக் சைக்கிள் பசார்**
**077 790 5333**

### காணி விற்பனைக்கு
தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திலிருந்து 200m தொலைவில் காசிப்பிள்ளையார் கோயிலுக்குப் பின்புறமாக 4 பரப்பு 12குழி விஸ்தீரணமுடைய காணி விற்பனைக்குண்டு.
**077 742 2201**

## தேவை

### சிறுநீரகம் தேவை
011 2364 865, 077 6925 226
இரு சிறுநீரகங்களும் செயலிழந்துள்ள 58 வயது தந்தைக்கு "A" அல்லது "O" இரத்த வகையைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து சிறுநீரகம் எதிர்பார்க்கப்படுகின்றது. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### அனெக்ஸ்/வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.மாநகரசபை எல்லை, நல்லூர் மற்றும் மானிப்பாயில் அனெக்ஸ் /வீடு வாடகைக்குத் தேவை. (அப்பா, பிள்ளை இருவருக்கு) உடன் தொடர்பு கொள்ளவும்
**070 204 5081**

### மணமகன் தேவை
யாழ்ப்பாணம், பிறவிச் சைவம், கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட 26.04.1990 இல் பிறந்த, பரணி நட்சத்திரம், தனியார் வங்கியில் கடமையாற்றும் சைவபோசன முடைய மணமகளுக்கு சைவபோசனமுடைய வரன் தேவை.
**077 770 2353**

### தேவை
யாழ். கச்சேரியடியில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய வீட்டுப்பணிப்பெண் தேவை. ஊர்க்கோழி முட்டை தேவை. (தொகையாகவும் கொள்வனவு செய்யப்படும்.)
**077 672 2145**

### காணி தேவை
பளை மற்றும் யாழ்ப்பாணத்தில் விவசாயப் பண்ணை அமைப்பதற்கு 5 ஏக்கருக்கு மேற்பட்ட காணி தேவை.
ஊடு பயிர் செய்வதற்கு 5 வருடங்களுக்கு மேற்பட்ட தென்னகள் காணி தேவை.
**076 531 0422**

### பெண் பராமரிப்பாளர் தேவை
கொக்குவிலில் அமைந்துள்ள பல்லினப் பறவைகள் பராமரிப்பகத்திற்கு 18 வயதிற்கு மேற்பட்ட பகல்நேர பெண் பராமரிப்பாளர் தேவை. விரும்புவர்கள் 12.04.2016 செவ்வாய்க்கிழமை 514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு காலை 09.00 மணிக்கு வருகை தரவும்

### வாடகைத்தாய் தேவை
கொழும்பிலுள்ள தம்பதியினர்க்கு IU.F ஊசிமூலம் குழந்தை பெற்றுக்கொள்ள 30 வயதிற்குக் குறைவான பெண் வாடகைத்தாயாகத் தேவை
**077 906 1406**

### தேவை
கணவன், மனைவி அரசாங்க உத்தியோகம் பார்க்கும் வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப் பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். 40 வயதுக்கு மேல் விரும்பத்தக்கது (86533)(2.18.18)
**071 847 5531**

### தேவை
077 3614638, 077 8038 567
கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற எமது நிறுவனத்திற்கு (DECON) நன்கு அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (T/O) நன்கு அனுபவம் வாய்ந்த கணிய அளவியலாளர்கள் (Q/S) மற்றும் பயிற்சி நிலையில் உள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (Training T/O) தேவை.(ஆண்கள் மட்டும்)

### மணமகள் தேவை
U.K குடியுரிமையுடைய யாழ். இந்து கௌரவ 1984 இல் பூராடநட்சத்திரத்தில் பிறந்த கிரகபாவம் 09 உயரம் 5'6" B.Sc (IP) படித்துமுடித்து UK Telecom இல் வேலை செய்வதுடன் சொந்தமாகSupermarket நடத்திவருகிறார். தகுந்த படித்த Graduate அல்லது Diploma படித்த மணமகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
**00447904535905 uk**

### மணமகள் தேவை
1983, மார்கழி, அத்தம் 2ஆம் கால், கிரகபாவம் 42¾, லண்டன் PR செவ்வாய் பாவமற்ற இந்து உயர்குல மணமகனுக்குப் படித்த ஆங்கில அறிவுடைய அழகிய மணமகள் தேவை. மாணவ விசாவில் செல்லத்தக்கவர்கள் விரும்பத்தக்கது.
**பிற்பகல் 2 மணிக்குப் பின்பு**
**077 331 4614**

## வாடகை

### வீடு வாடகைக்கு
வெள்ளவத்தையில் 42 ஆம் வீதியில் 3 ஆம் இலக்கத்திலுள்ள இரண்டு அறை இணைந்த குளியலறையுடன் கூடிய தொடர்மாடி நாள் கிழமை, மாத வருட, வாடகைக்குண்டு. (86533)(2.18.19)
**077 837 8597**

### மாடி வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம் புங்கங்குளம் ரயில் நிலையத்துக்கு அருகில் மாடி வீடு வாடகைக்கு உண்டு. ஒவ்வொரு மாடியும் 4 அறைகள், 2 குளியலறைகள், சமையலறை L வடிவமான விசாலமான வரவேற்பறை கொண்டது. விசாலமான வாகன தரிப்பிட வசதியும் உண்டு. வாடகை பேசித் தீர்மானிக்கப்படும். தனியார் நிறுவனத்துக்கு கம்பனிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.
தொடர்பு:
SANTHIKESAVAN@GMAIL.Com

### வீடு வாடகைக்குண்டு
யாழ்.கொய்யாத்தோட்டம் புது வீதியில் 5அறைகளுடன் வீடு வாடகைக்கு விடப்படும்.
**077 515 6704**

### வாடகைக்கு
இரண்டு பெண்களுக்கு Room வாடகைக்கு உண்டு. படிப்பவர்கள் அல்லது வேலை பார்ப்பவர்கள் மட்டும்
**075 738 6796**

### வீடு வாடகைக்கு
தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திலிருந்து 250m தொலைவில், கே.கே.எஸ் வீதி ஓரத்தில் 5 OR 12 பரப்புக் காணியிலுள்ள வீடு வாடகைக்குண்டு. அரச OR தனியார் நிறுவனங்களுக்கு மிகவும் ஏற்றது.
**077 551 8002**

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## ஏனையவை

**Majestic** Cineplex Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES




விசாரணை ☎ 021- 2227712
facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

பிறக்கவிருக்கும் சித்திரைப் புத்தாண்டு அனைவருக்கும்
இனிதாக அமைய எமது நல் வாழ்த்துக்கள்



- ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எக்ஸவேட்டர் 60/120/200
- இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெக்கோ லோடர் (JCB) Project 12/21
- ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஜெனரேட்டர்கள் kva 15/25/45/60–800

இலங்கையில் நன்மதிப்பை பெற்ற குருநாகல் ஹைடெக் லங்கா
நிறுவனத்தில் மிகவும் சாதாரண விலையில்
விற்பனைக்கு உண்டு.

549, கண்டி வீதி, மாவத்தகம

தொடர்புகளுக்கு 077–76 57 348

## Palmyrah Research Institute Palmyrah Development BoardMinistry of Prison Reforms, Rehabilitation, Resettlement and Hindu Religious Affairs

# Vacancies

Applications are invited from citizens of the democratic socialist republic of Sri Lanka for the following posts of the Palmyrah Research Institute.

**01. Research Officer – (Analytical Laboratory – 01, Food Technology Laboratory - 01)**
Scientific Research and Academic Affairs pertaining to the role conferred upon the institution by the statutory provision under which the institution is established, specifically assigned by the appointing authority.

Qualifications:

A four year special degree with a first class or second class upper in Science with appropriate subject combinations of chemistry/ biochemistry/ agriculture chemistry from a recognized university

Or

A four year special degree with a second class lower in Science with appropriate subject combinations of chemistry/ biochemistry/ agriculture chemistry from a recognized university and a minimum of one year postgraduate degree in the relevant field

Or

A Degree in Science with appropriate subject combinations of chemistry/ biochemistry/ agriculture chemistry from a recognized university and a two year postgraduate research degree in the relevant discipline

Note : Priority will be given to the candidates who work in research field and have hands on experience of conducting analysis using advance techniques specially HPLC and GC and operating and maintaining HPLC and GC.

Salary scale : AR1 2006A (Rs. (24,725-5 x 550-5 x 645 – 15 X 770 – 42,250.00)

Other approved government allowance will be paid.

Age : Should not be less than 22 years and not more than 45 years.

**02. Laboratory Assistant and Technical Assistant – (02)**
Ensuring that all necessary materials are at hand when needed for researches and testing, restocking materials and reagents as well as laboratory equipment and typical daily routine work assigned to him/her. Keeping track of the data obtained and accurately recording the various analysis are also essential.

Qualifications:

G. C. E (O/L) with at least six subjects in one sitting with four credit passes including
1. Sinhala or Tamil or English
2. Mathematics and
3. Science

and

G. C. E (A/L) in Science with three passes in the relevant subject combination.

and

NVQ Level 5 relevant to laboratory works/ A Diploma in relevant to laboratory works.

Salary scale : MA 2-1 - 2006 A : Rs. (14610 – 10 x 145 - 7 x 170 – 4 x 240 - 20 x 320 – 24610) Other approved Government allowances will be paid.

Age : Should not be less than 22 years and not more than 45 years.

Note : Experience in the relevant field will be an added advantage

Applicant should forward their curriculum vitae with the copies of certificates and testimonials together with the names and address of two non-related referees under registered post to reach Chairman, Palmyrah Development Board, National Housing Secretariat Authority Building, 1st Floor, Kandy Rd, Jaffna on or before 24-04-2016. Late applications will not be considered.

Applications from officers in Government departments/ Corporations/Statutory Boards should be forwarded through their Head of the Department. A copy may be sent directly.

Please mark the post applied for on the top left hand corner of the envelope.

**Chairman**
**Palmyrah Development Board**
**Jaffna.**




ARE YOU THE ONE?

Trainee Marketing Consultants
(Male / Female)

We are a unigue organization Presently operating in Sri Lanka For over 18 years. We provide career opportunities to those who are self-motivated and hungry to make money and achieve goals in life. We know you are not experienced and only few companies want to take risks with you.

Our team of Managers are positive and driven towards achieving their goals, We are willing to take the challenge to train you and help you establish yourself in the Industry.

### Requirments

* Must have lots of energy and be a positive minded individual. If you are lazy then don't bother applying.
* Willing to learn the job and work hard to wards achiving goals.
* Must be good in communication either in English or Tamil
* Studied upto GCE A/L and passed the GCE O/L Examination.
* Age preferably 18 and above but not more than 25 yrs.

**Call us or send your CV to Schedule an interview Immediately**

### Benefits

* You can earn over Rs.50,000/-per month.
* We will pay you a Basic Salary,Travelling Allowance and provide you cash incen - tives and commissions
* You also have the opportunity to travel overseas through our Annual Overseas incentives.
* If you are one of top achievers, you will get an opprtunity to participate at Our Annual Achievers Conference.
* You Will be class room trained by our Senior Manager and Subsequently trained on the job on a daily basis.
* If you possess leadership qualities and a high achiever, you will be absorbed to the Manage ment Trainee position within 6-9 months of your employment

**Jaffna**
**Branch Manager (Mr.G.Anthany)**
**021 567 1130/ 077 356 6835**
**jaffnapioneerhouse@gmail.com**

**Address - Pioneerhouse**
**No.100, 2nd Floor**
**Manipay Rd.Jaffna.**

(J 225) (13,17,18)

**www.pioneerhouselearning.com/eareers**

# எசட்லைன்

*..டேவிட் பீரிஸ் நிறுவன குழுமத்தின் முன்னணி நிறுவனமான எசட்லைன் லீசிங் நிறுவனமானது, லீசிங், வாடகைக் கொள்வனவு, கடன் வசதிகள், காப்புறுதி, முதலீடு மற்றும் நிறுவன நிதி சேவைகளுடன்...*

லீசிங், நுண் நிதியுதவி ஆகிய துறைகளில் முன்னிலை வகிக்கும் எசட்லைன் லீசிங் கம்பனியானது விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு தகுதியான விண்ணப்பங்களைக் கோருகின்றது.

## வாடிக்கையாளர் தொடர்பாடல் உதவியாளர்கள்
## கிளிநொச்சி மற்றும் வவுனியா

**விற்பனை, சந்தைப்படுத்தல், கடன் வசூலிப்பு, குத்தகை நிர்வாகம், காசாளர் ஆகிய வெற்றிடங்கள்**

"செய்ய முடியும்" என்ற மனப் பாங்குடைய விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆகக்குறைந்த தகைமைகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

- க. பொ. த. உயர்தர சித்தியுடன், க. பொ. த. சாதாரண தரத்தில் ஆகக்குறைந்தது கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் திறமைச் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்
- 27 வயதுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்
- கணனி உபயோகிக்கும் திறமை
- சிறப்பாகத் தொடர்பாடக்கூடிய திறமை

விண்ணப்பதாரர்கள் மக்களுடன் சிறப்பாகப் பழகக்கூடியவர்களாகவும், கடின உழைப்புத் திறன் உள்ளவர்களாகவும், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் சிறப்பான பேச்சு மற்றும் எழுத்துத் திறமை உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு பதவிக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிகச் சலுகைகளும் .வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் தமது சுயவிபரக் கோவையினை உறவுமுறையற்ற இரண்டு பரிந்துரையாளர்களின் பெயர்கள், மற்றும் தொலைபேசி இலக்கங்களுடன் ஏப்ரல் 20ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்கும் பதவி கடித உறையின் இடப்புற மேற் பக்கத்தில் அல்லது மின்னஞ்சலின் உரிப் பொருள் பகுதியில் குறிக்கப்பட வேண்டும்.

முகாமையாளர் - மனித வளங்கள்

**எசட்லைன் லீசிங் கம்பனி லிமிட்டட்**

120,120A, பன்னிபிடிய வீதி, பத்தரமுல்லை.
**careers@assetline.lk**
தொ.பே: 011 4700100 பெக்ஸ்: 011 4700101

envisionmedia

## G.C.E. O/L பரீட்சையில் சித்தியடையவில்லையா?
## இதோ!! இதற்கான அரிய சந்தர்ப்பம்!!

PV 94034

சாதாரண தரத்திற்கான நாள் வகுப்பு இல்லை. வாழ்க்கை தேர்ச்சிக்கான பாடசாலை.

உங்களை தகுந்தமுறையில் 'A' தர சித்தியடைய வைப்பதே எமது நோக்கம். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் சிறப்பாக கற்பிக்கப்படும். சகலவிதமான வசதிகளுடன்கூடிய காலை நேர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தேவையானவர்களுக்கு உணவு, தங்குமிட வசதி ஒழுங்கு செய்துதரப்படும். கவலை வேண்டாம்.

பாடநெறிக் கட்டணம் Rs. 7000/- மட்டும்.

சிங்கள பாடநெறி இலங்கை மொழிகள் திணைக்களத்தின் விஷேட விரிவுரையாளர் லசித் நலந்த என்பவரால் கற்பிக்கப்படும்.

தமிழினை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு நவீன கற்பித்தல் முறைகள் ஊடாக விரைவாகவும் சரியாகவும் சிங்களத்தில் உரையாடுவதற்கு பொருத்தமான முறையில் இலங்கை அரச கரும மொழிகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடிவமைக்கப்பட்ட பயிற்சிநெறி.

ஆறு மாதகாலப் பகுதியில் 20 நாட்களுக்கு வெப்தள பொறியியல் கற்கை நெறியும் பெண்மாணவிகளுக்கு அழகுக்கலை கற்கை நெறியும் கற்பிக்கப்படும்.

**Hot Line : 0715 669 641, 0774 690 044**

இப்பயிற்சி நெறியை தொடர விரும்புபவர்கள் உங்களது பெயர், முகவரியை முன்கூட்டியே பதிவுசெய்யவும்.
SMS: 0774-690044

திங்கள் முதல் சனி வரை
மு.ப. 8.30 முதல் பி.ப 3.30வரை
www.bloomingbudsecampus.com

**இன்றே எங்களுடன் இணையுங்கள்**

## BLOOMING BUDS E CAMPUS DAYTIME SCHOOLS

TEACHER TRAINING INSTITUTE / ACADEMY - SPOKEN ENGLISH CAMP DAY TIME SCHOOL

| | | |
|---|---|---|
| No.5, Rathmalyaya, Puttalam. T.P.: 0322266641 | No.390/2/1, Baseline Road, Dematagoda. T.P.: 0112677641, 0774690044, 0771529731 | Thavadi Road, Suthumalai South, Manipay, Jaffna T.P.: 0212256641 |

## சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் தேவை
## Marketing Officer

யாழ்.மாவட்டத்தில் Cell World நிறுவனத்துக்கு சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் ஆண், பெண் இருபாலாரும் தேவை. O/L, A/L போதுமானது. திறமைக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**மதிவதனன் - 077 757 5304**

## நீரிழிவு நோய் தொடர்பான விழிப்பூட்டல்

மாரடைப்பு, பக்கவாதம், பார்வை இழப்பு, உயர்குருதி அழுத்தம், சிறுநீரக பாதிப்பு போன்ற நோய்களை ஏற்படுத்த காரணமான நீரிழிவு நோய் உங்களை பீடித்துள்ளதா? இல்லையா என்பதை உடன் அருகே உள்ள அரச வைத்தியசாலையில் இலவசமாய் பரிசீலித்து உறுதி செய்துகொள்ளுங்கள்.

சீனி கொல்லும்
Sugar Kills

யாழ்/ நீரிழிவு அஷோசியேஷன்
J/ Diabetes Association
T.P: 077 666 9055

(கி.22471) (13.19)

## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி - 2016

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், விளையாட்டுத் திணைக்களமும் இணைந்து வருடாந்தம் தமிழ், சிங்கள புதுவருட விழாவை முன்னிட்டு நடத்தும் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி 2016.04.17 ஆம் திகதி சரசாலை மாட்டு வண்டிச் சவாரி திடலில் மதியம் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பங்குபெறுவோர் யாழ்.மாவட்ட மாட்டுவண்டிச். சவாரித் தலைவரிடம் தொடர்பு கொள்ளவும்.

இ.இரவீந்திரன்,
செயலாளர்.

**077 922 7931**

Blessing Hands Mission

YOUTH FEST
JAFFNA - 2016

THMC

# வாலிபர் விழா-2016

**எழுந்து வாருங்கள்! ஒன்று சேருங்கள்! வாழ்வை வளமாக்குங்கள்!**

## 2016 ஏப்ரல்

| 21 | 22 | 23 |
|---|---|---|
| வியாழன் பி.ப.3.00 | வெள்ளி பி.ப.3.00 | சனி காலை 9.00 |

அனுமதி இலவசம்

இடம்: சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானம், யாழ்ப்பாணம்.

**அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்**

மேலதிக விவரங்களுக்கு:
0777 164 226 0773 211 923

www.thmc.net
www.blessinghands.de

(69855)(10.17.19)

# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
07.05.1950

உதிர்வு
25.03.2004

திதி: சதுர்த்தி

## தையல்நாயகி வைகுந்தராஜா
(மண்டைதீவு)




குறிஞ்சி மலர்களாய்
மலர்ந்திருந்தாலும்
பன்னிரு வருடத்திலே
பார்த்திருப்போம் நம் தாயவளை!
குமரன் காலடியில்
மலர்ந்ததனால்
எண்ணிய வருடமெல்லாம்
எண்ணத்திலேயே வாழ்கிறாய் அம்மா...!

ஆடியம்பிட்டி ஒழுங்கை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04 . 04 . 1937



மறைவு
01 . 04 . 2006

## அமரர் சின்னத்தம்பி தங்கமயில்
திதி: சதுர்த்தசி

ஐயா நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
பத்தாண்டுகள் ஆனாலும் உங்களது
அன்பும் பாசமும் என்றும் மறக்காது
உங்கள் நினைவுகளுடன் வாழும்...

கிராமக்கோட்டடி,
புலோலி தெற்கு,
பருத்தித்துறை

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
077 984 9163

(70187) (11.18)

# ஐந்தாண்டு நினைவஞ்சலி



அமரர்
## நாகலிங்கம் முருகையா

தோற்றம்
15.03.1940

மறைவு
07.04.2011

அன்புக்கு இலக்கணமாக வாழ்ந்தீர்!
பாசத்துக்கும் பண்புக்கும் முன்மாதிரியாய் திகழ்ந்தீர்
கண்ணை இமை பாதுகாப்பது போல் எம்மைக் காத்தீர்!
ஐந்தாண்டுகள் ஓடி மறைந்தாலும்
தாங்க முடியவில்லை உங்கள் இழப்பினை
என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன் வாழும்....

பருத்திக்கலட்டி,
சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
## கணபதிப்பிள்ளை (கோவிந்தசாமி) நடேசரட்ணம் (செல்வம்)

பிறப்பு
12.02.1943

இறப்பு
10.03.2016

எமது பாசமிகு தந்தை சிவபதம் அடைந்த செய்தி அறிந்து ஓடோடி வந்து எமது துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசியூடாகவும், தொலைநகல் மூலமாகவும், தொடர்பு கொண்டு அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் இன்னும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகள் பற்பல உரித்தாகட்டும். இன்று (10.04.2016 ) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வட்டு இந்து வாலிபர் சங்க மண்டபம் ( Y.M.H.A.HALL) நவாலி வீதி, வட்டுக் கோட்டையில் நடைபெற உள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டு.தென்மேற்கு,
வட்டுக்கோட்டை

மகள் -S.துர்க்கா
தம்பி -K.விஜயவேல்

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் பொன்னம்பலம் சிவமணி.
(மணி அரசு வாட்டன்)
(வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரம்)

திதி :பூர்வபட்ஷ சதுர்த்தி 10.04.2016

எங்கள் அன்புத் தெய்வமே என் ஆருயிர் தந்தையே என் ஆசை அப்பாவே நான்கு ஆண்டுகளாகி விட்டன. நான்கு நாள்கள் போல் இருக்கின்றதே எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு நீங்கள் மீளாத்துயில் கொண்டதேனோ அப்பா! என் கண்ணிலிருந்து ஒரு துளி கண்ணீரைக் கூட நீங்கள் வரவிட்டதில்லையே. இப்போ நான் உங்களை நினைத்து ஒவ்வொரு நிமிடமும் கண்ணீரோடு கலங்கி நிற்கின்றேன்.

உங்கள் அன்பு முகத்தைப் பார்க்க ஆசையாக இருக்கின்றதப்பா. எத்தனை பிறப்பு உள்ளதோ அத்தனை பிறப்பும் உங்கள் பிள்ளையாக நான் பிறக்க வேண்டுமப்பா.

என் ஆசை அப்பா, எங்களை எப்போது வந்து கூட்டிப் போகின்றீர்கள் அதன் பின்பு உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென சிவமணிப் பிள்ளையாரிடம் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

6 ஆம் வட்டாரம், மண்டைதீவு
077 901 6929

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளை.

### திறப்பு விழா


சாவகச்சேரி, ஏப்.10
கைதடி நவபுரம் எருதிடல் அ.த.க. பாடசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலை நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.
கைதடி வடக்கைச் சேர்ந்த முருகன் - குழந்தையம்மா தம்பதியின் நினைவாக அவர்களது குடும்ப உறுப்பினர்களால் இந்தச் சரஸ்வதி சிலை அமைத்து வழங்கப்பட்டுள்ளது.
பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில்,பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஐ-9)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப்.10
அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் 99 ஆவது பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஐ-ரி)

### உரிமை கோராத வாகனங்கள் நீதிமன்றில்

சாவகச்சேரி,ஏப்.10
உரிமை கோரப்படாத நிலையில் காணப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றும், ஓட்டோ ஒன்றும் கொடிகாமம் பொலிஸாரால் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ற-ஐ-9)


Hero
அறிமுகப்படுத்துகின்றோம்
எப்போதும் அருகிலேயே இருக்க
Duet
ஹீரோ டுவட்
110 CC
உலோக உடல்
அறிமுக விலை ரு. 225,500/-
SRI LANKA'S FIRST
5 YEAR
WARRANTY
புத்தம் புதிய 110CC என்ஜின்
வெளிப்புற பெட்ரோல் நிரப்பும் வசதி
ஒருங்கிணைந்த பிரேக் சிஸ்டம் மற்றும் டியூப்லெஸ் டயர்
உலோக உடல் (Metal Body)
facebook.com/HeroMotoCorpSriLanka
துரித அழைப்புகளுக்கு: 011 5777000
அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர் - R.G ட்ரேடர்ஸ் - யாழ்ப்பாணம்: 077 7340056 / 021 2226185
நாடளாவிய ரீதியிலுள்ள அபான்ஸ்
ஹீரோ காட்சியறைகள் மற்றும் அங்கீகாரம் பெற்ற ஹீரோ முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
Abans


4 வருட இலவச உத்தரவாதம்
0% வட்டி
36 மாதங்களுக்கு மேலான இலகு தவணை திட்டம்
இலங்கையின் 1 ஆம் தொழில்நுட்ப சேவை வழங்குனர்
நாடளாவிய ரீதியிலான சேவை
சாதனையாளர்களின்
மதிநுட்பமான தெரிவு
Lenovo
LENOVO IP 100 CEL
INTEL CEL DC Processor
2GB RAM
500GB Hard Disk
15.6" Display
Windows 10
விசேட விலை ரு.44,900
மாதாந்தம் 2,853
LENOVO IP 100 PQC
INTEL PQC Processor
4GB RAM
500GB Hard Disk
15.6" Display
DOS
விசேட விலை ரு.49,900
மாதாந்தம் 3,195
LENOVO IP 300 i3
i3 6100 6th Generation
4GB RAM
1TB Hard Disk
15.6" Display
DOS
விசேட விலை ரு.71,900
மாதாந்தம் 5,599
4 வருட இலவச உத்தரவாதம்
LENOVO IP 300 i5
i5 6200 6th Generation
4GB RAM
1TB Hard Disk
15.6" Display
DOS
விசேட விலை ரு.88,900
மாதாந்தம் ரு.7,127
4 வருட இலவச உத்தரவாதம்
LENOVO IP 300 i5 VGA
i5 6200U 6th Generation
4GB RAM
1TB Hard Disk
15.6" Display
DOS
2GB VGA
விசேட விலை ரு.95,900
மாதாந்தம் ரு.7,260
4 வருட இலவச உத்தரவாதம்
LENOVO IP 300 i7
i7 6500U 6th Generation
8GB RAM
1TB Hard Disk
2GB VGA
15.6" Display
DOS
விசேட விலை ரு.120,900
மாதாந்தம் ரு.8,993
4 வருட இலவச உத்தரவாதம்
DELL
DELL 3543 i7
i7-5500U 5th Generation
8GB RAM
1TB Hard Disk
2GB Nvidia
15.6" Display
விசேட விலை ரு.125,990
மாதாந்தம் 6,088
4 வருட இலவச உத்தரவாதம்
DELL 5558 i5
i5-5200U
5th Generation
4GB RAM
1TB Hard Disk
15.6" Display
விசேட விலை ரு.98,990
மாதாந்தம் 4,400
4 வருட இலவச உத்தரவாதம்
DELL 3543 i3
i3-5005U
5th Generation
4GB RAM
500GB Hard Disk
15.6" Display
விசேட விலை ரு.71,990
மாதாந்தம் 3,777
4 வருட இலவச உத்தரவாதம்
hp
HP 15 - AC DC
Intel Cel Dual Core
4GB RAM
500GB Hard Disk
15.6" Display
1 வருட உத்தரவாதம்
ரு.49,990
மாதாந்தம் 3,793
HP 15AC 610 TU
i3-6100 6th Generation
4GB RAM
1TB Hard Disk
15.6" Display
ரு.71,900
மாதாந்தம் 5,660
HP 15 AC 108 i5
i5-6200 6th Generation
4GB RAM
1TB Hard Disk
15.6" Display
ரு.91,900
மாதாந்தம் 7,127
4 வருட இலவச உத்தரவாதம்
HP 15 AC i5
Intel i5 5th Generation
4GB RAM
1TB Hard Disk
15.6" Display
ரு.91,900
மாதாந்தம் 4,667
4 வருட இலவச உத்தரவாதம்
HP 15AC 102 TX
i5-6200 6th Generation
4GB RAM
1TB HDD
2 GB VGA
15.6" Display
1 வருட உத்தரவாதம்
ரு.95,900
மாதாந்தம் 5,808
அபான்ஸிலிருந்து மட்டுமே
4வருட உத்தரவாதம்
6th 6GB 1TB
ES-574-i3
i3-6100 6th Generation
6GB RAM
1TB Hard Disk
15.6" Display
விசேட விலை ரு.74,990
மாதாந்தம் ரு.6,750
E5-574-i5
i5-6200 6th Generation
4GB RAM
1TB Hard Disk
15.6" Display
2GB VGA
விசேட விலை ரு.92,999
மாதாந்தம் ரு.7,066
ES1-531-DC
INTEL Dual Core
CEL N3050 DC
4GB RAM
500GB Hard Disk
15.6" Display
விசேட விலை ரு.47,990
மாதாந்தம் ரு.3,607
Aspire Veriton M
இலவச பிரிண்டர் ஒன்று
Intel Dual Core CELG3260
4GB RAM
1TB HDD
19" LED Monitor
விசேட விலை ரு.62,990
acer
Aspire Switch 10
Intel AtomZ3735F Quad Core Processor 1.83GHz
2GB RAM
500GB HDD
10.1" Display
Windows 10
விசேட விலை ரு.59,990
மாதாந்தம் ரு.4,667
us at www.facebook.com/abansit
Abans

# மருதடி திருவிழாவை முன்னிட்டு அன்னதான சபை

யாழ்ப்பாணம், ஏப்.10

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு அடியார்களுக்கு தொடர்ந்து அன்னதானம் வழங்க முன்வந்துள்ள தர்மகர்த்தா சபை, 9 பேர் கொண்ட அன்னதான சபையை நிறுவியுள்ளது.

ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த மாதம் 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 தினங்கள் தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன.

பெருந்திருவிழாக் காலத்தில் அன்னதான சபையின் ஏற்பாட்டில் அன்னதானம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-ஜ-115)

# வட மாகாண சபை தீர்வு யோசனை கனவாகவே தொடர்ந்தும் இருக்கும்

## மக்கள் விடுதலை முன்னணி கூறுகின்றது

கொழும்பு, ஏப்.10

வட மாகாண சபையில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு யோசனை வடக்கு மாகாண சபையின் கனவாகவே தொடர்ந்தும் இருக்கும் என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்க தலைவரும், மாகாண சபை உறுப்பினருமான வசந்த சமரசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒருவர் காணும் கனவைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் எவருக்கும் இல்லை. எனினும், அந்தக் கனவை நனவாக்குவதன் மூலம்நாட்டின் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை இல்லாதொழிக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது.

எவ்வாறாயினும், நாட்டில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதற்கான நோக்கம் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. ஆயினும், தமது தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு மாகாண சபைகளைப் பயன்படுத்துவது கவலைக்குரிய விடயமாகும்.

இதேவேளை- நாட்டில் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில், வடக்கு மாகாண சபையால் முன்மொழியப்பட்டுள்ள யோசனை மக்களிடையே நிலவும் நல்லிணக்கச் சூழலைக் குழப்பக்கூடியது. இதனால் இதனை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை- என்றார். (ந-ஜ-5)

# தேசிய அரசில் 92 அமைச்சர்கள்

கொழும்பு, ஏப். 10

தேசிய அரசின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களாக 92 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் கயந்த கருணாதிலக நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அதில் 47 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், 20 இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் 25 பிரதி அமைச்சர்கள் அடங்குகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிதாக மூன்று அமைச்சர்கள் நியமிக்கப்பட்டமை தொடர்பில் மகிந்த தரப்பு அணியினர் கடந்த புதன்கிழமை சபையில் கேள்வி எழுப்பியிருந்தனர். இது தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையின்போது, அமைச்சர்களின் தொகையை அறிவிப்பதாக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச கூறியிருந்தார்.

நாடாளுமன்றம் கடந்த வியாழக்கிழமை கூடியபோது, இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தன கேள்வி ஒன்றை எழுப்பினார். அமைச்சர்களின் தொகையை அறிவிப்பதாக அமைச்சர் ஒருவர் அறிவித்திருந்தார். அதன்படி அமைச்சர் தொகையை அறிவிக்குமாறு கோரினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் கயந்த கருணாதிலக, தேசிய அரசு என்பதால் இன் னும் சிலரை நியமிக்க முடியும்.எதிர்ப்பக்கம் உள்ளவர்கள் அமைச்சுப் பதவி கோரி வருவதால் அமைச்சுப் பதவி வழங்குவது குறித்து மேலும் பேச்சு நடைபெறுகிறது. யாப்புக்கு உட்பட்டதாகவே அமைச்சர்களை நியமித்து வருகிறோம்- என்றார். (ந-5)







Prestige®
இல்லத்தரசிகளின் பெருமை
கை நோகாமல் வேலை செய்ய
கை கொடுக்கும் சமையலறை நாயகன்
பிரஸ்டிஜ் வெட் கிரைண்டர்
இட்லி, தோசை, அப்பம் போன்ற ஆரோக்கியமான உணவு வகைகளை இலேசான முறையில் தயார் செய்ய உதவும் பிரஸ்டிஜ் வெட் கிரைண்டர்.
• உயர் தரத்திலான அரைக்கும் கற்கள்.
• உயர் வலுவுடைய மோட்டர்.
• மேசையின் மீது வைத்து பாவிக்க கூடிய வசதி.
• மா பிசையக் கூடிய வசதி.
Prestige
ரூ.16,299/-
PWG05
இட்லி அவிக்கும்
ஸ்டீமர்
இலவசம்*
நம்பிக்கையான SINGER உத்தரவாதத்துடன்
011 5 400 400
www.singersl.com
SINGER Plus
SISILWORLD
அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள்

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நீரிழிவு எனும் பொல்லாத நோயை விரட்டி அடிக்க வேகம் தேவை

✦ எங்கள் நாட்டில், இரண்டு லட்சத்து, 28 ஆயிரம் மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும் எண் ணிக்கையானோர், நகரப்புறப் பிரதேசங்களில் வாழ்பவர்களே.

✦ தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு--அதனை நாடிய சேவைகளுக்கு-- 45 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது,

சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய நிபுணர் பாலித மகிபால மேற்கண்ட தகவல்களை வெளியிட்டுள்ளார்.

நீரிழிவு நோய்க்கு ஆளாகிய மக்களில் 80 சதவீதமானோர் மத்திய மற்றும் கீழ்மட்ட வருமானம் பெறுவோரே என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

உலக சனத்தொகையில், 80 சதவீதமானோர், மத்திய மற்றும் கீழ்மட்ட வருமானமுள்ள நாடுகளில் வாழ்வோர் என்பதும் கண்டறியப்பட்டுள்ளதாக--ஆகப்பிந்திய புள்ளி விவரங்களைச் சுட்டிக்காட்டி வைத்திய நிபுணர் விவரித்துள்ளார்.

இதேவேளை--

உயிராபத்தை விளைவிக்க வல்ல நீரிழிவு நோயை, உரிய சிகிச்சைகள் ஊடாகத் தடுக்க இயலும் என்றும் அவர் அழுத்தித் தெரிவித்திருக்கிறார்.

கடந்துபோன 2012 ஆம் ஆண்டில்-நான்கு வருடங்களுக்கு முன்னதாக-

நீரிழிவுச் சிகிச்சைக்காக, ஒட்டுமொத்தமாக உலகளாவிய மட்டத்தில் 612 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டதாகவும் அவர் புள்ளி விவரங்களைத் தொட்டுக் காட்டி உள்ளார்.

அனைத்துலக நாடுகள் மட்டத்தில் நீரிழிவு நோய்க்கு ஆட்படுவோரில் மிகப் பெரும்பாலானோர் நகரப் புறங்களைச் சேர்ந்தவர்களே என்றும், அவர் புள்ளி விவரங்களைத் தொட்டுக்காட்டி உள்ளார்.

உள்ளனவற்றை சொல்வதானால், விவரிப்பதானால் இளம் வயதினர் கூட, இந்தப் பொல்லாத நோய்க்கு ஆளாவதும் இப்போதைய வழமை என்றாகி விட்டது!

ஒரு காலகட்டத்தில், பல ஆண்டுகளுக்கு முன்னர், அகில உலக மட்டத்தில் கொள்ளை நோய் மக்களைத் துடிக்கத் துடிக்கக் காவு கொண்டதை இங்கே குறிப்பிடுவது பொருத்தம்.

அதே வகை சார்ந்து காசநோயும் மனித உயிர்கள்ள மிகப்பெரும் எண்ணிக்கைகளில் கொன்றொழித்ததையும் சுட்டிக்காட்டலாம்.

நீரிழிவு நோய்க்கு, புதிய சந்ததியின், வாழ்க்கை முறை மாற்றங்களும், உணவுப் பழக்க வழக்கங்களும், நாளாந்த செயற்பாடுகளின் பிறழ்வுகளும் முக்கிய காரணங்கள் என்பதே உண்மை.

அந்த நோய் விளைவிக்கும் நீண்ட காலப் பாதிப்புக்களை முன்வைத்து, சமூக மட்டத்தில், சனசமூக நிலையங்கள், கல்விச் சாலைகள் போன்றவற்றின் ஊடாக, விழிப்புணர்வை உண்டாக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் அரசியல்வாதிகள் முதற்கொண்டு, வைத்திய சேவையாளர்கள், உட்பட்ட பலதரப்பினருக்கும் உண்டு.

அதற்கான திட்டவட்டமான செயன்முறைகளும், உள்ளார்ந்த வேகமும் உடன் தேவை.

# வாய்ப்பைப் பயன்படுத்தி ஆதாயம் தேடமுயலும் பொது எதிரணி

சிங்கள மூலம் - மவ்பிம
தமிழில் - வீ.எஸ்.ரீ

கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதியன்று, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குடும்பத்தவர்களது சொந்த இடமான அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கீழ் வரும் கதிர்காமம் நகரில் ஓய்வு மண்டபமொன்றிலிருந்து அதிசக்தி வாய்ந்த வெடிபொருள்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தும் அங்கிகள் சில பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்தன. அவ்விதம் கைப்பற்றப்பட்ட வேளையில் அந்தத் தற்கொலை அங்கிகள் இயங்கு தரத்தில் இருந்ததாகப் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பாக எட்டுப் பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். விடுதலைப் புலிகளது செயற்பாடுகள் உச்சம் பெற்றிருந்த வேளையில், திட்டமிட்ட தாக்குதல் ஒன்றுக்காக அவை அங்கு கொண்டுசெல்லப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்திருக்கலாம் என்ற கோணத்தில் விடுதலைப் புலிகள் மீது சந்தேகம் எழுப்பப்பட்டிருந்தது.

குறித்த சம்பவம் குறித்து அந்த வேளையில் ஊடகங்கள் எதுவும் முக்கியத்துவம் வழங்கிச் செய்திவெளியிட்டிருக்கவில்லை. பத்திரிகைகள் ஏதோவொரு மூலையில் சிறு செய்தியொன்றாக அதனை வெளிப்படுத்தியிருந்தன. நாட்டின் ஜனாதிபதியின் சொந்த இடமான அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அந்தத் தற்கொலைத் தாக்குதல் அங்கிகள் கண்டுபிடிக்கப்பட்ட அந்த வேளையில் வெளியுறவு அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உடனடியாக ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஒழுங்கு செய்து குறித்த பாரதூரமான சம்பவம் குறித்து விமர்சித்தாரில்லை. விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்க முயல்கிறார்கள் எனக் குற்றம் சாட்டினாரில்லை. அந்த வேளையில் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த நாமல் ராஜபக்ச விடுதலைப் புலிகளது பயங்கரவாதச் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பித்துள்ளமைக்கான பொறுப்பைத் தமது தந்தையாரான மகிந்தவே ஏற்க வேண்டுமென தமது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டாரில்லை. விமல் வீரவன்ச விடு தலைப் புலிகளால் நாட் டுக்கான பாதுகாப்பு அச் சுறுத்தல் நீங்கவில்லை என செய்தியாளர்கள் மாநாட்டைக் கூட்டிக் கர்ச்சித்தாரில்லை. பாதுகாப் புச் செயலாளர் கோத்த பாயவோ குறித்த சம்பவம் தொடர்பாக வாயே திறக்கவில்லை.


கடந்த சில நாள்களின் முன்னர் யாழ்ப்பாணம், சாவகச்சேரி பிரதேசத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் தற்கொலை அங்கிகள் சில பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன. 2008 ஆம் ஆண்டில் வெளியான சிங்களப் பத்திரிகைத் தாள்களில் சுற்றப்பட்டிருந்த நிலையிலேயே அவைகண்டுபிடிக்கப்பட்டிருந்தன. செய்தி வெளியான கையோடு பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சூடாகிவிட்டார். உடனடியாகவே செய்தியாளர் மாநாடொன்றைக் கூட்டி விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்து விட்டனர். இதனால் நாட்டின் பாது காப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள் ளது என எச்சரிக்க ஆரம்பித்து விட்டார் அவர். அத்தோடு நிறுத் திக் கொள்ளாது, குறித்த தற்கொலை அங்கிகள் கொழும்பு - வெள்ளவத்தைக்கு எடுத்துச் செல்வதற்காகவே அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்தன என்றதனது கண்டுபிடிப்பையும் வெளிப்படுத்தியிருந்தார். மகிந்தவின் மைந்தர் நாமல் ராஜபக்சவோ விடுதலைப் புலிகளது பயங்கரவாதச் செயற்பாடுகள் மீண்டும் தலை தூக்குவதற்கான பொறுப்பை மைத்திரி-ரணில் தலைமையிலான அரசே பொறுப்பேற்க வேண்டுமெனத் தமது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். விமல் வீரவன்சவோ குறித்த சம்பவம் தொடர்பான

செய்தி வெளியாகி இரு மணித்தியாலங்கள் முடிவடையும் முன்னரே, கண்டுபிடிக்கப்பட்ட தற்கொலை மேலங்கியில் வெள்ளவத்தை எனக்குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார். நாட்டின் பெரும்பாலான ஊடகங்கள் இவை குறித்து முற்பக்கச் செய்தியாக முன்னுரிமை வழங்கி செய்தி வெளியிட்டிருந்தன.

2012 ஆம் ஆண்டில் வவுனியா செட்டிகுளம் பகுதியில் விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்ட வேளையில், இந்த நாட்டு ஊடகங்கள் எவையும் அது விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்குவதற்கான அடையாளம் என விமர்சித்ததில்லை. அதேபோன்று 2014 மே மாதத்தில் கிழக்கு மாகாணத்தில் பெருந்தொகையான வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்ட வேளையிலும் சரி, அதே ஆண்டு மார்ச் மாதத்தில் கிளிநொச்சியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட வேளையிலும் கூட விடுதலைப் புலிகள் மீண்டும் தலை தூக்குகிறார்கள் என்ற விமர்சனம் எழுந்ததில்லை.

அந்த வகையில் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த வேளை முதல், மகிந்த தமது ஜனாதிபதிப் பதவியை இழந்த 2014 ஆம் ஆண்டின் முடிவு

**கடந்த சில நாள்களின் முன்னர் யாழ்ப்பாணம், சாவகச்சேரி பிரதேசத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் தற்கொலை அங்கிகள் சில பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன. 2008 ஆம் ஆண்டில் வெளியான சிங்களப் பத்திரிகைத் தாள்களில் சுற்றப்பட்டிருந்த நிலையிலேயே அவை கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.**





கடந்த மாவீரர் தினமான நவம்பர் 27 ஆம் திகதி பிரபாகரன் பிறந்தநாளை ஒட்டி நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளது கொடிகள் பறக்கவிடப்படவுள்ளதாக மகிந்த சிங்கள மக்களை உசுப்பேத்தியிருந்தார்.

வரை, கோத்தபாய பாதுகாப்புச் செயலர் பதவியை வகித்த வேளைவரை, கண்டுபிடிக்கப்பட்ட விடுதலைப் புலிகளது ஆயுதங்கள் தொடர்பான சம்பவங்கள் சாதாரணமானவை என்ற விதத்திலேயே ஊடகங்களால் வெளிப்படுத்தப்பட்டன. அவை குறித்து அந்த வேளையில் மகிந்தவோ, கோத்தபாயவோ, ஜீ.எல்.பீரிஸோ, நாமலோ, விமல் வீரவன்சவோ பெரிதாக எதுவும் அலட்டிக் கொள்ளவில்லை. அப்படியானால் அண்மையில் யாழ்ப்பாணத்தில் தற்கொலைத் தாக்குதல் மேலங்கிகள் கண்டுபிடிக்கப்பட்டதை பெரிதுபடுத்தி நாட்டின் சிங்கள மக்களுக்கு இவர்கள் அச்சமூட்ட முயல்வதன் காரணம் என்ன?

கடந்த மாவீரர் தினமான நவம்பர் 27 ஆம் திகதி பிரபாகரன் பிறந்தநாளை ஒட்டி நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளது கொடிகள் பறக்கவிடப்படவுள்ளதாக மகிந்த சிங்கள மக்களை உசுப்பேத்தியிருந்தார். அப்படி எதுவும் இடம்பெறாததை அடுத்து மகிந்த வெட்கத்தில் வாயே திறக்கவில்லை.

பலாமரத்தின் இலை ஒன்று ஒடிந்து தன்மீது விழுந்ததால், முயல் ஒன்று வானமே இடிந்து தன்மீது விழுந்ததாக நினைத்து ஒடித்தப்பிக் கொண்டமை போன்று தற்கொலை மேலங்கி கண்டுபிடிக்கப்பட்டமைக்கு தலையும் வாலும் வைத்து மகிந்த தரப்பினர்கள் நாட்டின் பாதுகாப்புக்கு புலிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கூப்பாடு போடுவது கேலிக்குரிய ஒன்றாகும். இந்தச் சம்பவம் குறித்த தமிழ் நெற் இணையத்தளத்தின் செய்தியின் மூலம், விடுதலைப் புலிகளின் தலைதூக்கல் என்ற பரப்புரையின் உள்நோக்கம் தெளிவாகப் புலப்படுகிறது. இந்தச் சம்பவத்தை முன்னிலைப்படுத்தி இலங்கைக்கு எதிரான ஐ.நா.சபையின் தீர்மானத்தை நலிவுற வைப்பதுடன், வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர் அமைப்புக்களை ஒழித்துக்கட்டும் சதி ஒன்று முன்னெடுக்கப்பட இருப்பதாக தமிழ் நெற் இணையத்தளம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

தமிழ் நெற் இணையத்தள செய்தியின் மூலம், வடபகுதியில் குண்டு வெடிப்பு ஏதும் இடம்பெறுமானால் அது தமக்கு பாதிப்பானதாக அமையும் என வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் அஞ்சுவதாகக் கொள்ள முடிகிறது.

இன்று வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள், தாம் பயங்கரவாத நடவடிக்கைகளுடன், சம்பந்தப்படாதவர்கள் எனப் பிரகடனப்படுத்தியே அந்தந்த நாடுகளில் அகதி அந்தஸ்துப் பெற்றுள்ளனர். இலங்கையில் இன்னமும் குண்டு வெடிப்பு இடம்பெறுமானால் தாம், தாம் வதியும் நாடுகளின் அரசுகளால் கேள்விக்கு உள்ளாக்கப்படலாமென அவர்கள் அஞ்சுவதாகத் தெரிகிறது. அண்மையில் சாவகச் சேரியில் தற்கொலைத் தாக்குதல் அங்கிகள் கண்டுபிடிக்கப்பட்டமை அவர்களது அச்சத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

ஆனால், மகிந்த தரப்பினருக்கு சாவகச்சேரிச் சம்பவம் மகிழ்ச்சி அளிக்குமொன்றாக ஆகியுள்ளது. 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை பல சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகளது ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருந்த போதிலும், மகிந்த பதவி இழந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஒரு தடவை அத்தகைய விதத்தில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட போதிலும், அவ்வேளையில் மகிந்த தலைமையில் எதிரணி ஒன்று உருவாகியிருக்கவில்லை. ஆதலால் அது குறித்து எவரும் விமர்சித்துக் குரல் எழுப்பவில்லை.

பொது எதிரணி ஒன்று உருவாக்கப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகளது ஆயுதங்கள், உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது சம்பவம் சாவகச்சேரியில் தற்கொலைத் தாக்குதல் அங்கிகள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவமாகும். அதனாலேயே இந்தச் சம்பவம் இத்தனை தூரம் பெரிது படுத்தப்படும் ஒன்றாகப் பரிணாமம் பெற்றுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு ஆபத்துக்கு உள்ளாகியிருப்பதாகக் கூக்குரல் இடும் மகிந்த தரப்பினரின் எதிர்ப்பலைகளைச் செயலிழக்கச் செய்ய வேண்டுமானால் பாதுகாப்பு விற்பன்னர்களது சேவையைப் பெற்றுக்கொள்வது குறித்து அரசு சிந்திக்க வேண்டும். சரத் பொன்சேகாவை மீண்டும் களத்தில் இறக்குவது குறித்து சிந்திக்க வேண்டும். இன்று இராணுவத் தரப்புக்குள் சித்து விளையாட்டை மேற்கொள்ள முயலும் ராஜபக்ச அவதாரங்களைத் தட்டி அடக்கி வைக்க அதுவே பொருத்தமான ஒன்றாக அமையும்.

## கொளுத்தும் வெயிலில் பிஞ்சுகளை வதைக்கும் முன்பள்ளிகள்

கல்வி அமைச்சு நாட்டில் நிலவும் கடும் வெப்பத்தை அடுத்து அனைத்துப் பாடசாலைகளிலும் உடற்பயிற்சி உள்ளிட்ட விளையாட்டு நிகழ்வுகளை இரத்துச் செய்துள்ள நிலையில், வடக்கில் உள்ள சில முன்பள்ளிகள் மட்டும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றன. முன்பள்ளிகள் தாம் கல்வி அமைச்சுக்குக் கீழ் இயங்கவில்லை என்று காரணம் கூறுகின்றன.

மாலை 6.00 மணிவரை கடும் வெப்பம் நிலவுகின்ற நிலையில் முன்பள்ளி ஒன்றில் பிஞ்சுச் சிறார்களுக்கு மாலை 4.00 மணிக்கு விளையாட்டுப் பழக்குகின்றனர். இன்னமும் சில தினங்களில், மதியவேளை நடைபெற உள்ள விளையாட்டுப் போட்டி குறித்து பெற்றோர் பெரிதும் கவலை வெளியிடுகின்றனர். தமது பிள்ளைகள் உடல்நலம் குன்றிய நிலையிலும், அவர்களது மனநிலையைக் கருத்தில் கொண்டு, விளையாட்டுப் பழக்க அனுப்புவதாகவும், நிர்வாகம் இது விடயத்தில் அக்கறை இன்றி மனிதாபிமானம் அற்று இருப்பதாகவும் கவலையுற்றுள்ளனர்.

நாட்டில் மாலை 6.00 மணிவரை கடும் வெப்பம் நிலவுகின்ற நிலையில், பிஞ்சுகளை வதைக்கும் முன்பள்ளிகளுக்கு கல்வி அமைச்சு கடிவாளமிடும் நாள் எப்போதோ? வெப்பம் நிலவும் காலத்தை விடுத்து ஜனவரி மாதம் விளையாட்டுப் போட்டிகள் நடத்த முன்பள்ளிகளையும் பாடசாலைகளையும் கல்வி அமைச்சு பணிக்க வேண்டும்.

கல்வி அமைச்சு முன்பள்ளி நிர்வாகங்களுக்கும், தனியார் பாடசாலைகளுக்கும் பொது நலன் சார்ந்து அறிவுறுத்த முன்வர வேண்டும். மேலும் முன்பள்ளி மற்றும் தனியார் பாடசாலைகளையும் கல்வி அமைச்சின் கண்காணிப்பின் கீழ்கொண்டு வரவேண்டும். வட மாகாண கல்வி அமைச்சருக்கும் மத்திய அரசின் கல்வி அமைச்சருக்கும் இது சமர்ப்பணம்.


திருவரங்கன் திருவேரகன்
ஏழாலை

## வயோதிபத் தாய்மாரையும் விட்டு வைக்கவில்லை ஏமாற்றுப் பேர்வழி

மானிப்பாய், உடுவில் பகுதியில் நாகரிக உடையணிந்து கையில் பைல் கவருடனும் மோட்டார் சைக்கிளில் உலாவி வரும் நபரொருவர், உடுவில் பகுதியில் தனியாகக் கூலி வேலைக்குச் சென்ற வயோதிப மாதுவை அணுகித்தான் ஒரு சமுர்த்தி உத்தியோகத்தர் என்றும் வறுமை நிலையிலுள்ள மக் களுக்கு உடுவில் பகுதியில் பண உதவி செய்கிறோம். ஆகவே உங்களுக்கும் பண உதவி பெற்றுத் தருகிறேன். என்னுடன் மோட்டார் சைக்கிளில் வாருங்கள் என்றும், ஏமாற்றி அழைத்துச் சென்றுள்ளார். ஆள்நடமாட்டமற்ற இடத்தில் வைத்து அந்த வயோதிப மாதுவிடம் தோடு, மூக்குத்தியைக் கழற்றி என்னிடம் தாருங்கள். அங்கே இப்படிப் போனால் பணம் தரமாட்டார்கள் என்று கூறி அவற்றையும் பெற்றுக்கொண்டு நீங்கள் இங்கே நில்லுங்கள். நான் அவர்களிடம் சென்று கதைத்துப் பின்பு வந்து உங்களைக் கூட்டிச் செல்கின்றேன் என்று கூறிவிட்டுப் போனவர் போனவர்தான்; பின்பு திரும்பி வரவில்லை.

அந்த வயோதிப மாது தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து கவலையுடன் வீடு திரும்பி உள்ளார். இதே பாணியில் மானிப்பாயிலுள்ள மற்றொரு வீட்டுக்கும் சென்று அங்கிருந்த ஒரு வயோதிப மாதுவிடமும் சென்று இதே கதையைச் சொல்லி ஏமாற்றப் பார்த்துள்ளார். அந்த வயோதிப மாது ஏமாற்றமடையாமல் அவரைத் திருப்பி அனுப்பி விட்டார். ஆகவே இனம் தெரியாதவர்கள் உங்கள் வீடுதேடி வந்தால் ஏமாறாது உங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும்.

ஐ.ஞானேந்திரா, மானிப்பாய்



# பயமே கடவுள்

மருத்துவர்
பொன்மயில் இராசதுரை

பயத்தினாலேயே, கடவுள் நம்பிக்கையும், இயலாமையின் முடிவுறுத்தலுமாகக் கடவுளைப் பற்பல உருவங்களிலும், பெயர்களிலும் உருவாக்கினார்கள். பெயர் சூட்டி வழங்கி வருகிறார்கள். இந்த முறையானது கிறேத, திறேத, துவாரக, கலியுகம் வரை தொடர்ந்து மீண்டும் கிறேத யுகத்திலிருந்து ஆரம்பமாகும். இதில் சமயம், நெறி, வழிகாட்டல், மார்க்கம் எனப் பலவாறான கிளைகள் பிரியும்.

**விளக்கம்**

ஆதி காலத்தில், மனிதனின் பகுத்தறிவு வளர்ச்சியடையாத கால கட்டம் கடந்து, பகுத்து மட்டும் அறியும் நிலை வளர்ச்சியடைந்து, இன்று ஆறு நேர் நிலையடைந்து எல்லையில்லா நிலைக்கு வளர்ந்து மெஞ்ஞானம், விஞ்ஞானம் இரண்டிலும் மனித இனம் வளர்ச்சியடைந்து விட்டது. முன்னைய காலகட்டத்தில் பயத்தின் காரணமாக இயற்கையைக் கடவுளாக வணங்கினான் மனிதன். ஏனெனில் என்ன தான் பகுத்தறிவு வளர்ந்தாலும் இயற்கையை எதிர்த்து நிற்க முடியாது என்பதை மனிதன் உணர்ந்திருந்தான். இதேநிலை இன்றும் நிலைத்து நீடித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரபஞ்சம் இருக்கும்வரை அது தொடரவே செய்யும்.

> **தமிழர்களுக்குத் தலைமை வகித்தவர்களெல்லாம் சிங்களத் தலைமைக்கு அடிபணிந்தவர்களே! ஏன், இன்று தமிழ்க் கடவுள் என்று கூறிக்கொள்ளும் கதிர்காம முருகனே, சிங்கள மொழி பேசும் சிங்களக் கடவுளாக மாறிவிட்டார் என்றால் கடவுளுக்கு மொழி உண்டா? இல்லை. இதனால் தமிழர்கள் அகவணக்கம் என்று மௌன அஞ்சலி செலுத்தி தமது செயற்பாடுகளைச் செய்தார்கள்.**

**எவற்றைக் கடவுளராகக் கண்டார்கள்**

ஐம்பூதங்களாகிய நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு (வெப்பம் ஒளி) என்னும் ஐந்தையும் மனிதர்கள் கடவுளராக அன்று வழிபட்டார்கள்.மேலும் பரிணாம வளர்ச்சியில் முன்னேறியபொழுது, மிருகங்கள், தாவரங்களால் பயமுறுத்தப்பட்டபொழுது, அவற்றையும் தெய்வமாக வழிபட்டார்கள்.

இந்த விடயம், சைவ சமயத்தில் ஆய்வு செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால்தான் பயத்தின் பிரதிபலிப்பே கடவுள் என மனிதன் கண்டு, தன்னை மறந்து கடவுளே எல்லாம் என சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம் மற்றும் பௌத்தத்திலும் கடவுளை ஒவ்வொரு பெயரில் அழைக்கிறார்கள். இந்து சமயத்துள் அடக்கப்பட்ட சைவத்துள் முழுமுதற் கடவுள் சிவம் எனவும், கிறிஸ்தவ சமயத்தில் ஆண்டவர் என்றும், இஸ்லாம் சமயத்தில் அல்லாது என்றும், புத்த சமயத்தில் புது தெய்யோ என்றும் தத்தம் மொழிகளில் பகர் கிறார்கள். இலங்கையில் வழக்கில் உள்ள நான்கே நான்கு சமயங்கள், போதனைகள், மார்க்கங்கள், நெறிமுறைகள் என எப்படி அழைத்தாலும் எல்லாம் மனிதத்தைப் போதிக்கின்றன என்பது வெள்ளிடை மலை.

**மனு வாழ்க்கை**

இதை மனதினில் நிறுத்தி மனிதர்கள் மனிதர்களாக வாழக் கற்று ஒரு நன்னெறி முறைக் கமைய வாழ்வார்களானால், அதாவது மகாத்மா காந்தி கூறிப் போந்தமை போன்று, மனச் சாட்சியே கடவுள் என்பதை ஒவ்வொருவரும் கடைப்பிடிப்பார்களானால் இந்த உலகம் சுவர்க்க பூமியாகும். இன்று சமயங்களின் பெயரால், அதாவது கடவுளின் பெயரால் மனிதர்களிடையே பாகுபாடு நிலவி, இல்லை பாகுபாட்டை வளர்த்து அதில் குளிர் காய்ந்து, அத்துடன் மொழிப் பாகுபாட்டையும் வளர்த்து மனுக்குலத்தையே அழிக்கும் அதர்ம முறையையே வளர்த்துத் தம்மைத் தாமே அழிக்கும் வழிவகைகளை ஏற்படுத்தி விட்டார்கள். இதனை முடிவுறுத்துவதற்கான வழி என்ன? தற்போதைய அழுக்கடைந்த சமுதாயம் மெல்ல மெல்ல தண்ணீரால் கழுவப்பட்ட ஊத்தைபோல தம்மாலேயே தாம் அழிந்து, முற்பந்தியில் குறிப்பிட்டது போல கலியுகம் 2000 வருடங்களுக்கொரு தடவை மாற்றம் ஏற்படுவது போன்று, ஒரு யுக மாற்றமாக, கிறேத யுகத்துக்குச் செல்லும். உதாரணமாக 2004 இல் ஏற்பட்ட சுனாமி அழிவை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். இந்தச் சுனாமி ஓர் அர்த்த ஜல பிரளயம் எனக்கொள்ளலாம். ஐம்பூதங்களும் ஒன்றிணைந்து பிரளயமொன்று ஏற்படுமானால், அது யுக யுகாந்திர பிரளயமாகும். அப்போது இந்தப்பூமியின்தற்போதைய பூகோள அமைப்பு முழுமையாக மாற்றி அமைக்கப்பட்டு, புதிய தரை, கடல், மார்க்கங்கள் புதிதாக வளர்ச்சி அடையும் என்பது தீர்க்கதரிசிகளான ரிஷிகளின் வாக்கு.

இதை உணராமல் நான் தான் எல்லாமும், என்னாலேயே எல்லாம் நடக்கின்றன. நான் தான் கருவியும், கர்த்தாவுமாக இருக்கிறேன் என்னும் ஆணவம் தலைதூக்கி மனிதனை ஆட்டிப்படைக்கிறது. இதே நிலை உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளின் மனிதர்களால் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இதையே பக வத்கீதையில் பரமாத்மா, கண்ணபிரான், அர்ச்சுனனுக்கு போர்க்களத்தில் யான் கர்த்தா - நீ கருவி என்று எடுத்தியம்பினார் என்றால், அது வெறும் கற்பனைவாதம், புராணக் கதை என்று கூறுவோரும் எம்மிடையே பலர் உள்ளனர். ஆனால், கற்பனையோ, காவியமோ, புராணக்கதையோ எதுவானாலும், அவற்றில் இருக்கும் தத்துவத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். தாமாக விளங்கிக் கொள்ள இயலாததோடு, மற்றவர்களின் விளக்கத்தையும் விளங்கிக் கொள்ளமாட்டாதவர்கள்தான் இந்தப்பூவுலகில் இருக்கிறார்கள். இது எமக்குஎமது சமுதாயத்தின், சமூகத்தின் பலவீனமான சாபக்கேடு மட்டுமல்ல, ஈனத்தனமான செயற்பாட்டில் சிந்தனையும் பிழையான பிரயோக வாதமுமாகும். சிங்கள மொழியில் கூறும். 'பறைத்தெமழு' 'பறைத்தமிழன்', ஊதெமழு என்ற கணிப்பில் வாழும் சிங்களவருக்குள் தமிழனை ஆள்வதற்கு அல்லது கடவுளைத் தமிழனுக்குக் காட்டுவதற்கு தமிழனுக்கு எவர் தலைமை வகிப்பது. வேறொருவகையில் கூறுவதனால், சிங்கள அரசியல் கட்சிகளை வைத்து தமிழனை எந்தச் சிங்களத் தலைமை ஆள்வது என்ற கேள்வியின் தொக்கில், தமிழரில் தமிழரை ஆள தமிழன் எவரும் இல்லை என்பதே. தமிழர்களுக்குத் தலைமை வகித்தர்களை எல்லாம் சிங்களத் தலைமைகளுக்கு அடிபணிந்தவர்களே! ஏன் இன்று தமிழ்க் கடவுள் என்று கூறிக்கொள்ளும் கதிர்காம முருகனே, சிங்கள மொழி பேசும் சிங்களக் கடவுளாக மாறிவிட்டார் என்றால், கடவுளுக்கு மொழி உண்டா? இல்லை. இதனால் தமிழர்கள் அகவணக்கம் என்று மௌன அஞ்சலி செலுத்தி தமது செயற்பாடுகளைச் செய்தார்கள். இதுவே வடக்கில் செல்வச்சந்நிதி கோயிலிலும், கிழக்கில் மண்டூர் கந்தசுவாமி கோயிலிலும் அகவணக்கப் பூசையாகக் கடைக்கொள்ளப்படுகிறது.

சூரியகாந்தி

# இந்திய பலி பீடத்தில் இலங்கைத் தமிழர்



சந்திரசேகர ஆசாத்

பிரபல சமூகவியலாளரும், சுற்றுச்சூழல் பாதுகாப்பில்தீவிரமாகவும்அர்ப்பணிப் புடனும் துணிச்சலுடனும் போராட்டங் களை நடத்தி வருபவருமான அருந்ததி ராய் எழுதிய 'முதலாளித்துவம் ஒரு பிசாசுக் கதை' என்ற புத்தகம் பல தரப்பினரதும் கவனத் தைப் பெற்றுள்ளது. இது பலவிதமான விமர்சனங் களுக்கு உட்பட்ட போதிலும், முதலாளித்துவத்தின் கோரமான பக்கங்களை வெளிக்கொண்டு வருவதில் பெரும் வெற்றி பெற்றுள்ளது.

ஏற்கனவே இந்தியப் பெருநகரங்களில் சிறுவர் தொழிலாளர்கள்கடுமையாகச்சுரண்டப்படுவதும், சிலரின் நலன்களுக்காக அவர்கள் சமூக விரோதி களாகவும், கொடிய குற்றவாளிகளாகவும் உருவாக்கப்படுவது தொடர்பில் அவர் எழுதிய 'சிறு விடயங்களின் கடவுள்' என்ற நூல் சர்வதேச புலிட்சர் பரிசு பெற்றுள்ளது என்பதும் நினைவு கூரத்தக்கது.

**பிசாசுக் கதை**

பலகட்டுரைகளின்தொகுப்பான'முதலாளித்துவம் ஒரு பிசாசுக் கதை' என்ற இந்த நூல் பல நம்ப முடியாத தகவல்களை வெளியிட்டுள்ளது. அதில் முக்கியமானது உலகின் மொத்த சொத்துக்களின் நாலில் ஒரு பங்கு 100 குடும்பங்களுக்கு மட்டுமே சொந்தமாயுள்ளது என்பதுதான். மேலும் உலகின் முதல் 25 தனவந்தர்களில் மூவர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். அதில் அம்பாணி முதல் 10 பேரில் ஒருவராக உள்ளார்.

இந்தியப் பெரும் முதலாளியான அம்பாணியின் மாளிகையைப் பற்றிய அவரின் விவரிப்பு எம்மை மூக்கின் மேல் விரலை வைக்கச் செய்யும் அளவுக்கு உள்ளது.

அந்த மாளிகை 27 மாடிகளைக் கொண்டது. இதில் நீச்சல் தடாகங்கள், விளையாட்டு மைதானங்கள், விருந்தினர் மண்டபங்கள் எனச் சகல வசதிகளும் மாடிகளிலேயே உண்டு.

இந்த மாடிகளில் உலங்கு வானூர்திகள் இறங்கும் தளங்கள் உண்டு. எட்டு மின் தூக்கிகள் (லிப்ற்) உண்டு. இங்கு 800 பணியாளர்கள் வேலை செய்கின்றனர். வளர்க்கப்படும் உயர்சாதி நாய்களுக்கும் எல்லா ஆடம்பர வசதிகளும் உண்டு.

சாதாரண மக்களைப் பொறுத்தவரை ஒரு தனி மனிதனுக்கான இத்தகைய ஆடம்பர வசதிகள் நம்ப முடியாத ஆச்சரியம்தான். ஆனாலும் இந்தியாவில் இப்படிப் பல பெரும் தனவந்தர்கள் உள்ளனர். ஆனால் இன்னொரு புறம் இந்தியாவின் மும்பை, கல்கத்தா, சென்னை, ஹைதராபாத் போன்ற பெருநகரங்களில் ஒரு குடிசை வீடோ, ஒரு கூடாரத் துணியோகூட இல்லாமல் நடைபாதையிலேயே வாழும் குடும்பங்கள் லட்சக் கணக்கில் உண்டு. அவர்களின் சமையல், சாப்பாடு, படுக்கை என எல்லாத் தேவைகளும் நடைபாதையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இப்படி நடைபாதையில் இரவு வேளைகளில் உறங்குபவர்கள் மீது வாகனங்கள் ஏறுவதும் உயிரிழப்புக்கள் ஏற்படுவதும் சாதாரணமானவை.

வசதி படைத்தவர்கள் பொன்னும், பணமும், பாலும், தேனும் அள்ளிக் கொடுக்கும் பெருங்கோயில்களின் வாசற்புறத்தில் ஒட்டிய வயிறுகளுடன் "சாமி, பிச்சை போடுங்க சாமி" என்று கையேந்தி நிற்கும் பரிதாபத்துக்குரியவர்கள் நீண்ட வரிசையில் கொடிய வெயிலில் குந்தியிருப்பதைக் காணமுடியும். வங்கிக் கடன்களைக் கட்ட முடியாமல் விவசாயிகள் தற்கொலை செய்வதெல்லாம் இங்கு சர்வசாதாரணம்.

அதேவேளையில் இந்தியா பொருளாதார வளர்ச்சியில் மிகவேகமாக முன்னேறி வருவதாகவும் வெகுவிரைவில் சீனாவுக்கு நிகராக முன்னேறி விடும் எனவும் கூறப்படுகிறது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இந்தியா 2020ஆம் ஆண்டு வரை பொருளாதார வளர்ச்சி வீதத்தை 10 வீதமாகத் தக்க வைக்கும் என மார் தட்டியுள்ளார். பொருளாதாரத்தில் ஒரு வல்லரசாக உருவாகிவரும் நாட்டில், நாளொன்றுக்கு 2 டொலருக்குக் குறைந்த வருமானத்தையே மொத்த சனத்தொகையின் மூன்றில் ஒரு பகுதியினர் பெறுகின்றனர் எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அப்படியானால் இந்தியாவைப் பொருளாதார வல்லரசாக உயர்த்தும் அந்த வளர்ச்சி எங்கே என்ற கேள்வி எழுகிறது. இந்தக் கேள்விக்கு அருந்ததி ராயின் நூல் தெளிவான ஆதாரபூர்வமான ஆணித்தரமான பதில்களை வழங்குகிறது.

### சுரண்டப்படும் மக்கள்

அதாவது பொருளாதார வளர்ச்சி, கைத்தொழில் விரிவாக்கம் என்ற பேரில் சாதாரண மக்களின் மனித உழைப்பு, குறைந்த கூலியில் கொடிய முறையில் சுரண்டப்படுகிறது.

இன்னொருபுறம் உற்பத்திப் பொருள்களின் விலை அதிகரிப்பு மூலம் சகல மக்களும் கொள்ளையடிக்கப்படுகின்றனர்.

அதனால் தொழிலதிபர்கள், வர்த்தகர்கள், தனவந்தர்கள் ஆகியோரின் வருவாயும் மூலதனமும் கட்டற்ற வகையில் பெருகுகின்றன. சாதாரண மக்கள் மேலும் மேலும் வறுமையில் தள்ளப்படுகின்றனர்.




இப்படியொரு சுதந்திரமான கொடிய சுரண்டல் இடம்பெறும் அதேவேளையில் இந்தப் பெரும் நிறுவனங்களின் மிகப்பெரிய திட்டங்கள் மூலம் முழு மனித குலமுமே அழிவை நோக்கித் தள்ளப்படுகிறது.

பிரமாண்டமான மின்சாரத் தேவையை நிறைவேற்றும் முகமாக பெரும் ஆறுகளை மறித்து அணைகள் கட்டப்படுகின்றன. ஒருபுறம் இந்த ஆறுகளில் புதிய நீரேந்தும் பகுதிகள் உருவாக்கப்படுவதால் காடுகள் அழிக்கப்பட்டு மழை குறைவடைகிறது.

இன்னொருபுறம் ஆறுகள் திசை திருப்பப்படுவதால் பாரம்பரிய விளை நிலங்கள் தரிசாவதால் விவசாயிகள் கூலிவேலை தேடி நகரங்களை நோக்கிப் போகின்றனர். தொழிற்சாலைக் கழிவுகளால் நிலமும் நீரும் மாசுபட கரியமிலவாயு (கார்பனீர் ஒட்சைட்) வெளியேற்றத்தால் காற்று மாசடைந்து புவியின் வெப்பநிலை உயர்கிறது.

இந்தியப் பெருமுதலாளித்துவத்தின் பொருளாதார அபிவிருத்தியின் உண்மையான வெட்டுமுகம் இதுதான். அதாவது பெரும் மூர்க்கத்தனமான வேகத்துடன் வளர்ச்சி பெற்றுவரும் கைத்தொழில் மயமாக்கம். அதீத லாப வேட்டை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு மக்களை மேலும் மேலும் வறுமை நிலைக்குத் தள்ளியும் சுற்றுச்சூழலை நாசப்படுத்தியும் கண்ணுக்குத் தெரியாத ஒரு பெரும் தொடர் மனித குலப்படுகொலை நடவடிக்கைகளை இந்தியப் பெரு முதலாளித்துவமும், அதன் அரசியல் பிரதிநிதியான இந்திய அரசும் மேற்கொண்டு வருகின்றன.

இந்திய நாட்டுக்குள் மட்டுப் பட்டிருந்த இந்தப் பேரழிவுகள் சுரண்டல்கள், தற்போதைய இந்திய ஜனாதிபதி, காங்கிரஸ் ஆட்சியில் நிதி அமைச்சராக இருந்தபோது அயல்நாடுகள் நோக்கியும் விரிய ஆரம்பித்தன.

அதன் வளர்ச்சிக் கட்டத்தில் மேலும் ஒருபடிதான் இந்தியா இலங்கையுடன் மேற் கொள்ள இணக்கம் காணப் பட்ட "சீபா" ஒப்பந்தம்.

ஆனால் மகிந்த ராஜபக்ச காலத்தை இழுத்தடித்து அதில் கையெழுத்திடுவதைத் தந்திரமாகத் தவிர்த்து விட்டார். இப்போது அது சில மாற்றங்களுடன் 'எட்கா' ஒப்பந்தம் என்ற பேரில் தற்போதைய அரசைக் இறுகப்பற்றிக் கொண்டிருக்கிறது.

'எட்கா' ஒப்பந்தம் இன்னும் கைச்சாத் தாகாத நிலையில்கூட இந்தியப் பெருமுத லாளித்துவத்தின் பலிபீடத் தில் தமிழ் மக்களை ஏற்றும் இரு நட வடிக்கைகள் ஆரம்பமாகி விட்டன. ஒன்று சம்பூர் அனல் மின் நிலையம். மற்றையது 65,000 வீட்டுத்திட்டம்.

### சம்பூர் ஆபத்து

சம்பூர் அனல் மின்நிலையம் இலங்கையின் வளர்ச்சி நோக் கிய மின்சாரத் தேவையை நிறைவு செய்வதற்காகவே நிறுவப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆனால் அடிப்படையில் அந்த முயற்சி முற்று முழுதாகவே சம்பூரையும் சுற்றியுள்ள பகுதிகளையும் பேரழிவுக்கு உட்படுத்தும் அபாயம் கொண்டது எனத் தெரிய வருகிறது.

முதலாவது இந்த மின்நிலையம் அமைக்க ஒரு பகுதி சம்பூர் மக்களின் பாரம்பரிய நிலங்கள் பறிக்கப்படுகின்றன. அடுத்தது இந்த நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவுகள் பேரழிவை ஏற்படுத்தும் ஆபத்தைக் கொண்டவையென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதிலிருந்து 10,000 தொன் சல்பர்டை ஒட்சைட் வெளியேறும். அமில மழையைப் பெய்ய வைப்பது இந்த வாயு என்பது குறிப்பிடத்தக்கது. நைதரசன் ஒட்சைட் 10,200 தொன் வெளியேறும். இது பனிப்புகாரை உருவாக்கும் ஆபத்தைக் கொண்டது. 3.7 மில்லியன் தொன் கரியமிலவாயு வெளியேறும். புவி வெப்பமடைதல், காலநிலை மாற்றம் என்பனவற்றின் தூண்டுதலுக்கு இவையும் இன்னும் ஊக்கியாக அமையும். காபன் துகள்கள் காற்றில் 150 தொன் கலத்தல், நுரையீரல் புற்று நோய், ஆஸ்துமா போன்ற நோய்களை ஏற்படுத்துவதற்கான தூண்டலாக இருக்கும். காபன் மொனோ ஒட்சைட் வாயுவை நேரடியாகச் சுவாசித்தால் உயிராபத்து ஏற்படும். சூடான 2.2 தொன் நீர் கடலில் கலக்கும்போது மீனினம், மீன் இனப்பெருக்கம் செய்யும் பவளப்பாறைகள் என்பன அழிவடையும் ஆபத்தும் உண்டு. திருமலைக் கடலில் வாழும் திமிங்கிலங்களுக்கும் இதனால் ஆபத்து ஏற்படக் கூடும்.

எப்படியிருப்பினும் 15 மைல் சுற்றாடல் முழுமையாகவும், 30 மைல் சுற்றாடல் பகுதியளவிலும் பாதிக்கப் படும்.

இதனால் சம்பூர், மூதூர், கிண்ணியா, கிளிவெட்டி, அலிஒலுவ, சேருவில போன்ற பகுதிகள் பாதிக்கப்படும். எனவேதான் திட்டத்தை எதிர்த்து தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இலங்கைக்கு இவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும் இந்த மின் நிலையத்தின் மூலம் இந்தியப் பெரும் நிறுவனம் மின்சாரத்தை உற்பத்தி செய்து இலங்கை அரசுக்கு விற்றுக் கொள்ளை இலாபம் சம்பாதிக்கவுள்ளது.

(45 ஆம் பக்கம் பார்க்க)

"இந்திய நாட்டுக்குள் மட்டுப்பட்டிருந்த இந்தப் பேரழிவுகள் சுரண்டல்கள். தற்போதைய இந்திய ஜனாதிபதி. காங்கிரஸ் ஆட்சி. யில் நிதி அமைச்சராக இருந்தபோது அயல்நாடுகள் நோக்கியும் விரிய ஆரம்பித் தன. அதன் வளர்ச்சிக் கட்டத்தில் மேலும் ஒருபடி தான் இந்தியா இலங்கை யுடன் மேற்கொள்ள இணக்கம் காணப் பட்ட "சீபா" ஒப்பந்தம். ஆனால் மகிந்த ராஜபக்ச காலத்தை இழுத் தடித்து அதில் கையெழுத்திடு வதைத் தந்திர மாகத் தவிர்த்து விட்டார். இப்போது அது சில மாற்றங் களுடன் 'எட்கா' ஒப்பந்தம் என்ற பேரில் தற்போதைய அரசை இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறது."





# வெளிநாட்டில் பணம் பதுக்கிய பலரின் விவரங்கள் அம்பலம்

## பனாமா ஆவணக் கசிவில் ருசிகரத் தகவல்கள்

■ ரெங்கன்

உலகில் பணக்காரர்கள் மற்றும் அதிகாரப் பதவிகளில் இருப்பவர்கள் மட்டுமல்ல புகழ் பெற்றவர்கள் – மக்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உள்ளவர்களும் கூட வரி விதிப்புக்களில் இருந்து தப்பிக்கொள்ளத் தமது சொத்துக்களை வெளிநாடுகளில் எவ்வாறு பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பதைப் 'பனாமா பேப்பர்ஸ்' என்ற பெயரில் கசிந்துள்ள ஆவணங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

உலகப் புகழ்பெற்ற பலரும் – அரசியல் தலைவர்கள், சினிமாப் பிரபலங்கள் மற்றும் தொழில்துறை அதிபர்கள் - தமது பணத்தை ஒளித்து வைக்க மொஸாக் பொன்சேக்கா (Moss ack fomseca) என்ற நிறுவனம் உதவியுள்ளது என்பதை இந்த ஆவணக் கசிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப், ஐஸ்லாந்து பிரதமர் சிக்மண்டுர் டேவியோ கன்லாக்ஸன் ஆகியவர்கள், வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரமுகர்களில் விரைவில் பொதுத் தேர்தலை எதிர்நோக்க இருப்பவர்கள் என்று கருதப்படுகின்றது. ஆவணங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏனைய பிரமுகர்களில் உக்ரேனிய அதிபர், சவுதி அரேபிய மன்னர் மற்றும் முன்னாள் இந்நாள் பிரபல விளையாட்டுத்துறை மற்றும் சினிமா பிரபலங்கள் 12 பேர் அடங்குகின்றனர் என்று தெரிகின்றது.

சீன அதிபர் ஸிஜின் பிங்கின் குடும்பமும் வெளிநாட்டுப் பணப்பதுக்கலில் சம்பந்தப்பட்டிருப்பதும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனின் தந்தையும் இதில் சம்பந்தப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. இந்திய சுப்பர் ஸ்ரார் அமிதாப்பச்சன், அவரது மருமகள் ஐஸ்வர்யா ராய் ஆகியவர்களுக்கும் இரகசியக் கணக்குகள் இருப்பது கசிந்துள்ளது. அதேநேரம், அமிதாப்பச்சன் தமக்கு அப்படி ஒரு கணக்கும் கிடையாது, அது தவறான செய்தி என்று மறுத்துள்ளார்.

### இலங்கையர் பற்றிய விவரம்

இலங்கைத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களுக்கு இரகசிய பணப்பதுக்கல் உண்டா என்பது உடனடியாகத் தெரியவில்லை. ஆனால் ஆவணங்களின் விவரம் முழுமையாக வெளிவந்தால் இலங்கைப் பிரமுகர்களின் பெயர்களும் வெளிவரலாம் என்று கருதப்படுகின்றது. சில வர்த்தகர்களின் பெயர்கள் மட்டுமே இப்போது வெளியாகி உள்ளன.

நவசமசமாஜக் கட்சித் தலைவர் அண்மையில் வெளியிட்டிருந்த கருத்தில் பனாமா பேப்பர்ஸ் ஆவணங்கள் முழுமையாக வெளிவரும் பட்சத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பெயரும் நிச்சயம் இடம்பெற்றிருக்கும் என்று அழுத்தமாகத் தெரிவித்திருந்தார்.

பனாமிய சட்ட நிறுவனம் என்று தெரிவிக்கப்பட்டுள்ள மொஸாக் பொன்சேகாவானது உலகில் அனேகரின் இரகசிய பணவைப்புக்களைப் பேணுகின்ற நிறுவனங்களில் ஒன்று மட்டுமே. வேறு நிறுவனங்களும் இவ்வாறான இரகசியக் கணக்குளைப் பேணுபவையாக இருக்கலாம் என்ற ஊகமும் தெரிவிக்கப்படுகின்றது.



> பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப், ஐஸ்லாந்து பிரதமர் சிக்மண்டுர் டேவியோ கன்லாக்ஸன் ஆகியவர்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரமுகர்களில் விரைவில் பொதுத் தேர்தலை எதிர்நோக்க இருப்பவர்கள் என்று கருதப்படுகின்றது. ஆவணங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏனைய பிரமுகர்களில் உக்ரேனிய அதிபர், சவூதி அரேபிய மன்னர் மற்றும் பிரபல விளையாட்டுத்துறை மற்றும் சினிமா பிரபலங்களுமான முன்னாள் இந்நாள் பிரபலங்கள் 12 பேர் அடங்குவதாகத் தெரிகின்றது.

### முட்டை, வாழைப்பழ ஆர்ப்பாட்டம்

ஐஸ்லாந்து பிரதமர் சிக்மன்டுர் டேவிட் கன்லாக்சன் கடந்த செவ்வாய்க்கிழமை தமது பதவியிலிருந்து விலகினார். பனாமா ஆவணங்கள் அம்பலத்துக்கு வந்ததன் முதலாவது பலிக்கடா இவர்.

இவரது மனைவியானவர் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றை நிர்வகித்து வருகிறார். அந்த வகையில் ஐஸ்லாந்து வங்கிகளில் அவருக்குப் பெரிய அளவில் பங்குகள் இருப்பதாகக் கருதப்படுகின்றது. அதன் மூலம் அவர் அறிவிக்கப்படாத வட்டிகள் பெற்றுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. பிரதமர் பதவி விலக வேண்டும் என்று மக்கள் வீதிகளில் இறங்கி கூழ்முட்டைகளையும் வாழைப்பழங்களையும் எறிந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்.

பொதுமக்கள் சிக்கனத்தையும் வறுமையையும் எதிர்நோக்கும்படி செய்துவிட்டு உலகப் பிரமுகர்கள், பணக்காரர்கள், அரசியல் தலைவர்கள் எல்லாம் வரி ஏய்ப்புக்காகப் பெருந்தொகைப் பணத்தை எவ்வாறு பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பது இப்போது வெளிப்பட்டுள்ளது. பனாமா பேப்பர்ஸ் ஆவணங்களில் ஏறத்தாழ 40 வருடங்களுக்குரிய புள்ளிவிவரங்கள் காணப்படுகின்றன. இவை 1977 தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலானவை. இவைகளில் 15,000 பத்திரிகை நிறுவனங்களின் பெயர்கள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. இந்த நிறுவனங்களைத் தமது நிதி விவகாரத்தின் இரகசியங்களைக் காப்பாற்றுவதற்காக வாடிக்கையாளர்கள் ஆரம்பித்திருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. இந்தப் பனாமா பேப்பர்ஸ் ஆவணங்கள் முதலில் ஜேர்மன் செய்திப் பத்திரிகையான சூருட்சே செலிட்டுங் (Suddeutsche zeitung) என்ற பத்திரிகைக்கே கிடைத்துள்ளன. அந்த நிறுவனம் புலனாய்வுப் பத்திரிகையாளர்களின் சர்வதேச ஒன்றியத்துடன் இந்த ஆவணங்களைப் பகிர்ந்துகொண்டுள்ளது. ஆனால் ஆவணங்களைக் கசியவிட்ட மூலகர்த்தா யார்? அது எவ்வாறு செய்யப்பட்டது என்பது வெளியிடப்படவில்லை. மொசாக் பொன்சேகா என்பது முற்றிலும் பெனிமோனியன் நிறுவனம் என்றாலும் உலகம் முழுவதிலும் அது செயற்பட்டு வருகின்றது. ரஷ்ய வங்கி ஒன்றினால் கோடிக்கணக்கில் பண மோசடி மேற்கொள்ளப்பட்ட வலையமைப்பையும் இந்த ஆவணக் கசிவு அம்பலப்படுத்துவதாக் செய்திகள் கூறுகின்றன. இந்த ரஷ்ய வங்கியுடன் அதிபர் விளாடிமிர் புடினின் சகபாடிகளுக்குத் தொடர்புகளுண்டு என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

# சீனாவுடன் மீண்டும் சம்பந்தக் கலப்பு!

ஸூடோ ஸ்வாமி



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த வாரம் மேற் கொண்டிருந்த சீனாவுக்கான உத்தியோகபூர்வ பயணம் வரலாற்று முக்கியத்துவம் உடையதாக அமைந்திருக்கிறது. இலங்கையின் புதிய அரசு நிறுவப்பட்டபின் பழைய அரசின் நண்பரைச் சந்திப்பது போன்ற தோற்றமைப்பை கொண்ட இந்தச் சந்திப்புக்குப் பிராந்திய முக்கியத்துவமும் இருக்கிறது.

கடந்த 6ஆம் திகதி ஆரம்பித்த சீனப் பயணத்தில் பொருளாதார ஒத்துழைப்பு உள்ளிட்ட இரு தரப்பு உடன்பாடுகள் பலவற்றைக் கைச்சாத்திட உள்ளடக்கிய தூதுக்குழாமில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம, ரவுப் ஹக்கீம், நிமல் சிறிபால டீ சில்வா உள்ளடங்கலாக இராஜாங்க அமைச்சர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர். ரணிலின் மனைவி பேராசிரியை மைத்திரியும் இந்தப் பயணத்தில் இடம் பிடித்திருந்தார்.



இலங்கையிலிருந்து சென்ற 15 பேர் அடங்கிய குழுவினருக்கு பீஜிங் சர்வதேச விமான நிலையத்தில் வைத்துப் பெரிய வரவேற்பளிக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்றுநாள் பயணத்தில் பிரதமர் தலைமையிலான குழுவினர் சீன ஜனாதிபதி, சீனப் பிரதமர் உள்ளடங்கலாகச் சீன அரசியல் தலைவர் களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருக்கிறார்கள். கடந்த வியாழக்கிழமை சீனாவின் மகத்தான மண்டபத்தில் வைத்து செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டு, மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு பேச்சுக்கள் நடந்தேறியதுடன் ஒப்பந்தங்களும் கைச்சாத்தாகியிருக்கின்றன. இலங்கைத் தூதுக் குழுவினர் இன்று நாடு திரும்புவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**துறைமுக நகர கட்டுமானத்திற்கு ஒப்புதல்**

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பெரியளவில் பேசப்பட்டுப் பின்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சீன அரசின் அனுசரணையுடனான துறைமுக நகர கட்டுமான வேலைத்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு கடந்த மாதமளவில் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

துறைமுக நகரக் கட்டுமானத்தினை நிறுத்துவது போன்ற கோதாவில் தேர்தல் பரப்புரை முன்னெடுக்கப் பட்ட போதிலும், பின்னர் படிப்படியாக அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டதே பிரதமரின் இந்த சீனப் பயணத்தினை வசதி செய்வதற்காக என்றும் அறியப்படுகிறது.

துறைமுக நகரக் கட்டுமானத்தின் மீதான எதிர்ப்புக்குரல்கள் இலங் கையில் இன்னும் ஓயாத பின்னணியிலும் அதனை மீள முன்னெடுப் பதற்கான பிரயத்தனங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான துறைமுக நகராக்கல் திட்டத்தினை 2014 இல் சீனப்பிரதமர் ஆரம்பித்து வைத்திருந்தார்.

இதேவேளை, துறைமுக நகரத் திட்டத்தினை நிறுத்தி வைத்ததனால் ஏற்பட்ட இழப்புகளைக் காரணம் காட்டி குறித்த சீன ஒப்பந்த நிறுவனம் 125 மில்லியன் அமெரிக்கன் டொலர் இழப்பீட்டுத் தொகையை இலங்கை யிடமிருந்து கோரியுள்ளது. இது தொடர்பான சமரசப் பேச்சுக்களை அடுத்து கட்டுமானப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> துறைமுக நகரக் கட்டுமானத்தினை நிறுத்துவது போன்ற கோதாவில் தேர்தல் பரப்புரை முன்னெடுக்கப்பட்ட போதிலும், பின்னர் படிப்படியாக அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டதே பிரதமரின் இந்த சீனப் பயணத்தினை வசதி செய்வதற்காக என்றும் அறியப்படுகிறது.

**அம்பாந்தோட்டை பொருளாதார வர்த்தக மையம்**

சீனாவின் உதவியுடன் அம்பாந்தோட்டையைப் பொருளாதார வர்த்தக கேந்திர மையமாக மாற்றுவதற்கான திட்டங்களும் இந்த பிரதமரின் சீனப் பயணத்தின்போது ஆலோசிக்கப்படத் தீர்மானிக்கப்பட்டிருந்தன. மத்தல விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுகம் என்பவற்றை முதலீடாகக் கொண்டு ஆர்வமுள்ள சீன நிறுவனங்களை அங்கு முதலீடஈர்க்கவும் இலங்கை விரும்புவதாக ஸிங்குவா செய்திச் சேவை தெரிவித்திருக்கிறது. பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர்கொண்டுள்ள நிலையில் சீனாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் நிலமையைச் சமாளிக்க உதவும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைவிடவும் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் புனர் வாழ்வுக்கென நோயாளர் காவு வண்டிகளை வழங்கவும், இலங்கை மாணவர்களுக்கு 600 புலமைப் பரிசில்களை வழங்கவும் மற்றும் இலங்கைப் படையினருக்கு பயிற்சிகளை வழங்குவதற்கும் சீனா முன் வந்துள்ளதாக சரத் அமுனுகம தெரிவித்திருக்கிறார்.

**இந்தியாவின் கவனம்!**

நேபாளப் பிரதமரின் சீனப் பயணத்தினைத் தொடர்ந்து இடம்பெறும் இலங்கைப் பிரதமரின் சீனப் பயணம் தொடர்பில் இந்தியா கவனம் செலுத்தியுள்ளது. பிராந்திய ஆதிக்கப் போட்டியில் சீனாவின் நகர்வுகள் இந்தியாவை சுற்றிவளைப்பது போன்று இருப்பினும் இந்தியாவின் பயம் ஆதாரமற்றது என சீனாவின் அரச - பத்திரிகையான குளோபல் ரைம்ஸ் தெரிவித்துள்ளது. துறைமுக நகரத் திட்டத்தினை நிறுத்தி வைத்த விவகாரத்தின் பின்னணியில் இந்தியாவின் அழுத்தம் இருந்ததாக அந்தப் பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

சீனாவின் இராஜதந்திர நகர்வுகளுக்கு இலங்கையுடனான நல்லுறவு அவசியமானது. பாகிஸ்தானின் பாதுகாப்புத் தளம்பல்கள் காரணமாக இந்து சமுத்திரத்தில் தன் இருப்பை வலுப்படுத்த இலங்கையை சீனா பயன்படுத்திக்கொள்ளும் எனவும் குளோபல் ரைம்ஸ் வெளிப்படுத்தியிருக்கிறது.

சீனாவுக்கான பயணம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் நடுநிலையான இராஜதந்திரக்கொள்கைக்குக் கிடைத்த வெற்றி எனக் குறிப்பிட்டிருக்கிறார். அத்தோடு சீனப் பயணம் முழுத் திருப்தியளிப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்காகச் சீனாவை நாடியிருக்கும் புதிய அரசு சீனாவின் உதவியுடன் வெள்ளை யானைகளை உற்பத்தி செய்யாதவரை சீனாவுடனான மீள் - சம்பந்தக் கலப்பினை சாதகமாகப் பரிசீலிக்கலாம்.

# தொலைந்தது தலையிடி

எம்.ஐ.முபாறக்

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் உட்கட்சிப் பூசலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இருந்தால் அக்கட்சிக்குள்ளும், அக்கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள்ளும் களையெடுக்க வேண்டிய கட்டாயத்தில் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளார்.

இந்த உட்கட்சிப் பூசலின் பிரதான சூத்திரதாரிகள் விமல் வீரவன்சவும் உதயகம்மன்பிலவும்தான் என்பதை நாம் அறிவோம். தங்களின் அரசியல் வங்குரோத்து நிலையில் இருந்து மகிந்தவின் ஊடாக மீட்சி பெறுவதற்கு இவர்கள் இருவரும் நடத்தும் நாடகமே இந்த உட்கட்சிப் பூசலாகும். இவ்வாறானவர்களைக் கூட்டமைப்புக்குள் தொடர்ந்தும் வைத்திருப்பது மைத்திரிக்கு மேலும் மேலும் சிக்கலையே கொடுக்கும். இவர்களை ஓரங்கட்டுவதற்கு மைத்திரி திட்டமிட்டிருந்த நிலையில், ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் இருந்து விலகிக் கொள்வதாக விமல் அறிவித்துள்ளார். இது ஜனாதிபதிக்கு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது என்றே சொல்ல வேண்டும்.

### அரசுக்கு எதிரான செயற்பாடுகள்

ஆட்சி மாற்றத்தில் இருந்து விமல் மற்றும் உதயகம்மன்பிலவின் அரசுக்கு எதிரான செயற்பாடுகள் மிக மோசமாகவே இருக்கின்றன. மகிந்தவைத் தவிர வேறு எவரும் இந்த நாட்டை ஆட்சி செய்வதற்குப் பொருத்த மற்றவர்கள் என்பதுபோல் இவர்கள் நடந்துகொள்கின்றனர். இந்த அரசு செய்கின்ற நல்ல விடயங்கள் மனச்சாட்சிப்படி நல்லவைதான் என்று தெரிந்தும் கூட, அவற்றை இவர்கள் வேண்டுமென்றே விமர்சிக்கின்றனர்.

இவர்களின் செயற்பாடுகள் ஜனாதிபதிக்கு மிகவும் தலையிடியாகவே இருந்து வருகின்றன. மகிந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்ததைத் தாங்க முடியாது இவர்கள் வெறுப்பை இந்த அரசின் மீது கக்கிவருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவர்களின் விமர்சனங்கள் எவையும் ஆரோக்கியமானது அல்ல. பொறாமையின் வெளிப்பாடுகளே அவை. இவர்களுக்கு ஆப்பு வைப்பதற்கு நல்லதொரு வாய்ப்பை ஜனாதிபதி எதிர்பார்த்திருந்தார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் பணி தொடர்பான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குழுவில் விமல் வீரவன்சவுக்கும் உதயகம்மன்பிலவுக்கும் இடமில்லை என ஜனாதிபதி அறிவித்திருந்தார். இவர்களை ஓரங்கட்டுவதற்கு மேலும் சந்தர்ப்பங்களை எதிர்பார்த்திருந்தார். இந்தநிலையில் தான் விமல் தானாகவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச மகிந்தவின் தீவிர விசுவாசியாவார். ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட மகிந்தவை மீண்டும் அரசியலுக்கு இழுத்து வந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வைத்து அவரை எம்.பியாக்கிய பெருமை விமல்வீரவன்சவையேசாரும். மகிந்தவின் தீவிர விசுவாசியான விமலுக்கு அவர் முதலில் அங்கம் வகித்த ஜே.வி.பி. கட்சியை விடவும் மகிந்தவே பிடித்தமானவராவார். அதனால்தான் அவர் அந்தக் கட்சியை விட்டு விலகி புதுக் கட்சி உருவாக்கி மகிந்தவுடன் இணைந்தார்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த போட்டியிட்டபோது மகிந்தவுக்கு ஜே.வி.பியின் ஆதரவைப் பெற்றுக்கொடுக்கப் பாடுபட்டவர் இந்த விமல் வீரவன்சதான்.

உண்மையில், ரணில் விக்கிரமசிங்கவுக்கே அப்போது மக்கள் ஆதரவு அதிகமாக இருந்தது. ரணிலின் இரண்டு வருட ஆட்சியில் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் நாட்டில் ஓரளவு அமைதியை ஏற்படுத்தி இருந்ததால் மக்கள் ரணிலை விரும்பினர். அவ்வாறான ஒரு நிலையில், ரணிலைத் தோற்கடிப்பதற்கு சிறந்த பிரசார யுக்தியும் வலுவான செயற்பாடுகளும் மகிந்தவுக்குத் தேவைப்பட்டன.


இந்த ஆற்றல் ஜே.வி.பியிடம் காணப்பட்டதால் மகிந்த ஜே.வி.பியை வளைத்துப் போட முற்பட்டார். ஜே.வி.பியை ஒரு தலைவர்போல் வழிநடத்திச்சென்ற - அக்கட்சியின் பரப்புரைச் செயலாளராகச் செயற்பட்ட விமல் வீரவன்ச மகிந்தவின் வலைக்குள் சிக்கினார். ரணில்-புலிகள் ஒப்பந்தம் நாட்டுக்கு எதிரானது எனக் கருதிய ஜே.வி.பியினர், ரணிலின் ஆட்சி மீண்டும் வந்துவிடக் கூடாது - ரணில் ஜனாதிபதியாகி கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார்கள். இதனால், ஜே.வி.பியின் ஆதரவை மகிந்தவுக்குப் பெற்றுக்கொடுப்பது விமலுக்கு மிகவும் இலகுவானதாக இருந்தது. மிகவும் போராட்டத்தின் மத்தியில் ஒரு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றி பெறுவதற்கு ஜே.வி.பியின் வியூகமும் பரப்புரை யுக்திகளுமே காரணமாக அமைந்தன. இதற்கு மூல காரணம் விமல் வீரவன்சதான்.

### விமல் மீது மகிந்தவுக்குப் பாசம்

இதனால், மகிந்தவுக்கு விமல் மீது பாசம் சற்று அதிகம் என்றே சொல்ல வேண்டும். பின்னர், மகிந்தவுக்கு எதிராக ஜே.வி.பி. திரும்பத் தொடங்கியது. மகிந்த - ஜே.வி.பி. உறவு உடைந்தது. இருந்தும், மகிந்த - விமல் உறவு மட்டும் அப்படியே தொடர்ந்தது. அது இரகசியமாக இருந்து வந்தது. ஜே.வி.பியின் இரகசியங்கள் மற்றும் அக்கட்சியால் எடுக்கப்படும் தீர்மானங்கள் அனைத்தும் உடனுக்குடன் மகிந்தவுக்குத் தெரியவரும் அளவுக்கு விமல் மகிந்தவுடன் நெருக்கமாக இருந்தார். இது ஜே.வி.பிக்குத் தெரிய வந்ததும் அவர் அக்கட்சியில் இருந்து விலகி மகிந்தவுடன் ஐக்கியமானார்.

இவ்வாறு ஏற்பட்ட மகிந்த - விமல் உறவு இன்று வரை தொடர்கின்றது. 2010 மற்றும் 2015 ஜனாதிபதித் தேர்தல்களில் மகிந்தவை வெல்லவைக்க அவர் மிகவும் பாடுபட்டார். 2015 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த தோல்வியடைந்தபோதிலும், மகிந்த வின் ஊடாக தனது கட்சியைப் பாது காத்து தனது அரசியல் இருப்பைத்தக்கவைத்துக்கொள்வதற்காக மகிந்தவை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வைத்து அவரைஎம்.பியாக்கினார் விமல்.

இந்த விமல், மகிந்தவுக்கு வக்காளத்து வாங்கிக்கொண்டு இந்த அரசை மிக மோசமாக விமர்சித்து வருவதோடு மைத்திரிக்குப் பெரும் தலையிடியாகவே மாறிவிட்டார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருந்து அவரை ஓரங்கட்டுவதற்கு ஜனாதிபதி நேரம் பார்த்துக் கொண்டிருந்த வேளையில்தான் அவர் அந்தக் க்கூட்டமைப்பில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இது ஜனாதிபதிக்கு மகிழ்ச்சி என்ற போதிலும், உதயகம்மன்பிலவும் அவ்வாறான ஒரு முடிவை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால விரும்புகின்றார். ஜாதிக ஹெல உறுமயவின் மேல் மாகாணசபை யின் உறுப்பினராக வும் அமைச்சராகவும் இருந்த உதய கம்மன்பில 2015 ஜனாதிபதித் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமயவுடன் சேர்ந்து மைத்திரிக்கு ஆதரவளிக்க முன் வந்தார். பின்னர் திடீரெனமகிந்த பக்கம் சென்றுவிட்டார். இவரும் விமலும் சேர்ந்துதான் மைத்திரி - ரணில் அரசைக் கடுமையாக விமர்சித்துக் கொண்டு மகிந்தவுக்கு வக்காலத்து வாங்குகின்றனர். இதனால், இருவரையும் நீக்குவது தான் மைத்திரியின் விருப்பமாகும். இதேவேளை, விமலின் இந்த முடிவானது மகிந்த தலைமையிலான புதிய கட்சி உருவாகப் போவதையும் உறுதிப்படுத்தியுள்ளது என்று சொல்லலாம்.



> விமல் வீரவன்ச மகிந்தவின் தீவிர விசுவாசியாவார். ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட மஹிந்தவை மீண்டும் அரசியலுக்கு இழுத்து வந்து நாடாளுமன்றத் தேர் தலில் போட்டியிட வைத்து அவரை எம்.பியாக்கிய பெருமை விமல் வீரவன்சவுக்கே சாரும். மகிந்தவின் தீவிர விசுவாசியான விமலுக்கு அவர் முதலில் அங்கம் வகித்த ஜே.வி.பி. கட்சியை விடவும் மகிந்தவே பிடித்தமானவராவார்.



சிறுகதை

# கணிதம்!

"சேர் என்ரபிள்ளை கணிதத்திலை கொஞ்சம் மட்டு. அவனுக்கு மிச்சப் பாடம் எல்லாம் நல்லாச் செய்வான். அவனுக்குக் கணிதத்தைப் படிப்பிச்சு விடுங்கோ." "நான் படிப்பிக்கிறேன். முதல்லை ரியூசனுக்கு ஒழுங்கா வரவேணும். அட்வான்ஸா எழுநூற்றம்பது ரூபாவும் கட்ட வேணும்." தடித்த குரலில் பேசினார் மாஸ்டர். தன்கிட்டை இருந்த சல்லிக்காசுகளை எடுத்து அவரிட்ட கொடுத்தாள்.

கிருஸ்ணராஜா சஞ்ஜீவன்

அந்த மனுசன் பேரு சின்னையா. ஊர்லை தனக்கென்று கௌரவத்தோட விவசாயம் செஞ்சு வாழ்ந்தாரு அந்த மனுசன். சின்னையா 1985 திருமணம் செய்து இடம் பெயர்ந்து இருந்தாரு. திருமணமாகி ஆறுவருடத்தால ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அப்பிள்ளைக்குக் குமார் எனப் பெயரும் இட்டார்.

"ம்...ம்...ம்... ஒருமாதிரி எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்திட்டுது." மனசுக்குள்ள் ஒரு சிறு மகிழ்ச்சி அந்தாளுக்கு.

"நான் பட்டபாடு என் பிள்ளை ஒருக்காக் கூடப்படக்கூடாது. என்ர பிள்ளையும் சமூகத்தில தனக்கெண்டு தனித்துவம் கொண்டு இருக்கவேணும்." இது சின்னையான்ர மனைவி மீனாட்சி யின்ர நினைப்பு.

அண்டைக்குக் காலம சரியா நாலு மணி முருகன் கோயில் மணி டாங்... டாங்... என்று அடிக்கக் கண் முழிச்சான் சின்னையா. அவசர அவசரமாகத் தன்ர முகத்தைக் கழுவிட்டு மண்வெட்டி கலப்பை மற்றும் தன்ர மாடுகளையும் கொண்டு வயலுக்குக் கிளம்பினாரு அந்த மனுசன். மீனாட்சி ரீ குடுக்க, அவசரமா அதைக் குடிச்சிட்டு "நல்லாக் கிடக்கு ரீ. நான் போட்டு பிறகு வாறன். பிள்ளையை எழுப்பி படிக்கவை. அவனாவது நிம்மதியாப் படிச்சு பெரியாளாகோணும்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

மனசுக்குள் எப்பவுமே அந்த நினைப்புதான் அந்த மனுசனுக்கு. நெற்றில பட்டை இல்லாம அந்தாளக் காணேலாது. அந்தளவுக்கு பக்தி முத்திப் போன ஆள். மத்தியான நேரம் ஒரு பொதி சோற்றையும் கொண்டு போய் சின்னையாவுக்கு சாப்பிடக் குடுப்பாள் மீனாட்சி. அறுவடைக் காலமும் கிட்டிட்டுது. நல்லா விளைஞ்சு வருகுது. நெல்லும் நம்ம வயல்தான் நல்ல பச்சைப்பசேல் எண்டு இருக்கு. நல்ல குளிர்ச்சியாகவும் இருக்கு. அதையே பார்த்துக் கொண்டிருந்த மீனாட்சி சொன்னாள், "முதல்லை இந்த ரீயைக் குடிச்சிட்டு சோத்தையும் சாப்பிடுங்கோ. ரெண்டு மணியாச்சு. பிள்ளை பள்ளிக்கூடத்தில் இருந்து வீட்டுக்கு நடந்து வந்து கொண்டு இருக்கும். இந்த அறுவடையிலை வாற காசுக்கு முதல்ல அவனுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் குடுங்கோ, பாவம்பிள்ளை."

அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த சின்னையா பதில் ஏதும் பேசவில்லை. சாப்பிட்டு முடிஞ்சதும் சின்னையாட்டச் சொல்லிட்டு வீட்ட போனாள் மீனாட்சி. பிள்ளைவர மூன்றரை மணியாச்சு. "குமார்! ஏனப்பா இண்டைக்குப் பள்ளிக்கூடத்திலை ஏதாவது வகுப்பு நடந்ததோ?" 'ஓம் அம்மா! பள்ளிக்கூடத்திலை ஓயல் எடுத்த அண்ணாமாரை வச்சு இண்டைக்கு கணித வகுப்பு நடந்தது" கைகால் கழுவிட்டு சாப்பிடத்தயாரானான். அண்டைக்கு அவனுக்குப் பிடிச்ச நண்டுக் கறி சமைத்திருந்தாள் மீனாட்சி.

"அம்மா இண்டைக்கு சாப்பாடு நல்ல ரேஸ்ராய் இருக்கம்மா . இன்னும் கொஞ்சம் போடுங்கோ." தாயிட்ட கேட்டுவாங்கிச் சாப்பிட்டான்.

"அப்பு ரியூசனுக்கு நேரமாச்சு. கெதியாப்போ. இன்டைக்கு ஆற்ற பாடம்? "ரியூசனிலே பாலாஜி சேர்ன்ர இங்கிலீசும் சிவராசு மாஸ்டரின்ர கணிதமும்." சாப்பிட்டு வெளிக்கிட்டு நல்ல வேகமா ரியூசனை நோக்கி ஓடினான். சாயங்காலம் ஆறு மணிக்கு வேலையை முடிச்சு வீட்டுக்கு வந்தார் சின்னையா. "பிள்ளை! ரியூசனுக்கு போட்டுதே?" "ஓ அவனுக்கு ரியூசனில இங்கிலீசும் கணிதமுமாம், அவன் போட்டான்."பிறகு, ஆறுதலாகக் குளிச்சிட்டு வந்து இருந்தாரு சின்னையா. ஆறரை மணிக்கு குமார் வீட்டுக்கு வந்தான்.

அண்டைக்கு அவனுக்கு முகம் சரியில்ல. "ஏனப்பா இண்டைக்கு முகம் சரியில்ல?" என்றாள் தாய். "என்ர பிரண்ட்ஸ் எல்லாம் எனக்கு கணிதம் தெரியாதெண்டு பட்டம் பழிக்கிறாங்க அம்மா."

அவனுக்கு கணிதம் எண்டால் அலர்ஜி இங்கிலீஸ் என்றால் அவன் புலி அந்தளவுக்கு இங்கிலீசிலை ஊறிப்போயிருந்தான். "அதைப் பற்றிக் கவலைப்படாத ஐயா! பக்கத்து ஊருக்க கணிதம் படிப்பிக்கிற ஒரு வாத்தியார் இருக்கிறாரு. அவரிட்ட உன்ன நாளைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து விடுறன். குழம்பாத நிதானமா இரு."

"சரி அம்மா! அப்பா எங்க?" "அவர் வெளிவிறாந்தையிலை கதைச்சுக் கொண்டிருக்கிறாரு. நீ கால், கை முகத்தைக் கழுவிட்டு வந்திரடா." "சரி அம்மா! முகத்தைக் கழுவிட்டு வந்து படிக்கிறேன்." சில நாள்களிலேயே அவனைக் கணித மாஸ்டரிட்ட தாய் சேர்த்துவிட்டாள். "சேர் என்ர புள்ள கணிதத்தில கொஞ்சம் மட்டு. அவன் மிச்சப்பாடம் எல்லாம் நல்லாச் செய்வான். அவனுக்குக் கணிதத்தைப் படிப்பிச்சு விடுங்கோ." "நான் படிப்பிக்கிறேன். முதல்ல ரியூசனுக்கு ஒழுங்கா வரவேணும். அட்வான்ஸா எழுநூற்றம்பது ரூபாவும் கட்ட வேணும்." தடித்த குரலில் பேசினார் மாஸ்டர். தன்கிட்டை இருந்த



சல்லிக்காசுகளை எடுத்து அவரிட்ட கொடுத்தாள். அதில 500 ரூபாய் தானிருக்கு மிச்சம் பிறகுதாறன் – என்றாள். இப்படியே ஒருமாதம் செல்ல, "எங்கப்பா உன்ர அம்மா? மிச்சக் காசு தரவேணும்" எண்டு வாத்தியார் குமாரைக் கேட்க, குமார் பேசாம நின்றான். "இண்டைக்கு உனக்குக் கிளாஸ் இல்ல" என அவனைக் கலைச்சிட்டாரு கணித வாத்தியார். குமார் வீட்ட போய் "போம்மா! எனக்கு அந்தாளின்ர கணித வகுப்பு வேணாம்" என்று தாயிடம் அழுதழுது சொன்னான்.

ஒரு மாதக்காசு 750 ம் 250 ரூபாவுமாக 1000 ரூபா தாளை பக்கத்திலை இருக்கிற மாலாக்காட்ட கடனாகக் காசு வாங்கிக் கொண்டு போய் மீண்டும் அந்த ரியூசனில அவனைச் சேர்த்தாள் மீனாட்சி. இரவு படுக்கிறக்கு முதல் பெற்ற கடன்களைப் பற்றிக் கணக்குப் பார்த்துக் கொண்டு இருந்தார் சின்னையா. "பிள்ளைக்கு மட்டும் இருபதாயிரம் ரூபாவும் எங்கட அளவில பதினெட்டாயிரமும் மாலாக்காட்ட கடனாகப் பெற்றிருக்கிறம். கெதியாக் காசு கொடுக்க வேணும்" என்றார். சின்னையா அடுத்த நாள் காலம மூன்று மணிக்கெல்லாம் எழும்பி சகலவேலையையும் முடிச்சிட்டு அறுவடைக்கு வெளிக்கிட்டாரு. அதேநேரமே குமாரும் எழும்பிட்டான். கண்ணைக்கசக்கிக் கொண்டு நித்திரைத் தூக்கத்தில் வெளிவிறாந்தைப் பக்கம் வந்த குமாரைச்




# ஹலோ நான் பேய் பேசுறேன்

நூதனமான முறைகளில் திருட்டுத் தொழில் செய்துவரும் அமுதன் (வைபவ்) கவிதாவை (ஐஸ்வர்யா ராஜேஷ்) காதலிக்கிறார். ஐஸ்வர்யாவின் அண்ணன் விரிவி கணேஷ், குப்பத்தில் சாவுக் குத்து நடனம் கற்றுத் தருகிறார். குத்து நடனத்தில்தான் வைக்கும் சோதனையில் வென்றால்தான் தன் தங்கையை வைபவுக்குக் கல்யாணம் செய்து தருவேன் என்கிறார்.

சோதனையில் வென்று காதலுக்கு அனுமதி பெற்ற மகிழ்ச்சியில் வளைய வரும் வைபவ், சாலையில் விழுந்து கிடக்கும் ஒரு செல்போனைத் திருடிக் கொண்டு வீட்டுக்கு வருகிறார். அந்தச் செல்போனில் இருந்து பேய் (ஓவியா) கிளம்புகிறது. வைபவ், கணேஷ், ஐஸ்வர்யா ஆகியோர் பேயிடம் மாட்டிக் கொண்டு அல்லாடுகிறார்கள். பேய் ஐஸ்வர்யாவைப் பிடித்து வைத்துக் கொள்கிறது. பேய்க்கு என்ன வேண்டும்? அதன் கோரிக்கையை நிறைவேற்றி ஐஸ்வர்யாவை மீட்க முடிந்ததா?

நகைச்சுவை, திகில் இரண்டையும் சரியான அளவில் கலந்து தர முயற்சித்திருக்கிறார் இயக்குநர். நகைச்சுவை – திகில் படங்களில் தர்க்க நியாயம் பற்றிய கவனத்தைவிட பார்வையாளர்களை எப்படி மகிழ்ச்சிப்படுத்துவது என்பதையே மனதில் கொண்டு திரைக்கதை அமைத்திருப்பார்கள். அறிமுக இயக்குநர் எஸ்.பாஸ்கரும் இந்தப் பாதுகாப்பான எல்லைக்குள்ளேயே விளையாடி இருக்கிறார்.

திருடனின் காதல், சிரிக்க வைக்கும் வசனங்கள், துல்லியமான சென்னைவட்டாரவழக்கு, பார்வையாளர்களையும் ஆடவைக்கும் சாவுக் குத்தின் வகைகள், அழகானபேய், பேயின் நிறைவேறாத ஆசை, பேய்க்கு இரக்கம் காட்டுவது என பொது மக்கள் ரசனைக்கான அனைத்தையும் நகைச்சுவையுடன் கொடுத்திருக்கிறார் இயக்குநர். ஒவ்வொரு காட்சியிலும் நிரம்பி வழியும் நகைச்சுவையால் அரங்கம் அதிர்கிறது. இந்த அம்சம்தான் வைபவுக்கும் ஐஸ்வர்யாவுக்கும் இடையே வரும் நம்ப முடியாத காதல் பற்றியெல்லாம் கேள்வி கேட்க விடாமல் செய்கிறது. பேய் எப்போது வரும் என்ற எதிர்பார்ப்பைக்கூட மறந்து விட்டுப் பார்வையாளர்கள் காட்சிகளில் மூழ்கிப்போகும்போது பேய் வருகிறது. பேயின் அறிமுகமும் அதன் தோற்றத்தைச் சித்திரித்த விதமும் படத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்கின்றன.

வைபவ் தனியாக இருக்கும்போது பேய் வருவதும் மறைவதும் யூகிக்கக் கூடியவையாக இருந்தாலும் வைபவ், கணேஷ், தீபன் ஆகியோர் பேயிடம் மாட்டிக் கொள்ளும் காட்சிகள் அந்தக் குறையை மறக்கச் செய்து விடுகின்றன.

பேயின் முன்கதையைச் சுருக்கமாக ஒரு நகைச்சுவைப் பாடல் வழியாகச் சொன்ன விதம் அழகு. பேயாக இருந்தாலும் அவளும் ஒரு பெண்தானே எனத் துணியும் மதுமிதாவின் முடிவு, வரவேற்பை அள்ளுகிறது.

## –சிரிக்கலாம்

நகைச்சுவை நடிப்பில் தன்னால் பிரகாசிக்க முடியும் என்பதை வைபவ் நிரூபித்திருக்கிறார். சென்னை வட்டார வழக்கைக் கச்சிதமாகப் பேசி நடித்திருக்கும் விரிவி கணேஷ் வரும் காட்சியெல்லாம் கலகலப்பு.. ஆபாச வசனங்களையே பெரிதும் சார்ந்திருப்பது இவரது நகைச்சுவையின் மதிப்பைக் குறைக்கிறது. சிங்கப்பூர் தீபன், யோகி பாபு ஆகியோரும் கவர்கிறார்கள். ஐஸ்வர்யா ராஜேஷ், ஓவியா ஆகியோர் அழகான பேய்களாக பயமுறுத்தி, வசீகரிக்கிறார்கள். ஐஸ்வர்யா ஆடும் குத்தாட்டம் அட்டகாசம்.

மதுமிதா, கருணாகரன் இருவருக்கும் அதிக வேலையில்லை. காதல் காட்சி, குத்துப் பாடல் காட்சி, பேய் வரும் காட்சிகள் என்று ஒளிப்பதிவாளர் பாலமுருகனுக்குக் கலவையான சவால். காட்சியின் தன்மைக்கான ஒளியமைப்பு, கோணங்கள் இரண்டிலும் புகுந்து விளையாடியிருக்கிறார். ஸ்ரீகாந்தின் படத்தொகுப்பு படத்தைத் தொய்வில்லாமல் கொண்டு செல்கிறது. துள்ளலான பாடல்கள் தரும் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்ட இசையமைப்பாளர் சித்தார்த் விபின், பின்னணி இசையில் அதிக கவனம் செலுத்தவில்லை.

பேயை வைத்துப் பயமுறுத்துவதைவிட அது விருந்தாளியாக வந்துபோகும் கதையில் ரசிகர்களைச் சிரிக்க வைப்பதே முக்கியம் என்ற நோக்கத்தில் வெற்றிபெற்றுவிடுகிறார் இயக்குநர். கேள்வி கேட்காமல் பயந்து, சிரித்துவிட்டு வரலாம்.



# கணிதம்!

(தொடர்ச்சி)


சின்னையா ஆசையோடு கட்டிப் பிடித்து முத்தமிட்டார். "நீ நல்லாப் படி. உனக்கென்னவேணும் எண்டாலும் நான் வாங்கித்தாறன். இப்படியெல்லாம் கஷ்டப்படுறது உனக்காகத்தான்" என்று சொல்லி விடைபெற்றார். பனிக்காலம் என்றாலே வெளியிலை போகேக்கை தொப்பியும் கொண்டுதான் போறவர், அண்டைக் கென்னவோ அதை விட்டுட்டுப் போட்டார். சற்றுப்பிந்தித்தான் மீனாட்சி எழும்பினாள்.

"அப்பா வயலுக்கு மூன்று மணிக்கே போட்டாரு. இண்டைக்குக் காலமை ரீயும் குடிக்காமப்போட்டாரு" என்று தகவல் சொன்னான் குமார். ரீயைக் குடுத்துட்டு பொடியனை பள்ளிக்கூடம் அனுப்பினாள் மீனாட்சி. அண்டைக்கு இரவு வீட்ட வரும்போது சின்னையாவுக்கு உடல் நலம் சரியில்ல. தடிமனும் இருமலும். அந்தாளுக்கும் வயசு அறுபதாகிறது. மீனாட்சிக்கும் ஐம்பத்தாறு வயது. பொடியன் ஓயல் டெஸ்ட் எழுதப்போறான். அவனும் படிப்பில விண்ணாதி விண்ணனாய் இருந்தாலும் கணிதம்தான் பிரச்சினை.

அடுத்தநாள் ஓஎல் டெஸ்ட் ஆரம்பமாகிறது. மனதில் சந்நிதி முருகனைக் கும்பிட்டு டெஸ்ட் எழுத பள்ளிக்கூடம் நோக்கி ஓடினான் குமார். அண்டைக்கு வீட்டிலதான் பெற்றோரும் இருந்தவை. பொடியனுக்கு ஓயல் டெஸ்ட் முடியும் வரை நான் வயலுக்குப் போகல்லை. என்னெண்டாலும் டெஸ்ட் எழுதினாப்பிறகு தான் என்று எல்லாத்தையும் ஒத்திவச்சாரு நம்ம சின்னையா. அண்டைக்கு பாடம் சுகமாக இருந்தது என மகன் கூறினபடியால் தான் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். பெற்றோர் இப்படியே ஓயல் டெஸ்ட் முடிவில கணித பாடம் அவனுக்கு அண்டைக்கு குலை நடுங்கிய பயத்தோடதான் இருந்தான். இருந்தாலும் சந்நிதி முருகனைக் கும்பிட்டான். "அப்பனே முருகா! உன்னட்ட சின்ன உதவி ஒன்னு இருக்கு. இண்டைக்கு கணித பாடம் நல்லாச் செய்யணும்." மன்றாடி விட்டு ஓடிப்போனான். அவசரமின்றி நிதானமாகப் பேப்பரை வாசித்து விடை எழுதிட்டு வீட்டுக்கு வந்தான். அண்டைக்கு அவன் சற்றும் எதிர் பார்க்கல்ல தன்ர வீட்டில ஒரு ஜென்ஸ் சைக்கிள் நிக்கும் என்னு. ஒரு மாதிரி உழைச்ச காசில புள்ளக்கு ஒரு ஜென்ஸ் சைக்கிளை வாங்கிக் கொடுத்தாச்சு என்டு மகிழ்ச்சி சின்னையாவுக்கு. "பிள்ளை ஓயல் டெஸ்ட் எழுதிட்டுது. என்ர பிள்ளை பாஸ் பண்ணும் எண்டுதான் வாங்கி வந்தேன் இந்தச் சைக்கிளை" என்றான் சின்னையா.

கண்ணீர் மல்க தன் பெற்றோரை தன் மார்பில் கட்டியணைத்தான் குமார்.

"சொந்தபந்தம் எத்தனையோ இருந்தும் உதவிக்கு ஆளில்லாமல் தன்ரை பிள்ளையைப் படிக்க வைத்து சைக்கிளும் வாங்கிக் கொடுத்திட்டன்" என்றாரு சின்னையா. ஓயல் டெஸ்ட் முடிவுகள் வந்தன. பள்ளிக்கூடத்துக்கு வேகமாக சைக்கிளில் ஓடிப்போய் மதிலடியிலை அதைச் சாத்திட்டு, ரிசல்ட் பார்க்க ஓடினான். நோட்டீஸ் வோட்டில சின்னையா குமார் 8ஏ ரிசல்ட் உடன் 'பெஸ்ட்' என்று போட்டிருந்ததைக் கண்டு மறுபடி சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டுப் பக்கம் போனான்.... அவசரத்தில் அந்த 9ஆவது பாடம் எதுவென்பதை அவன் கவனிக்கத் தவறிவிட்டான். கணிதம்! அவனைப் பார்த்து இப்போதும் சிரித்துக்கொண்டே இருந்தது.



# டார்லிங்-II

நண்பனின் துரோகத்தால்தான் தங்களது காதல் தோற்றது என்று கருதும் காதல் இணை ஆவியாக வந்து நண்பனைப் பழிவாங்கத் துடிப்பதே 'டார்லிங் '2'.

ஒரு பெண்ணுக்குப் பேய் பிடிப்பது போன்ற திகில் காட்சியுடன் தொடங்குகிறது படம். அடுத்த காட்சியில் தற்கொலை. அடுத்து, கலையரசன், காளி, ஹரி (மெட்ராஸ் ஜானி), அர்ஜுன், ரமீஸ், ஆகிய நண்பர்கள் சுற்றுலா போகிறார்கள். வால்பாறை என்ற இடத்தில் ஒரு பெரிய பங்களாவில் தங்குகிறார்கள். நண்பர்களை ஒவ்வொருவராகக் காட்டு காட்டு என்று காட்டுகிறது ஆவி. ஒரு கட்டத்தில் கலையரசனின் உடலில் புகுந்துகொள்ளும் ராமின் ஆவி, கலையரசனைக் கொல்லப்போவதாக மிரட்டுகிறது. ஆவிக்கு ஏன் கலையரசன் மீது கோபம்? கலையரசனால் ஆவியிடமிருந்து தப்பிக்க முடிந்ததா?

தற்கொலை செய்துகொண்ட காதல் ஜோடி, ஆவியாக வந்து பழிவாங்குவதற்கான காரணம் பொருத்தமாக இருக்கிறது. ஆனால், பேய் ஒவ்வொருவராக மிரட்டுவது ஏன்? பேய் இருக்கிறது என்பதைக் காட்டுவதற்கு இத் தனை காட்சிகள் எதற்காக? ராமின் தம்பி காட்டுக்குள் தனியாகப் போவதற்கான காரணம் பலவீனமாக உள்ளது. அங்கே ஏற்படும் அபாயம் திணிக்கப்பட்டதாகவே உள்ளது. இவை எல்லாம் சேர்ந்து படத்தை இழுவை யாக்குகின்றன. வால்பாறையில் பெரிய பங்களா, ஆறு, அடர்ந்த காடு, மிரட்டும் காட்டு யானை என்று கதைக்கான களம் அருமையாக அமைந்திருக்கிறது. கலையரசன், காளி வெங்கட், முனிஸ்காந்த் மூவருமே நன்றாக நடிக்கக் கூடியவர்கள். இந்தக் களத்தையும் இந்த நடிகர்களையும் வைத்துக்கொண்டு புகுந்து விளையாடி இருக்கலாம்.

இயக்குநர் சதீஸ் சந்திரசேகர் இவற்றைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளத் தவறி விட்டார். பேய் பழிவாங்குவதற்கான காரணத்தைக் கச்சிதமாக நிலைநிறுத்தும் இயக்குநர், கலையரசன் தரப்பு நியாயத்தை பலவீனமாகவே முன்வைப்பதால் அது எடுபடவில்லை. ராமைச் சுற்றியே செல்லும் திரைக் கதை ஆயிசாவைப் பற்றிய ரகசியத்தை திடீரென வெளிப்படுத்துவது சுவையாக உள்ளது. கலையரசன் ஒரு கட்டத்தில் தன் உயிரைத் தர முன்வருவது மனதைத் தொடுகிறது. நட்பையும் காதலையும் காப்பாற்றும் விதத்தில் அமைந்திருக்கும் கடைசித் திருப்பம் பாராட்டத்தக்கது. கண்களில் ஒளி கக்கப் பேயாக வருவது, பேயாகவும் நண்பனாகவும் மாறி மாறிப் பேசுவது எனக் கலவரப்படுத்திவிட்டார் கலையரசன். காளியும் ஹரியும் அச்சத்தை அபாரமாக வெளிப்படுத்துகிறார்கள். நாயகி மாயா அழகாக வந்துபோகிறார்.

தமிழில் சமீப காலமாக வரும் பேய்ப் படங்களை இரண்டு வகைப்படுத்தலாம். வளமான ரசனையுடனும் திகில் திருப்பங்களுடன் கட்டமைக்கப்பட்டவை. திகிலையும் காமெடியையும் கலந்துகட்டி சுவை அளிப்பவை. 'டார்லிங் - 2' இந்த இரண்டு வகையிலும் ஒட்டாமல், தனக்கெனப் புதிய பாணியையும் உருவாக்கிக் கொள்ளாமல் ஊசலாடுகிறது.

சினிமா




நேர விரயம்

# சிரிக்கச் சிந்திக்க சில வரிகள்

கலாபூசணம் மு.மாசிலாமணி

கல்யாணங்கள் சொர்க்கத்தில் நிச்சயப்படுத்தப்படுகின்றன என்பார்கள். இந்தக் கூற்று உண்மையோ அல்லவோ என்பது வேறு விடயம். ஆனால் எமது விதி, வீதிகளில் தீர்மானிக்கப்படுகிறதோ என சிந்திக்க வேண்டியுள்ளது. அன்றாடம் பத்திரிகைகளில் வரும் செய்திகள் எமது எண்ணத்தை, சிந்தனையை அவ்வாறு தட்டி விடுகிறது. தினமும் பத்திரிகைகளில் வரும் செய்திகளைவிட விபத்துக்கள் அதிகமாகவே நடந்தேறுகின்றன என்பதைத் தனியார், அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நபர்களைக் கொண்டே அறியலாம். தவிர பத்திரிகைகளில் 'வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மதில் மேல் மோதி ஓட்டுநர் சாவு' என விபத்துக்கான பழியை மோட்டார் சைக்கிள் மீது போடுவதும் வேடிக்கையாக இருப்பது கண்கூடு. தாம் பயணம் செய்யும் வாகனத்தைக் கட்டுப்படுத்துவது ஓட்டுநரின் கையில்தான் உள்ளது. மேடார் சைக்கிளினதும் ஓட்டோவினதும் கடிவாளம் கையிலும் காரினது கடிவாளம் காலிலும் எமது கட்டளைக்காகக் காத்திருக்க அவற்றை நாமே கட்டுப்படுத்தவேண்டும்.

காப்பெற் வீதியில் செல்லும் வாகனங்கள் கட்டுப்பாடு அற்ற வேகத்தில் செல்வதைப் போக்குவரத்துப் பொலிஸார் கண்காணித்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

கோடிக் கணக்கில் செலவு செய்து காப்பெற் வீதியை அமைத்த அரசு முக்கியமான வீதிச் சந்திப்புக்களில் 'கலர் லையிற்' சிக்னல் அமைத்து வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த ஏற்பாடு செய்தால் ஓரளவுக்கு விபத்துக்களைக் குறைக்கலாம். தவிர லைசென்ஸ் (ஓட்டுநர் அனுமதிப் பத்திரம்) பெற்றுக்கொள்ள எழுதும் பரீட்சையில் பாஸ் பண்ண மட்டும் படித்த வீதி ஒழுங்கு நூலை மறந்து விட்ட பலர் வீதியில் தமது விதியை சந்திப்பதற்கு இடமளிக்காமல் அவர்களுக்கு உண்மையில் வீதி விதிகள் தெரிந்திருக்கிறதா என்பதையும் அடிக்கடி சோதித்தால் விபத்துக்களைக் குறைக்கலாம்.

ஓட்டோக்கள் ஏழைகளின் வாகனம். எமது அவசர தேவைகளுக்கு உதவுகின்றன. இருந்தும் அவற்றின் வாடகை, ஓட்டுநரின் தீர்மானத்திலே உள்ளது. கொழும்பில் மீற்றர் பூட்டிய ஓட்டோக்கள் சேவையில் உள்ளதால் வாடிக்கையாளர் பயமின்றிப் பயணம் செய்ய, யாழ்ப்பாணத்தில் பேரம் பேசி ஏற வேண்டியுள்ளது. இதுபற்றி எவரிடம் முறையிடுவது என்பது மக்களுக்குத் தெரியவில்லை.

மோட்டார் சைக்கிளைப் பற்றிக் கூறும்போது எனது மனத்திரையில் தென்படுகிறது ஒரு சம்பவம். சுமார் 60 வருடங்களுக்கு முன்பு எமது ஊரில் ஒரு பி.எஸ்.ஏ. மோட்டார் சைக்கிள் அண்ணனிடம் நின்றது. அவர் இல்லாத சமயம் பார்த்து பல உதைகள் கொடுத்து இயக்கி தோட்ட வெளியில் தூள் கிளப்பினேன். இதைக் கவனித்த ஆறுமுக வாத்தியார் "தம்பி என்னை ஒருக்கா ஒட்டகப்புலத்திலை இறக்கி விடுவீரா" எனக்கேட்க ஏறுங்கோ வாத்தியார் எனச் சொல்ல கட்டளைக்குக் காத்திருந்த இராணுவ வீரர் போல பாய்ந்து ஏறிவிட்டார் பின் சீற்றிலை.

பறந்தது பி.எஸ்.ஏ. வாகனம். தாய்க் குரங்கை சேய்க் குரங்கு கட்டிப்பிடிப்பது போல் வாத்தியார் என்னைக் கட்டிப்பிடித்தபடி இடைக்கிடை தம்பி மெல்லப் போ, மெல்லப்போ என எம்.ஜி.ஆர். படத்தில் வந்த பாடல் போல் சொல்லிக் கொண்டிருந்தார்.

இடையில் 'டிங்' என ஒரு சத்தம் 'என்ன சத்தம் இந்த நேரம்' என வாத்தியார் இடைக்காலப் பாடல் போல் கேட்டார். ஒண்டுமில்லை பின் ஸ்ராண்ட் கீழை இறங்கி விட்டுது என்றேன். நீர் ஓடிக்கொண்டே இரும் நான் காலால் தட்டி விடுகிறேன் என எனக்கு உதவுவது போல் சொல்லி மௌனமாகிவிட்டார். என்ன மாஸ்ரர் சத்தத்தைக் காணேல்லை எனக் கேட்க 'எல்லாம் சரி நேராய் பெரிய ஆஸ்பத்திரிக்கு விடும்' என்றார். ஏன் எனக் கேட்க 'இடது கால் சின்னி விரலைக் காணேல்லை' என்றார் சோகமாக.





# இந்த ஓர் அங்கியின் மீது மட்டும் ஏன் இந்த அக்கறை?

ரம்யன்

சாவகச்சேரி வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ள தற்கொலைப் போராளிக்குரிய மேலங்கியும் வெடிபொருள்களும் மெல்லுவதற்கு ஒன்றுமில்லாத வாய்க்கு அவல் கிடைத்தது போலாகி விட்டது முன்னாள் ஆட்சித் தலைவர்களுக்கும் அவர்களை ஆதரிக்கும் ஊடகங்களுக்கும்.

தேசியப் பாதுகாப்புக்குப் பலத்த ஆபத்து வந்துவிட்டது. இதைத் தடுத்து நிறுத்தும் திராணியற்றவர்களாய் இருக்கிறார்கள் அரசுத் தலைவர்கள் என்கிறார்கள் சிலர். பாதுகாப்புத்துறைச் செயலாளர் தகுதியற்றவர் என்கிறார் முன்னாள் அமைச்சர் ஒருவர். இன்னுமொருவர் அவை வெள்ளவத்தைக்குக் கொண்டு வரப்படவிருந்தவை, இதற்கு ஆதாரமும் உண்டு என்கிறார்.

இவைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதுபோல் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்தன சில தினங்களுக்கு முன் வெளியிட்டுள்ள அறிக்கையில் போர் முடிவுற்றதன் பின்னர் 313 தற்கொலைதாரர்களின் மேல் அங்கிகள் கிடைக்கப் பெற்றுள்ளன, இவைகள் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாதவர்கள் இப்பொழுது கிடைத்துள்ள ஒரே ஒரு தற்கொலை அங்கி குறித்து ஏன் இப்படி அலட்டிக் கொள்கிறார்கள் என்று கேட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகச் சில ஊடகங்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களையும் அவர் சாடியுள்ளார். 313 மேல் அங்கிகளும் 21,719 வெடிபொருள்களும் இன்னும் ஏராளமான கைக்குண்டுகள் ரவைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை பற்றி இவர்கள் கவலை கொள்ளாதது ஏன் என்று அவர் கேட்டார். நாட்டின் பாதுகாப்பில் எந்த அரசாங்கத்துக்கானாலும் அக்கறை இருக்கவே செய்யும் என்றும் குறிப்பிட்டார்.

தெற்கில் அடிமட்ட பேரின மக்களைப் புலிப்பூச்சாண்டியைக் காட்டியே அரசியல் நடத்தி வருபவர்களுக்கு இது மிகப் பயனுள்ள விடயமாகப் போய்விட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்கி வருகிறார்கள் என்பதாக ஏற்கனவே ஆதாரம் ஏதுமின்றி அந்த மக்கள் மத்தியில் பீதியை உருவாக்கி வந்தவர்களுக்கு இந்தப் பொருள்கள் கிடைத்திருப்பதானது தங்கள் குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்கள் வெளிப்பட்டிருப்பதாகக் காட்டிக்கொள்ள பெரிதும் உதவுவதாய் உள்ளது.

## முன்னாள் ஆட்சியாளர்களின் கருத்துக்கள்

இந்தப் பொருள்கள் ஒரு வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்து கண்டு பிடிக்கப்பட்டதாக செய்தி வெளியானவுடனேயே முன்னாள் ஜனாதிபதி இவை மிகவும் புதியவை. அதனால் புலிகள் மீள் எழுந்து வருவதையே இது காட்டுகின்றது என்றவாறு கூறியிருந்தார். இந்தப் பொருள்கள் அண்மைக்கால செய்திப் பத்திரிகைகளில் சுற்றிக் கட்டப்பட்டிருந்துள்ளன. அதனால் அவை புதியவையாகவே இருக்கும் என்று முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறியிருந்தார். ஆனால் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அந்தப் பத்திரிகைகள் 2008 ஆம் ஆண்டுக்குரியவை. போர் முடிவுறுவதற்கு முந்தியவை என்று தெரிவித்திருந்தார். இதில் எவர் கூறுவதில் உண்மையிருக்கிறது? புலன் விசாரணைகளில்தான் வெளிவரும்.

பீரிஸ் வெளியிட்டிருந்த கருத்தில் மறவன்புலவில் கண்டு பிடிக்கப்பட்டவை வெள்ளவத்தைக்குக் கொண்டு செல்லப்படவிருந்ததாகத் தெரிவித்திருந்ததுடன் அதனை நிரூபிக்கப் போதிய ஆதாரங்களும் இருப்பதாகக் கூறியிருந்தார். அந்த ஆதாரங்களைப் பற்றி அறிந்து கொள்ளவே புலனாய்வுப் பிரிவினர் அவரை விசாரணைக்கு உட்படுத்தியிருந்தார்கள். ஆனால் விசாரணைகளின்போது வேறு சிலரின் பெயர்களை அவர் சிக்கவைத்திருப்பதாகவும் அவர்களும் விசாரிக்கப்பட இருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வடக்குக்குப் பயணம் மேற்கொள்ளவிருந்த காலகட்டத்திலேயே இந்த வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்பதாலும் அவை ஜனாதிபதியைக் குறிவைத்தே அங்கு சேமிக்கப்பட்டிருந்திருக்கலாம் என்றவாறு வடக்கு ஆளுநர் றெஜினோல்ட் கூரே அச்சம் வெளியிட்டிருந்ததாலும் அண்மையில் வடக்குக்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு மூன்றடுக்குப் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்துள்ளமையைக் காணக்கூடியதாய் இருந்தது.

## முரண்பாடான தகவல்கள்

மறவன்புலவுச் சம்பவம் தொடர்பாக முன்னாள் புலிப் போராளி ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகிறார். எட்வேர்ட் ஜூலியஸ் என்ற மேற்படி சந்தேகநபரிடம் நடத்தப்படும் தொடர்ச்சியான விசாரணைகளில் இருந்து பல தகவல்களைப் பொலிஸார் பெற்றுக் கொண்டிருப்பதாகவும், சந்தேகநபருக்கும் வெளிநாட்டில் குறிப்பாக ஜேர்மனியில் வாழ்ந்து வரும் முன்னாள் புலி உறுப்பினர் ஒருவருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றுக்கமையவே இந்தப் பெர்ருள்கள் இங்கு கொண்டு வரப்பட்டதாகத் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேசமயம் விசாரணைக்குட்பட்டுள்ள நபர் முரண்பாடான பல தகவல்களை வழங்கியிருப்பதாகவும்கூட செய்திகள் கூறுகின்றன. வில்பத்து காட்டில் ஆயுதங் கள் புதைக்கப்பட்டிருப்பதாக அவர் கொடுத்த தகவல் ஒன்றின்படி தேடுதல் நடத்தியதில் அது அவர் கொடுத்த பொய்யான தகவல் என்பது தெரியவந்துள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன.

போரில் தோல்வியுற்ற சில குழுக்கள் கோபமுற்றிருக்கலாம். அதனால் அரசின் முன்னாள் தலைவர்களும் இன்னாள் தலைவர்களும் நெருக்கடிக்குள்ளாக நேரும் என்று ஜாதிகஹெல உறுமய ஊடக பேச்சாளர் நிசாந்த வர்ணசிங்க தெரிவித்திருக்கிறார். எதுவானாலும் இப்போது புலனாய்வாளர்கள் மேற்கொண்டுள்ள விசாரணைகள் முடிவுறும்போது தற்கொலை அங்கி தொடர்பான உண்மைத் தகவல்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம்.

அதை விடுத்து தென்னிலங்கைத் தலைவர்களும் தம் மனம் போனபடி இந்தச் சம்பவம் குறித்துக் கருத்துக்களை வெளியிட்டு போரினால் பாதிக்கப்பட்டு நிம்மதியான வாழ்க்கையை உருவாக்கிக்கொள்ள முயன்றுகொண்டிருக்கும் தமிழ் மக்கள் தொடர்பில் சிங்கள மக்களின் வெறுப்பை மேலும் தூண்டிவிட்டு அரசியல் லாபம் பெறமுயல்வதை நிறுத்தவேண்டும்.

இதேவேளை பாதுகாப்புத் துறைச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை பத்திரிகையாளர் மத்தியில் பேசியபோது, கடந்த மூன்று மாதங்களில் ஆயிரக் கணக் கில் இவ்வாறு மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களும் வெடிபொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, ஆனால் எதிர்க்கட்சியினர் இவைகளில் எது பற்றியும் கவலைப்படாமல் தற்கொலை அங்கி கண்டுபிடிக்கப்பட்டது குறித்து மட்டுமே கவலை கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார். அவர் மேலும் கூறுகையில், பாது காப்புப் படையினர் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்கள் மேற்கொண்டு வரும் பாதுகாப்புச் செயற்பாடுகள் தொடர்பான அனைத்தையுமே வெளியிடுவது சாத்தியமில்லை. ஆனால் அவைகளைப் பொருத்தமான மிகச் சரியான நேரத்தில் நாம் வெளியிடுவோம் என்றார். தமது கருத்துக்கள் ஏற்கனவே திரிவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அமைதியாகவும் நல்லிணக்கத்தோடும் வாழ விரும்புகிறார்கள். இன்னுமொரு போர் ஏற்படுவதை அவர்கள் ஆதரிக்கப்போவதில்லை. இந்த விடயத்தை பெரிதுபடுத்தி அமைதியைக் கெடுக்க எவரும் முயலக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். இது சம்பந்தப்பட்டிருப்பவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

அமைதியை விரும்பும் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தையும் கலவரத்தையும் அமைதியின்மையையும் தோற்றுவிக்க எவரும் ஈடுபட்டிருப்பின் அது பொது மக்களைப் பாதிக்காதவாறு கையாளப்பட வேண்டும் என்பதையே சம்பந்தன் சுட்டிக் காட்டியுள்ளார் என்று கருத வேண்டும்.

**எதிர்த்தரப்பின் புதிய அரசியல் வியூகம்...?**



# இந்த வாரம்

**10.04.2016 முதல் 16.04.2016 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

சுக்கிரன், சந்திரன், கேது, குரு நன்மை தருவர். உங்களைச் சார்ந்தவர்களின் வாழ்வு வளம்பெற உதவுவீர்கள். வாகனம் இயக்கும் போது, மிதவேகமாக செல்லவும். புத்திரர்கள் படிப்பு, செயல் திறனில் முன்னேற்றம் காண்பர். பிறர் விவகாரத்தில் தலையிட்டு, சமரசம் பேச சென்றால், உங்களுக்கு தான் பிரச்சினை வரும்; கவனம். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். மனைவியின் சொல்லும், செயலும் மன துக்கு பிடிக்கும். தொழில், வியாபாரத்தில் ஓரளவு இலா பம் கிடைக்கும். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள், கணவரின் அன்பை பெற்று மகிழ்ச்சியாக இருப்பர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர். துர்க்கை வழிபாடு, துன்பம் போக்கும்.

## இடபம்

சூரியன், சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். தெளிந்த சிந்தனையும், பேச்சில் நிதானமும் இருக்கும். உறவினர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு தீரும். உடன்பிறந்தவர்களுக்கு இயன்ற அளவு உதவுவீர்கள். வாகன பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். உடல்நிலை பலம் பெறும். பணம் சேமிப்பாகும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். இலாபம் கூடும். பணியாளர்களுக்கு வேலைப்பளு குறையும். பெண்கள் தாராள செலவில் வீட்டு உபயோகப் பொருள் வாங்கு வர். மாணவர்கள், ஆசிரியரின் வழிகாட்டுதலை தவறாமல் பின்பற்றவும். அம்மன் வழிபாடு, செல்வ வளம் தரும்.

## கடகம்

குரு, சுக்கிரன், புதன் நற்பலன் தருவர். குடும்பநலனில் அக்கறை வளரும். அதிக வருமானம் பெற, தேவையான பணிகளில் ஈடுபடுவீர்கள். தம்பி, தங்கைகள் அன்புடன் நடந்து கொள்வர். புத்திரரின் செயல்கள் அதிருப்தி தரும். அவர்களுக்கு அறிவுரை சொல்லுங்கள். உறவினர்களின் வருகை மகிழ்ச்சியை தரும். கடந்த கால அனுபவங்களைப் பயன் படுத்தி முன்னேறுவீர்கள். மனைவி, உங்கள் செயல்களுக்கு ஒத்துழைப்பு தருவார். தொழில், வியாபாரம் செழிக்க அதிக பணிபுரிவீர்கள். பெண்கள் உறவினர் குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் நன்றாகப் படித்து பரிசு பெறுவர். லட்சுமி வழிபாடு, சகல வளமும் தரும்.

## மிதுனம்

பெரும்பான்மை கிரகங்கள் தாராள பலன் தரும். பேச்சு வசீகரமாக அமைந்து, புதிய நண்பர்களைப் பெற்றுத் தரும். குடும்பத் தேவைகளைத் தாராள செலவில் பூர்த்தி செய்வீர்கள். வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர்களின் செயல்பாடு அதிருப்தி தரும். அவர்களை கவனமாக வழி நடத்தவும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி வழி சார்ந்த உறவினர்கள், உங்கள் செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, வங்கிக் கடன் கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளுவும், வருமானமும் கூடும். பெண்கள், தாய் வீட்டு உதவி பெறுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி அடைவர். சாஸ்தா வழிபாடு வெற்றியளிக்கும்.

## சிங்கம்

சுக்கிரன், சந்திரனால் நன்மை கிடைக்கும். நன்மையும், புகழும் பெருமளவில் வந்து சேரும். தம்பி, தங்கைகளின் எண்ணங் களுக்கு செயல் வடிவம் தருவீர்கள். வாகனத்தில் மிதவேகமாக செல்லவும். புத்திரர்களால் பெருமை கிடைக்கும். உடல்நிலை பலம்பெறும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் அபரிமிதமாக வளர்ச்சி பெறும். பணியாளர் கள், ஓவர்டைம் மற்றும் சலுகைகள் பெறுவர். பெண்கள், கணவரின் அன்பு மழையில் நனைவர். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் கொள் வர். அம்பிகை வழிபாடு, சகல நன்மை தரும்.

## கன்னி

செவ்வாய், சனி, கேது, புதன் அளப்பரிய நன்மை வழங்குவர். மனம் உற்சாகமாக இருக்கும். நண்பர்கள், உறவினர்கள் மனதார பாராட்டுவர். குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும். சமூகத்தில் அந்தஸ்து கூடும். பயணங்களை பயன் அறிந்து மேற்கொள்வீர்கள். புத்திரர்களின். ஆர்வம் மிகுந்த செயல் நிறைவேற உதவுவீர்கள். உடல்நிலை பலம்பெறும். மனைவி வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி கூடும். பணியாளர்கள், அதிகாரிகளின் அன்பைப் பெறுவதுடன், பணவரவிலும் முன்னேற்றம் காண்பர். பெண்கள் நகை, புத்தாடை வாங்குவர். மாணவர்கள் படிப்புடன் பிற துறைகளிலும் ஆர்வம் கொள்வர். சனீஸ்வரர் வழிபாடு, சங்கடம் தீர்க்கும்.

## துலாம்

சூரியன், குரு, ராகு, சந்திரன் அதிக நன்மை தருவர். மனதில் புத்துணர்வு ஏற்படும். நல்லவர்களின் உதவி கிடைக்கும். தாமதமான செயல்களில் முன்னேற்றம் உண்டாகும். தம்பி, தங்கைகளின் உதவி கிடைக்கும். புத்திரர்களின் செயல்களைக் கவனித்து வழி நடத்துங்கள். வழக்கு, விவகாரத்தில் சுமுகமான தீர்வு கிடைக்கும். மனைவியின் பாசம் மனதுக்கு நிம்மதி தரும். அரசு சார்ந்த உதவி பெற அனுகூலம் உண்டு. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை கூடும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் பொறுப்புடன் பணி புரிந்து சலுகை பெறுவர். பெண்கள் ஆடம்பரப் பொருள் வாங்குவர். மாணவர்கள் சிறந்த தேர்ச்சி பெறுவர். வைரவர் வழிபாடு, சிரமம் தீர்க்கும்.

## தனுசு

கேது, சுக்கிரன், குரு அதிக நன்மை தருவர். புதிய திட்டங்களை செயல்படுத்த நல்ல வாய்ப்பு வரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். வாகன பராமரிப்பு செலவு குறையும். புத்திரர்களின் கல்வித்திறன் மேம்பட வழிகாட்டுவீர்கள். சொத்து பராமரிப்பில் நம்பகமானவர்களை பணியமர்த்த வேண்டும். கடன் தொந்தரவு குறையும். மனைவி குடும்ப நலன் சிறக்க பாடுபடுவார். உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பால் வளர்ச்சி பெறலாம். பணியாளர்கள் நிறைந்த சலுகை பெறுவர். பெண்கள் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக பாடுபடுவர். மாணவர்கள் படிப்புடன் பிற துறையிலும் ஆர்வம் கொள்வர். சிவன் வழிபாடு வளம் தரும்.

## விருச்சிகம்

சுக்கிரன், புதன், சந்திரன் நன்மை தருவர். தம்பி, தங்கையின் அன்பு உற்சாகம் தரும். வாகனத்தில் மிதவேகமாக செல்லவும். மகளின் யோகத்தால் நல்ல பலன்களைப் பெறுவீர்கள். உடல்நிலை நன்றாக இருக்கும். வெகுநாள் வாங்க நினைத்த வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். மனைவி சொல்லும் ஆலோசனை குடும்ப நலன் சிறக்க உதவும். தொழில், வியாபாரத்தில் போட்டி கடுமையானாலும், மதிநுட்பத்துடன் சரி செய்து விடுவீர்கள். பணியாளர்கள் பணிகளை வேகமாக முடித்து, நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர். பெண்கள், தாய் வீட்டு உதவி கேட்டுப் பெறுவர். மாணவர்கள் படிப்பில் ஆர்வம் கொள்வர். விநாயகர் வழிபாடு, வினை தீர்க்கும்.

## மகரம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். புதியவர்களிடம் இதமான அணுகுமுறையை பின்பற்றுவீர்கள். உடன்பிறந்தவர்களுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். புத்திரர்கள் உங்கள் ஆலோசனையை முழுமனதுடன் ஏற்றுக்கொள்வர். கடன் கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். பயணங்கள் இனிய அனுபவம் தரும். தொழில், வியாபாரம் செழித்து சேமிப்பு கூடும். பணியாளர்கள் திறமையாக பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்களின் நற்செயலுக்கு உரிய பாராட்டு கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பர்களுக்கும் உதவுவர். முருகன் வழிபாடு, தைரியம் வளர்க்கும்.

## மீனம்

சுக்கிரன், ராகு, சந்திரன் நற்பலன் தருவர். கடினமான பணியையும் எளிதாக நிறைவேற்றுவீர்கள். உடன் பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். செயல்படுத்தி வரும் திட்டங்கள் விரைவாக நடக்கும். வாகனத்தில் மெதுவாகச் செல்லவும். புத்திரர்களின் சேர்க்கை விடயத்தைக் கவனித்து, அவர்களை நல்வழியில் நடத்துங்கள். கடன் வாங்குவதைத் தவிர்த் தால், எதிர்காலத்துக்கு நல்லது. இளமைக்கால நண் பரைச் சந்திப்பீர்கள். மனைவி, உங்கள் ஆலோசனைப்படி சிறப்பாக கொள்வார். தொழில், வியாபாரம் வளர்ச்சியும், இலாபமும் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகைகள் அதிகமா கும். பெண்கள் சுற்றுலா சென்று வர வாய்ப்புண்டு. மாணவர்கள் புதியவர்களிடம் நிதானித்து பழகவும். தட்சிணாமூர்த்தி வழிபாடு மங்கள வாழ்வு தரும்.

## கும்பம்


குரு, சுக்கிரன், சஷ்டாஷ்டக அமர்வில் அனுகூலமாக உள்ளனர். இருவரும் போட்டி போட்டு, அளப்பரிய பலன் வழங்குவர். மனதில் இருந்த நம்பகக்குறைவான தன்மை விலகும். பணிகளை நிறைவேற்ற உற்சாகத்துடன் நடைபோடுவீர்கள். குடும்பத்தேவை பெருமளவு பூர்த்தியாகும். பூர்வசொத்தில் பணவரவு கூடும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் பாசம் மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் ஏற்படும் இடையூறுகளை சாமர்த்தியமாக சரி செய்வீர்கள். பணியாளர்கள் பணிகளை வேகமாக முடித்து அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் சேமிப்பில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர். பெருமாள் வழிபாடு, சிரமங்களைக் குறைக்கும்.

# பேஷியல் ஸ்கரப்கள்



வெயில் அதிக அளவில் இருப்பதால், வியர்வை அதிகம் வெளியேறி, அதனால் சருமத் துளைகள் திறபட்டு, அதனுள் அழுக்குகள் புகுந்து, முகம் பொலிவிழந்து சோர்வுடன் காணப்படும்.

அதுமட்டுமின்றி, சருமத் துளைகளில் அழுக்குகள் அதிகம் இருந்தால், அவை சருமத்தைக் கருமையாக வெளிக்காட்டும். ஆகவே நீங்கள் வெள்ளையாகக் காட்சியளிக்க தினமும் பேஷியல் செய்ய வேண்டும். அதிலும் வீட்டுச் சமையலறையில் உள்ள பொருள்களைக் கொண்டே அன்றாடம் பேஷியல் செய்து வந்தால், முகம் பொலிவோடு பிரகாச மாக மின்னும். சரி, இப்போது அந்தப் பொருள்கள் என்னவென்றும், அவற்றைக் கொண்டு எப்படி பேஷியல் செய்வதென்றும் பார்ப்போம்.



### பப்பாளி

பப்பாளியை மசித்து, அதில் சிறிது தேன் மற்றும் சீனி சேர்த்துக் கலந்து. விரலால் மென்மையாக முகத்தை ஸ்கரப் செய்து, சிறிது நேரம் ஊற வைத்து குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.



### தக்காளி

தக்காளியை மசித்து, அதில் சிறிது சர்க்கரை சேர்த்துக் கலந்து, அதனைக் கொண்டு தினமும் முகத்தை ஸ்கரப் செய்து வந்தால், முகம் பொலிவோடு இருக்கும்.

### பாதாம்

பாதாமை ஒன்றிரண்டாக அரைத்து அதில் சிறிது ஒலிவ ஒயில சேர்த்து கலந்து, முகத்தில் தடவி மென்மை யாகத் தேய்த்துக் கழுவ வேண்டும். இதனால் முகம் அழகாகவும், மென்மை யாகவும் இருக்கும்.





### தயிர்

தயிரில் சீனி சேர்த்துக் கலந்து, முகத்தில் தடவி ஸ்கரப் செய்து கழுவினால், அதில் உள்ள விற்றமின்கள் சருமத்தை அழகாக வைத்துக் கொள்ள உதவும். மேலும் தயிர் சருமத்தில் குருதி ஓட்டத்தை அதிகரிக்கும்.

## ஆண்களின் அழகுக்கு....

**தாடி**

முகத்தை மறைக்கும் அளவு தாடி வைப்பதை முதலில் பெண்கள் வெறுக்கின்றனர். அதற்குப் பதிலாக ஸ்ரைலாக, மொடேர்னாக தாடி வைத்திருக்க வேண்டும் என்று ஆசைப் படுகின்றனர். எனவே, காட்டுத் தாடியை வெட்டிவிட்டு, நீட்டான தாடியை வைத்துக் கொள்ளுங்கள்.

**உதடுகள்**

பெண்கள் போன்று சிவப்பு நிறத்தில் இல்லா விட்டாலும், புகைத்தும் புகைத்து கருப்பான உதடுகளைச் சீர மைக்க வேண்டியது கட்டாயம். தாராளமாகத் தண்ணீர் குடியுங்கள், ஒலிவ் எண்ணெய் தேய்த்து மசாஜ் செய்யுங்கள். இது, உதடுகளின் கருமை நீங்க உதவும்.

**முகத்தில் இருக்கும் தழும்புகள்**

முகப்பரு, மாசு மரு போன்றவற்றால் ஏற்பட்ட தழும்புகளைச் சரி செய்ய வேண்டும். முக்கியமாக இரண்டு அல்லது மூன்று முறை பேஷியல் செய்ய வேண்டும். பின்பு, கற்றாழை ஜெல் அல்லது வேப்பிலை அரைத்து முகத்தில் தேய்த்து வந்தால் விரைவாக முகம் பொலிவுறும்.

**வியர்வை மற்றும் எண்ணெய் வடியும் முகம்**

பெண்களுக்கு மட்டுமல்ல எவருக்குமே பிடிக்காத விடயம் என்றால் அது வியர்வையும், எண்ணெய் வடியும் முகமும் தான். தாராளமாகத் தண்ணீர் குடிப்ப தனாலும், உடலில் நீரின் அளவைச் சீரான முறையில் வைத்துக் கொள்வதனாலும் வியர்வைத் தொல்லை யும், முகத்தில் எண்ணெய் வடிதலும் குறையும்.



## தேன் குழல்


**தேவையானவை**

**பச்சரிசி 6 கப்**
**வெள்ளை உளுந்து ஒரு கப்**
**எள் (அ) சீரகம் 10 கிராம்**
**உப்பு தேவையான அளவு.**

செய்முறை

வெள்ளை உளுந்தை வெறும் சட்டியில் பொன்னிற மாக வறுத்து பச்சரிசியுடன் கலந்து மெஷினில் கொடுத்து மென்மையாக அரைக்கவும். அந்த மாவில் எள் அல்லது சீரகம் மற்றும் உப்பு சேர்த்துக் கலந்தால்... தேன் குழல் மிக்ஸ் தயார்.

தேன்குழல் தேவையான போது மிக்ஸ் மாவில் சிறித ளவு எடுத்து தண்ணீர் விட்டுக் கெட்டியாகப் பிசைந்து, மாவை அச்சில் போட்டு, சூடான எண்ணெயில் பிழிய வும். வெந்ததும் திருப்பிவிடவும். சிறிது நேரத்துக்குப் பிறகு எண்ணெயை வடித்து எடுக்கவும்.



## வெயில் காலத்தில் சருமப் பாதுகாப்பு

பொதுவாக வெயில் வந்துவிட்டால், சருமத்தின் நிறம் கருமையாகி, பொலிவு இழந்து, பருக்கள் வர ஆரம்பிக்கும். சருமத்தை முறையாகப் பராம ரித்து வந்தால், சருமத்தின் அழகு பாதுகாக்கப்படு வதோடு, சருமமும் மென்மையாக, வறட்சியின்றி பொலிவோடு காணப்படும்.

4 கரண்டி – பால், 1 கரண்டி– தேன் மற்றும் 2 கரண்டி எலுமிச்சைச் சாற்றை ஒன்றாகக் கலந்து, சருமத்தில் வெயில் படும் இடத்தில் தடவி, 15 நிமி டம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இந்த முறையானது எண்ணெய்ப் பசை சருமத்துக்குச் சிறந்தது.

மேலும் இதனை வாரம் மூன்று முறை செய்து வந்தால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, சருமம் பொலிவோடு இருக்கும்.

1 கரண்டி கடலை மாவு, 1 கரண்டி எலுமிச்சைச் சாறு, சிறிது தயிர் சேர்த்துக் கலந்து, அதனைநன்கு பேஸ்ட் போல் கலந்து, முகத்தில் தடவி வட்ட வடி வில் 15 நிமிடம் மசாஜ் செய்ய வேண்டும். இதனால் சருமத்தில் உள்ள அனைத்து அழுக்குகளும் வெளியேறிவிடும். வெயில் காலத்தில் சருமம் கருமை அடைவதைத் தடுக்கும்.

4 கரண்டி வெள்ளரிக்காய் சாறு, 1 கரண்டி எலு மிச்சைச் சாறு, 1 சிட்டிகை மஞ்சள் தூள், 1 கரண்டி சந்தனப் பவுடர், புதினா இலைகள் மற்றும் துளசி இலைகள் சேர்த்து கலந்து, அதனைச் சருமத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்துக் கழுவினால், உட லில் உள்ள வெப்பம் வெளியேற்றப்பட்டு, சரு மத் தில் உள்ள இறந்த செல்கள் மற்றும் பக்ரீரியாக்கள் நீக்கப்பட்டு, சருமம் பொலிவோடு இருக்கும்.



# போதையால் தடுமாறும் இலங்கை

■ சேரலாதன்

இலங்கை போதைப்பொருள் வர்த்தகத்தின் சிறந்த மத்திய நிலையங்களில் ஒன்றாக மாறிவிட்டது. அண்மைக் காலமாகப் பெருமளவு போதைப் பொருள்கள் இங்கு கைப்பற்றப்படுகின்றமை இதை உறுதி செய்வதாக உள்ளது.

ஈரானிய மீன்பிடிக் கப்பலில் பாகிஸ்தானிலிருந்து எடுத்து வரப்பட்ட 110 கிலோ ஹெறோயின் போதைப்பொருள் இலங்கையின் கடல் எல்லைக்குள் வைத்துப் கைப்பற்றப்பட்டதன் பின்னர் அது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உள்ளூர் முகவர்கள் சிலரும் இந்தப் போதைப் பொருள் கடத்தலுக்கு அனுசரணை புரிந்துள்ளமை அம்பலமாகியிருக்கிறது.

கடந்த முதலாம் திகதி காலியில் இருந்து 50 கடல் மைல் தொலைவில் உள்ள ஆழ்கடலில் ஈரானிய நாட்டின் கொடியைத் தாங்கிய சிறிய கப்பல் ஒன்று நடமாடுவதை அவதானித்த பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் விசேட குழு கடற்படையினரின் உதவியுடன் அந்தக் கப்பலைக் கைப்பற்றியது. கப்பலில் கோதுமை மா போடப்படும் பையொன்றில் ஹெறோயின் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை அதிகாரிகள் கண்டறிந்தனர். ஹெறோயின் மிகவும் அபாயகரமான போதைப் பொருளாகும். இதைப் பயன்படுத்துபவர்கள் போதைக்குள்ளேயே கிடந்து உழல்கின்றனர். இதிலிருந்து மீட்சி பெறுவதென்பது முடியாத காரியமாகும்.

தற்போது கைப்பற்றப்பட்டுள்ளதே இவ்வளவாக இருக்கின்றபோது, ஏற்கனவே நாட்டுக்குள் கடத்தி வரப்பட்ட போதைப்பொருள் ஏற்படுத்தப் போகின்ற கொடிய விளைவுகளை எண்ணிப் பார்க்கவே அச்சமாகவுள்ளது. இதைவிட இந்தியாவின் கேரள மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்டு நாட்டுக்குள் கடத்தி வரப்படுகின்ற கஞ்சா தொடர்பான செய்திகளும் அடிக்கடி வெளிவந்து கொண்டிருக்கின்றன.

மன்னார் மற்றும் குடாநாட்டின் கடற்பரப்புக்களின் ஊடாகவே கஞ்சா இந்தியாவில் இருந்து இலங்கைக்குள் கடத்தி வரப்படுகின்றது. கஞ்சாவைக் கடத்துவதில் குடாநாடு முக்கிய இடத்தைப் பிடித்து நிற்கின்றது. பெருந்தொகைக் கஞ்சா யாழ்ப்பாணம் ஊடாகவே கடத்திக்கொண்டு வரப்படுகிறது. இது குடாநாட்டில் வசிக்கின்ற மக்களுக்குத் தலைக் குனிவை ஏற்படுத்துகின்றது. இந்தியாவின் கடற்கரைகளில் இறுக்கமான கண்காணிப்புக்கள் இருந்திருந்தால் இந்த மோசமான நிலை ஏற்பட்டிருக்கமாட்டாது. இதில் இந்திய அரசு மெத்தனமாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

புகையிலை, மது என்பன அரசின் அங்கீகாரத்துடன் மக்களைச் சென்றடைகின்றன. இந்த இரண்டின் மூலமாகவும் கிடைக்கின்ற அதிகளவிலான வருமானத்தை அரசுகள் இழக்க விரும்பாததால் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களை அவை கவனத்தில் கொள்வதில்லை. இதுவும் சட்ட விரோத போதைப் பொருள்கள் மீதான மயக்கத்துக்கும் காரணமாக இருக்கிறது. கசிப்பு உற்பத்தி நாட்டின் குடிசைக் கைத்தொழிலாகவே மாறிவிட்டது. அதிக பண்ம் கொடுத்து மது வகைகளை வாங்கி அருந்த முடியாத மக்கள் கசிப்பை வாங்கி அருந்திவிட்டுத் தமது உயிர்களை விரைவிலேயே துறந்துவிடுகின்றனர். புகையிலையைப் பயன்படுத்துவதால் புற்றுநோய் போன்ற கொடிய நோய்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றபோதிலும் புகையிலைப் பொருள்களின் விற்பனையும், புகையிலைச் செய்கையும் முழுவீச்சில் இடம்பெற்றுக் கொண்டுதான் உள்ளன. இதை என்னவென்று கூறுவது என்றே புரியவில்லை.

அபின், கஞ்சா, ஹெறோயின் என்பன மிகவும் மோசமான போதைப்பொருள்களென இனம்காணப்பட்ட போதும், அவை மருத்துவ தேவை தவிர வேறு வகையில் பயன்படுத்தப்படக்கூடாது என்று அறிவுறுத்தப்படுகின்றபோதும் அவற்றைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. அது ஒரு பெரிய வர்த்தகமாக உலகை அச்சுறுத்தி வருகிறது. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இவற்றை உற்பத்தி செய்வதில் முன்னிலை வகிக்கின்றன. வேறு உலக நாடுகளுக்கு இந்த நாடுகளில் இருந்துதான் இந்தக் கொடிய போதைப் பொருள்கள் கடத்திச் செல்லப்படுகின் றன.

போதைப் பொருள் வர்த்தகம் இலங்கைக்குப் புதியதொன்றல்ல. இந்த வர்த்தகத்தில் ஈடுபட்ட சிலர் அவ்வப்போது கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். இதில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் பலர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் இதுவரையில் போதைப் பொருள் கடத்தலையும் அதன் வியாபாரத்தையும் முற்றாக ஒழிக்க முடியவில்லை. முக்கிய அரசியல் புள்ளிகளும், காவல் துறையைச் சேர்ந்த உயரதிகாரிகள் சிலரும் போதைப் பொருள் வர்த்தகர்களுடன் நெருங்கிய உறவுகளைப் பேணுகினறனர் எனக் குற்றச்சாட்டுக்கள் அவ்வப்போது எழுவதும் பின்னர் அவை மறைக்கப்பட்டு விடுவதும் வழமையாகி விட்டன.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றமை இந்த நாடு மோசமானதொரு கட்டத்தை எட்டிவிட்டதை எடுத்துக் கூறுகின்றது. நாட்டின் வருங்காலத் தலைவர்களான மாணவர்கள் போதையில் மூழ்கியிருப்பதானது எந்த வகையிலான எதிர்மறைகளை உருவாக்கி விடும்என்பதைக்கூறவேதேவையில்லை. குடாநாட்டில்கூட போதைப்பொருள் கலந்த பாக்கு, இனிப்பு வகைகள் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. கடந்த காலங்களில் கண்டறியப்பட்டது. அதற்கெதிராகச் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் அதுவும் முற்றாகத் துடைத்தெறியப்பட்டுவிட்டது என்று சொல்வதற்கில்லை.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் அந்தப் பழக்கம் இருக்கவே செய்கின்றது. இந்த மாதிரியான விடயங்கள் முதல் முதலில் தெரிய வரும்போது இருக்கும் பரபரப்பும், விழிப்புணர்வும், எதிர்ப்பும் பின்னர் மெல்ல மெல்ல இல்லாமலேயே போய்விடுகின்றன. ஊடகங்களும் ஆரம்பத்தைப்போல பின்னர் இதில் அக்கறை காட்டுவதில்லை என்பதால் இந்த விடயங்களின் மீதான கவனக்குவிப்பு இல்லாமல்போகிறது. அதற்காக அந்த வியாபாரங்கள் செயலிழந்துவிட்டன அல்லது இல்லாமற் போய்விட்டன என்று அர்த்தமாகிவிடாது. அவை தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன.


தமிழர்களின் எதிர்காலத்தை அடியோடு குழிதோண்டிப் புதைக்கின்ற வகையில் எதிரிகள் திட்டமிட்டுச் செயலாற்றுவது தெளிவாகத் தெரிகின்றது. இதைவிட இங்குள்ள இளைஞர்கள் மதுவை அருந்துவதிலும் அக்கறையுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். மதுபான நிலையங்களை நோட்டமிடும்போது இது தெளிவாகப் புரியும். இங்கு அடிக்கடி ஏற்படுகின்ற வாள்வெட்டுச் சம்பவங்களுக்கும் மதுவெறியே தலைமைக் காரணமாகியுள்ளது.

அரசு போதைப் பொருள்களை முற்றாக ஒழித்துவிடும் வகையிலான அதிரடித் திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும். போதைப் பொருள்களுடன் தொடர்புடையவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும். இலங்கையின் கடற்கரையோரங்களில் கடற்படையின் கண்காணிப்பு வலுப்படுத்தப்பட வேண்டும்.

இவற்றை விடுத்து இனியும் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தால் முழு நாடுமே போதையில் தள்ளாடுகின்றதொரு நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப் படத் தேவையில்லை. ■



நகைச்சுவைத் தொடர் - 06




# ராசி இல்லாத ராசா

மிருசுவில் தமிழ்தாசன்

> அவள் தூங்கி வழியும்போது கூந்தல் என்னுடைய நாசியைத் தொட்டுவிட்டுச் செல்லும். அ....ச்...சு....அ...ச்...சு! கூந்தல் நாசிக்குள் உராசி விளையாட எனக்கும் ஓயாத தும்மல் பிடித்துக்கொண்டது. அப்போதுதான் எனக்கொரு 'ஐடியா' பிறந்தது.

கொழும்பு நோக்கி பஸ் கன வேகத்தில் பறந்து கொண்டிருந்தது. பஸ் ட்ரைவர் வளைவில் சரித்து வெட்டும்போது வயிற்றுக்குள் புளியைக் கரைத்தது. அதைப் பற்றியெல்லாம் கவலையே இல்லாமல் பக்கத்தில் இருந்த பெண்மணி தன்னை மறந்து தூங்கி வழிந்து கொண்டிருந்தாள். அடிக்கடி தூக்கக் கலக்கத்தில் என்மடி மீது விழுந்தாள். சும்மா சொல்லக்கூடாது. நல்ல அழகான மிக நீண்ட கூந்தல் அவளுக்கு. அவள் தூங்கி வழியும்போது கூந்தல் என்னுடைய நாசியைத் தொட்டுவிட்டுச் செல்லும். அ....ச்...சு....அ...ச்...சு! கூந்தல் நாசிக்குள் உராசி விளையாட எனக்கும் ஓயாத தும்மல் பிடித்துக்கொண்டது. அப்போதுதான் எனக்கொரு 'ஐடியா' பிறந்தது.

"இவளின்ரை தலைமுடியிலை என்னவிதமான வாசமடிக்குது எண்டு பார்க்கவேணும். உண்மையாய்ச் சிவபெருமான் சொன்னது மாதிரி, பெம்பிளையளின்ரை கூந்தலுக்கு இயற்கையாகவே வாசனை இருக்குதா! அல்லது நக்கீரன் சொன்னதுபோலை செயற்கை வாசனையா எண்டு கவனிச்சுப் பார்ப்பம்."இப்படி ஒரு மூளைவர நானும் அவளின் அலையலையான அழகான கூந்தலை முகர்ந்து பார்த்தேன். அடச்சீ! எங்கே அந்த இயற்கை வாசனை. வீண்வாதம்! சிவபெருமான் என்னதான் பெரிய கடவுளாயிருந்தாலும் இந்த ஒரு விடயத்தில் அவருடைய வாதம் மிகவும் தவறாகவே எனக்குப்பட்டது. நக்கீரர் சொன்னதுதான் சரி. என்னுடைய வாக்கு முற்றுமுழுக்க அவருக்கே உரித்தாகட்டும். என்னுடன் பக்கத்திலிருக்கும் அந்தப் பெண்ணின் கூந்தலில் இயற்கை மணத்தையும் காணோம். செயற்கை மணத்தையும் காணோம். மாறாக ஏதோவொரு வித்தியாசமான நாற்றமே நாசியைத் துளைத்தது. படுபாவி! பரம்பரையில் ம்போவோ வேறு வாசனைத் திரவியங்களோ பூசியறியாத கூந்தல்தானது. கொழும்புப் பிரயாணத்தின் பயனாக நானுமொரு கண்டுபிடிப்பைக் கண்டு பிடித்துவிட்டேன். ஏற்கனவே அந்த நக்கீரர் சொன்ன கதையை மீளாய்வு செய்து உறுதிப்படுத்திக் கொண்ட திருப்தியெனக்கு. மிக வேகமாக ஓடிக்கொண்டிருந்த அந்த பஸ்ஸின் வேகம் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. சாரதி என்ன நினைத்தானோ! வேகத்தை மேலும் குறைத்துக் கொண்டிருந்தான்.

"எடக்கோதாரி! இதென்ன இப்படிச் 'சிலோ' பண்ணிப் போட்டான். பஸ் ஏதேன் உடைஞ்சு கிடைஞ்சு பழுதாய்ப் போச்சுதோ! கடவுளே! நான் நாளைக்கு எப்பிடியும் சவூதிக்குப் பிளேன் ஏறியே ஆக வேணும். உவங்கடை கண்டறியாத பஸ்சை நம்பி இப்ப என்ரை சவூதிப் பயணமும் பிழைக்கப் போகுது போலை, இதென்னடா கரைச்சலாய்க் கிடக்குது." பஸ்ஸின் வேகம் மெல்ல மெல்லக் குறைந்து வீதியை விட்டு விலகி ஓர் ஓரமாக நிறுத்தப்பட்டுவிட்டது. அப்போதுதான் கவனித்தேன். இருபுறமும் ஏராளமான கடைகள். இரவைப் பகலாக்கும் வண்ண வண்ண மின்சார பல்புகளால் அலங்கரிக்கப்பட்டு அந்தப் பகுதி செகசோதியாகக் காட்சியளித்தது. வீதியோரங்களில் ஏராளமான பஸ் வண்டிகள் உட்படப் பலவிதமான வாகனங்கள் தாறுமாறாக நிறுத்தப்பட்டிருந்தன. மக்கள் நடமாட்டங்கள் வியாபாரக் குரல்களென்று அங்கே பலத்த ஆரவாரமாக இருந்தது.

"எட கொழும்புக்கு வந்திட்டம் போலை...! இதுதான் கொழும்போ வலுகெதியாய்க் கொண்டு வந்து விட்டிட்டாங்கள். அது சரி! அவன் பாவி ஓடின ஓட்டமும் அப்பிடித்தானே! உண்மையிலை கெட்டிக்காரன்தான்."இப்போது எனக்கு மகா திருப்தி. எப்படியோ கொழும்புக்கு வந்து சேர்ந்து விட்டேன் என்னும் மகிழ்ச்சி ஒருபுறம். இனி அந்த ஏஜென்சிக்காரனின் தொலைபேசியுடன் தொடர்பு கொண்டால் நான் சவூதிக்குப் போய்விட்டதற்குச் சரி. எதற்கும் விடியட்டும் மனோகரனுக்கு ஓர் அழைப்பு விட்டால் அவன் வேண்டிய ஒழுங்குகளைச் செய்து கொள்வான். "ஆரேன் சாப்பிடுற ஆக்கள் கெதியாய்ச் சாப்பிட்டிட்டு வாருங்கோ!" கொண்டக்டர் சொல்லியபடி பஸ்சை விட்டிறங்கினான்.

"எடபே! அப்ப இது கொழும்பில்லையே! எட சாப்பாட்டுக்குத்தான் இடைவழியிலை எங்கையோ மறிச்சிருக்கிறாங்கள்." விடயத்தை இப்போதுதான் புரிந்து கொண்டேன். எதையும் அவசரமாக முடிவெடுப்பது எனது சுபாவம். அதற்காக வெட்கப்பட்டேன்.

"வாங்க வாங்க! வாங்க தொரே! சூடாய்க் கொத்திரிக்கு. நூடில்ஸ், வட்டலாப்பமிருக்கு. சாப்பிடலாம் வாங்க." "அதென்ன வட்டிலாப்பம்! பாலப்பம், வெள்ளையப்பம் எல்லாம் சாப்பிட்டிருக்கிறன். இந்த வட்டிலாப்பமெண்டதை இண்டைக்குத்தானே கேள்விப்படுறன். சரி! சவூதிக்குப் போற செலவோடை செலவாய் அதையுமொருக்காற் சாப்பிட்டுப் பார்ப்பம்! பிறகு சவூதிக்குப்போனால் உந்தச் சாப்பாடுகள் கிடைக்குமோ! கிடைக்காதோ சாப்பிட்டுப் பாப்பம்." நினைத்தபடி, சேர்ட் கை மடிப்புக்குள் சுருட்டி வைத்திருந்த பணத்தைத் தடவிப் பார்க்கின்றேன். நல்லவேளை அதற்கு எதுவித சேதாரமும் நடக்கவில்லை. பத்திரமாக இருந்தது. கையோடு ஜீன்ஸ் பொக்கெற்றையும் தட்டிப் பார்த்தேன். பிரச்சினையில்லை. அதுவும் தன்பாட்டுக்கிருக்குது. கொழும்பு போகும் செலவுக்கென்று கை மடிப்பிலும் ரிக்கெற்றுக் கென்று இருபதினாயிரம் ஜீன்ஸ் பொக்கெற்றிலும் வைத்துச் சட்டை ஊசியால் குத்திப் பக்குவப்படுத்திவிட்டிருந்தாள் அம்மா.

(34 ஆம் பக்கம் பார்க்க)

## மின்னலடிக்குது

கந்த பேரின்பம், தீவான்

மின்னலடிக்குது மின்னலடிக்குது
போகம் கறுத்து மின்னலடிக்குது
மின்னி, மின்னி மின்னலடிக்குது
மேள தாளத்தோடு மின்னலடிக்குது
காற்றடிக்குது கடல் கனைக்குது
கீற்று மின்னல் வெட்டியடிக்குது
அண்டம் நடுங்க இடிஇடிக்குது

இடிக்கு முன்னே
மின்னலடிக்குது
கண்ணைப்பறிக்குது
மின்னல் அடிக்குது
கடகட வென இடி இடிக்குது
பளீர், பளீர் என மின்னலடிக்குது
பார்க்கப் பரவசமாக இருக்குது

வானத்தில் கோடுகளாகவே
மின்னுது
வையகமே அதைக் கண்டு
களிக்குது மேகம் கறுத்து
மின்னலடிக்குது
மின்னலடித்து
மழைசோவென பெய்யுது

# சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி




■ செ.மகேஷ்

“கோழி மேய்க்கிற வேலையெண்டாலும் கொர்ணமேந்து வேலைதான் வேணு மென்பார்கள். அந்த வேலையிலே அப்படி என்ன விசேடங்கள் இருக்கின்றன?” என்று கேட்டார் நண்பர் சிவபாதம். “ஏனென்றால் நானும் ஓர் அரச வேலையில் இருப்பவன் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும்” என்றார் செல்லத்தம்பி. இருப்பினும் செல்லத்தம்பியாலும் அதற்குச் சரியான பதிலைச் சொல்ல முடியவில்லை. சிந்தித்தார்! சிந்தித்தார்! ஓய்வின்றிச் சிந்தித்தார். சில உண்மைகள் அவருக்கு மெல்ல மெல்லப் புலப்படவே செய்தன.

அரச உத்தியோகமென்றால், வேலை நிரந்தரம். அதற்குரிய சம்பளம் குறையாது. எடுக்க வேண்டிய அளவு லீவையும் பெற்றுக்கொள்ளலாம். சனி ஞாயிறுக்கும் விடுமுறை தினங்களுக்கும் வீட்டிலே தங்கிவிடலாம்.

அரசு குறிப்பிட்டொதுக்கிய நேரத்தில் கந்தோருக்குப் போய்வந்தாற்போதும். அப்படியேதான் வேலையும் இன்னது இன்னபடி செய்யப்பட வேண்டும் எனக் குறித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. செய்வது சிறப்போ சிறிதோ அந்த இடத்தை இறுகப் பிடித்துக் கொண்டே காலத்தைக் கடத்தத் தெரிந்தவர்களுக்கு எதனையும் சொல்லித் தெரிவிக்க வேண்டியதில்லை. இது அரச உத்தியோகம்! அந்தக் கிடைத்த வேலையைச் சத்தம் போடாமலோ சத்தம் போட்டோ செய்து முடித்தால் சம்பளமும் கிடைக்கும். அதனோடு சில வேளைகளில் கிம்பளமும் கிடைக்கும். வருடா வருடம் மேலதிகாரியின் நயமான பரிந்துரையும் கிடைத்து விட்டால் சம்பள உயர்வும் பதவி உயர்வும் கிடைத்துவிடும். இத்தனைக்கும் மேலாக ஓய்வூதியம் எனப்படும் பென்சன் அவரைக் கலைத்துக்கொண்டே ஓடிவரும். வயோதிப காலத்தில் மாதம் தவறாமல் ஏதாவது ஒரு கந்தோரின் மூலம் அது வந்து கொண்டே இருக்கும். இத்தனையும் இருக்கும் போது எவர்தான் இந்தக் கொர்ணமேந்து வேலையை வேண்டாம் என்பர். இதனைப் பலரும் சொல்லக் கேட்டு மனம் உசாரடைந் தாலும் இந்தக் கொர்ணமேந்து அதிகாரிகள் தமது வேலையின் தரமும் தகுதியும் தெரியாமல் தம்மை நிர்வாணப்படுத்திக் கொண்டு சமூகத்தை ஏளனம் செய்வது ஏன் என்று புரியாமல் தடுமாறினார் செல்லத்தம்பி.

அரச உத்தியோகம் உயர்வானதே! இவர்களை அந்தந்த அரச உயர் பதவிகளில் நியமிக்கும்போதும் தொடர்ந்து அவர்களின் பணி சமூகத்துக்குக் கிடைக்கும்போதும் அரசு மக்களுக்குச் சேவை வழங்குவதாக உரத்துப் பேசுகிறது. பதவிக்கு வந்தவர்களுக்கான சம்பளங்களையும் மக்களின் வரிப்பணத்திலிருந்தே வழங்குகிறது. மக்களுக்காகச் சேவையாற்ற மக்களின் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தகுதியானோரே நியமிக்கப்பட்டி ருக்கிறார்கள் எனவும் அரசு பறைசாற்றுகிறது. இந்த நிலையில் எமது சமூகம் எமது மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றத் தமக்கென ஆக்கப்பட்ட அரச அலுவலகங்களுக்குச் செல்ல எண்ணினால், கந்தோர் வாசலைத் தாண்டத் தயங்குகிறது இந்தப் பாழாய்ப்போன மனித மனம். அரச அலுவலகங்களின் உள்ளே இருக்கும் ஐயாமார்களும் அம்மாமார்களும் தம்மிலும் உயர்ந்தவர் வேறெவரும் இல்லை என்பதாய் வலிந்து ஆக்கப்பட்ட சூழலில் ஆடம்பரமாக...!

அவர்களை நினைந்து மனம் தயங்கித் தயங்கியே கால்களை உள்ளே நுழைக்கின்றது சமூகம். உள்ளே இருப்பவர்கள் எவருமே சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்யவே நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களுக்கான உத்தியோகம் சமூகத்தின் தேவையை அறிந்து அதற் கேற்ற பொருத்தமான செயற்பாடுகளால் அவை நிறை வேற்றப்படவேண்டும் என்பதுவே எதிர் பார்ப்புமாகும். அரச உயர் அலுவலகங்களின் கடமைகளில் தம்மை ஈடுபடுத்தி இயங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் தமது பதவிகளை உயர்வாகக் காட்டிக் கொண்டே காலத்தை ஓட்டுகிறார்கள். சமூகத்தின் மகிழ்ச்சிக்காக அவர்களின் தேவையை நிறைவு செய்யும் அதிகாரிகளாகி வளர்ந்துள்ள உழைப் பவர்களின் கூட்டம் மிகவும் குறைந்தே காணப்படுகின்றது.

பதவிகளால் தம்மை அலங்கரிப்பவர்களிலும் மேலாகப் பதவிகளை அலங்கரிப்பவர்கள் மிகவும் அரிதாகவே இருப்பதைக் காண்கிறோம். கற்ற உயர் கல்விக்கும் பெற்ற உயர் வாழ்வுக்கும் அரச உத்தியோகம் இல்லையென்றால் அனைத்தையும் இழந்து விட்டதான துயரம் பலரையும் வருத்துகிறது. செல்லத்தம்பிக்கு நேர்மையும் நீதியும் விளங்க உழைக்கும் அரச உத்தியோகத்தர்களை இனங்காணத் துடிக்கும் வேகம்! அனேகரை அவ்வாறு அரச பதவிகளில் காணாது ஏமாறும் பார்வை.

ஒரு தேவையை நோக்கி ஓர் அரச உத்தியோகத்தரைத் தேடி அலுவலகத்துக்குச் சென்றால் “அவர் இன்றைக்கு லீவு” என்கிறார்கள். அவர் திரும்பவும் கந்தோருக்கு வருகை தர இரண்டு மூன்று நாள்கள் ஆகலாம் என்கிறார்கள். அவர் எப்பொழுதாகிலும் அவர் விருப்புக்கும் தேவைக்கும் ஏற்ப லீவில் செல்லலாம். ஆனால் அவருடைய கடமைகள் லீவு பெற்றுக் கொள்ள அனுமதிக்க இயலாது. எனினும் இங்கே அவரைச் சூழ்ந்திருந்த கடமைகளும் லீவிலே சென்று விடுவது கவலைக்குரியதே!

ஒரே நாளில் நிறைவாக்கி முன்னெடுக்கப்படவேண்டிய தேவை ஒன்றை நோக்கிக் காரியாலயத்துக்கு வந்தவர், இரண்டு, மூன்று தினங்கள் அலைந்த பின்னரே தனது தேவையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இதுவே, ஒரு தனியார் வேலைத்தலமாக இருப்பின், அங்கிருக்கும் ஒருவர் இவ்வாறு செய்யின் அவர் வேலையை இழக்கவும் செய்யலாம்.

“செய்யும் தொழிலே தெய்வம்” என்பார்கள்! தொழில் எது வெனிலும் அதற்குரிய தரமும் தகுதியும் இருந்தால் மாத் திரம் போதாது. அந்தத் தொழிலுக்குரிய மதிப்பைக் காக்கவும் தொழில் சார்ந்த அறிவும் ஆற்றலும் மனித நேயப் பண்புகளைப் பேணி ஒழுகும் வழக்கமும் வேண்டும். என்றுமே ஓர் உத்தியோகத்தரிடமிருந்து அவரது தொழிலி னூடாகப் பயன் பெறுபவர் பொதுசனமே! எனவே அவ்வாறு சமூகத்தின் தேவைகளை நிறைவாக்க உண்மையும் நேர்மையும் விளங்கும் வகையில் தனது கடமையைச் சிறப்பாகச் செய்பவரே வேண்டும். அத்துடன் பலரும் பாராட்டும் வகையில் தொழில் சிறக்க அவர் வாழ்தலும் வேண்டும்.அரச உத்தியோகம் பெற்றதும் கொம்பு முளைத்த ஆட்டுக்கடாவாகிப் புளுகத்தோடு துள்ளிக் குதிப்பதிலும் மேலானது, கிடைத்த பதவியின் பெருமையைக் காக்கும் வகையில் பணியைத் தொடர்வதாகும். கோழி மேய்க்கிற வேலையெண்டாலும் அந்த வேலைக்குரிய சிறப்பான திட்ட மிடப்பட்ட செயலொழுங்குகள் உள்ளன. அவற்றை செயலாற்றுதலே சிறப்பானதாகும். இத்தனையையும் சிவபாதத்தார் கேட்ட கேள்விக்கு விடை யாகத் தேர்ந்தாலும் செல்லத்தம்பி அண்ணர் மனத்துக் குள்ளேயே அவற்றை எண்ணினாரே தவிர வெளியிற் சொல்லவிடாது அவரைத் தடுத்த ஏதோ ஒன்றை அவராலும் இனங்காண முடியவில்லை.

## ராசி இல்லாத...
(தொடர்ச்சி)


கூடவே அனுபவம் வாய்ந்த எனது நண்பன் சர்மிலனின் மேற்பார்வையுமிருந்தபடியால எனது காசுக்கு எந்தவித பழுதுகளும் வரவாய்ப்பேயில்லை.

சும்மா சொல்லக்கூடாது. உண்மையிலே வட்லிடிலாப்பம் மிகவும் சுவையாகத்தானிருந்தது. என்னுடைய நாவுக்கு இது ஒரு புதிய அனுபவம். சாப்பிட்ட வாய்க்கு ஒரு புகை தேவைப்பட்டது. மறைவிடமாக நின்று புகையை ஊதித்தள்ளிவிட்டு “ஒன்றுக்குப்” போவதற்காகக் கழிப்பறைக்குப் போக சே...! ‘ஒன்றுடன்’ சேர்த்து ‘இரண்டும்’ வர அனைத்தையும் முடித்துவிட்டு உணவகத்தை விட்டு வெளியேறினேன். ஆற அமர எல்லாக் கடன்களையும் முடித்தாயிற்று. நள்ளிரவு ஒரு மணிக்கு மேலாகி விட்டது. கண்களைச் சுழற்றிக் கொண்டு உறக்கம் வந்தது. வீட்டில் நின்றிருந்தால் எத்தனை மகிழ்ச்சியாக உறங்கியிருக்கலாம். உறக்கத்துக்காக ஏங்கிய கண்களைத் துடைத்து ஒருவாறு ஆசுவாசப்படுத்தியபடி பஸ்சுக்குள் ஏறிவிட்டேன். பிரயாணிகள் மிகவும் குறைவாக இருந்தபடியால் பின் சீற்றுகள் வெறுமையாக இருந்தன. எனக்கு அது மிகவும் வசதியாகிவிட மெல்ல அதிலே ஏறிக் குந்திவிட்டேன். இருக்கைகள் மெத்தென்று மிகவும் இதமாகவிருந்தன. மெல்ல சாய்ந்துகொண்டிருந்து அப்படியே உறங்கி விட்டேன். உண்டகளை தொண்டனுக்குமுண்டு என்பதற்கிணங்க நல்ல உறக்கத்தில் ஆழ்ந்து விட்டேன். இனிக் கொழும்பு வரைக்கும் என்னை மறந்து உறங்கலாம். யார் கேட்கப் போகின்றான்.

என்ன சும்மாவா! காசு கொடுத்துத்தானே பயணம் செய்கின்றேன். விழித்திருந்தாலென்ன! உறங்கினால்தான் யாருக்கென்ன! அருமையான கும்பகர்ணன் நித்திரை. பஸ் இப்போதும் மிகவேகமாக ஓடிக் கொண்டிருக்கின்றதென்பதை அடிக்கடி கண் விழிக்கும் வேளைகளில் புரியக்கூடிய தாயிருந்தது.

“ஆரேன் கொடிகாமம் இறங்கிற ஆக்கள் இருக்கி றியளே! கெதியாய் இறங்குங்கோ!”

‘இதென்னடா இவன்! கொழும்பு போற பஸ்சிலை கொடிகாமம் கிடிகாமம் எண்டு கொண்டு நிக்கிறான். நித்திரைத் தியக்கடியிலை கொண்டக்டர் விசர் ஆடுறான் போலை! எண்ணியபடி மறுபக்கம் புரண்டு படுத்துக் கொண்டேன்.



தி.பிரணவன்,
தரம் - 3
யா/வட்டு மத்திய கல்லூரி



பா.அகிலேஷன்,
தரம் - 2
யா/புனித ஜோன் பொஸ்கோ மகா வித்தியாலயம்



சிவகுகன் பிருத்வி,
தரம் 1,
கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.



தி.கார்த்திகன்,
தரம் - 5
யா/வட்டு மத்திய கல்லூரி.

## வரலாற்றில் இன்றைய தினம்

837 - ஹேலிஸ் வால்வெற்றி பூமிக்கு அண்மித்தாக 3.2 மில்லியன் மைல் தொலைவில் நெருங்கியது.

1500 - சுவிஸ் படைகளால் நொவாறோவில் வைத்து லூட்விகோ போர்ஷா கைப்பற்றப்பட்டு பிரான்ஸிடம் கையளிக்கப்பட்டார்.

1819 - அமெரிக்க சமஷ்டி அரசு அமெரிக்காவில் இரண்டாவது வங்கியைத் ஆரம்பிக்க அனுமதியளித்தது.

1826 - துருக்கியப் படைகளால் ஓராண்டு வரை கிரேக்க நகரில் முற்றுகைக்குள் வைக்கப்பட்டிருந்த 10, 500 பேர் நகரை விட்டு வெளியேறத் தொடங்கினர். அவர்களில் சிலரே உயிர் பிழைத்தனர்.

1866 - மிருக வதைத் தடைக்கான அமெரிக்க சங்கம் நியூயோக்கில் ஹென்றி பேர்ஹ என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது.

1887 - ஈஸ்டர் ஞாயிறு நாளில் 13ஆம் போப்லியோவால் அமெரிக்க கத்தோலிக்க பல்கலைக் கழகம் ஸ்தாபிக்கப்பட்டது.

1912 - ஆர்.எம்.எஸ் டைட்டானிக் கப்பல் தனது கன்னிப் பயணமும் இறுதிப் பயணமும் ஆன பயணத்தை இங்கிலாந்து சவுதம் ரனலிருந்து தொடங்கியது.

1919 - மெக்ஸிகன் புரட்சித் தலைவர் எமிலியானோ சபாட்டா அரச படைகளால் திடீர் தாக்குதலில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1953 - மெழுகு மாளிகை எனது முதலாவது 3டி திரைப்படம் வோர்னர் பிறதேர்ஸால் திரையிடப்பட்டது.

1957 - மூன்று மாதங்களின் பின்னர் சுயெஸ் கால்வாய் அனைத்துக் கப்பல்களின் போக்குவரத்துக்குமென மீளத்திறக்கப்பட்டது.

1959 - எதிர்கால ஜப்பான் சக்கரவர்த்தியான அகிஹிரோ, மிச்சிகோவை மணம் புரிந்தார்.

1963 - 129 அமெரிக்க மாலுமிகள் யு.எஸ்.எஸ். திரஷர் நீர்மூழ்கிக் கப்பல் கடலில் மூழ்கியதில் சாவடைந்தனர்.

1972 - உயிரியல் ஆயுதங்களைப் பயன்படுத்துவதால் தடைசெய்யும் பன்னாட்டு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் 74 நாடுகள் ஒப்பமிட்டன.

1973 - பிரித்தானிய விமானம் ஒன்று சுவிற்சர்லாந்தில் விபத்துக் குள்ளாகி 104 பேர் சாவு.

1991 - இத்தாலியப் படகு எம்.எஸ்.மொபி பிறின்ஸ்பனிப்புகாரினால் எண்ணெய் தாங்கிக் கப்பல் ஒன்றுடன் மோதி 140 பேர் சாவு.

## விடுகதைகளும் விடைகளும்

01. தண்ணீரில் மிதக்கும் அழகிய வீடுகள். அவை என்ன?
கப்பல்கள்

02. மணல் வெளியில் ஓடும் தண்ணீர் கேட்காத கப்பல் அது என்ன?
ஒட்டகம்

03. தொட்டு விட்டால் மூடிக் கொள்ளும் பச்சை மாளிகையின் ஜன்னல் அது என்ன?
தொட்டாச் சுருங்கிச் செடி

04. வானத்தில் பறக்கும் பறவை ஊரையே சுமக்கும் ஆகாயம் அது என்ன?
விமானம்

05. சிவப்பான பெட்டிக்குள் கருகு மணி முத்துக்கள் அவை என்ன?
பப்பாளி விதைகள்

06. நடக்கத் தெரியாதவன், பிறருக்கு வழி காட்டுகிறான் அவன் யார்?
கைகாட்டி

07. நடலாம், பிடுங்க முடியாது அது என்ன?
உடலில் குத்திய பச்சை

08. நான் வெட்டுப்பட்டால், வெட்டியவனை அழ வைப்பேன் நான் யார்?
வெங்காயம்

09. நடைக்கு உவமை, நளனுக்குத் தூதுவன் அவன் யார்?
அன்னம்

10. நாலு மூலைக்கிணறு, நாகரத்தினக்கிணறு, எட்டிப் பார்த்தால் சொட்டுத் தண்ணீர் இல்லை அது என்ன?
அச்சு வெல்லம்



# தெளிவு

எட்டாம் வகுப்பு படிக்கும் பரமசிவம், விநாயகம், முருகன் மூவரும் நெருங்கிய நண்பர்கள்.

பரமசிவம் படிப்பில் புலி. அவன்தான். வகுப்பில் முதல் மாணவன் விநாயகத்துக்கு வெண்கல மணிபோன்ற கணீரென்ற இனியகுரல்; பாடுவதில் அவனுக்கு நிகர் அவனே! முருகனோ விளையாட்டில் வீராதிவீரன்!

ஒரு மாலைநேரம்..

நண்பர்கள் மூவரும் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது "படிப்பு, பாட்டு, விளையாட்டு ஆகியவற்றில் எது தலைசிறந்தது?" என்று கேட்டான் பரமசிவம்.

விளையாட்டில் திறமைசாலியாக விளங்கும் முருகனோ, "விளையாட்டே மிகவும் சிறந்தது" என வீரமாகக் கூறினான். பாடுவதில் தேர்ந்த விநாயகம் "பாட்டுத்தான் உயர்ந்த கலை" என்று பலமாகக் குரல் எழுப்பினான்! பரமசிவம், "படிப்பே" என ஆணித்தரமாக அடித்துப் பேசினான்.



மூவருமே அவரவர் கட்சிக்காக அழுத்தந்திருந்தமாக வாதாடினர். யாரும் விட்டுக் கொடுப்பதாக இல்லை.

எனவே எந்த ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் திணறினர்.

'தமது சந்தேகத்தை தமிழாசிரியரிடம் கேட்டுத் தீர்த்துக் கொள்வதே நல்லது' என்று மூவரும் ஒரு மனதாகத் தீர்மானம் செய்தனர்.

தமிழ் வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சிறிது அவகாசம் கிடைக்கவே ஆசிரியரிடம் தங்கள் பிரச்சினையை எடுத்துக் கூறினான் பரமசிவம்.

அனைத்தையும் அமைதியாகக் கேட்ட தமிழாசிரியர் "ஒரு மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம் முதலியவை அடிப்படைத் தேவைகளாக எப்படி அமைந்துள்ளனவோ அப்படித்தான் படிப்பும், பாட்டும், விளையாட்டும் மூன்றுமே சம அளவு முக்கியத்துவம் வாய்ந்தவை" என்றார்.

"இன்னும் புரியும்படி நன்றாக விளக்கிக் கூறுங்கள் ஐயா" எனப் பணிவாகக் கேட்டனர் மாணவர்கள்.

"சரி... ஓர் உடலுக்குக் கண்கள் முக்கியமா? செவிகள் முக்கியமா?... இல்லை வாய்தானா என்று கேட்டால் என்ன பதில் கூறுவீர்கள்? மூன்றும் தனித் தனியே மூன்று சிறப்பான பணிகளைச் செய்வதால்தானே மனிதன் முழுமை அடைய முடிகிறது?

அதே போலத்தான் நீங்கள் எழுப்பியுள்ள பிரச்சினையும் இவற்றில் இம்மியளவும் ஒன்றுக்கொன்று வித்தியாசமே காணமுடியாது" என்றார் தமிழாசிரியர்.

உடலுறுப்புக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்பானவை. இவற்றில்' ஒன்று சிறந்தது... இன்னொன்று சிறுமையானது" எனக் கூற இயலாது என்பதை எடுத்துக் காட்டுடன் எளிமையாக ஆசிரியர் விளக்கிக் கூறியதைக் கேட்ட மாணவர்கள் தெளிவு பெற்றனர்.

## மயிலே, மயிலே ஆடிவா

மயிலே, மயிலே ஆடிவா
மக்காச் சோளம் தருகிறேன்!
குயிலே, குயிலே பாடிவா
கோவைப் பழங்கள் தருகிறேன்!

பச்சைக் கிளியே பறந்துவா
பழுத்த கொய்யா தருகிறேன்!
சிட்டுக் குருவி நடந்துவா
சட்டை போட்டு விடுகிறேன்!

ஓடைக் கொக்கு இங்கே வா
ஒடிப் பிடித்து ஆடலாம்!
மாடப் புறாவே இறங்கிவா
மடியில் குந்திப் பேசலாம்





இணையவள்

# திருமணமும் பெண்களும்

பெண்ணைப் பெற்ற பெற்றோர் அவளை ஒரு ஆணிடம் கையளிக்கும் வரையார் பொருத்தமானவன் என்று தேடிக் கொண்டே இருப்பார்கள். அலை அடித்துக் கொண்டு தான் தான் இருக்கும். காற்று வீசிக் கொண்டு தான் இருக்கும். பெற்றோரும் வரன் தேடிக்கொண்டு தான் இருப்பார்கள். ஏனென்றால் தனித்து ஒரு மனிதனால் இன்பமாக வாழ்ந்து விட முடியாது. அதனால் பொருத்தம் தேடி இரு மனங்களைப் பொருத்தி விடுகின்றார்கள்.

ஆனால், தேடி ஆராய்ந்து, சேர்த்து வைக்கும் திருமணங்கள் சில ஆண்டுகளில் மனப் பொருத்தம் இன்றி ஒருவரை ஒருவர் குறை கூறிய வண்ணம் பிரிந்து அகன்று விடுகின்றன.

காரணம் தான் என்ன? தேடி வைத்தல் நன்றா? அவர்கள் தேடிக்கொள்ளல் நன்றா? வாழ்க்கை என்பது ஒரே ஒருமுறை தான். இதை ஆத்திகனும் நம்ப வேண்டும். நாத்திகனும் நம்ப வேண்டும். மறுபிறப்பு உண்டென்று நம்பும் ஆத்திகன் கூட நம்பவேண்டியது மறுபிறப்பில் அவன் சூழல் வேறு, சொந்தம் வேறு, வாழ்க்கை வேறு, ஏன்.... அவனே வேறு. முற்பிறப்பு பற்றி ஓர் அணுக் கூட அவனால் புரிந்து கொள்ளமுடிவதில்லை. புரியாது வரப் போகின்ற மறு பிறப்புக்காக புரிந்து கொள்ள வேண்டிய இப்பிறப் பில் அனுபவிக்க வேண்டிய எத்த னையோ விடயங்களை இழந்து வாழ் வோர் பலர். இவ்வாறு இருக்கும்போது பிறந்த பிறப்பை மனிதன் புரிந்து நடந்து கொள்ள வாழ்க்கையைப் பூரணமாக வாழவேண்டும். அதில் பிரிவுகளோ, இணைவுகளோ காரணத்தோடு தான் நடக்க வேண்டும்.


கலாச்சாரம் என்ற பெயரிலும் பிறர் எம்மைப்பற்றி என்ன நினைத்து விடுவார்கள் என்னும் தன்மான உணர்விலும், அந்தஸ்து வெறியிலும் இளைய தலைமுறைகளின் எதிர்கால வாழ்க்கையை சீரழிக்கும் எத்தனையோ பெற்றோர்கள் எம்மிடையே இருக்கின்றார்கள். எமது பிள்ளைகளின் குடும்ப வாழ்வு என்று நினைத்து அவர்கள் சந்தோசமே எமது சந்தோசம் என்று ஒவ்வொரு பெற்றோரும் நினைக்கின்ற பொழுதே பொருத்தமான கணவனைப் பெண்ணுக்கும் பொருத்தமான மனைவியை ஆணுக்கும் தெரிவு செய்ய முடியும்.

பொதுவாகவே பொருத்தம் பார்த்து தேர்ந்து செய்கின்ற திருமணங்கள் குடும்பங்களின் நிலைமைகளை கருத்தில் கொண்டு செய்யப்படுகின்றன. இதில் பணம் என்பதை மீறி பண்பை கவனித்தல் அவசியமாகின்றது. ஐந்து விரலும் ஒன்றாக இல்லாவிட்டாலும் ஒரு மரபணுவில் இருந்து வரும் பிள்ளைகளுக்கு அந்த மரபணுத் தாக்கம் இல்லாது விடாது. சகோதரர்களிடையே ஒற்றுமைப் போக்கு சிலவிடயங்களில் காணப்படும். அதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். குடும்பத்தில் ஒருவருக்கு இருக்கின்ற குணமானது மற்றைய சகோதரர் சிலரிடமாவது இருக்க வேண்டும். முயற்சி இல்லாத சில சகோதரர் இருந்தால் மற்றையவரிடமும் அக்குணம் இருக்க சந்தர்ப்பம் இருக்கின்றது.

திருமணங்கள் முறிவடைந்து விடக்கூடாது. என்று அக்கறை கொள் ளும் பெற்றோர் இதனாலேயே குடும்ப நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு திருமண ஒப்பந்தங்கள் செய்கின்றார்கள். ஆனால், இளந்தலைமுறையினர் இதை உணர்ந்து கொள்வதில்லை. நான் குடும்பத்தை திருமணம் செய்யவில்லை. அவரைத்தான் திருமணம் செய்யப்போகின்றேன் என்று அடம் பிடிக்கின்ற இளையவர்கள் பெற்றோர் அனுபவத்தை சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அத்துடன் பெற்றோர் பார்க்கும் பொருத்தம் சரிதானா என்னும் பரிசீலனை செய்யும் உரிமையும் ஒரு பெண்ணுக்குத் தேவை.

பொறுப்புக்களும்பொறுமையும் மனிதனுக்கு இருக்க வேண்டியது அவசியமே. அது கணவன் மனைவி இருவருக்கும் அவசியமானது. பிரச்சினை என்று வரும் போது பேசித்தீர்க்கும் மனநிலை இருவருக்கும் அவசியம். தேடல் நிறைந்த வாழ்வில் எதிர்பார்ப்புக்கள் நிறையவே இருக்கும். கணவன் தன்னைத் தாங்கவேண்டும்என்று மனைவியும், மனைவி தன்னைத் தாங்க வேண்டும் என்று கணவனும் நினைப்பது இயற்கை. அவர்கள் ஆசைக்கேற்ப சின்னச் சின்னப் பரிசில்களை அல்லது அரவணைப்பை இருவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும். அன்பும் ஆதரவும் இல்லை என்றால் ஏக்கம் இருவர் மத்தியிலும் இருப்பதுடன் இடையில் சிறிய இடைவெளி வந்துவிடும். எனவே உங்களுக்காக ஏங்கும் ஒரு பொருத்தத்தைத் தேடுங்கள். பணத்தை மட்டும் குறியாகவும் பாசத்தை ஒரு சிறு பகுதியாகவும் கொள்ளும் பொருத்தமும் வாழ்க்கையில் கசப்பை ஏற்படுத்தும். உண்மைப் பாசம் மனதில் இருந்தால் மனைவி பிள்ளைகளுக்காக நேரத்தை ஒதுக்கும் மனநிலை கணவனுக்கு ஏற்படும். அதனால் உண்மை அன்பைத் தேடிப் பெறுங்கள். ஒருமுறையே வாழ்கின்றோம். அதை இன்பமாக வாழுங்கள்.

# பெண்களின் சிறப்பு



"பெண்ணுக்குள்ளே ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன்" என ஞானம் என்னும் பொருள் வைக்கப்பட்டுள்ள இடம் பெண் என்பதை மகாகவி பாரதி உலகுக்கு வெளிப்படுத்திச் சென்றுள்ளார். எனவே தான், மனிதனை வாழவைக்கும் இந்தப் பூமியைப் பூமாதேவி என்றும் ஆகாயத்தை ஆகாய வாணி என்றும் கடலைக் கடலன்னை என்றும் நதிகளைக் கங்கை என்றும் காவேரியென்றும் எங்கெங்கும் இயற்கை சக்திகளில் பெண்வடிவம் காண்கின்றோம். கல்வி, செல்வம், வீரம் இம் மூன்றும் பெறக் கலைமகள், அலைமகள், மலைமகள், என முச்சக்திகளான பெண்தெய்வங்களை வழிபட வேண்டியது அவசியமாகின்றது.

ஒரு பெண் வாழும் வீடு சிறப்பாய் அமைந்தாலேயே நாடும் சிறப்புறும் வீடுகள் நிறைந்தது தான் நாடு. எனவே, இல்லறத்தை ஒரு பெண் நல்லறமாக்காது விடில் உலகு உவகை கொள்வது எங்கே? உயர்ச்சியடைவது எங்கே? உலகத்தை வளர்த்து வாழவைக்கும் புத்தகங்களாகவும், கலைகளாகவும், கல்விக்கழகங்களாகவும் பெண்கள் விளங்குகின்றனர் எனப் பெண்கள் பற்றிச் சேக்ஸ்பியர் கூறியுள்ளார். எனவே உலகமே அவள் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்பது வெளிப்படை.

இளமையில் பெற்றோரில் தங்கித் திருமணத்தின் பின் கணவனில் தங்கி முதுமையில் பிள்ளைகளில் தங்கி வாழும் பண்பு பின்தங்கியவளாகவே அவளை ஆக்கி விடுகின்றது. உலகத்தை உய்வடையச் செய்யும் பெண்கள் தமது பொறுப்பை உணர்ந்து கடமை தவறாது கண்ணியமாக வாழ்க்கையை நல்லமுறையில் நடத்தினால், உலகு உவகை கொள்ளும் என்பது திண்ணம்.

# உள்ளூர் அரசியல்வாதிகளின் போட்டியால் அவதிப்படும்

# அபிவிருத்தித் திட்டங்கள்

அரசியல் ஆசிரியர்

வடக்கின் அரசியல் தொடர்பான விடயத்தில் உள்ளூர் அரசியல்வாதிகள் இடையிலான போட்டியே பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பது கடந்த வாரத்தில் வெளிப்படையாகத் தெரிந்தது. வடக்கு மக்கள் போரால் பாதிக்கப்பட்டவர்கள் என்று இவர்கள் மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டாலும் அவர்களின் நலன் சார்ந்து உள்ளூர் அரசியல்வாதிகள் செயற்படுகிறார்களா என்கிற அச்சத்தை மேலும் வலுப்படுத்தும் வித்தத்தில் இது அமைந்திருந்தது.

வடக்கு விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை இலகுவில் சந்தைப்படுத்துவதற்கான பொருளாதார மத்திய நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதில் ஏற்பட்டுள்ள இழுபறி அரசியல்வாதிகள் மக்கள் நலத் திட்டங்களை அணுகும் விதத்துக்குச் சரியான உதாரணமாக கடந்த வாரத்தில் இருந்தது. இலங்கையின் விவசாய உற்பத்திகளுக்கான பொருளாதார மத்திய நிலையமாக தம்புள்ள விளங்குகின்றது. வடக்கில் இருந்து அங்கும், அங்கிருந்து வடக்குக்கும் பெருமளவு பொருள்கள் பரிமாறப்படுகின்றன. எனினும் தம்புள்ளைக்கு பொருள்களை ஏற்றுவதன் மூலம் வடக்கு விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் பெருமளவு இலாபம் கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு உண்டு. இதனாலேயே வடக்கில் ஒரு பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.


அந்தப் பொருளாதார மத்திய நிலையம் வவுனியாவில் அமைவது தம்புள்ள மற்றும் வடக்குக்கான பரிமாற்றத்துக்கு இலகுவாக இருக்கும் என்பதால் அதனை அங்கு அமைப்பதற்கு முன்மொழிவுகள் வடமாகாண அமைச்சர்களில் ஒருவரான ப.சத்தியலிங்கத்தால் முன்வைக்கப்பட்டது. ஜனாபதியுடனான வடக்கு மாகாண அமைச்சர்களின் சந்திப்பின்போதே இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டது. அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். அதனடிப்படையில் வவுனியாவில் அந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டது. இதற்கமைய வரவு, செலவுத் திட்டத்தில், கிராமிய பொருளாதார அமைச்சு அதற்கான திட்டங்களைச் செயற்படுத்த முன்வந்துள்ளது. 400 மில்லியன் ரூபா செலவில் இந்த மத்திய நிலையத்தை அமைப்பதற்கு அமைச்சு திட்டமிட்டள்ளது. 1,200 மில்லியன் ரூபா செலவிலான பெருமெடுப்பிலான பொருளாதார மத்திய நிலையம் ஒன்றையே வடக்கு மாகாண சபை பரிந்துரைத்தபோதும் 400 மில்லியன் ரூபாவுக்கான திட்டத்துக்கே இப்போது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய நிலையத்தை அமைப்பதற்கான பணத்தை கொழும்பு அரசு வழங்குகின்றபோதும் அதற்கான நிலத்தை வடக்கு மாகாண சபையே ஒதுக்கிக் கொடுக்கவேண்டும்.

இப்போது அதில்தான் பிரச்சினை. உள்ளூர் அரசியல்வாதிகளின் கைகள் இங்குதான் புகுந்து விளையாடுகின்றன. காணியைத் தெரிவு செய்வதற்கான பணி வவுனியா பிரதேசசெயலரிடம் கையளிக்கப்பட்டது. ஓமந்தையில் உள்ள மாணிக்கவளவு, நகரத்துக்குள் உள்ள விவசாயப் பண்ணைக்குரிய நிலம் என்பவற்றை பிரதேச செயலர் பொருத்தமான இடமாக அடையாளப்படுத்தினார். அனைவரும் இணைந்து பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் மாணிக்க வளவைத் தெரிந்தெடுத்தனர்.

நகரத்தில் இருந்து 9 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மாணிக்கம் வளவில் சிறப்புப் பொருளாதார வலயத்தை அமைப்பது சாத்தியமற்றது என்பதைக் கிராமிய பொருளாதார அமைச்சர் தெளிவுபடுத்திவிட்டதால் மாற்று இடத்தைத் தேடவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தத் திட்டத்தை நகர அபிவிருத்தி அதிகார சபையே செய்ய இருப்பதால், வலயம் நகரிலிருந்து 2 கிலோ மீற்றர் தூர எல்லைக்குள் அமையப்பெற வேண்டும் என்று அமைச் சரினால் தெரிவிக்கப்பட்டது.

> மத்திய நிலையத்தை அமைப்பதற்கான பணத்தை கொழும்பு அரசு வழங்குகின்றபோதும் அதற்கான நிலத்தை வடக்கு மாகாண சபையே ஒதுக்கிக் கொடுக்கவேண்டும். இப்போது அதில்தான் பிரச்சினை. உள்ளூர் அரசியல்வாதிகளின் கைகள் இங்குதான் புகுந்து விளையாடுகின்றன.



இதையடுத்து இந்த சிறப்புப் பொருளாதார வலயத்தை தாண்டிக்குளத்திலுள்ள அரச விதை உற்பத்திப் பண்ணைக்குச் சொந்தமான 52 ஏக்கர் நிலத்தில், 5 ஏக்கர் நிலத்தில் அமைக்க முடியும் என்று உள்ளூர் அதிகாரிகள் பரிந்துரைத்தார்கள். பரிந்துரைக்கப்படும் நிலத்தில் இப்போது எந்த விவசாய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதால் அது பொருத்தமான இடம் என்று கருதப்பட்டது. அதற்கும் மேலாக, பண்ணை நிலத்தில் புதிய வவுனியா நகரத்தை உருவாக்கிக் கொண்டு விவசாயப் பண்ணையை வவுனியா வடக்கு பரசன்குளத்துக்குக் கொண்டு செல்வது என்று 1999ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட வவுனியா நகரத் திட்டத்தில் முன்மொழியப்பட்டமையும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் இருந்து மார்ச் மாதத்தில் அனுப்பப்பட்ட ஒரு கடிதத்தில் மாணிக்க வளவு காணியே பொருளாதார வலயத்துக்கு உகந்தது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

மார்ச் மாதம் 14ஆம் திகதி வவுனியா மாவட்டச் செயலரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இது தொடர்பான கூட்டத்தில் முதலமைச்சரின் கருத்து எடுத்துக்கூறப்பட்டது. நகரின் 2 கிலோ மீற்றர் சுற்றாடலுக்குள் பொருளாதார வலயம் அமையாவிட்டால் அது வேறு மாவட்டங்களுக்குச் சென்றுவிடும் அபாயம் இருப்பதாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கூட்டத்தின் இறுதியில் அதில் கலந்துகொண்ட கொழும்பு அமைச்சர், வடமாகாண அமைச்சர், மாகாண உறுப்பினர்கள், அதிகாரிகள் ஆகியோர் இணைந்து விவசாயப் பண்ணையின் காணியில் சிறப்புப் பொருளாதார வலயத்தை அமைப்பது என்கிற இறுதி முடிவுக்கு வந்தனர்.

இந்த முடிவு குறித்து முதலமைச்சருக்கும் அறிவிக்கப்பட்டது. ஆனால் அவரிடமிருந்து எந்தவிதப் பதிலும்

(46 ஆம் பக்கம் பார்க்க)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கஞ்சாவை ஒழிக்க உறுதிபூணுவோம்!

■ யேர்.யோகசுதர்யன்

யாழ்ப்பாணம் கேரளக் கஞ்சா கடத்தலின் முக்கிய கேந்திர நிலையமாக செயற்படுவது, அண்மைக்காலமாக பெரிய அளவில் மீட்கப்படும் கஞ்சா பொதிகள் மூலம் நிர்ணயமாகின்றது. கலை, கலாசார விழுமியங்களை தனித்துவமாக தன்னகத்தே கொண்டதென பெயர் பெற்றதும் மேதைகள், வித்தகர்கள், வல்லுனர்கள், நிபுணர்கள் பலரைப்பெற்றெடுத்த பெருமையுடையது என்று போற்றப்படுவதுமான யாழ். மண் இன்று போதைப்பொருளுக்கும், கலாசார பிறழ்வுக்கும் முதன்மையான இடத்தைக் கொண்டதாக மாறி இருப்பது அனைவருக்குமே வேதனையளிக்கும் செயலாகும்.

இலங்கைத் தீவானது நான்கு பக்கங்களுமே கடலால் சூழப்பட்டுள்ள நிலையில் கடல் வழியாகவே சட்ட விரோதப் பொருள்கள் அதிகளவில் உள்நுழைய முடியும். ஆனால் போர்க் காலத்திலே இத்தகைய போதைப் பொருள்கள் எவையும் கடல் வழியாக யாழ்ப்பாணத்திற்குள்ளோ அல்லது வடக்குக்குள்ளோ கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. அதற்குக் காரணம் இலங்கைக் கடற்படையின் கண்காணிப்பு அவ்வளவு தீவிரமாக இருந்தமைதான். பல சவால்களுக்கு முகம் கொடுத்து நீண்டகால கடல் போரைச் சந்தித்த போதும், சட்டவிரோதமெனக் கூறப்படும் பல உள்நுழைவுகளை தடுத்த இலங்கை கடற்படை அதே பாதுகாப்புப் பணியிலும் அதே உஷார் நிலையிலுமே தற்போதும் உள்ளதாகவே கூறப்படுகின்றது. இருந்தும் ஒரு வாரத்துக்கு ஒரு தடவை என்ற வீதத்தில் கேரளா கஞ்சா யாழ்ப்பாணத்தில் கண்டு பிடிக்கப்படும் மர்மம் பிடிபடவேயில்லை.

அதிலும் சிறப்பானது என்னவென்றால், கண்டுபிடிக்கப்படும் கஞ்சாப் பொதிகள் ஆள்கள் அற்ற வீடுகளிலும் கைவிடப்பட்ட நிலைகளிலுமே கண்டுபிடிக்கப்படுகின்றன. இது தொடர்பாக, சந்தேக நபர்கள் “தலைமறைவு” என்னும் செய்தியைத்தான் அறிய முடிகின்றதே தவிர அவர்கள் கைது செய்யப்படுவதாகத் தெரியவரவில்லை. இதன் பின்புலம் என்ன? இவ்வளவு தொகையான கஞ்சா யாழ்ப்பாணத்திற்குத்தான் பாவனைக்காக கொண்டு வரப்படுகின்றதா? அல்லது யாழ்ப்பாணம் ஊடாக வேறு இடங்களுக்கு விநியோகிக்கிறார்களா? எப்படியாக இருந்தாலும் இரண்டுமே மிகவும் பாரதூரமான விடயங்கள்தான். அண்மையில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இது தொடர்பில் ஒரு கட்டளையைப் பிறப்பித்துள்ளார். கேரளா கஞ்சா கடத்தல் தொடர்பாக கடற்படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபடவேண்டும் என்று அந்தக் கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிப்புரையைக் கடற்படை சிரமேற் கொண்டு செய்யும் பட்சத்தில் கஞ்சாக் கடத்தலின் நுழைவு கணிசமான அளவு குறையுமென நம்பலாம்.



இதுவரை கஞ்சாக் கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து பொலிசாரினால் கடத்தல் மூலதாரங்களை இனங்காண முடியாமல் இருப்பதென்பது ஆச்சரியமளிக்கின்றது. பொலிசார் கூறும் தகவலின்படி கூலிக்காக இடையில் கஞ்சா பொதிகளை கடத்துபவர்களை தவிர வேறு எவரையும் அவர்களால் கண்டுபிடிக்க முடிந்திருக்கவில்லை.

அது உண்மையென்றாலும்கூட பொலிசாரின் இரகசிய குற்றப் புலனாய்வுப் பிரிவு குற்றத் தடுப்புப் பிரிவு போன்றவை இந்த சூட்சுமத்தை உடைத்தெறியக்கூடிய திறனற்றவையாகவா இருக்கின்றன? அதனை நம்ப முடியவில்லை. விடுதலைப் புலிகள் தொடர்பான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விட்டால், அவரை நோண்டி நொங்கெடுத்து ஏதோ ஒருவிதத்தில் பலரையும் கைது செய்து அந்த வலையமைப்பைக் கண்டறிந்துவிட முடிகிற அல்லது முயற்சிக்கிற அரச உளவுப் பிரிவுகளுக்கு கஞ்சா கடத்தலின் சூத்திரதாரிகளை மட்டும் கண்டுபிடிப்பது சிரமமான காரியமாக இருக்க முடியாது. அதற்காக கஞ்சாவின் மூலத்தைக் கண்டுபிடிப்பது அரச படையினரின் கடமை என்றுவிட்டும் நாம் வளாவிருந்துவிடவும் முடியாது. சமூக பொறுப்புள்ளவராக ஒவ்வொருவரும் இது தொடர்பான எந்தத் தகவலையாவது இனங்கண்டால் எந்தவித பயமும் இல்லாது உடனடியாக பொலிசாருக்குத் தெரியப்படுத்த வேண்டும். அதேபோன்று பொலிசாரும் தகவல் தருபவரை, இனங்காட்டாது பாதுகாக்க வேண்டும். எமது சந்ததியின்எதிர்காலவாழ்வைக்கருத்திற்கொண்டு நாம் ஒவ்வொருவரும் இது தொடர்பாக சிந்தித்துச் செயற்படவேண்டும். இது திட்டமிட்ட வகையில் யாழ். மண்ணின் விழுமியங்களைச் சீரழித்து, மழுங்கடிக்கக் கூடிய வகையில்நடைபெற்றாலும் அதை நாம் தடுத்து வெற்றி கொள்ளலாம்.

போதைப் பொருள் பாவனை என்பது மனிதனின் அறிவியல் ஆற்றலைத் தடுக்கும் வல்லமை கொண்ட ஓர் ஆயுதமாகும். இது திட்டமிட்டரீதியில் இளம் வயதினரிடையே பழக்கப்படுத்தப்பட்டால் எங்கள் பிள்ளைகளது வாழ்வை நாமே மண்ணில் புதைப்பது போன்ற நிலை ஏற்படும். இந்த விதமான கஞ்சாக் கடத்தல் பாலியல் வன்புணர்வு கள் கலாசார சீரழிவுகள் தொடர்பாக அறிந்தால் நபரை இனங் கண்டால் பொலிசாருக்கு தகவல் வழங்கி யாழ் மண்ணில் இருந்து கஞ்சா கடத்தல், போதைப் பொருள் விற்பனை, பாவனை போன்றவற்றை ஒழிப்போம்.

## நல்லிணக்கமென்பது நாசம்...

தடம் மாறிப் போகிறது நல்லிணக்க அரசு
தகர்ந்து போகிறது தமிழ்மக்கள் நம்பிக்கை
ஆள்மாறியதே யன்றி ஆட்சி மாறவில்லை
காட்சிகளில் மாற்றம் நாடகம் ஒன்றுதான்

தேர்தல் காலத்தில் தந்த பரப்புரைகள் தேடுவாரற்று
அபகரிக்கப்பட்ட தமிழர் பூமி அரசியல் கைதிகள் விடுதலை
பரணகமவின் படுமோசமான உள்ளக விசாரணை
தொடரும் பயங்கர வாதச் சட்டம் கைதுகள்

தேர்தலில் தோல்வியுற்றவர்கள் தேசியப்பட்டியலில்
எதனோல் போதைப் பொருள் குற்றவாளிகள் அமைச்சர்களாக
அடாவடிக்காரர்கள் தெரிவும் அளவுமீறிய அமைச்சரவையும்
இன நெருக்கடியில் ஏமாற்றும் தீர்வு முயற்சிகள்

கூட்டங்கள் போடுவதும் குழுக்கள் அமைப்பதும்
இனப்பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் கிடையாது

பேரினவாதம் உண்மையை உணரும் வரையில் இனப்பிரச்சினை
என்பது இலவுகாத்ததைப்போல

அரசியல் தீர்வில் மைத்திரி ரணிலின் நழுவல் போக்குகள்
இனவாதிகளை காரணம் காட்டி ஏமாற்றும் முயற்சிகள் கொலை,
கொள்ளை போதை, பாலியல் வல்லுறவு, ஊழல், லஞ்சம்
பேரினவாதிகளுக்குப் பயந்த ஆட்சி

மகிந்த செய்தது போக மிகுதியை செய்முயலும் அரசு
படைகள் குடியிருப்பு, சிங்களக்குடியேற்றம், புதிது புதிதாக
அமைக்கப்படும் புத்த விகாரைகள்
தமிழர் பரம்பலைக்குறைக்க முனையும் சர்வாதிகாரம்

ஊழல் குற்றச்சாட்டில் ஒதுக்கி வைக்க வேண்டி மகிந்த அணி
சிங்கள பௌத்த வெறிகொண்டலையும் ஞானசாரர்
சிங்கலே பொது பல சேனா இராவண பலய
இந்த மாயைகள் இருக்கும் வரை நல்லிணக்கமென்பது நாசம்

மஞ்சவனப்பதி,
கொக்குவில்



# அரசியல் என்பது எது?

வ.மு.முரளி

அலுவலகத்திலோ, நண்பர்கள் குழுவிலோ ஏதாவது பிரச்சினை ஏற்படும் தருணங்களில் "அரசியல் செய்யாதே" என்று யாராவது ஒருவர் சொல்வதை நாம் அனைவருமே கேட்டிருப்போம்.

சுமுகமான உறவைக் கெடுப்பதுதான் அரசியல் என்ற புரிந்துணர்வே இந்தக் கருத்துக்குக் காரணம்.

இருவரிடையே பிளவை ஏற்படுத்துவது, ஒட்டுமொத்தச் சூழலில் குழப்பத்தை ஏற்படுத்துவது, நண்பர்களையும் எதிரிகளாக்குவது, நம்பவைத்துக் கழுத்தறுப்பது போன்ற குணாதிசயங்களை அரசியல் தன்மை என்று நாம் கற்பிதம் செய்து வைத்திருக்கிறோம்.

நாட்டின் அரசியல் களத்தில் நிகழும் சம்பவங்களே இத்தகைய குணாதிசயங்கள் குறித்த கருத்தை உருவாக்கியுள்ளன என்று சொன்னால் மிகையில்லை. சுயநலமே பிரதான மாகும்போது, பிறரை ஏமாற் றுவது அரசியல் பிழைப்பு ஆகிவிடு கிறது. நாம் பயன்படுத்தும் அரசி யல் என்ற சொல்லுக்கு இந்தப் பொருள் தான் உள்ளதா? நாம் சரியான பொருளில் தான் இந்தச் சொல்லைக் கையாள்கிறோமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். தமிழின் முதன்மையான அறநூலான திருக்குறளில் பொருட்பாலில் எடுத்தவுடன் வரும் அதிகாரவைப்பு அரசியலாகும். இதில் மட்டும் இறைமாட்சி முதல் இடுக்கண் அழியாமை வரை 25 அதிகாரங்கள் குறிப் பிடப்பட்டுள்ளன.

இந்த அதிகார வைப்பினை ஆழ்ந்து நோக்கும்போது, நாட்டை வழிநடத்தும் கலையாகவே அரசியலை திருவள்ளுவர் கருதியிருக்கிறார் என்பதை உணர முடிகிறது. நாட்டின் அங்கங்கள், அரசின் குணநலன்கள், ஆள்வோர் பெற வேண்டிய கல்வி உள்ளிட்ட தகுதிகள், காலம் அறிதல், இடம் அறிதல், எதிரியைத் தெளிதல், ஒற்றாடல், செங்கோன்மை, நடு நிலைமை என ஒரு நவீன அரசு திறம்படச் செயல்படுவதற்குத் தேவையான அனைத்து அம் சங்களையும் திரு வள்ளுவர் பொருட்பாலில் தொகுத்து வழங்கி இருக்கிறார்.

ஆனால், நாம் ஒரே சொல்லில், அரசியலை வசைபாடலுக்கான வார்த்தையாக மாற்றி இருக்கிறோம். "பொலிடிக்ஸ்" செய்வது என்றால், நம்மைப் பொறுத்தவரை அது ஒரு கெட்ட வார்த்தை. திருவள்ளுவரும், சாணக்கியரும் அரிய கலையாகப் போற்றிய அரசியல் இன்று தரம் தாழ்ந்ததன் விளைவு தான், அதை நாம் காணும் பார்வையும் அணுகும் விதமும்.

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் கல்லூரி மாணவர்களிடையே உரையாடும் போது, நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள் என்று கேள்வி கேட்பது வழக்கம். பெரும்பாலான மாணவர்கள், மருத்துவராக, பொறியாளராக, ஆசிரியராக, விஞ்ஞானியாக, அரசு ஊழியராக விரும்புவதாகக் கூறுவர். அப்போது, ஏன் ஒரு மாணவர்கூட அரசியல் தலைவராக மாறுவேன் என்று கூறவில்லை? என்று கேள்வி எழுப்புவார் கலாம். பிறகு அவரே மாணவர்களிடம் பேசுகையில், தரமான அரசியல் தலைவர்களால்தான் நாடு சிறந்து விளங்க முடியும். அதற்கும் மாணவர்கள் தயாராக வேண்டும் என்பார்.

சிந்தித்துப் பாருங்கள். பல துறைகளிலும் சிறந்தவர்கள் விளங்கினாலும், நாடு நல்ல தலைமையின்றிப் போனால், அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகவே மாறிவிடும். நல்ல அரசன் இல்லாத நாட்டில் எத்தனை வளங்கள் இருந்தாலும் பயனில்லை என்பார் திருவள்ளுவர்.

நாட்டை, அரசை நடத்துவதே அரசியல் கலை. மன்னராட்சிக் காலத்தில் மன்னராகவும் அமைச்சர்களாகவும் இருந்தவர்கள் பயின்ற கலை அரசியல். தற்காலத்தில் மக்களுக்காக மக்களே ஆளும் ஆட்சி நடைபெறுகிறது. மக்கள் ஆட்சி யில் மக்களே தலைவர்களாகிறார்கள். எனவே, அவர்களுக்கு அரசியல் கலை குறித்த கல்வி தேவை.

குறைந்தபட்சம் மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப் படுவோருக்கேனும் இத்தகைய கல்வி அளிப்பது அவசியம். அரசு நிர்வாகத்தில் உள்ள அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கப் படுவது போல, மக்கள் பிரதி நிதிகளுக்கும் முறையான அரசியல் கல்வி அளிக்கப்பட்டால் அவர்களின் தரம் உயரும்.

சில தேநீர்க் கடைகளில் "இங்கு அரசியல் பேசா தீர்கள்" என்று எழுதி வைத்திருப்பார்கள். அரசியல் மீதான அவநம்பிக்கையின் வெளிப்பாடு அது. நம்மை நாமே நமக்காய் ஆள்வதுதான் அரசியல் என்ற உணர்வு இல்லாததால்தான் அதை சாக்கடை என்கிறோம். எனவே, அரசியலை கேவலமாக நினைப்பதை முதலில் கைவிடுவோம். சாக்கடை இல்லாத தெரு நாறிவிடும் என்பதிலிருந்தே அரசியலின் முதன்மை புரியும். எனவே, அரசியலில் நாம் தான் பிரதான அங்கம் என்பதை உணர்ந்து அதைச் சீர்ப்படுத்த முயல்வோம். அதற்காக அரசி யல் பேசுவோம்.



"நாட்டை, அரசை நடத்துவதே அரசியல் கலை. மன்னராட்சிக் காலத்தில் மன்னராகவும் அமைச்சர்களாகவும் இருந்தவர்கள் பயின்ற கலை அரசியல்.

---

தேசி வியாபாரி
கண்ணில் தட்டுப்பட்டான்
விசாரிப்போடு
தொடர்ந்தேன்

போட்ட பிளேன்ரீயை
கையில் கொடுத்து
தேசிக்காய் வாங்கி
காசை கொடுத்தேன்

கதிரை கொடுத்தேன்
அமரவில்லை
கல்லின் மேல் அமர்ந்தான்

கறை படிந்த
அவன் ஆடையினை
கண்ணுற்ற போது

வாழைக்குலைக்கயர்
படிந்ததென
வறுமையை மறுத்தான்

பாவம் அவன்
பாசமானவன் நேசத்தோடு
குடும்பத்திற்காய்
பாடுபடுபவான்

நிலத்தின் பயிர்களை
புதுவிதியாய் விளைவித்து
வருகின்ற வருவாயை
பெற்றுக் கொள்பவன்

முத்தான மூன்றை
சொத்தாக பெத்தவன்
சத்தான உணவை

நித்தம் கொடுத்து
தன்னுடம்பை வருத்தி
பள்ளியில்
படிக்க வைக்கிறான்

கபடமற்ற அவன்
இருந்ததைவிற்று
ஆஸ்ரேலியா
கனவோடு
கப்பல் கவிழாமலே
காட்டிக்
கொடுக்கப்பட்டு
சிறை வாழ்வு
அனுபவித்து

அனைத்தையும்
இழந்தான்

மெலிந்த அவனுருவால்
மலிந்த புன்னகைகள்
ஏராளம் இயலாமை
என்றவன்
ஒய்ந்து போகாமல்
உழைக்கின்றான்
குடும்பத்திற்காய்

ஒருநாள் அவன் வாழ்வு
விடியும்
அதன் போது
புது வரலாறு
காவியமாகும்

**வே.அகிலேஸ்வரன்**
**மருதங்கேணியூர்**



## மாலை பொழுதின் சந்திப்பில்......

# ஊதிய ஒப்பந்தம் நிறைவடைந்து டெஸ்ட்டில் பலம்பெறுமா தீவுகள்

■ பிரகாஸ்



ஊதிய ஒப்பந்தப் பிரச்சனை காரணமாக வீரர்களின் சங்கம், கட்டுப்பாட்டுச்சபை இரண்டுக்கும் இடையிலான மோதல்களால் கிரிக்கெட் உலகில் பல அதிருப்திகளையும், முறைப்பாடுகளையும் வாங்கிக் குவித்திருந்த மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் நடைமுறைகள் தற்பொழுது திசைமாற ஆரம்பித்திருக்கின்றன. இந்தியாவில் நடைபெற்று முடிந்த ரி-20 உலகக் கிண்ணத் தொடரை இரண்டாவது முறையாகக் கைப்பற்றி பலரையும் வியக்க வைத்தது மேற்கிந்தியத் தீவுகளின் அணி. இறுதியாட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி கிண்ணம் வென்றதன் பிற்பாடு தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் மீது பல விமர்சனங்களைக் குவித்திருந்தார் அணியின் தலைவரான சமி.

அவர் தனது உரையில் – நல்ல அமைப்பும் வளர்ச்சியை நோக்கிய முன்னெடுப்பும் இருக்குமேயானால், ஒருநாள், டெஸ்ட் ஆட்டங்களிலும் கூட தொடர்ந்து முன்னேற்றப்பாதையில் செல்ல முடியும் என்று நான் நம்புகிறேன். இந்தத் தொடரில் நாங்கள் விளையாடுவோமா என்று பலரும் பேசினர். எங்களுக்கு நிறைய பிரச்சினைகள் இருந்தன. எங்கள் கட்டுப்பாட்டுச்சபையே எங்களை மதிக்கவில்லை என்பதாகவே உணர்ந்தோம். மார்க் நிகலஸ் எங்கள் அணியை மூளையில்லாதவர் களின் அணி என்று கேலி செய்தார். தொடருக்கு முன்பாக இத்தகைய விடயங்கள் எங்களை நாங்கள் ஒருங்கிணைத்துக் கொள்ள உதவின. எங்களுக்கு ஜெர்சி கூட இல்லை. அதை மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஒழுங்கமைத்துத் தரவில்லை. எமது முயற்சியால்தான் நாம் அணிந்திருக்கும் ஜெர்சிகூட எங்களுக்குக் கிடைத்தது. பல பகுதிகளிலும் இருந்து வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. ஆனால், மே.இ.தீவுகள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் இருந்து இன்னும் கூட வாழ்த்துச் செய்தி வரவில்லை, இது மிகுந்த ஏமாற்றமளிக்கிறது. இதே அணி எப்போது மீண்டும் இணையும் என்று தெரியாது. எங்களை ஒருநாள், டெஸ்ட் ஆட்டங்களுக்குத் தேர்வு செய்ய மாட் டார்கள். மீண்டும் ரி-20 எப்போது விளையாடுவோம் என்று தெரியவில்லை. என்று குறிப்பிட்டமை பலரினதும் கவனங்களை ஈர்த்தன. இதனையடுத்து சச்சின், லாரா உள்ளிட்ட பல ஜாம்பவான்கள் வீரர்களுக்கு தமது ஆதரவை வெளிப் படையாகவே தெரிவித்தனர். தற்பொழுது தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் நிலைப்பாட்டில் சில மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளன. தீவுகளின் நகர்களில் ஒன்றான செண்.லூசியாவில் உள்ள மைதானம் ஒன்றுக்கு டேரன் சமி சர்வதேச மைதானம் என்று பெயர்சூட்டப்பட வுள்ளது. உலகக்கிண்ணத்துக்காக வழங்கப்பட்ட பரிசுத் தொகையை வீரர்களிடையே பகிர்ந்தெடுக்க கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபை அனுமதி வழங்கியுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக ஜூன் மாதம் நடைபெறவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் வீரர்களின் ஊதிய ஒப்பந்தம் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக தீவுகளின் சபை அறிவித்துள்ளது.

இவ்வளவு நாளும் வீரர்களின் விடயத்தில் மௌனம் காத்துவந்த சபை, தற்பொழுது அந்த மௌனத்தை கலைத்துள்ளமை, பிரச்சனை தீர்க்கப்படுவதற்கான ஒரு சிறந்த அறிகுறியாகக் கருதப்படுகின்றபோதிலும் நட்சத்திர வீரர்களான பொலார்ட், பிராவோ, சமி, கெயில் கட்டுப்பாட்டுச்சபையில் நம்பிக்கையில்லை என்று குறிப்பிட்டுள்ளனர். மொத்தத்தில் பிராவோ, கெயில், ரசல், சமி, பொலார்ட், போன்ற நட்சத்திர வீரர்கள் மீண்டும் ஒருநாள், டெஸ்ட் ஆட்டங்களுக்குத் திரும்புவார்களா? அல்லது இல்லையா என்பது ஜூனில் தெரிந்துவிடும்.






## சென்னை, ராஜஸ்தான் அணிகள் இல்லாமல் ஐ.பி.எல். தொடரா?

வருடாவருடம் கிரிக்கெட் உலகில் பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் விடயங்களில் ஒன்றாக மாறியுள்ளது ஐ.பி.எல். தொடர். இதுவரை காலமும் நடைபெற்றுவந்த ஐ.பி.எல். தொடர்களுடன் ஒப்பிடுகையில் நடப்புவருடத்துக்கான தொடர் பெரும் ஏமாற்றமும் எதிர்பார்ப்பும் கொண்ட தொடராக அமைந்துள்ளது. குறித்த தொடரில் பெரும் ஆதிக்கம் செலுத்தி வந்த அணிகள் வரிசையில் சென்னை, ராஜஸ்தான் அணிகளை முறையே முதலிரு இடங்களிலும் குறிப்பிடலாம். இந்த அணிகளின் உரிமையாளர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டமையால் இந்த அணிகளுக்கு 2 வருடங்கள் தடை விதிக்கப்பட்டன. இதனால் இந்த வருடத்துக்கான தொடரில் அந்த அணிகள் இல்லாமை ஏமாற்றத்துக்குரிய விடயமாகவே அமைந்துள்ளது. சென்னைக்கு என்று மிகப் பெரும் ரசிகர் பட்டாளமே உண்டு. இந்தியாவில் மட்டுமல்லாமல் இலங்கையில் அதிலும் குறிப்பாக வடபகுதியில் அதிகளவான ரசிகர் பட்டாளத்தை கொண்ட ஒரு அணியாக இருந்து வந்தது.

டோனி, ரெய்னா, ஜடேஜா, அஸ்வின், நெக்ரா, மக்கலம், பிளாசிஸ் என பெரும் அச்சுறுத்தலான இந்தப் பட்டாளம் இந்த வருடத்தில் இல்லை. சென்னைக்கு அடுத்த படியாக ஐ.பி.எல். தொடரில் ஆதிக்கம் செலுத்திய அணியாரக ராஜஸ்தானைக் குறிப்பிடலாம். பெரும் ஆர்ப்பாட்டங்கள் இல்லாமல் அமைதியாகச் சாதித்துவிட்டுச் செல்லும் அந்த அணியையும் இந்த வருடம் பலரும் தவறவிடுவோம். இவை நடப்புவருடத்துக்கான ஐ.பி.எல். தொடரில் ஏமாற்றத்துக்குரிய விடயமாகவே அமைந்துள்ளது.

இந்த அணிகள் இல்லாதமை மற்றொரு புறத்தில் பெரும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

அதாவது பதில் அணிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட புனே, ராஜ்கோட் அணிகள் சென்னை, ராஜஸ்தான் இல்லாத குறையை தீர்க்குமா என்பது மிகப் பெரும் எதிர்பார்ப்பே. இவ்வளவு நாளும் ஒன்றாகவே பயணித்துவந்த டோனி, அஸ்வின், ஜடேஜா, நெக்ரா, ரெய்னா பட்டாளம் தற்பொழுது உடைந்துள்ளது. டோனி, அஸ்வின் இருவரும் புனேக்கும் ரெய்னா, ஜடேஜா ராஜ்கோட் அணிக்கும் சென்றுள்ளனர்.

நெக்ரா பிறி தொரு அணிக்குச் சென்றுள்ளார். எனவே இந்த புதிய இணை எவ்வாறு சாதிக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மொத்தத்தில், இந்த வருடத்தில் சென்னைக்கு விசில் போட முடியாதது பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும், மறுபுறத்தில் எதிர்பார்ப்பையும் உண்டு பண்ணியுள்ளது.

## பயன்தரும் வீட்டுக் குறிப்புகள்!

- மீன் பாத்திரத்தில் மீன் வாடை இருந்தால் சீயக்காய்த் தூளையும், புளியையும் சேர்த்துப் பாத்திரத்தைத் துலக்கினால் மீன் வாடை போய்விடும்.
- எலுமிச்சம்பழம்உலர்ந்து விட்டால் கொதிநீரில் ஐந்து நிமிடம் போட்டு பிறகு சாறு பிழிந்தால் நிறையச் சாறு கிடைக்கும்.
- மழை நீரில் பருப்பு வகைகளை வேகவைத்தால் ஒரு கொதியில் வெந்து விடும். ருசியும் அதிகரிக்கும்.
- ஊறுகாய் போடுவதற்கு மர அகப்பையை உபயோகிக்க வேண்டும்.
- தயிர், மோர் பாத்திரங்களைச் சுத்தம் செய்து வெயிலில் காய வைத்தால் அந்தப் பாத்திரங்களில் உள்ள வாடை நீங்கி விடும்.
- பிளாஸ்ரிக்கில் உள்ள துர்நாற்றம் அகல வினிகர் போட்டுக் கழுவலாம்.
- கறிவேப்பிலைகள் காயாமல் இருக்க வேண்டுமானால், அவற்றை ஓர் அலுமினியப் பாத்திரத்தால் மூடி வைத்தால் அவை காயாமல் இருக்கும்.



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 40 | 60 | 60 | 20 | 30 |
| கத்தரி | 80 | 40 | 70 | 50 | 50 | 40 | 50 | 50 |
| கரட் | 80 | 100 | 80–200 | 120 | 100 | 120 | 80 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 60 | 40 | 80 | 60 | 50-60 | 40 | 60 | 60 |
| பாகல் | 120 | 100 | 140 | 100 | 100 | 100 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80 | – | 50-80 | – | 70 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 75 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 80 | 80 | 60 | 120 | 70 | 65 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 30-40 | 50 | 15 | 35 |
| தக்காளி | 50 | 60 | 40 | 80 | 40-45 | 80 | 60 | 160 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 40 | 30-40 | 40 | 35 | 30 |
| கீரை | 30 | 40 | 40 | 15 | 20-30 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 35 | 25-30 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 100 | 100 | 80 | 100-120 | 120 | 100 | 120 |
| புடோல் | 40 | 40 | 50 | 60 | 50-60 | 40 | 30 | 160 |
| கோவா | 50 | 70 | 80 | 80 | 40-60 | 100 | 60 | 40 |
| வெண்டி | 80 | 40 | 80 | 80 | 70-80 | 60 | 50 | 60 |
| போஞ்சி | 120 | 120 | 120 | 140 | 100-120 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 140 | 100-120 | 120 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 30-35 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 70-80 | 100 | 75 | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 140 | 160-170 | 200 | 200 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 80 | 100 | 200 | 100 | 100-120 | 120 | 50 | 80 |
| இராசவள்ளி | 140 | 140 | 140 | 160 | 120-140 | – | 110 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 300 | 350-500 | 300 | 300 | 300 |
| பனங்கிழங்கு | – | 04 | – | – | – | – | – | – |




## சிலிட் பஞ்சாபி

நீண்ட சைட் சிலிட் பஞ்சாபிகள் அறிமுகமாகியுள்ளன. நெற் துணியில், அதிக வேலைப்பாடுகளுடன் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் விலை 6,000 ரூபாவில் இருந்து 7,000 ரூபா வரை ஆகும்.

## அரிசித் தட்டை



**தேவையான பொருள்கள்**

அரிசி – அரை கிலோ
பச்சை மிளகாய் – 2
பெருங்காயம் – சிறிது
எள் – அரைத் தேக்கரண்டி
தேங்காய் துருவல் – கால் கப்
வெண்ணெய் – 1 தேக்கரண்டி
உப்பு, எண்ணெய் – தேவையான அளவு

**செய்யும் முறை**

- அரிசியை ஊற வைத்து நிழலில் உலர வைத்து மாவாக அரைக்கவும்.
- பச்சை மிளகாயை விழுதாக அரைக்கவும்.
- அரிசி மாவை வெறும் சட்டியில் கொட்டி நன்கு சூடாக்கி இறக்கவும்.
- அதில் தேங்காய் துருவல், வெண்ணெய், பெருங்காயம், எள், பச்சை மிளகாய் விழுது, உப்புச் சேர்த்து தேவையான அளவு தண்ணீர் விட்டு தட்டைகளாகச் செய்யவும்.
- தட்டைகளை ஒரு துணியில் போட்டு அரை மணி நேரம் காற்றில் உலர விடவும்.
- தட்டையில் இருக்கும் ஈரத்தைத் துணி இழுத்துக்கொள்ளும். பிறகு சட்டியை அடுப்பில் வைத்து அதில் எண்ணெய் ஊற்றி பொன்னிறமாக பொரித்தெடுக்கவும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 600 | 700 | 800 | 600 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 200 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 600 | 600 | – |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 700 | – | 550 |
| சீலா | 300 | 500 | 400 | 600 | 500 | 450 | 400 |
| விளை | 650 | 400 | 400 | 600 | 450 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 40 | 400 | 350 | 350 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 500 | 400 | 350 |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 500 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | – | – |
| திரளி | 300 | 350 | 200 | 200 | 350 | 200 | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 300 | – | 370 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 300 | 150 |
| மதனம் | 150 | 200 | 180 | 300 | 350 | 300 | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 200 | 250 | 300 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 300 | 300 | – | – |

**நாளை**
பங்குனி -29
திங்கட்கிழமை
11.04.2016
திதி: சதுர்த்தி
மு.ப.08.17 வரை
நட்சத்திரம்: ரோகினி
மு.இ.09.37 வரை
ராகுகாலம்:
07.36-09.06 வரை
சுபநேரம்:
12.06-01.36 வரை



சாவு வீட்டில் செல்பி


கண்ணா நீ அம்புலன்ஸ் அவசரம் பார்த்திருப்பாய், ரேஷன் பொருள் அவசரம் பார்த்திருப்பாய் இன்னும் பல அவசரம் பார்த்திருப்பாய் ஆனா



மது இறக்குமதி அவசரத்தை பார்த்திருக்கிறாயா? அது அம்மா ஆட்சியில் தான் பார்க்கமுடியும் பாரு!

"எவ். எம். இல வேலைக்குச் சேர்ந்தது தப்பா போச்சுடா"
"ஏன்டா?"
"சம்பளம் கேட்டா, "கேளுங்க, கேளுங்க, கேட்டுக்கிட்டே இருங்க' என்று சொல்லுறாங்க"



ஒரு பெரிய அடுக்குமாடிக் குடியிருப்பு. அங்கு முதல் மாடியில இருக்கிறவருக்கும் 15ஆவது மாடியில இருக்கிறவருக்கும் ஆகவே ஆகாது. எப்ப பார்த்தாலும் சண்டை தான். குப்பை போடறதிலை இருந்து கார் பார்க்கிங் வரை எதுக்கு எடுத்தாலும் சண்டைதான்.

மேல் வீட்டுக்காரன் கீழ் வீட்டுக்காரனை எப்படியாவது பழி வாங்க முடிவு செய்தான். கீழ் வீட்டுகாரனிடம்... "நாம எதுக்கு எடுத் தாலும் சண்டை போடறது நல்லா இல்லை. நாம இரண்டு பேரும் இனி நண்பர்கள். அதைக் கொண்டாடுவதற்கு ஞாயிற்றுக்கிழமை நீ எனது வீட்டுக்கு விருந்துக்கு கண்டிப்பாக வரவேணும்" எனச் சொன்னான். கீழ் வீட்டுக்காரனும் சம்மதித்தான்.

ஆனால், கீழ் வீட்டுக்காரன் மேல் வீட்டுக்காரனை எப்படியாவது பழி வாங்க முடிவு செய்து சனிக்கிழமை மத்தியானத்திலை இருந்தே சாப்பிடவில்லை. ஞாயிற்றுக்கிழமை நாம் சாப்பிடும் சாப்பாட்டுலேயே அவன் செலவு அதிகமாகி மயக்கம் போடணும், என்று திட்டம் போட்டான்.

ஞாயிற்றுக்கிழமை வந்தது. இவனும் காலையில் அவன் வீட்டுக்குப் போக 'லிப்ட்க்குப் போனான், அது அன்று வேலை செய்யவில்லை. இது மேல் வீட்டுக்காரனுக்குத் தெரிந்துதான், அன்று கீழ் வீட்டுக் காரனைச் சாப்பிடக் கூப்பிட்டான். இவனும் விடவில்லை. லிப்ட் வேலை செய்யாட்டி என்ன? நாம படி ஏறிப்போனா இன்னும் பசிக்கும். இன்னும் நிறையச் சாப்பிடலாம் என இவன் படியேறிப் போறான். அங்கே வீடு புட்டியிருந்தது. கதவில் ஒரு பேப்பர் ஒட்டி இருந்தது அதில்........

"நன்றாக ஏமாந்து விட்டாயா முட்டாள்" என எழுதி இருந்தது. இவனுக்கு மிகவும் கேவலமாகப் போய்விட்டது. பசி வெறியுடன் கோபப்பட்டான். தான் ஏமாறவில்லை என்பதை மற்றவனுக்குத் தெரியப்படுத்த முடிவு செய்து, பேனா எடுத்து அந்தப் பேப்பரிலேயே பெரிதாக "என்னை முட்டாளாக்க நினைச்ச நீ தாண்டா முட்டாள். ஏன்னா நான் வரவே இல்லையே" என எழுதிட்டு வந்துட்டான்.

என்ன அறிவாளனடா சாமி.

படித்ததில் பிடித்தது

Kanda
சமபாம போட்டவுடன் ஓடிச் சென்று வாங்கும் பிரியாணி நீண்ட நாள் பிரிந்து இருந்த நண்பனை நேரில் சந்திக்கும் மகிழ்ச்சியைத் தரவல்லது.

மனிதா! இன்னொருவரின் அழகில் குறை காண உன்னிடம் என்ன தகுதி உள்ளது?
நீ அழகன் என்ற தகுதியா?
உன்னைச் சுற்றி பார்.
யாரோ ஒருவனுக்கு நீதான் அசிங்கம்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** ஆன்மிகச் சிந்தனையுடன் செயற்படுவீர்கள். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**இடபம்:** சொந்த விடயம் பற்றி, பிறரிடம் பேச வேண்டாம். கூடுதல் உழைப்பின் மூலம், தொழில், வியாபாரத்தில், ஆதாயம் கூடும். பிள்ளைகளின் வழியில் செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**மிதுனம்:** செயலில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகைப்பயன் பெறுவர். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.

**கடகம்:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், விரிவாக்க முயற்சி வெற்றி பெறும். இலாபம் கூடும். பெண்களுக்கு, சகோதர வழியில் நன்மை கிடைக்கும்.

**சிங்கம்:** போட்டி, பந்தயத்தில் ஈடுபட வேண்டாம். தொழிலில், குறைவேலையைச் சரி செய்வது நல்லது. உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**கன்னி:** நிதானத்துடன் பேசுவது அவசியம். தொழில், வியாபாரத்தில், இடையூறு குறுக்கிடலாம். சுமாரான இலாபம் கிடைக்கும். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாற்றம் உண்டாகும்.

**துலாம்:** தனித்திறமையை வெளிப்படுத்தி புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டாகும். பெண்கள், செல்வாக்குடன் திகழ்வர்.

**விருச்சிகம்:** தாமதித்த பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும். நண்பர்களுடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள். பெண்கள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு மகிழ்வர்.

**தனுசு:** மறைமுக எதிரிகளை அடையாளம் காண்பீர்கள். தொழில், வியாபார நடைமுறை, மந்தகதியில் இருக்கும். மிதமான இலாபம் கிடைக்கும். தெய்வ வழிபாடு மனம் அமைதியைத் தரும்.

**மகரம்:** உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு, புதிய வாய்ப்பு உண்டாகும். இலாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கும்பம்:** எதிர்ப்புகளைச் சாதுரியமாக வெல்வீர்கள். தொழில், வியாபாரத்தில், அபிவிருத்திப் பணி சிறப்பாக நிறைவேறும். நிலுவைப் பணம் கிடைக்கும். குடும்பத்தில், ஒற்றுமை மேலோங்கும்.

**மீனம்:** முக்கியமான பணி நிறைவேறத் தாமதம் ஆகலாம். தொழில், வியாபார நடைமுறையில், புதிய மாற்றம் செய்வீர்கள். இலாபம் மிதமாக இருக்கும். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நன்மை தரும்.



## நடிகர் சங்க கிரிக்கெட்

நடிகர் சங்கக் கட்டடம் கட்டுவதற்கான நிதி திரட்டுவதற்கு ஏப்ரல் மாதம் 17 இல் நடக்கவுள்ள நட்சத்திர கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் வீரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் எட்டு அணிகள் பங்கேற்கின்றன. 8 அணிகளில் 48 நடிகர்கள் பங்குபெறுகிறார்கள். ஒவ்வொரு அணியிலும் 6 வீரர்கள் பங்குபற்றும் வகையில் 6 ஓவர்களுக்குப் போட்டி நடக்கும். மொத்தம் 13 கோடி ரூபா (இந்திய)நிதி திரட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | 9 | | 5 | | 7 |
| 8 | | 9 | | | | | | |
| | 7 | | 4 | | | | 2 | 9 |
| | | 4 | | | | | | 6 |
| 3 | | | | | 4 | | | 5 |
| | | | | 5 | 9 | 4 | 1 | |
| 2 | | | | | 7 | | | |
| | | 7 | | | 1 | | 3 | 2 |
| 5 | | 1 | 3 | 2 | | | 7 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 2 | 6 | 7 | 3 | 1 | 8 | 4 |
| 3 | 8 | 4 | 9 | 5 | 1 | 2 | 6 | 7 |
| 1 | 6 | 7 | 4 | 8 | 2 | 3 | 5 | 9 |
| 7 | 4 | 6 | 5 | 2 | 9 | 8 | 1 | 3 |
| 5 | 2 | 9 | 3 | 1 | 8 | 4 | 7 | 6 |
| 8 | 1 | 3 | 7 | 6 | 4 | 5 | 9 | 2 |
| 4 | 9 | 1 | 8 | 3 | 7 | 6 | 2 | 5 |
| 6 | 7 | 8 | 2 | 4 | 5 | 9 | 3 | 1 |
| 2 | 3 | 5 | 1 | 9 | 6 | 7 | 4 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நீரிழிவை வெற்றி கொள்வோம்

மருத்துவர் எம்.அரவிந்தன்



**1. உலக சுகாதார தினம் (World Health Day) கடந்த 7 ஆம் திகதி உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. இந்தத் தினம் பற்றியும் அதன் நோக்கங்கள் பற்றியும் விளக்கிக் கூறுங்கள்?**

உலக சுகாதார தாபனமானது (World Health Organization) 1950ஆம் ஆண்டிலிருந்து ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதியை உலக சுகாதார தினமாகக் கொண்டாடி வருகின்றது. உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு வருடமும் வெவ்வேறு இலக்கு களைக் கருத்தில் கொண்டு இந்தத் தினம் கொண் டாடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இந்த ஆண்டுக்குரிய சுகாதார தினத்தின் பிரதான மான தொனிப்பொருள் நீரிழிவு சம்பந்தமான தாகும்.

இந்த வருடத்துக்குரிய சுகாதார தினத்தையொட்டிய உலகளாவிய செயற்பாடுகளின் பிரதான நோக்க மானது நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வை மக் கள் மத்தியில் ஏற்படுத்துவதாகும். உலகில் ஏறக் குறைய 400 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயி னால் பாதிக்கப்பட்டுள்ளதோடு இந்தத் தொகை யானது இன்னமும் 20 வருடங்களில் இரட்டிப் படையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக சனத்தொகையில் பெரும்பாலான நீரிழிவு நோயாளர்கள் வாழ்வது தென்னாசிய மற்றும் தென்கிழக்காசியப் பிராந்தியங்களிலேயாகும். நீரிழிவு தொடர்பான இறப்புக்களில் 80 சதவீத மானவை குறைந்த அல்லது நடுத்தர வருமான முள்ள நாடுகளிலேயே ஏற்படுகின்றமை குறிப் பிடத்தக்கதாகும்.

உலகம் முழுவதிலும் ஏறக்குறைய 9 சதவீத மானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள் ளனர். இலங்கையிலும் நீரிழிவு நோயினால் பாதிக் கப்பட்டோரின் சதவீதமானது சிறிது சிறிதாக அதி கரித்துச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. அண்மையில் கொழும்பு மாவட்டத்தில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி ஏறக்குறைய 20 சதவீதமானோர் நீரிழிவால் அல்லது நீரிழிவுக்கு முந்திய நிலையினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதுவொரு அபாய அறிவிப்பு எனக் கருத்தில் கொண்டு நாம் செயற்படுவது மிக அவசியமாகும்.

**2. நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் சதவீதம் இவ்வாறாக அதிகரித்துச் செல் வதற்கான காரணங்கள் எவை?**

ஆரோக்கியமற்ற (Unhealthy) உணவுகளை உட்கொள்ளுதல், உடற்பயிற்சியற்ற வாழ்க்கைமுறை மற்றும் அதிகரித்துச் செல்லும் உடற்பருமன் என்பவை இந்த அதிகரிப்புக்கு பிரதானமான காரணங் களாகும். தொற்றும் நோய்களால் பாதிக் கப்படுகின்ற இலங்கை போன்ற வளர்முக நாடுகளில், நீரிழிவு மற்றும் இருதய நோய் போன்ற தொற்றா நோய்களும் (Non Communicaple disease) அதி கரித்துச் செல்வது மிகவும் ஒரு துரதிர்ஷ்ட வசமான நிலையாகும்.

**3. தொற்றா நோய்கள், குறிப்பாக நீரிழிவு தொடர்பாக எமது மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டு வருகின்றதா? இதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?**


நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வு சிறிது சிறிதாக எமது மக்கள் மத்தி யில்ஏற்பட்டுவருவதைக்காணக்கூடியதாகவுள்ளது. இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில், பத்திரிகை கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங் களும் மற்றும் சமூக வலைத்தளங்களும் பிரதான மான பங்கை ஆற்றி வருகின்றன.

இலகுவான வாழ்க்கை முறை மாற்றங்கள் மூலம் நீரிழிவு போன்ற பல தொற்றா நோய்கள் ஏற்படுவ தைத் தவிர்க்கவோ அல்லது பிற்போடவோ முடியும். எமது மக்கள் மத்தியில் நீரிழிவு நோய் பற்றிய பல தப்பபிப்பிராயங்கள் (Misconcepts) உள்ளன. நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு மக் கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

**4. நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

நீரிழிவு நோய் உள்ளதாகக் கண்டறியப்பட்ட ஒருவர் ஆரம்பத்திலிருந்தே மிகவும் அவதானமாக இருப்பதன் மூலம் நீரிழிவால் ஏற்படும் பல்வேறுபட்ட நீண்டகாலப் பிரச்சினைகளிலிருந்து விடுபட முடியும்.

இலகுவான வாழ்க்கை முறை மாற்றங்களை நடை முறைப்படுத்துவதன் மூலம் நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முடியும். மேற் கத்தைய மற்றும் துரித உணவு (Fast food) வகை களைத் தவிர்த்து ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பது மிகவும் அவசியமானதாகும். சீனிச்சத்துள்ள இனிப்பான உணவுகளைத் தவிர்ப்பதும், மாச்சத்துள்ள உண வுகளைக் குறைப்பதும் மிக அவசியமானதாகும். எனினும் நீரிழிவு நோயாளியொருவர் தனது உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக ஆரோக்கியமான



ஊட்டச்சத்துள்ள உணவுகளை உட்கொள்ள வேண் டியது அவசியமாகும். ஒவ்வொரு நாளும் தன்னால் முடிந்த அளவு தேகப் பயிற்சியை வைத்திய ஆலோசனைப்படி மேற்கொள்வதும் அவசியமானதாகும். நீரிழிவுநோயாளியானவர் தனது உடல் நிறையைச் சீராகப் பேணுவதும் (தகுந்த BMI உடற்திணிவுச் சுட்டெண்) மிக அவசியமாகும்.


நீரிழிவு நோயாளியொருவர் அந்த நோய்க் கான மருந்துகளைக் கிரமமாக உட்கொள்வதும் மருத்துவ சிகிச்சை நிலையத்துக்கு குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை வருகை தந்து மருத் துவர்களின் பரிசோதனைகளுக்கு உட்படுவதும் அவசியமானதாகும்.

நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இல்லாதவிடத்து இரு தய நோய், கண் பார்வை குறைவடைதல், சிறுநீரகம் பாதிப்படைதல் மற்றும் பல வகையான நரம்பு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே நீரிழிவு நோய் கண்டறியப்பட்ட நாளி லிருந்தே நோயாளியொருவர் மிகவும் அவதான மாக அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் மூலம் நீண்டகாலப் பிரச்சினைகளின் (Complications) தாக்கங்களிலிருந்து விடுபடவோ அன்றி அந்தத் தாக்கங்கள் ஏற்படுவதைப் தவிர்க்கவோ முடியும்.

**5. இறுதியாக, நீரிழிவு நோயின் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்கான அல்லது நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் பற்றிச் சிறிது கூறுங்கள்?**

உலக சுகாதார தாபனம் மற்றும் பல அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் உலகளா விய ரீதியில் பல செயற்றிட்டங் களைச் செயற்படுத்தி வருகின்றன. எமது நாட்டிலும் சுகாதார அமைச்சு மற் றும் இலங்கை நீரிழிவுப் பேரவை (Srilanka Diabetes Federation) போன்றவை மிக முக்கியமான பங்கு வகித்து வருகின்றன. யாழ்ப்பாண மாவட் டத்தைப் பொறுத்தவரை எமது யாழ். போதனா வைத்தியசாலையின் நீரி ழிவு சிகிச்சை நிலையமானது பல வகை யான சமூக செயற்றிட்டங்களை ஆரம் பித்து மிகவும் திறம்படச் செயற்படுத்தி வரு கின்றது. நாளைய தலைவர்களான பாட சாலை மாணவர்களிடையே ஆரோக்கிய மான வாழ்க்கை முறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது எமது அடுத்த இலக்காகும். இந்தமுறை உலக சுகாதார தினத்தை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் வேலை புரியும் அனைத்துப் பணியாளர்களிடையேயும் நீரிழிவு மற்றும் ஆரோக்கிய வாழ்வு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்தி ருக்கின்றோம்.

நீரிழிவு போன்ற தொற்றா நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கவும் அவற்றின் தாக்கத்தைக்





கட்டுப்படுத்தவும் உலக சுகாதார தினத்தையொட்டிய இந்தக் காலப்பகுதியில் நாம் அனைவரும் உறுதி பூணுவது காலத்தின் கட்டாயமாகும்.

நீரிழிவு மற்றும் அகஞ்சுரக்கும் தொகுதியியல்,
சிறப்பு வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

# மன்னார் மறைமாவட்ட 35ஆவது ஆண்டு நிறைவில் யாழ். ஆயருக்கு அங்கு மகத்தான வரவேற்பு

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்*

மன்னார் மறைமாவட்டம் தனது 35ஆவது ஆண்டு நிறைவை (1981- 2016) அண்மையில் கொண்டாடியபோது தனது தாய் மறைமாவட்டமான யாழ். மறை மாவட் டத்தை நன்றியோடு நினைத்து அதன் புதிய ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கு மன்னார் மண்ணின் மகிமையை பறைசாற்றும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தோட்ட வெளி வேதசாட்சிகளின் அரசி ஆலயத்தில் வரவேற்பளித்து பெருமைப்பட்டுக் கொண்டது. மன்னார் மறை மாவட்டம் யாழ். மறைமாவட்டத்தைக் கௌரவப்படுத்திய அந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு பற்றியும் மன்னார் மறைமாவட்டத்தின் இன்றைய நிலை பற்றியும், இந்தக் கட்டுரை விளக்குகிறது. இந் தக் கட்டுரைக்கான தகவல்கள் மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் பணியாற்றும் எஸ். மரியதாசன் சீமான் அடிகளாரிடமிருந்து பெறப்பட்டது.



முதலில் ஆயர் இல்லத்தில் இருந்து வாகனத்தில் பவனியாக அழைத்துச் செல்லப்பட்ட மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, தோட்ட வெளி வேதசாட்சிகளின் அரசி ஆலயத்தின் வரவேற்பு மாதா சொரூபத்தில் இருந்து பாண்ட் வாத்தியத்துடன் தோட்ட வெளி வேதசாட்சிகளின் அரசி ஆலயத்தின் தியான மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு யாழ் ஆயர் தலைமையில் 70 குருக்கள் புடை சூழ, மன்னார் மறை மாவட்டத்தின் 38 பங்குகளைச் சேர்ந்த ஏறக்குறைய 4ஆயிரம் இறைமக்களுடன் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. பின்னர் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் யாழ். ஆயருக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. அதன் போது உரையாற்றிய யாழ் ஆயர் 35 ஆண்டுகள் கடந்து விட்டாலும் யாழ். மன்னார் மறை மாவட்டங்களின் சகோதர உறவு வளர்ந்துள்ளது; தொடர்ந்தும் வளர்ந்து கொண்டே இருக்கும் –என்றார்.

**புதிய மன்னார் மறைமாவட்டம் உருவாக்கம்**

யாழ்ப்பாணம் 1845பெப்ரவரி 17 இல் அப்போஸ்தலிக்க ஆளுநர் பிரிவாக உருவாக்கப்பட்டு, 1886 செப்ரெம்பர் முதலாம் திகதி மறைமாவட்டமாகத் தரமுயர்த்தப்பட்டது. மன்னார் மறைமாவட்டம் 1981ஆம் ஆண்டு யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்ட போது, யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த மேதகு தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை மன்னார் மறை மாவட்டத்தின் முதல் ஆயராக (1981 - 1992) நியமிக்கப்பட்டார். இரண் டாவது ஆயராக யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த மேதகு இராயப்பு ஜோசவ் ஆண்டகை (1992 - 2016) நியமிக்கப்பட்டார். மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசவ் ஆண்டகை 75 வயதை அடைந்ததும், திருச்சபைச் சட்டம் 401 பிரிவு 1 இன் பிரகாரம் திருத் தந்தைக்கு அனுப்பிய பணி ஓய்வு விண்ணப்பத்தை திருத் தந்தை பிரான்சீஸ் ஏற்றுக் கொண்டு மன்னார் மறை மாவட்டத்துக்கு புதிய ஆயர் நியமனம் வழங்கப்பட்டு பொறுப்பேற்கும் வரை மன்னார் மறைமாவட்டத்தை நிர்வகிக்கும் அப்போஸ்தலிக்க பரிபாலகராக திருகோணமலையின் இளைப்பாறிய ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையை 2016 ஜனவரி 14 ஆம் திகதி முதல் நியமித்தார்.

**மன்னார் மறைமாவட்ட சரித்திர அமைவு**

ஏறக்குறைய 4ஆயிரம் கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட மன்னார் மறைமாவட்டம், 2004ஆம் ஆண்டுக் கணக்கின்படி 219 ஆயிரத்து 633 மக்கள் தொகையைக் கொண்டது. வடக்கே யாழ்ப்பாணத்தையும், கிழக்கே அனுராதபுரத்தையும், தெற்கே சிலாபத்தையும் மேற்கே பாக்கு நீரிணையையும் எல்லைகளாகக் கொண்ட மன்னார் மறைமாவட்டம், வவுனியா, மன்னார் என்ற அரச அதிபர் பிரிவுகளை உள்ளடக்கி அமைக்கப்பட்டது. இது, மன்னார் – மடு – முருங்கன் – வவுனியா ஆகிய மறைக்கோட்டங்களை உள்ளடக்கியது. இலங்கையின் இரண்டாவது பெரிய ஆறான அருவிஆறு (மல்வத்துஓயா) மன்னார் மண்ணை ஊடறுத்துப் பாய்கிறது. மன்னார் போர்த்துக்கேயரின் கோட்டை – அரிப்பு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அல்லி இராணிக் கோட்டை – தலைமன்னார் துறைமுகம் – 12 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிற்கு நீர் பாய்ச்சக்கூடிய கட்டுக்கரைக்குளம் – குஞ்சுக்குளம் தொங்கு பாலம் – பள்ளிமுனை 100 வருடப்பழமை வாய்ந்த 120 அடிப் பருமன் கொண்ட பெருக்க மரம் எல்லாமே மன்னர் மண்ணுக்கும், மறை மாவட்டத்துக்கும் பெருமை சேர்க்கும் விடயங்களாகும். சவேரியாரின் நேரடிப் போதகம் பெற்று இலங்கையில் முதன்முதலில் கத்தோலிக்கம் பரவிய மண் எனப் பெருமை கொண்ட மண் – 1544 இல் திருச்சபை வரலாற்றில் ஒரே நேரத்தில் அதிக தொகையாக 600 வேதசாட்சிகளின் இரத் தத்தால் புனிதப் படுத்தப்பட்ட மண் – புனித யோசவ்வாஸ் முனிந்திரர் வந்து இறங்கிய மண் – பறப்பாங் கண்டல் மாதா ஆலயம், புனித யோசவ்வாஸ் முனிந்திரர் வாழ்ந்த இடம் – விகிதாசாரப்படி அதிக கத்தோலிக்கரைக் கொண்ட மண் – பேசாலை உடக்குப் பாஸ் – மன்னார் மணம் கமழும் வாசாப்பு நாட்டுக்கூத்து எனப் பல பெருமைகளைக் கொண்ட இந்த மண்ணுக்கு – மாந்தைத் துறைமுகம் மரு தமடு அன்னையின் முதலிடமான மாந்தை கெபி என்பன முக்கியமானவை. ஆசியாவின் மிகப்பழைமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றான இலங்கையின் பெயர் போன மருதமடு அன்னை யாத்திரைத்தலம், மன்னார் மறை மாவட்டத்துக்குப் பெருமை சேர்க்கின்றது. மன்னார் மறை மாவட்டம் மருதமடு அன்னையின் பாதுகாவலில் ஒப்படைக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தவக்கால யாத்திரைத் தலங்களான பரப்புக்கடந்தான் மற்றும் ஓலைத்தொடுவாய் கத்தர் ஆலயம் கோமரசன்குளம் கல்வாரி –தள்ளாடி மற்றும் பெரியகட்டு அந் தோனியார் யாத்திரைத்தலம் என்பனவும் இங்கு முக்கியமானவை.

> **இலங்கையில் தற்போது உள்ள 12 மறை மாவட்டங்களுள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை என்ற நான்கு தமிழ் மறைமாவட்டங்கள் உள்ளன. இவற்றில் 35 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள மன்னார் மறை மாவட்டம் வேகமாக வளர்ந்து சிறப் புடன் இயங்க மடு அன்னை வழி வகுக்க வாழ்த்துவோம்.**

**புதிய மன்னார் மறைமாவட்ட வளர்ச்சிப் படிகள்**

ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை (1981 - 1992) மன்னார் மறைமாவட்டத்தில் ஆரம்பப்பணிகளை மேற்கொண்டார். மறைக்கல்விப் பணிகளை மேற்கொள்ள புனித சூசையப்பர் மறைக்கல்வி நிலையம் – மனித முன்னேற்றப் பணிகளை செம்மைப் படுத்த, வாழ்வு உதயம் மற்றும் குரோன் என அழைக்கப்படும் வட கிழக்கு கத்தோலிக்க புனர்வாழ்வு நிறுவனம் –மறைபரப்புப் பணிகளில் பங்குகொள்ள திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகள் மற்றும் திருப்பாலத்துவ சபை – குடும்பப் பணிகளைக் கட்டி எழுப்ப குடும்பப் பணி ஆணைக்குழு – ஊடகப் பணிகளை ஆற்ற மன்னா பத்திரிகை – ஆரம்ப குருத்துவ உருவாக்கற் பணிகளில் கவனம் செலுத்த மடுமாதா சிறிய குருமடம் (1982) – விவிலிய அறிவைப் போதிக்க வேதாகமக் குழு – அரச சார்பற்ற பணிகளை ஒன்றிணைக்க மன்னார் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் (1986) – மார் என அழைக்கப்படும் மன்னார் புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைப்பு (1985) – ஆயர் இல்லப் பணிகளை தனியாக மேற்கொள்ள ஆயர் இல்லம் (1986) எனப் பல பணிகள் முன்னெடுக்கப்பட்டன. தோட்டவெளியில் வேதசாட்சிகளின் அரசி ஆலயம் – வவுனியா, செட்டிகுளம், நானாட்டான், பரப்பாங்கண்டல் ஆகிய இடங்களில் பெண்களுக்கான விடுதி மற்றும் சிறுவர்களுக்கான தங்குமிடம் – முருங்கன் மாணவர் இல்ல விஸ்தரிப்பு – கீரிசுட்டான், பூமலந்தான் ஆகிய இடங்களில் வீடமைப்புத் திட்டங்கள் என மேற்கொள்ளப்பட்ட பல பணிகளோடு ஆள்காட்டி வெளி – ஓமந்தை – பெரியகட்டு போன்ற புதுப் பங்குகளும் உருவாக்கப்பட்டன.

ஆயர் மேதகு இராயப்பு ஜோசவ் ஆண்டகை (1992 - 2016) காலத்தில் மன்னார் மறைமாவட்டம் மேலும் வளர்ச்சி கண்டது. மன்னார் மறைமாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் 5 குருக்கள் வீதம் திருநிலைப்படுத்தப்பட்டு வருகின்றனர். 12 குருக்களுடன் 1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மன்னார் மறை மாவட்டத்தில் இன்று 80 மறைமாவட்டக் குருக்கள் உட்பட துற வறசபைக் குருக்கள் மாருடன் இணைந்து கிட்டத்தட் 100 குருக்கள் மாரைக் கொண்டுள்ளது. 16 புதிய பங்குகள் உருவாக்கப்பட்டுள்ளன. 15 பங்குப் பணிமனைகள் அமைக்கப்பட்டுள்ளன. 50 ஆலயங்கள் கட்டி எழுப்பப்பட்டுள்ளன. துறவற குருக்களுக்கான மடங்கள் பல தொடங்கப்பட்டு பணி ஆற்றப்படுகிறது. நானாட்டான், அடம்பன் ஆகிய இடங்களில் டிலாசால் சபை – செட்டிகுளத்தில் பிரான்சீகன் சபை – முருங்கனில் டொன் பொஸ்கோ சபை – தரணிக்குளத்தில் கப்பூச்சியன் சபை – வவுனியா பம்மைபடுவில் கிளறீசியன் சபை என துற வற சபைக் குருக்கள் மாரின் பணி விரிவடைந்துள்ளது. இவர்களோடு செபமாலைத்தாசர் சபை – அமல மரித்தியாகிகள் சபை – சலேசிய சபையினர் – கிளறீசிய சபை – திருவுளப் பணியோர் சபை – பிரான்சிஸ்கன் சகோதரர்கள் ஆகியோரும் பணியாற்றுகின்றனர். 18 கன்னியர் மடங்கள் தொடங் கப்பட்டுள்ளன. திருக் குடுப்பக்கன்னியர் – கார்மேல் சபையினர் – நல்லாயன் சபைக்கன்னியர் – திருச்சிலுவைக்கன்னியர் – சலேசிய சபையினர் – சல்வற்ரோறியன் சபையினர் – டோமினிக்கன் சபையினர் – மாசில்லா மரிக்கன்னியர் – அமல அன்னை சபையினர் – வியோன் சபைக்கன்னியர் – செபமாலைக் கன்னியர் – இயேசு மரியாள் அன்பு சபைக்கன்னியர் – அன்னை திரேசாவின் அன்புச்சபைக் கன்னியர் – திருவுளப்பணி சபையினர் – பிரான்சீஸ்கன் சமாதான சபை – பிரான்சீஸ்கன் சபை என இவர்கள் பட்டியல் நீண்டு செல்கிறது. இவர்களைவிட வேறு பல இந்திய துறவறசபைக் கன்னியர்களும் இங்கு பணியாற்றுகின்றனர். 30 ஆண்டு காலப் போரின் பின்னர் காலத்தின் தேவைக்கேற்ப பல பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திருப்புமுனை எனும் பெயரில் மதுபோதைக்கு ஆளானோர்க்கான புனர்வாழ்வு மையம் மற்றும் எவருமற்ற சிறுவர்க்கான இல்லம் தோட்ட வெளியிலும், போரினால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கான மறு வாழ்வுத்திட்டம் ஆயர் இல்லத்திலும் செயற்படுகிறது. முள்ளிக்குளத்தில் போரினால் பாதிக்கப்பட்டோருக்கு மீன்பிடி வள்ளம் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. திருமண மாகாத அன்னையர் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட சிறுவர்களுக்கான பணி பூவரசங்குளத்திலும் – போரில் தனிமைப்படுத்தப்பட்ட சிறுவர்களுக்கான பணி சலேசிய சபைக்கன்னியரால் வவுனியாவிலும் – போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான கைத்தொழில் பேட்டை நல்லாயன் சபைக்கன்னியரால் வவுனியா கணேசபுரத்திலும், பிரான்சீஸ்கன் சபைச் சகோதரரால் தொழில்நுட்பக் கல்வி செட்டிகுளத்திலும் ஆற்றப்படுகிறது. முருங்கனில் டொன் பொஸ்கோ சபையினர் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி வழங்குகின்றனர். மாணவர் விடுதிகள் நானாட்டான் – தோட்ட வெளி – இலுப்பைக் குளம் – காத்தான்குளம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தொண்டர் ஆசிரியர் மற்றும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாக 90 ஆசிரியர்கள் மறை மாவட்டத்தில் பணியாற்றுகின்றனர். மன்னார் மறை மாவட்ட வாழ்வுதயத்தில் உதவிக்கரம் எனும் பெயரில் அவயவங்களை இழந்தோருக்கு பணி மற்றும் அச்சுப் பணியும் மேற்கொள்ளப்படுகின்றன. 100 பேரை உள்ளடக் கக் கூடிய தியான இல்லம் மடுப்பதியிலும் இறை இரக்க தியான இல்லம் தோட்டவெளியிலும் அமைக்கப்பட்டுள்ளன.

நிறைவாக இலங்கையில் தற்போது உள்ள 12 மறை மாவட் டங்களுள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை என்ற நான்கு தமிழ் மறைமாவட்டங்கள் உள்ளன. இவற்றில் 35 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள மன்னார் மறைமாவட்டம் வேகமாக வளர்ந்து சிறப்புடன் இயங்க மடு அன்னை வழிவகுக்க வாழ்த்துவோம்.



# ஏப்ரல் பூலில்லை!

நடுநிசி பன்னிரு மணிக்கு
நடந்த சம்பவ மிது
படுகொலை! அழிந்தது ஒன்று
பிறந்தது இன்னொன்று!

பிறந்தது ஏப்ரல் மாதமே
பறந்தது மார்ச்சாம்!
அறப்படி பல்லி கூழ்ப்பானை
அழிந்தது போலிதுவா?

நடுநிசி விலைவாசி எகிறும்
நமதிந்த நாட்டிலே!
கிடுகிடு என்றாட்சி பீடமும்
கீழ்வீழக் காணலாம்!

நல்லாட்சி மூழ்கிப் போனதே
நம்பினால் நம்புங்கள்!
இல்லாட்டி இப்படி நடக்குமா
இனிவாழல் எங்ஙனம்?

வீடுபூந்த கொள்ளை செய்யும்
வாளேந்து கூட்டம்!
கேடுசெய சிறுமி என்றும்
கழிவிரக்க மில்லார்!

நடுநிசி நடந்தனவை இப்போ
நடுப்பகல் நடக்குது!
எடுநகை பணமதை இல்லால்
எடுப்பம் உயிரையே!

நாங்கள் வந்ததும் எடுத்து
நேர்மையா தந்தால்;
தாங்கள் ஒன்றும் செய்யோம்
தாம் உப தேசம்வேறு!

ஏப்ரல் பூலில்லை எல்லாம்
எம்மண் நடப்பவை
ஆப்பிழு குரங்கு போலவே
ஆப்பிட்டம் மூடராக!

- மூலபாரதி

# இந்திய பலிபீடத்தில்...

(தொடர்ச்சி)

**வீட்டின் பேரால் கொள்ளை**

அடுத்தது வடபகுதி மக்களுக்கு வழங்கப்படவுள்ள பொருத்து வீட்டுத் திட்டம். ஏற்கனவே இப்படியான வீடு ஒன்றை அதே நிறுவனம் மூலம் அமைத்துக் கொண்ட ஒருவர் அந்த வீட்டுக்குள் பகலில் மட்டுமல்ல இரவிலும்கூட இருக்க முடியாதெனவும், தாம் பகலும் இரவும் வளிச்சீராக்கியையே (ஏசி) பயன்படுத்துகிறார் எனவும் அதற்கு மாதம் ஐயாயிரம் ரூபா தேவைப்படுவதாகவும் கூறியுள்ளார்.

செல்வபுரத்தில் பரீட்சார்த்த வீட்டைப் பெற்றுக் கொண்டவர் அந்த வீட்டில் விறகு அடுப்பில் சமைக்க முடியாததால் தனியான ஒரு சமையலறையை அமைத்து வருகிறார். இடம்பெயர்ந்து ஏழ்மை நிலையில் வாழும் எமது மக்களால் இவ்வளவு பெருந்தொகை மின்சாரக் கட்டணத்தையும், எரிவாயுக் கட்டணத்தையும் செலுத்த முடியுமா?

இலவச வீடு என்ற பேரில் கொஞ்சம்கூடப் பொருத்தமற்ற குடிவாழ லாயக்கற்ற வீடு எமது மக்களிடம் திணிக்கப்படுகிறது. எமது மக்களை நிரந்தர நோயாளிகளாக்கும் இந் தத் திட்டத்தின் மூலம் வீடுகளை அமைக்கும் பெரும் நிறுவனமும் அதற்குக் கடன் வழங்கும் வங்கியும் பெரும் லாபமூட்டப் போகின்றன. இலங்கை அரசு எமது வரிப் பணத்தில் கடனையும் வட்டியையும் கட்டப்போகிறது.

இந்த ஒரு வீட்டுக்கு 21 லட்சம் ரூபாவையும் வட்டியையும் அந்நியச் செலாவணியாகச் செலுத்துவதைவிட அந்தத் தொகையில் இரண்டு வீடுகளை அமைக்க முடியும்.

அனல் மின்நிலையம், 65,000 வீடுகள் அமைப்பு ஆகிய இரு திட்டங்கள் மூலமும், இலங்கைத் தமிழ் மக்கள் இந்தியப் பெருமுதலாளித்துவத்தின் பலிபீடத்தில் தள்ளிவிடப்படுகின்றனர். இந்த வலையில் இலங்கை அரசும் சிக்குப்படுவது தவிர்க்க முடியாததாகும். இப்போதைக்கு இந்தத் திட்டத்தை இடைநிறுத்தி வைத்திருக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டிருப்பதன் மூலம் பிரச்சினை ஒத்தி வைக்கப்பட்டிருந்தாலும் இதிலிருந்து கொழும்பு முழுமையாக விடுபடுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

# மாடிவீட்டு மங்கைக்கு மணமகன் தேவை!

பின்தூங்கி முன்னெழும்
முந்தையர் பழக்கத்தின்
சிந்தனை ஒதுக்குதல் வேண்டும்

என்னோடு உறங்கியே
எனக்கு முன் எழுந்திட
ஏற்றவர் தான் வரவேண்டும்



காலை வேண்டிய
கடமைகள் செய்யவே
கரமவர் கொடுத்திட வேண்டும்

மாலை திரும்பியதும்
மல்லாந்து உறங்காமல்
மனையோடு உழைத்திட
வேண்டும்

கூட்டிப் பெருக்கி நிதம்
குப்பை கூழங்களை
கூடாது அகற்றிட வேண்டும்

வேட்டி காற்சட்டைகள்
வியர்வை உடுப்புகளை
விலக்காது கழுவுதல் வேண்டும்

வாரம் ஒரு சினிமா
வண்ண பூட்சிற்றி யென வலம்
வந்து காண்பிக்க வேண்டும்

ஆடை ஆபரணம்
ஆடம்பரப்பொருள்களென
அன்பாக வாங்கி வர வேண்டும்

வண்ண ரீவி குளிர்பெட்டி
வடிவான வோசிங் மிசின்
வாங்கி முதல் தந்துவிட
வேண்டும்

தின்னக் கன்டோசும்
தீஞ்சுவைப் பழங்களென
தினமும் கொண்டுவரவேண்டும்

வீணான நட்புகள்
விசர்க் குடி வகை ஏதும்
காணாத ஆணாக வேண்டும்

நானும் படித்தவள்
நாலு பணம் உழைப்பதை
நாயகன் உணர்ந்திட வேண்டும்

என்னழகிற் கேற்றாற் போல்
எழிலான மிடுக்கு நடை
ஏற்றவர் தான் வரவேண்டும்

எண்ணமதில் இனிதாக
எனக்கு நல் மணமகனாய்
எல்லாமே பொருந்தி வர
வேண்டும்

இத்தனையும் அமைந்த ஓர்
இனிதான மாப்பிளையாய்
இப்போதே தரகரே பாரும் என்

சித்தம் குளிர ஓர்
சீரான மாப்பிளையை
சீக்கிரம் கொண்டோடி வாரும்!

பத்தென்ன சொத்தென்ன
பல லட்சம் தந்தவரை
பட்டெனப் பற்றுவேன் பாரும்
எனக்கு
பித்துப் பிடிக்க முன்னர்
பிசகாமல் உடனே என் பிரிய
மணவாளருடன் வாரும்...!

*மானியூர் ரட்ணேஸ்*

# உள்ளூர் அரசியல்வாதிகளின் போட்டியால் அவதிப்படும்.....

(37ஆம் பக்கத் தொடர்ச்சி)
வவுனியா மாவட்டச் செயலருக்குக் கிடைக்கப்படவில்லை. இரு வாரங்கள் கடந்த நிலையில் அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால், இது தொடர்பில் நினைவூட்டல் கடிதம் ஒன்று முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது.


அமைச்சரின் கடிதத்துக்குப் பதிலளித்திருந்த முதலமைச்சர் அதன் பிரதிகளை மாவட்டச் செயலருக்கும் அனுப்பி வைத்திருந்தார். அதில் வவுனியா விவசாயப் பண்ணைக் காணி சிறப்பு பொருளாதார வலயத்துக்குப் பொருத்தமற்றது என்று கூறியிருந்தார். அந்த இடத்தில் பொருளாதார வலயம் அமைவது பொருத்தமற்றது என்று தனது சிறப்பு ஆலோசனை வல்லுநர்கள் குழு பரிந்துரைத்துள்ளதாகவும், அந்தப் பகுதி விதை உற்பத்திக்கு அவசியமானது என்றும் தெரிவித்திருந்தார். அத்துடன் அமைச்சர் ப.சத்தியலிங்கம் உட்பட ஏனைய அனைவரும் சேர்ந்து தன்னை இந்த விடயத்தில் நிர்ப்பந்திக்கிறார்கள் என்றும் சீறிப் பாய்ந்திருந்தார்.

எனினும் முதலமைச்சர் குறிப்பிட்டது போன்று அந்தக் காணி விதை உற்பத்திக்குப் பயன்படுவது குறித்து மாவட்டச் செயலர் கூட்டிய கூட்டத்திலேயே விரிவாக ஆராயப்பட்டிருந்தது. இலங்கையில் விதை உற்பத்தியில் 80 விழுக்காட்டை தனியார் பல்தேசிய நிறுவனங்களே மேற்கொள்கின்றன என்பதுடன், வவுனியா விதை உற்பத்திப் பண்ணைக் காணி வளம் குன்றி வருவதால் மாற்றுக் காணி ஒன்றை அடையாளம் கண்டு விதை உற்பத்தியை மேற்கொள்வதே சிறந்தது என்றும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தபோதும் அந்த இடம் விதை உற்பத்திக்குத் தேவையானது என்று தெரிவித்திருக்கும் முதலமைச்சர், பொருளாதார நிலையம் அந்த இடத்தில் அமைவது பொருத்தமற்றது என்று பரிந்துரைத்த வல்லுநர்கள் குழுவில் அடங்கியிருந்தவர்கள் யார் என்பதையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

இத்தகைய நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள மற்றொரு அமைச்சரின் அழுத்தமே இந்த விடயத்தைச் சிக்கலாக்கியிருக்கிறது என்று அரசியல் வட்டாரத்தில் பெரிதாகப் பேசப்படுகிறது. மாகாண அமைச்சர்கள் இருவருக்கு இடையிலான போட்டியில், பொருளாதார நிலையம் வவுனியாவில் அமைந்துவிடுவது ஒவருக்கான அரசியல் சாதமாக அமைந்து விடும் என்று மற்றையவர் கருது வதே இந்த விடயத்தில் இணக்கம் ஒன்று காணப்படாமைக்கான காரணம் என்ற சந்தேகமும் மாகாண சபை உறுப்பினர்களிடமும் அதிகாரிகளிடமும் காணப்படுகின்றது.

இதற்கிடையில் இந்த விடயம் தொடர்பில் மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் முதலமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள். அப்போது, சிறப்புப் பொருளாதார நிலையத்தை ஓமந்தையில் அமைப்பதற்கு கிராமிய பொருளாதார அமைச்சர் இணங்கியுள்ளார் என்று கூறி அந்த விடயத்தை அடக்கிவிட்டார் முதலமைச்சர். எனினும் இது குறித்து உதயன் பத்திரிகையிடம் கருத்துத் தெரிவிக்க கிராமிய பொருளாதார அமைச்சர் ஹரிசன் மறுத்துவிட்போதும், ஓமந்தையில் பொருளாதார நிலையத்தை அமைப்பதற்கான இணக்கம் எதனையும் அமைச்சர் முதலமைச்சருக்கு வழங்கவில்லை என்று அமைச்சு வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 415



அனுப்புபவர் பெயர்:..............................................
பூரணமான தபால் விலாசம்: ........................................
..............................................................
கையொப்பம்:...................................................

**இடமிருந்து வலம்**

1. பகை உணர்வு
4. ஒரு பயன்தரும் மரம்
7. தனது நண்பண்புக்குப் பாதகம் ஏற்படும் வேளை தலைதூக்கும் உணர்வு.
8. பஞ்சுமரத்துக்கு இப்படியும் ஒரு பெயர்.
9. விரிப்பு
10. நிலம்
11. பொருத்தமான நிலை
13. மனைவி
16. வழி
17. நிகழ்வு
19. என்று...
20. பூட்டான் தலைநகர்
21. ஒரு பயிர் வகை
22. ஒரு காட்டு மிருகம்

**மேலிருந்து கீழ்**

1. உதவியவருக்கு ஊறு விளைவித்தல்
2. நடிப்புக்காகப் போடுவது
3. வேதனம்
4. உயிர்ப்பின் ஆரம்பம்
5. சிறு குழந்தை பாச மேலீட்டால் கன்னத்தில் வழங்குவது
6. புரவி
8. விளையாட்டுக் கருவியொன்று
12. கணவனும் மனைவியும் சேர்ந்த கூறு
13. தசை
14. எழுதப்பட்ட சட்ட பூர்வ ஆவணம்
15. சந்திரனை இப்படியும் அழைப்பதுண்டு
16. கொடை வள்ளல் ஒருவன்
18. குறும்பு
19. பயிர்களுக்கான ஊட்டமாகப் பயன்படுத்தப் படுவது

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வது டன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்ட சாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 413 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**
(1)விவசாயி (4)மாதவி (7)வாரம் (8)ஈர்க்கு (9)தம்பிமார் (11)கதி (12)ராசி (13)மது (14)அணி (15)அரி (17)திண் (18)நடித்தல் (19)கடகம் (21)தில்லை (22)கல்லாமை

**மேலிருந்து கீழ்**
(1)விவாதம் (2)வரம் (3)சாம்பிராணி (4)மார் (5)தக்கது (6)விகுதி (8)ஈர் (10)மாசி (13)மரித்தல் (14) அண்டல் (15)அடி (16)கொல்லாமை (17)திகதி (18)நம் (20)கலை
சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 413இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
ம.மதுரமோகனா
மில் ஒழுங்கை,
மல்லாகம்.

**2 ஆம் பரிசு**
ஜெ.ஜெயசுதன்,
பிளாக் வீதி,
சங்கானை

**3 ஆம் பரிசு**
ஸ்ரீ.ஜஸ்மினி,
குளப்பன் கலட்டி,
இடைக்காடு, அச்சுவேலி.

**4 ஆம் பரிசு**
அ.அமிர்தினி,
இல.301, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
சி.வதனகுமார்,
இல.2, மதீனா வீதி,
மகாறம்பைக்குளம், வவுனியா.

**பாராட்டுப் பெறுவோர்**

செ.உதயன்,
பாசிக் நிறுவனம், நீதிமன்றம்
அருகாமை, முல்லைத்தீவு.

நற்குணராஜா தனுபரன்,
இல.6/6, பெருமாள் கோவில்
வடக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

யோ.பாஸ்கரன் சித்தார்த்தா,
வல்லை வீதி, தொட்டிலடி,
சங்கானை.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.415
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (20.04.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.415இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 24.04.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 413 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**



மன்னார் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு வடமாகாண சபை உறுப்பினர் வைத்தியகலாநிதி ஜீ.குணசீலன் தனது நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பாண்ட் வாத்திய இசைக்கருவிகள் அடங்கிய தொகுதியை பாடசாலை அதிபரிடம் கையளித்தார். (ஜ-56)





வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவால் குறித்து ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வவுனியா செட்டிகுளம் மகாவித்தியாலயத்துக்கு குழாய்நீர் விநியோகத்துக்காக நிதி வழங்கி வைக்கப்பட்டது. (ஜ-21)



உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள். (ஜ)



வடமாகாண கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சி.தவரட்ணம் நினைவாக, குருநகர் ஆவே மரியா பகல் பாலர் பாடசாலையில் நூலகம் ஒன்றை அருட்கலாநிதி இ.ம.ஜெயசீலன் திறந்தது வைத்தார். (ஜ-51)



கொடிகாமம் தென்மாராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் ஒன்று கடந்த வாரம் சங்கத்தின் தலைவர் செ.அமரசேகரத்தினால் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.இந்த நிகழ்வில் தலைவர், மற்றும் பொதுமுகாமையாளர், வர்த்தக முகாமையாளர், நெறியாளர் குழு உறுப்பினர்கள் மற்றும் கிளைச்சங்கங்களின் உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ஜ-122)



காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பெருந் திருவிழாவின் தேர்த்திருவிழாக் காட்சிகள். (ஜ-250)





பொலிஸ் அதிகாரியான அமரர் பாலசிங்கம் (கனடா) ஞாபகார்த்தமாக அவரின் குடும்பத்தினரால் சாவகச்சேரி நுணாவில் மேற்கு வீரகத்தி விநாயகர் தேவஸ் தானத்துக்கு பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சுற்று மதில் திறப்பு விழா அண்மையில் இடம் பெற்றது. பாலசிங்கத்தின் புதல்வர் பாலநிர்மலனும், சகோதரியான சரோஜினி தேவியும் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தனர். (ஐ)





அனலைதீவு பெரியபுலம் ஸ்ரீசங்கரநாதர் மகா கணபதிப்பிள்ளையார் ஆலய பெருந்திருவிழாவின் கொடியேற்றத் திருவிழாக் காட்சிகள். (ஐ-9)



கச்சாய் அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு இலவச சதுரங்கப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சாவா 90 என்னும் அமைப்பினரால் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. (ஐ-9)




சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர், மீசாலைப் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் ஒன்றை, மீசாலை வடக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் நடத்தினர். (ஐ-9)







அனலைதீவு ஐயனார் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப் போட்டிகள், அனலைதீவு வடலூர் அ.த.க.வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன. முன்பள்ளி ஆசிரியை திருமதி கலைமதி செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக அனலைதீவு வடலூர் அ.த.க. வித்தியாலயத்தின் ஓய்வுநிலை அதிபர் திருமதி கௌரி கேதீஸ்வரநாதன் கலந்து கொண்டார்.(ஐ-9)



அல்வாய், சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின்போது திருச்சொரூப பவனி இடம்பெற்றது. (ஜ-51)





மல்லாவியில் வாழும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களுக்கான இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு, மல்லாவி மக்கள் தொடர்பகத்தில் அண்மையில் நடைபெற்றது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முல்லை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான வைத்திய கலாநிதி சி.சிவமோகன் நிகழ்வில் கலந்துகொண்டுமூக்குகண்ணாடிகளை வழங்கிவைத்தார். (ஜ)



புத்தூர், மடிஹே பஞ்சசீஹ வித்தியாலத்தின் பரிசளிப்பு விழாவின்போது, வண. மீ.சிறிவிமலதேரர் பாடசாலை மட்டத்தில் அதிக புள்ளிகளைப் பெற்று, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனுக்கு சைக்கிள் ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார். (ஜ)






சர்வதேச நீர்த் தினத்தை முன்னிட்டு மன்னார் பொது சமூக சேவைகள் அமைப்பின் நிதி உதவியுடன், மன்-அல்-அஸ்ஹர்.ம.வி தேசிய பாடசாலையில் குடி தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கி அண்மையில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. வன்னி மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக், மன்னார் பொது சமூக சேவைகள் அமைப்பின் பிரதிநிதிகள், பாடசாலையின் அதிபர் எம்.வை.மாஹீர் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு நீர்த்தாங்கியைத் திறந்து வைத்தனர். (ஜ-56)



நவாலியூர் சென்.பீற்றர்ஸ் றோமன் கத்தோலிக்கக் கலவன் பாடசாலையின் 135 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வருகை தந்த ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ்.மறை மாவட்ட ஆயராக நியமனம் பெற்று முதன் முதலாக நவாலிப் பங்குக்குப் பயணம் மேற்கொண்டதால் சிறப்பாக வரவேற்று அழைத்துச் செல்லப்பட்டார். (ஜ-168)




யாழ்.சென் றோக்ஸ் றோ.க.வித்தியாலயத்தின் போசகர் அருட்தந்தை ஆர்.எஸ். சகாயநாயகம் இடமாற்றம் பெற்றுச் செல்வதை முன்னிட்டு பிரியாவிடை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் புதிய அதிபர் ஆ.சூசைநாதர் நினைவுப் பரிசில் வழங்கி வைத்தார். (ஜ)

# மரண அறிவித்தல்

## திருமதி கனகலட்சுமி சபாபதி



யாழ்.கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் இந்தியா திருச்சி, பிரித்தானியா Ilford, Essex ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலட்சுமி சபாபதி 03.04.2016 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சி.க.சபாபதியின் (முன்னாள் சிறாப்பர்- காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, முன்னாள் தலைவர்- கொக்குவில், கோண்டாவில் கிராமசபை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் சற்குணதேவி (நோர்வே), இராஜ்குமார் (லண்டன்), சாரதாதேவி (ஆஸ்திரேலியா), சாந்தகுமார் (லண்டன்), சுசிலாதேவி (லண்டன்), சபாநந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம், நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அம்பிகாநந்தன் (இந்தியா), இராகவன் (நோர்வே) மற்றும் யசோ (லண்டன்), பவானந்தன் (ஆஸ்திரேலியா), ஜெயகௌரி (லண்டன்), ஐங்கரலிங்கம் (லண்டன் ), ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, ரோசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஞானசேகரம் (கோண்டாவில்), காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், கனகலட்சுமி, இரத்தினசிங்கம், மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், குமணன் சங்கரிலக்ஷ்மி (லண்டன்), இராகவன் நிஷ்யா (லண்டன்),அர்யுன் துஷியந்தி (நோர்வே), மயூரன் நிவேதிதா (அயர்லாந்து), உமாசங்கர் சாலினி (அயர்லாந்து),பிரகலாதன் விபிர்சா (லண்டன்), தீனு (ஆஸ்திரேலியா), ஆரபி (நோர்வே), ஆர்த்திகா (லண்டன்), சோபி (ஆஸ்திரேலியா), அஞ்ஜிதா (லண்டன்), அகர்ஜன்(லண்டன்), அபிவர்ணா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நிரூபன், சொரூபன், யுவன், கரிஸ், அரொன் மற்றும் நரேன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு: இராஜ்குமார் (மகன் - லண்டன்)**
**+4470 360 29305, +4477 10099 613**

# மரண அறிவித்தல்கள்

## செல்லம்மா சபாபதி



பெரியன்சீமா, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லம்மா சபாபதி 07.04.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதியின் (அம்மான் - பிரபல லொறி சொந்தக்காரர்) அன்பு மனைவியும், பரமேஸ்வரி (அமெரிக்கா, கொழும்பு) தவச்செல்வம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், பரமானந்தம், கேமநந்தினி (லண்டன் - அம்பனை, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று (10.04.2016)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கனத்தை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பனை, தெல்லிப்பழை.

தகவல்:
**செ.அருணாசலம்** (ஆசிரியர்)

**தவம்- 077 621 3966**

## சபாபதிப்பிள்ளை பரராஜசிங்கம்

**(ஓய்வு பெற்ற பிரதம புகையிரத நிலைய அதிபர்)**



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வதிவிடமாகவும் கொண்டு தற்போது கனடாவில் வசித்து வந்த வருமாகிய சபாபதிப்பிள்ளை பரராஜசிங்கம் 06.04.2016 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பித்துரை தம்பதி களின் மருமகனும் காலஞ்சென்ற திருமதி சாவித்திரி பரராஜசிங்கம் ( யா/ இராமநாதன் கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியை), அவர் களின் அன்புக் கணவரும் நந்தினி (பிரதி அதிபர்- யா/ இராமநாதன் கல்லூரி) கனடாவில் வசிக்கும் ஶ்ரீதரன், நந்தக்குமார், மாலினி, ரோகிணி, சிவகுமார், சாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராஜன் (அதிபர்/யா கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ), ஜெனி, அருட்செல்வி, கிரிதரகுகன் ஆகியோரின் மாமனாரும் சிவதாரணி, சிவராகவன், பிருந்தா, ஹரேன், யசிக்கா, உஷாந்தி, புருஷோத்மன், ஜனோசன், துஷான், ஷகீன் . ஜசினி ஆகியோரின் அன்புப் பேரனும் சஞ்சீவினியின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2016) கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**" நந்தினி வாசா"**
**உடுவில் மேற்கு, சுன்னாகம்.**

தகவல்: **சி. சிவராஜன்**
**(மருமகன்)**
**021 224 1144**

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.10
சிறுப்பிட்டி வடக்கு இலுப்பையடி ஶ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபையால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது என்று சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவ காலங்களில் நடைபெற்ற தெய்வீகப் பேருரைகளில் கலந்து கொண்டவர்களிடையே இந்தப் போட்டி நடத்தப்பட்டது.

அதில் தெய்வீகப் பேருரை ஆற்றிய காரை எம்.பி. அருளானந்தனும் கௌரவிக்கப்படவுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ற-ஜ-ரி)

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி முருகேசு



ஆஸ்பத்திரிவீதி சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி முருகேசு 07.04.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னையா, பாலசிங்கம் ( MBM - கொழும்பு), இராசம்மா மற்றும் இராசரத்தினம் ( MRS-சங்கானை), நவரத்தினம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரன் மற்றும் நடேசபாதம் (செல்லன் - ஜேர்மனி), நடனச்சந்திரன் (அப்பு - கனடா), பிரபாரகன் (கனடா), பிரதீபன் (கனடா) ஞானேஸ்வரி (வவா), ஞானாம்பிகை(வவி) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயமாலா, செல்வதேவி (ஜேர்மனி), வதனி (கனடா), சுபாசினி ( கனடா), தபோதரன், மனோரஞ்சன் ஆகியோரின் மாமியாரும், மஞ்சிகா, சுரேக்கா (ஜேர்மனி), கிசோத், துர்சிகா (கனடா), கிரிசா, கீர்த்திகா, சியான் (கன்டா), பிரகாஸ் (கனடா), தர்சன், கஜேந்தினி, நிரோஜினி, மனுசா, பவியா, ரமேஸ்குமார், ஜெயானந்தன், சுபானந்தன்,நிஷா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், அகர்ஷன், டதுர்சனா, மிதுசன், நித்தீஸ் (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆஸ்பத்திரிவீதி,**
**சங்கானை.**

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 973 7314**

(சி/22320)

## பெண்ணைக் ஹெல்மெட்டால் தாக்கிய இளைஞர் கைதானார்

யாழ்ப்பாணம், ஏப்.10 பெண்ணொருவரைத் தலைக் கவசத்தால் தாக்கிய குற்றச்சாட்டில் ஆசீர்வாதம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் கலைமகள் வீதி, அரியாலையில் வசிக்கும் பெண்ணொருவரையே தலைக் கவசத்தால் தாக்கியதாக அந்தப் பெண்ணால் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரியாலைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சனசமூக நிலைய உறுப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினையாலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-103)

## சைக்கிளைத் திருடிய இருவருக்கு மறியல்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவனொருவரின் சைக்கிளைக் களவாடிய குற்றச்சாட்டில் இருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த மாணவன் மைதானத்துக்கு அருகில் சைக்கிளை நிறுத்தி விட்டு மீண்டும் வந்த வேளை அவருடைய சைக்கிளின் பூட்டை இருவர் உடைத்து எடுத்துச் செல்ல முயற்சித்துள்ளனர்.

குறித்த மாணவன் சத்தமிட்டதையடுத்து ஏனைய மாணவர்கள் ஒன்று கூடி இருவரையும் பிடித்து அதிபரிடம் ஒப்படைத்தனர். பின்னர் இது தொடர்பாகப் பொலிஸாருக்கு முறையிடப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸாரால் யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இருவரையும் இந்தமாதம் 19 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், மற்றையவர் மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (கு-ஐ-103)




# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு
10
10
1986

உதிர்வு
12
03
2016

## அமரர் பாலசிங்கம் பிரதாஸ்

கடந்த 12.03.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் பாலசிங்கம் பிரதாஸ் அவர்களது வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளை (11.04.2016) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்த கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்த கொண்டு துயர் பகிர்ந்தும் பல வழிகளில் பல்வேறு உதவிகள் புரிந்தும் எமது கவலைகளைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இந்த அழைப்பினை ஏற்றுக் கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

முருகன் வீதி திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்,
077 080 9662

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2758 திகதி: 2016-04-09
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
27 46 58 70 S
போனஸ் இல.
01
புதன்கிழமை ஜக்பொட்
ரூ. 14,151,175/-
தொ.பே. 011 4062002 / 011 4062062 Web www.dlb.lk
2016.04.20 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 485
சீட்டிழுப்பு திகதி 2016.04.09
வெற்றி இலக்கங்கள்
09 31 39 57 Q
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 51,212,880/=
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk


VACANCY

GUEST RELATION OFFICER

To work for Tilko Jaffna City Hotel, one of the leading star class hotels in the North. Candidate should be able to converse in English (other languages would be advantageous)

Send your cv to: tilko.tilak@gmail.com

# கண்ணீர் அஞ்சலி



இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன
யாழ்.பிராந்தியக் காரியாலயத்தில்
கடமையாற்றும்
திரு. இராமலிங்கம் ஜெயபாலன்
அவர்களின் மாமனார்

**நாகமணி துரைராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிராந்திய முகாமையாளரும்,
சகஊழியர்களும்.
பிராந்தியக் காரியாலயம் (வடக்கு),
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

# கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
சி.நகுலேஸ்வரன் அவர்களின்
தாயார்

**திருமதி முத்துரத்தினம் சிவப்பிரகாசம்**

அவர்களது மரணச் செய்தி கேட்டு வேதனை அடைவதோடு அவரது இழப்பால் துயருற் றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வ தோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கை பொதுச்சுகாதார
பரிசோதகர்கள் சங்கம்,
யாழ்.மாவட்டம்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 12.03.2016 சனிக்கிழமை இறைபதம்
அடைந்த எமது குடும்பத் தலைவி அமரர்
திருமதி

**தர்மாம்பாள்(லோசினி) நவரட்ணராஜா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 11.04.2016 திங்கட்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்திய கிரியைகள் 12.04.2016 செவ்வாய்க்கழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.5 முதலியார் வீதி,
நல்லூர் தெற்கு. யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருநாவுக்கரசு இராசரத்தினம்

(உரிமையாளர் விஜிதா அரிசி ஆலை தாவடி)



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவரும் தற்போது தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு இராசரத்தினம் நேற்று (09.04.2016) சனிக்கிழமை காலமானார்.


அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (11.04.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.47 ஆனைக் கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
Dr.சுரேஸ்
077 762 9337

### கனகராஜா மார்க்கண்டு




உடுவில் கிழக்கு சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் கனடா வை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராஜா மார்க் கண்டு 28.03. 2016 திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் நாகேஸ்வரி(கனடா), செல்வ ராஜா (கனடா), பிரதீஸ் வரன் (கனடா), ஜெயரஜனி, ஜெயா, ஜெயசுதா ஆகியோரின் அன்புச் சகோதர னும் சிவபாக்கியத்தின் பெறா மகனும், தங்கராஜா(தங்கா- கனடா), றஜனி (கனடா), சதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அருண் (கனடா), திலான், பிரசாந், விந்துசன், சந்தோஷ், ஊர்சிலா ஆகியோரின் அன்பு மாமனாரும் கரோலின்,டிலன்(கனடா) ஆகியோரின் அன்புச் சித்தப்பவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்

தகவல்: குடும்பத்தினர்.

(68232)(12.17.19)

### முத்துக்குமாரு பரமேஸ்வரி

பிறப்பு 19 . 04 . 1939



இறப்பு 09 . 04 . 2016

காரைநகர் சந்தம்புளியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு பரமேஸ்வரி அவர்கள் நேற்று (09.04.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் - முத்துக்குமாரு அவர்களின் அன்பு மனை வியும், கோகிலா, கிருஸ்ணகுமார் (சுதன்-Sun தையலகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேந்திரம், வசந்தி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ் சென்ற பாலசிங்கம் மற்றும் நாகேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோ தரியும், ஞானாம்பிகை, தருமர், காலஞ்சென்ற கணேசன் ஆகியோரின் மைத்துனியும், பகீரதன்,வசீகரன், கௌசிகா, துவாரகா, தர்மிலன், சந்தோஸ், ஹரிஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 09.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்
(சுதன்-Sun Tailaring)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அகிலாண்டேஸ்வரி தாமோதரம்பிள்ளை



இணுவில் தெற்கைப் பிறப்பிட மாகவும் கிளிநொச்சி திருநகரையும் இணுவில் கிழக்கையும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அகிலாண்டேஸ் வரி தாமோதரம்பிள்ளை நேற்று (09.04.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10.04.2016 பி.ப. 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயிலடி, குமாரலிங்கம் வீதி, இணுவில் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்.
021 224 2140

### சோமசுந்தரம் சேதுபதி



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் இராமலிங்கம் வீதி, கெனடி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சேதுபதி (சிற்ப ஆசாரி) நேற்று (09.04.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - சரஸ்வதி அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், யோகம்மாவின் அன்புக் கணவரும், சுகந்தினி (லண்டன்), சசிகலா (லண்டன்), பிறேமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் முரளிதரன்(லண்டன்), பாஸ்கரன் (லண்டன்), ஜெயக்குமார் (வெற்றிக்கண்ணன் களஞ்சியம் - கோண்டாவில் டிப்போ) ஆகியோரின் மாமனும், துசிக்கா (லண்டன்), வினோஜன் (லண்டன்), பிரியா(லண்டன்), தரணிகா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற கமலாஷினி மற்றும் கனகேஸ்வரி, சோதி, காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் முருகையா மகாதேவன், உமாதேவி (கனடா),பரமேஸ்வரி, வெற்றிவேல் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலாதேவியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் (கோண்டாவில் வடக்கு, துவாரகை வீதி ) நடைபெற்று பூதவுடல் கலைவாணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் வடக்கு, துவாரகைவீதி.

தகவல்: குடும்பத்தினர்.

077 023 7514

### திருமதி பரமேஸ்வரி (பூமணி) கணபதிப்பிள்ளை



கேசரி வீதி, தையிட்டி காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வீதி, தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை நேற்று (09.04.2016) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவி-லட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி-சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும் சிறீதரன், சிவகுமாரன் ஆகியோரின் தாயும் இந்திராணி, சகிலா ஆகியோரின் பாசமிகு மாமியும் கபிலன்,அபர்ணா, டிலெக்ஷன்,நிலோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இராசம்மா, புவனேஸ்வரி,சிவகாமசுந்தரி, காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சுதுமலை வீதி, தாவடி வடக்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.

## விபத்தில் இருவர் காயம்

பளைப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பளை மற்றும் புலோப்பளை ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர். இவர்கள் அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டனர். (ற-ஐ-9)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் கதிரவேற்பிள்ளை



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கதிரவேற்பிள்ளை கடந்த (08.04.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் ஆச்சிமுத்து தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-கண்ணம்மா தம்பதிகளின் மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான Dr.மகாதேவன், பாலசுப்பிரமணி யம் மற்றும் இரத்தினாவதி, காராளசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அமரசிங்கம் மற்றும் குகராஜா காலஞ் சென்ற ஆர்.சி. நடராஜா ஆகியோரின் மைத்துனரும், கடம்பேஸ்வரி (ஜேர்மனி), கணேசலிங்கம் (கனடா), கலாவதி, கல்யாணி (நோர்வே), கண்ணதாசன் (கல்வித் திணைக்களம் - துணுக்காய்), கரிகாலன் (நோர்வே), இந்துவர்ணன், இந்துமதி (இத்தாலி), கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசரத்தினம், நந்தினி, சத்தியசீலன், ஜெயகுமார், சிவசக்தி, சிவமலர், சிவறூபி, சுதிர், சிறீதரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் உரும்பிராயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அஞ்சலியகம்"
கோப்பாய் வீதி
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்.
077 5590473, 021 7901315

### கனகசபை சிறீகாந்தராஜா

மண்ணில் 13 . 02 . 1957



விண்ணில் 05 . 04 . 2016

யாழ்.இணுவிலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சிறீகாந்தராஜா (05.04.2016) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை மற்றும் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பிறேமாவதியின் அன்புக் கணவரும், மதுசன், மேனுசன், மாதங்கி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரலீலா (லண்டன்), இந்திரலீலா (கனடா), தவராசா (ஜேர்மனி), குகராசா (லண்டன்), யோகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பாரதிதாசன் (கனடா), இரஞ்சிதமலர், காலஞ்சென்ற தேம்பாமலர் மற்றும் வசந்தகுமாரி (கனடா), கருணாகரன் (ஜேர்மனி), விக்கினதாசன் (லண்டன்), காலஞ்சென்ற கனகராசா மற்றும் நித்தியானந்தம் (கனடா), ஜெயமங்களதேவி (ஜேர் மனி), சிவ லோஜி (லண்டன்), சுபாஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், உடுவில் பிரதேச செயலகம்), ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ் சென்ற சின்னத்தம்பி மற்றும் துரைராசா, பாலசிங்கம் (கனடா) ஆகி யோரின் அன்புச் சகலனும், சிசிலியா (கனடா), சசிகலா (ஜேர் மனி), மைதிலி (லண்டன்) ஆகியோரின் அன்பு உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2016) திங்கட்கிழமை Nierster str 75, 40668 Meerbusch Germany எனும் முகவரியில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப.2.00 மணிவரை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
க.யோகராசா (யோகு-சகோதரன்)

## தமிழ்

முடியும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை வளாகத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தனது உரையில்,

அதிகாரப் ப்கிர்வு என்பது கணிசமான அளவில்முன்னேற்றம்கண்டிருக்கின்றது. நாங்கள் கடந்த 35 வருடங்களாக அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கின்றோம். பிரேமதாச காலத்தில், சந்திரிகா காலத்தில், ரணில் காலத்தில், மகிந்த காலத்தில் என்று பல்வேறு பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. சர்வகட்சிக் குழுக்களிடமும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

தற்போதும் தமிழ் மக்கள் பேரவையினர் தங்களுடைய கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்கள். வடக்கு மாகாண சபையும் தங்களுடைய கருத்துக்களை முன்வைத்திருக்கின்றது.

அரசியல் சாசனக் குழு என்பது பல்வேறு நிபுணர்களுடைய கருத்துக்களை வைத்துள்ளது. மக்களுடைய கருத்துக்களை அறியும் வகையில் மக்களைச் சந்தித்து அவர்களது கருத்துக்களைக் கேட்டறிந்து தங்களுடைய அறிக்கையை இந்த மாதம் முடிவதற்கு முன் அரசிடம் கொடுக்க இருக்கின்றார்கள்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் சகல தேர்தல்களிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கையில், பிரிக்கப்படாத ஒற்றுமையான இலங்கை நாட்டுக்குள் முழுமையான விசுவாசமான இறைமையின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற அதிகாரப் பகிர்வின் ஊடாக, விசேடமாக வடக்கு - கிழக்கில் வாழுகின்ற தமிழ், முஸ்லிம் மக்களுடைய பிறப்புரிமை உறுதி செய்யப்பட்டு, சமமாக - சமத்துவமாக - சமாதானமாக வாழக்கூடிய தீர்வுத் திட்ட அடிப்படையை எமது மக்கள் அங்கீகரித்திருக்கின்றார்கள்.

அதன் அடிப்படையில் ஏற்படுகின்ற தீர்வு, உறுதியான-நிலைத்து நிற்கக் கூடிய அரசியல் தீர்வாக அமையும் என்று எதிர்பார்க்கின்றோம். அதனை முன்வைத்துத்தான் நாமும் பயணித்துக்கொண்டிருக்கின்றோம். அந்தத் தீர்வு விரைவில் ஏற்படவேண்டும் என்பது எங்களது எதிர்பார்ப்பு. விசேடமாக தமிழ் மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒற்றுமையாக நிற்கவேண்டியது அவசியம். எங்களுடைய பலம் ஒற்றுமையில்தான் தங்கியிருக்கின்றது. அதேவிதமாக முஸ்லிம் மக்களிடம் கேட்டுக் கொள்வது நீங்களும் ஒற்றுமையாக - ஒருமித்து நிற்க வேண்டும். உங்களுடைய பலமும் அதில்தான் இருக்கின்றது.

இரண்டுக்கும் மேலாக தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக ஒருமித்து நிற்கவேண்டும். அதிகாரப் பகிர்வின் பெறுமதியை நாங்கள் முழுமையாகப் பெறவேண்டுமாக இருந்தால் தமிழ் - முஸ்லிம் மக்களாகிய நாங்கள் ஒற்று மையாக நிற்கவேண்டும்.

தந்தை செல்வநாயகம் டட்லியுடனும் பண்டாவுடனும் ஒப்பந்தங்களைச் செய்திருந்தார். அவர் தமிழ் மக்களுக்காக மட்டும் இந்த ஒப்பந்தங்களைச் செய்யவில்லை. தமிழ் பேசும் மக்களுக்காகவே செய்தார். 1987 இல் ராஜீவ் காந்தியுடன் ஜெயவர்த்தனாவால் செய்யப்பட்ட ஒப்பந்தத்திலும் தமிழ் பேசும் மக்கள் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது தமிழ் மக்கள் - முஸ்லிம் மக்கள் என்றுதான் அந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம்கள் பரம்பரையாக ஒற்றுமையாக வாழ்ந்தவர்கள். ஆகவே, ஒருமித்த ஒற்றுமையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது எங்களது கடமை. எதிர்வரும் காலத்தில் தற்போதைய நிலைமை தொடர்ந்தும் முன்னேறுகின்றதாக இருக்கவேண்டும். தேசியப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு வரவேண்டும். ஜனாதிபதி மைத்திரிபால இந்தக் கருமத்தில் உறுதியாக இருக்கின்றார். பிரதமரும் அரசும் இந்தக் கருமத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதாக நம்புகின்றோம். ஆகவே, நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும்.

நாங்கள் எவருக்கும் அநீதி நடைபெறுவதை அனுமதிக்காமல் செயற்பட வேண்டும். அந்தக் கடமையை நாங்கள் நிறைவேற்ற வேண்டும் - என்றார். (த-வ-5)

## இனவாதத்தை

செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இலங்கையில் புதிய அரசமைப்பைக் கொண்டுவருதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் சூழலில், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட வரைவுக்கான முன்மொழிவுகளைக் கடந்த வியாழக்கிழமை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் மாகாண சபையில் சமர்ப்பித்திருந்தார். இதில் மொழிவாரியாக இலங்கை இரண்டு (தமிழ், சிங்களம்) மாநிலங்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என்பதுடன், இலங்கை சமஷ்டிக் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

வடக்கு மாகாணசபையின் இந்தத் தீர்வுத் திட்ட வரைவு குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவிடம் 'உதயன்' வினவியது.

இதன்போது அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

இலங்கை முப்பது வருடகாலப் போர் அனுபவத்தைக் கொண்ட நாடு. போரால் பெரும் இழப்புகளை சந்திக்க நேரிட்டது. போரின் மூலம் ஏற்பட்ட காயங்கள் இன்னமும் மக்கள் மனங்களில் இருந்து ஆறவில்லை. தமிழ் மக்களின் தீர்வு காணப்படாத பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவர்களின் காணிகள் இன்னமும் முழுமையாகக் கையளிக்கப்படவில்லை.

வடக்கில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை இந்தியர்கள் சுரண்டிச் செல்கின்றனர். விவசாய நடவடிக்கைகள் தொடர்பில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. மக்களின் எண்ணில் அடங்காத அடிப்படை பிரச்சினைகள் காணப்பட்டும் வடக்கு மாகாண சபை அது தொடர்பில் ஆக்கபூர்வான வேலைகள் எதனையும் செய்யவில்லை. மாறாக, மீண்டும் நாட் டில் இனவாதத்தைக் கட்டவிழ்த்துவிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

30 வருடகாலப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டும் நாடு இன்னமும் நல்லிணக்கத்தை அடையவில்லை. நாடு நல்லிணக்கம் நோக்கிப் பயணிக்கும் வேளையில், வடக்கில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலானவர்களும், தெற்கில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சார்பானவர்களும் மீண்டும் நாட்டைப் பின்னோக்கி நகர்த்தி இன வாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு வருகின்றனர். இவர்களின் செயற்பாட்டால் நல்லிணக்கம் என்பது பாரதூரமான பிரச்சினையாக மாறக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. தெற்கில் இனவாதம் துளிர்விடும் சூழலில் வடக்கின் அடிப்படைவாதிகளும் அதற்கு நேசக்கரம் நீட்டுகின்றனர்.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் வடக்கு மாகாண சபையில் இருந்து வரவேண்டியது அல்ல. அந்த மக்கள் சார்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றில் உள்ளது. அவர்கள் மூலம் இந்த விடயம் வரவேண்டும். வடக்கு மாகாண சபையின் இந்தச் செயற்பாடுகள் நாட்டில் மீண்டும் இனவாதத்தைத் தோற்றுவிக்கும் வகையிலேயே அமைந்துள்ளன" என்றார். (த-சி)

## பொருளாதார

வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்குரிய காணியை இனங்காணுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. வவுனியா நகரிலிருந்து 9 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஓமந்தை, மாணிக்கர் வளவு காணியில் இந்தப் பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நகர அபிவிருத்தி அதிகார சபையே நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக இருப்பதால், வவுனியா நகரிலிருந்து 2 கிலோ மீற்றரினுள்ளே இதற்குரிய காணி அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்று கிராமிய பொருளாதார அமைச்சினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய தாண்டிக்குளத்திலுள்ள விவசாய விதை உற்பத்தி நிலையக் காணியைப் பொருளாதார மத்திய நிலையம் அமைக்க வழங்குவதற்கு, வவுனியாவில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தாண்டிக்குள விதை உற்பத்தி நிலையக் காணியை வழங்க முடியாது என்றும், மாணிக்கர் வளவுக் காணியையே இதற்கு வழங்க முடியும் என்றும் தெரிவித்திருந்தார்.

இரண்டு வாரங்களுக்குள், வவுனியா நகரிலிருந்து 2 கிலோ மீற்றரினுள் காணியை வழங்காவிட்டால், இந்தப் பொருளாதார மத்திய நிலையம் வேறு மாகாணத்துக்கு இடமாற்றம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், வவுனியா மாவட்ட, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 6 பேர், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைக் கடந்த வியாழக்கிழமை மாகாண சபை அமர்வின் போது தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது கிராமிய பொருளாதார அமைச்சர் ஹரிசன், மேற்படி பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தை மாணிக்கர் வளவில் அமைப்பதற்குச் சம்மதித்து விட்டார் என்று முதலமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் ஹரிசனுடன் 'உதயன்' நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தொடர்பு கொண்டு கேட்டது. இதற்குப் பதில் வழங்கவில்லை. அத்துடன் தொடர்பையும் துண்டித்து விட்டார்.

இதன் பின்னர் பலமுறை தொடர்பு கொண்ட போதும் பதிலளிக்கவில்லை. நேற்றைய தினம் மீண்டும் தொடர்பு கொண்டபோது, விடயத்தைக் கேட்டுவிட்டு அரைமணி நேரம் கழித்துத் தொடர்பு கொள்ளுமாறு அமைச்சர் ஹரிசன் தெரிவித்தார். அதன் பின்னர் பலமுறை அவருக்கு அழைப்பு எடுத்த போதும் அவர் பதிலளிக்கவில்லை.(த-வ-5)

## வடக்கு

வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கையளிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் அமைச்சரவையை மாற்றுமாறு முதலமைச்சரிடம் கோரிக்கை விடுக்கும் கடிதத்தில், ஆளும் கட்சி உறுப்பினர்களால் கையெழுத்து திரட்டப்பட்டு வருகின்றது. அமைச்சரவை மாற்றத்தின்போது, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஓர் அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும் என்பதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கு அவை பகிரப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி விடயங்களை உள்ளடக்கிய கோரிக்கைக் கடிதத்தில், வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன் கையெழுத்துக்களைத் திரட்டி வருகின்றார். இந்தக் கோரிக்கைக் கடிதத்தில் இதுவரை 16 உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

எனினும் ஆளும் கட்சியில் 30 உறுப்பினர்கள் இருக்கின்றனர். அவைத் தலைவரையும், அமைச்சரவையையும் தவிர்த்து 24 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 16 பேர் மாத்திரமே கையெழுத்திட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த 6 உறுப்பினர்கள், அமைச்சரவை மாற்றத்தின்போது, சகல கட்சிகளுக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படவேண்டும் என்ற வார்த்தையை நீக்குமாறு கோரியுள்ளனர். அவ்வாறு நீக்கினால் கையெழுத்திடுவதாக அந்த உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால், முதலமைச்சரிடம் இந்தக் கோரிக்கைக் கடிதம் இன்னமும் கையளிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## சமஷ்டித்

பயணம் மேற்கொண்டுள்ள ஜேர்மனி நாடாளுமன்றக் குழுவினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை, எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுக் காலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலின் போதே, ஜேர்மனி நாட்டு நாடாளுமன்றக் குழுவினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அது மிகவும் முக்கியமானது. அது இந்த நல்லாட்சியில் நடைபெறவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். அதற்கான முயற்சிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்து வருகின்றது.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வுத் திட்டத்திற்கே, கூட்டமைப்பு தனது தேர்தல் அறிக்கையினூடாக மக்களின் ஆணையைப் பெற்றிருக்கின்றது. இதனடிப்படையிலேயே தீர்வு காண்பதற்கு கூட்டமைப்பு விரும்புகின்றது.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும். இராணுவத்தினரின் பிரசன்னம் குறைக்கப்படவேண்டும். காணாமற்போனோர் விவகாரத்துக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும்.

இந்த அடிப்படை - அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஜேர்மனி நாடாளுமன்றக் குழுவினர், சமஷ்டி அடிப்படையிலான தீர்வை எட்டுவதற்கு தமது நாடும் உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

மேலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் புனர்நிர்மாணப் பணிகளுக்கு ஜேர்மனிய அரசு உதவி வழங்கும் என்றும், அந்த நாட்டுத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## சேந்தாங்குளம்

காணி 1990 ஆம் ஆண்டு தொடக்கம் பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது. 2011 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்வதற்காக அனுமதிக்கப்பட்டபோது, தேவாலயத்துக்குச் சொந்தமான காணியில் கடற்படையினரின் காவலரண் அமைக்கப்பட்டிருந்தது.

இந்தக் காவலரணை விரிவாக்கும் நோக்குடன் மேலதிக காணிகளையும் உள்வாங்கி, கடற்படைக்கு நிரந்தரமாக சுவீகரிப்பதற்கான அறிவித்தல், கடந்த 2014 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதற்காகத் தேவாலயக் காணியை அளவீடு செய்வதற்கு நிலஅளவையாளர்கள் சென்ற போதும், பொதுமக்களின் எதிர்ப்பினால் அது கைவிடப்பட்டிருந்தது.

பின்னர் இந்த ஆண்டு மீளவும் அந்தக் காணியைச் சுவீகரிக்கும் நோக்குடன் அளவீட்டு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதன்போதும் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே, தேவாலயக்காணியை மீளவும் கையளிப்பதற்குக் கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

காணி மீளவும் கையளிப்புக்கான உரிய ஆவணங்கள் தெல்லிப்பழை பிரதேச செயலரிடம் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ள கடற்படையினர், காணியைத் தேவாலயப் பங்குத் தந்தையிடம் நேற்றுக் கையளித்துள்ளனர். காணியிலிருந்த காவலரணும் நேற்று அகற்றப்பட்டுள்ளது.(த-வ-5-10)

## மறவன்புலோ

மறவன் புலோவில் கடந்த 30 ஆம் திகதி புதன்கிழமை வீடொன்றில் வைத்து தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. அவை பற்றிய விசாரணையின்போது, ஒருவர் கைது செய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டு சென்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவரிடம் பயங்கரவாத விசாரணைப் பிரிவு விசாரணை மேற்கொண்டுள்ளது.

இந்தநிலையில் அவரது அலைபேசி இலக்கத்துடனான தொடர்புகளைப் பேணியவர்கள் என்ற அடிப்படையில் 48 பேரைப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அடையாளம் கண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படியே இதுவரை சுமார் 35 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. இன்னும் 13 பேரிடம் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

மீட்கப்பட்ட ஆயுதங்கள் சாவகச்சேரி நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டபோது, அவற்றை அழித்துவிட்டு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-4)

# நரைனுக்கு பந்துவீச அனுமதி பலமாகியது கொல்கத்தா அணி


மேற்கிந்தியத் தீவுகளின் நட்சத்திர வீரரான நரைன், தனது பந்துவீச்சு முறைமைகளை மாற்றியதையடுத்து அவரை பந்துவீச அனுமதித்துள்ளது சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை.

நரைன், கடந்த 2014ஆம் ஆண்டு நடந்த சம்பியன்ஸ் லீக் ரி-20 தொடரின்போது சந்தேகத்துக்குரிய முறையில் பந்துவீசி எச்சரிக்கை வாங்கினார். கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிரான தொடரின் போதும் அவரது பந்துவீச்சில் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டு, தடை விதிக்கப்பட்டது. இதனால் உலகக்கிண்ணத் தொடரில் அவரது பெயர் இடம்பெற்றிருந்தும் அவர் தொடரில் இருந்து விலகினார்.

இந்த நிலையில் கடந்த மாதம் 28ஆம் திகதி சென்னையில் சுனில் நரைனின் பந்துவீச்சு மீண்டும் ஆராயப்பட்டது. அப்போது ஐ.சி.சி. விதிமுறைகளின்படி அவரது பந்துவீச்சு இருந்ததாக நடுவர்கள் அறிக்கை அளித்தனர்.

இதன் அடிப்படையில் சுனில் நரைனின் பந்துவீச்சுக்கு ஐ.சி.சி. அனுமதி வழங்கி உள்ளது. இதனால், அவர் ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா அணியில் இணைந்து விளையாடுவதில் சிக்கல் இல்லை. நரைனின் வருகையின் மூலம் கொல்கத்தாவின் பந்துவீச்சு பலம் பெற்றுள்ளதாக கருதப்படுகிறது.

நரைனின் வருகை தொடர்பாக கொல்கத்தா அணியின் தலைவர் கம்பீர் தெரிவிக்கையில் - தற்போது அணிக்கு திரும்பியுள்ள சுனில் நரைன் மேலும் திறமையுடன் அபாயகரமான வீரராக இருக் கிறார். அவர் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவார் என்று நம்புகிறேன். எங்கள் அணியில் உள்ள ரசல் இந்தியாவுக்கு எதிரான அரையிறுதியில் விரைவில் ஆட்டமிழக்க வேண்டும் என்று வேண்டினேன். ஆனால் அது நடக்கவில்லை அவர் அற்புதமான வீரர். ரசல், சுனிலுடன் சம்பியன் நடனம் ஆடுவோம் என்று நம்புகிறேன்- என்றார். (ம)



## விக்ரோறியின் கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 10

மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகம் அமரர் ராகவன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியாக நடத்தவுள்ள மின்னொளியிலான கரப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அடுத்த வாரம் மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் ஆரம்பமாகின்றன. ஏ, பி என இரு பிரிவாக நடத்தப்படும் இந்தத் தொடரில் ஏ பிரிவில் 8 அணிகளும் பி பிரிவில் 25 அணிகளும் பங்கு பற்றவுள்ளன. (ம-23)

## போராடி வென்றது ஈகிள்ஸ்

யாழ்ப்பாணம், ஏப். 10

வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஈகிள்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

விலகல் முறையிலான இந்தத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஈக்கிள்ஸ் அணியை எதிர்த்து வளர்பிறை அணி மோதிக்கொண்டது.

இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஓர் கோலினை பதிவு செய்ததினால்சமநிலைத்தவிர்ப்புஉதைகளில் வெற்றியைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் ஈக்கிள்ஸ் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



ஐ.பி.எல். தொடரின் ஆரம்ப விழாவுக்கு முன்பாக எட்டு அணிகளின் தலைவர்களும் இணைந்து எடுத்துக் கொண்ட செல்பி. (ம)

## இன்றைய மோதல்கள்

**யுனைற்ரெட் வி.கழகத் தொடர்**

யாழ்ப்பாணம், ஏப். 10

மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழகமும் இணைந்து மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞயிற்றுக்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறவுள்ள முதலாவது ஆட்டத்தில் பனங்கட்டுகொட்டு சென்.ஜோசப் அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென்.சேவியர் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பள்ளிமுனை சென்.லுசியா அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது.

**இலங்கை கால்பந்தாட்டச் சங்கத்தின் தொடர்**

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டுவரும் 19 வயதுப்பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை அளம்பில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் மன்னார் கால்பந்தாட்ட லீக் அணியை எதிர்த்து முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது.

**வளர்மதி வி.கழகத் தொடர்**

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கரவெட்டி கிழக்கு வளர்மதி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வாலிபர் வட்ட அணியை எதிர்த்து அண்ணா சிலையடி அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தீபஜோதி அணியை எதிர்த்து வளர்மதி ஏ அணி மோதவுள்ளது. இரவு 8.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்திய அணியை எதிர்த்து மைக்கல் அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வளர்மதி 'பி' அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது.

**நாமகள் வி.கழகத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து கரணவாய் மத்திய அணி மோதவுள்ளது.

**அல்ஹிஜிரா வி.கழகத் தொடர்**

வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்ஹிஜிரா அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணி மோதவுள்ளது. (ம-23)

## ஐரோப்பிய கால்பந்தாட்ட அலுவலகங்களில் தேடுதல் பனாமா ஆவணத்தில் இன்பான்டினோ இடம்பெற்றதால்




ஐரோப்பிய கால்பந்தாட்டத்தின் நிர்வாக அலகான ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றிய அலுவலகங்களில் சுவிற்சர்லாந்து பொலிஸாரால் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்து சட்டமா அதிபர் அலுவலகத்தால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையொன்றில், நையோன் கட்டடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட தேடுதலானது, சில ஆதாரங்களை கைப்பற்றும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. உலக கால்பந்தாட்ட அலகான சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் (பீபா) தற்போதைய தலைவரும் ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளருமான ஜியானி இன்பான்டினோவின் பெயரும் பனாமா ஆவணங்களில் இடம்பெற்றதைத் தொடர்ந்தே மேற்படி தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் தான் எந்தத் தவறும் செய்யவில்லை என இன்பான்டினோ மறுத்துள்ளார். (ம)

## கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகள்

கரணவாய், ஏப். 10

கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் இடம்பெறவுள்ளன.

இதன்படி இன்று காலை 8 மணிக்கு இருபாலாருக்குமான எல்லே தொடர் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்திலும், இருபாலாருக்குமான கரம்தொடரும்பெண்களுக்கான வலைப்பந்தாட்டமும் நாளை திங்கட்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்திலும், தடகளப்போட்டிகள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதியும் கயிறு இழுத்தல் மற்றும் கபடிப்போட்டிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்திலும், இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடர் 17 ஆம் திகதி அறிவாலயம் விளையாட்டுக் கழக மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ம-108)

## நடுவர் சங்கங்களுடன் கலந்துரையாடல் இன்று

மாங்குளம், ஏப். 10

வடமாகாண மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்களை நடத்துவது தொடர்பான நடுவர் சங்கங்களுடனான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் வட மாகாணத்திலுள்ள பெரு விளையாட்டுக்கள் சங்கத்தின் தலைவர் செயலாளர்களைக் கலந்து கொள்ளுமாறு வட மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-422)

## ஆஸிக்கு எதிரான பகலிரவு டெஸ்ட்களில் தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் பலப்பரீட்சை



ஆஸ்திரேலிய அணி, தென்னாபிரிக்க அணிக்கெதிராகவும் பாகிஸ்தான் அணிக்கெதிராகவும் பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கும் நியூசிலாந்துக்கு மிடையில் கடந்தாண்டு இடம்பெற்ற உலகின் முதலாவது பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தைத்தொடர்ந்து, பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களுக்கான ஆர்வம் அதிகரித்துள்ளது. இந்த நிலையிலேயே, இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் இந்தத் தொடர்களை நடத்த எதிர் பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி, முதலாவது பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தை நடத்திய அடிலெய்ட் மைதானம், தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தையும் பிறிஸ்பெய்ன் மைதானம், பாகிஸ்தானுக்கெதிரான ஆட்டத்தையும் நடத்தவுள்ளது. இது வரை வெளிவந்துள்ள தகவல்களின்படி, பாகிஸ்தானுக்கெதிரான ஆட்டம் டிசெம்பரிலும் தென்னாபிரிக்காவுக்கெதிரான ஆட்டம் ஜனவரியிலும் இடம்பெறவுள்ளன. (ம)

# அரக்கர்களிடம் அடிபணிந்தது மும்பை

# ஐ.பி.எல். தொடரின் முதல் ஆட்டத்தில்



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸை 9 இலக்குகளால் வீழ்த்தி அபார வெற்றிபெற்றது புனே சுப்பர் ஜெயின்ஸ்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. மும்பையின் ஆரம்ப வீரர்களாக ரோகித் மற்றும் சிம்மன்ஸ். இருவரும் மிகவும் ஆபத்தானவர்கள். இணைப்பாட்டம் நீண்டு செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஏழே ஓட்டங்களுடன் இசாந் சர்மாவின் வேகத்தில் வீழ்ந்தார் ரோகித். மூன்றாம் நிலை வீரராக களமிறக்கப்பட்டார் பாண்டியா. சுழல் பந்து வீச்சுக்கு சிறப்பாக துடுப்பெடுத்தாடக்கூடிய பாண்டியாவை மத்திய வரிசையில் களமிறக்காமல் மூன்றாம் நிலை வீரராக களமிறக்கிய ரோகித்தின் முடிவு நிச்சயம் தவறான முடிவே. எட்டே ஓட்டங்களுடன் போல்ட் ஆனார் சிம்மன்ஸ். ஓட்டங்கள் எதுவும் பெறப்படாத நிலையில் பட்லரை வெளியேற்றினார் மிச்செல் மார்ஷ். பாண்டியாவும் ஆட்டமிழக்க ஆமை வேகத்தில் இன்னிங்ஸைத் தொடர்ந்தார் ராயிடு. ஒரு முனையில் இலக்குச் சரிவு மறு முனையில் பந்துகள் வீணடிப்பு என இருபுறத்தாலும் நெருக்கடியைச் சந்தித்தது மும்பை. பொலார்ட், கோபால் டெஸ்ட் பாணியில் விளையாடினர். குறிப்பாக கோபால் 16 பந்துகளை எதிர்கொண்டு வெறும் இரண்டு ஓட்டங்களையே எடுத்திருந்தார். நூறு ஓட்டங்களையேனும் எட்டுவது கடினம் என்ற நிலைப்பாடு இருந்தது. பந்துகளை பழக்கப்படுத்தி சத்தமில்லாமல் இன்னிங்ஸை கட்டமைத்தார் ஹர்பஜன் சிங். அவர் தான் எதிர்கொண்ட இறுதி ஆறு பந்துகளில் 22 ஓட்டங்களை விளாச முடிவில் 121-8 என்ற கௌரவ நிலையை அடைந்தது மும்பை இந்தியன்ஸ். 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் நின்றார் ஹர்பஜன்.

பந்துவீச்சில் புனேயின் சார்பாக இசாந் சர்மா, மிச்செல் மார்ஷ் இருவரும் தலா இரு இலக்குகளையும், ஆர்.பி.சிங், பகாட்டியா, எம்.அஸ்வின், அஸ்வின் நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது புனே. புனேயில் ரகானே, பிளாசிஸ், ஸ்ரீவ் சிமித், டோனி, பீற்றர்சன் என துடுப்பாட்ட வரிசை இருந்தாலும் ஆரம்ப வீரராக ரகானேயுடன் யாரைக் களமிறக்குவது என்பது டோனிக்கு ஓர் பிரச்சினையாகவே இருந்திருக்கும். ஏனெனில் ஏனைய வீரர்கள் ஆரம்ப வீரராக களமிறங்கி பழக்கமில்லாதவர்கள். பலரும் எதிர்பார்த்ததைப் போல் பிளாசிஸ்ஸே ஆரம்ப வீரராக களமிறங்கினார். பவுண்டரியுடன் புனேயின் இன்னிங்ஸை ஆரம்பித்தார் ரகானே. ரகானேயின் துடுப்பில் இருந்து சில பவுண்டரிகள் பிளாசிஸிடமிருந்து சில சிக்ஸர்களுடன் இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது புனே. அணியின் ஓட்டங்கள் 78 ஆக இருந்த வேளையில் 34 ஓட்டங்களுடன் ஹர்பஜனிடம் போல்ட் ஆனார் பிளாசிஸ். ராகானே, பீற்றர்சன் இணைய மேலதிக இலக்கை இழக்காமல மும்பை இந்தியன்ஸை வீழ்த்தியது புனே சுப்பர் ஜெயின்ஸ் (ஜெயின்ஸ் என்பதற்கு தமிழில் அரக்கர்கள் என்று பொருள்). ரகானே 66 ஓட்டங்களுடனும், பீற்றர்சன் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.(ம)




## திரிமன்னேக்கு ஆதரவாக சில்வா



ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் திரிமன்னேயின் தடுமாற்றத் துக்கு பலரும் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில் அவருக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்துள்ளார் அரவிந்த டி சில்வா.

திரிமன்னே தொடர்பாக அரவிந்த டி சில்வா தெரிவிக்கையில்-தற்போது உள்ள நிலைமையில் திரிமன்னே மிகச் சிறந்த வீரர். அவர் இலங்கை அணிக்கு அவசியமான ஒருவர். அத்தப்பத்து 6 தடவைகள் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். ஆனால்,தொடர்ந்தும் அணியில் இருந்தார். நடுவரிசையில் தொடர்ச்சியாக தோல்விகளைச் சந்தித்து வந்த சனத் ஜெயசூரியாக கூட அணியில் நீடித்து சாதனை படைத்தார். நிலைமை இவ்வாறிருக்க திரிமன்னேக்கு எதிராக போர்க்கொடி தூக்குவது ஏன்? அவர் மீண்டு வருவார்-என்றார். (ம)

## அரியாலையின் இறுதிகள்

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவந்த மென்பந்து துடுப்பாட்டத்தொடரின் இறுதியாட்டங்களும், கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் உள்ளூர் அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் நல்லூர் தெற்கு சனசமூக நிலைய அணியை எதிர்த்து திருமகள் சனசமூக நிலைய அணி மோதவுள்ளது.

தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பொற்பதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் கார்மேல் போய்ஸ் அணிமோதவுள்ளது.இரவு 7மணிக்கு உள்ளூர் அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் திருமகள் சனசமூக நிலைய அணியை எதிர்த்து அரியாலை சனசமூக நிலைய அணிமோதவுள்ளது. (ம-23)

## யாழ்.வலயத்தின்கரம், மேசைப்பந்தாட்டம்

மாங்குளம், ஏப். 10

யாழ் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 15வயது, 19 வயதுப் பிரிவு இருபாலாருக்குமான கரம் தொடர் நாளை திங்கட்கிழமையும், மேசைப்பந்தாட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் யாழ். மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.(ம-422)

## வேலைக்கு ஆள் தேவை

கனகராயன்குளத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை. தங்கி இருந்து வேலை செய்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். உணவு வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.

**024 205 1333, 077 606 9188, 077 308 6837**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பத்தைச் சேர்ந்த 1980, சதயம், கிரகபாவம் 30 ½, கட்டட ஒப்பந்தக்காரராகப் பணிபுரியும் மணமகனுக்கு படித்த,அழகிய மணமகள் தேவை. (சதயத்துக்குப் பொருந்தும் நட்சத்திரங்கள் - கார்த்திகை, மிருகசீரிடம், மகம், விசாகம் -4, அனுசம், அவிட்டம், மூலம்)

தொடர்பு : 077 450 7446

## PERSONAL CLASS

இரசாயனவியல்
சி. அங்கதன் B.sc (Chem.sp)
37 வருட
வினாத்தாள்கள் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 077 618 9610

## கல்வி கற்பிப்பவர் தேவை

3ஆம் ஆண்டு கல்வி கற்கும் மாணவனுக்கு வீட்டில் வந்து கற்பிக்கக் கூடிய அனுபவமுள்ளவர் தேவை

**077 672 2145**

## கணக்குப் பதிவாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல மின்சாதனப் பொருள்கள் விற்பனை செய்யும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

★ கணக்குப் பதிவாளர் (க.பொ.த (உ/த)) வணிகப்பிரிவில் கற்றிருத்தல் விரும்பத்தக்கது.

மேற்படி தகைமையுடைய ஆண்/ பெண் இருபாலாரும் எதிர்வரும் 11/04/2016 திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுய விவரக்கோவையுடன் நேரில் வருகை தரவும்.

Jaffna Electricals
No.94(06) Stanly Road, Jaffna.
T.P:021 222 2353 Fax: 021 222 4302 (c/22323)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.

## பிரெஞ்சு மொழி

- பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
- இலவசம்: பாடங்களின், PHOTOCOPIES, பழக்கதற்கான LETTER, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை..

CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA (DELF)

ஆரம்பம் : 17.04.2016 at 11 am

யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.

021 222 8093

## கணிதம்

A.K. யசிந்தன்
தரம் 6 முதல் O/L வரை பிரத்தியேக வகுப்புகள்
விஞ்ஞான ஆங்கில வகுப்புகளும் நடைபெறுகின்றன.
Beefort International School,
136, Navalar Road, Jaffna

## M.M. Services

உடுவில் 'Rose Villa' Heritage Homes திட்ட விற்பனையாளர்கள் தமது சமூக நற்பணித் திட்டமான "பொறியியல் நூலகம்"

அடிக்கல் நாட்டும் வைபவம் இன்று காலை 9.30 மணிக்கு குரும்பசிட்டியில் நடைபெறும்.

கட்டட நிதி வழங்க விரும்புவோர் தொடர்பு

E-mail: amathimakan@Yahoo.co.uk
Mobile:- 077 225 1411
A.Mathimakan, Address:- Kurumpasiddy, Tellippalai


## வெற்றிபெற்றது காளியம்பாள்

தெல்லிப்பழை நாமகள் வி.கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மொன்றில் காளியம்பாள் அணி வெற்றி பெற்றுள்ளது. நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர்சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் அணி மோதிக் கொண்டது. இதில் தாவடி காளியம்பாள் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)




TRUTH
1965
ALDERSGATE

New Batch Starts on 16.04.2016

UGC RECOGNISED

மேலதிக விபரங்களுக்கு
021 4 900 900
071 777 5666

MBA
MASTER OF BUSINESS ADMINISTRATION
General / Marketing / Finance / HR / IT

IIS CITY CAMPUS
200 Sivan Pannai Road Jaffna
Tel: 021 222 8060
Web : www.iis.edu.lk

ADMISSION REQUIREMENTS

- A Bachelor Degree - must be from a recognized University or College.
- An Accepted Professional Qualification
- Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.

## JOB OPPORTUNITIES IN The Valampuri & GREEN GRASS Hotels

We invite applications from the interested candidates for the following positions

1. Front Office Manager
2. Human Resource Manager
3. F&B Manager
4. Pastry Chef
5. Executive House Keeper
6. Front Office Supervisor
7. Assistant Front Office Manager
8. Assistant Human Resource Manager
9. Assistant F&B Manager
10. Floor Supervisor
11. Public Area Cleaning Supervisor
12. Room Attendents
13. Bell Boys

❖ Post 1,2,3,4 & 5 Should have Minimum 2 Years of experience in 4*/ 5* Hotels.

Interested applications may send Their CV to
hrgreengrass@gmail.com
or
Green Grass Hotel And Restaurant (PVT) LTD.
No 33, Aseervatham Lane, Hotel Road, Jaffna.

## ஆசிரியர் தேவை

குருநாகல் மாவட்டத்தின் சியம்பலாகஸ்கொடுவ மதீனா தேசிய பாடசாலைக்கு க.பொ.த (உ/த) தொழில்நுட்பப் பிரிவில் மின்னியலும் இலத்திரனியலும் (Electricity & Electronics) கற்பிக்கக் கூடிய தகுதிவாய்ந்த ஆசிரியர் தேவை.

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

| | |
|---|---|
| Office | : 0372247530 |
| Mr.M.R.M.Zakariya (Principal) | : 0778959790 |
| Mr.K.M.A.Jalaldeen (D.Principal) | : 0718036275 |

(J/223)

## வெளிவந்துவிட்டது

தரம் 6,7,10 ஆம் வகுப்புக்குரிய கணிதம்
ஆசிரியர் எஸ். நஸீர்
தரம் 11 கணிதம் புதிய பாடத்திட்டம்
(2016 முதல் நடைமுறைக்கு வரும் O/L புதிய வினாப் பத்திரத்திற்கான - மாதிரி வினாப்பத்திரங்கள் அடங்கலாக)
கிடைக்கும் இடம் : யாழ் புத்தகசாலை
305,307, 309 மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
நூலாசிரியரின் தொடர்புக்கு : 072 121 6210

## FLC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH

## பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French-
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் - MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1079 மாணவர்கள் French கற்றுள்ளனர்...

No. 40, பலாலி வீதி, இலுப்பையடி.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 23.04.16 சனி 08 am.

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 25.04.16 Mon@ 4pm.

ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

புத்தாண்டை முன்னிட்டு
வீதி உலாவும் மலிவு விற்பனையும்
11.04.2016, 12.04.2016 களில்
(கணினி, கணினிசார் பொருட்கள்) பரமேஸ்வரா சந்தியிலும், சுன்னாகத்திலும்

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
No. 195/4, Parameswara Junction, Palaly Road. T.P: 021 222 1121, 0777 66 7975
City Computers No. 116 G, K.K.S. Road Chunnakam, Jaffna T.P: 021 224 2222 077 714 0431


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.